தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

2017

ஆண்டு அறிக்கை

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

பணி

பாவனையாளர்களின் பூரண திருப்தியை உறுதிப்படுத்திக்கொண்டு குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்கு சேவை புரிதல்

நோக்கு

தொழில்நுட்ப மற்றும் சேவைச் சிறப்பின் மூலம் இலங்கையின் அதிஉன்னத பொது வசதிகள் நிறுவனமாக விளங்குதல்

இலக்குகள்

- நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகளை விஸ்தரித்தல்
- தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல்
- உயர் பொறுப்புடைமையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதிசெய்தல்
- கிராமிய மற்றும் விழிப்புநிலை சமூகங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கலையும் துப்புரவேற்பாட்டு வசதிகளையும் வழங்கல்

உள்ளடக்கம்

ந.தி.நீ.வ.அ. செயலாளரின் செய்தி
அறிக்கை பற்றிய அறிவிப்பு 01
தலைவரின் கூற்று 02

கூட்டு ஆளுகையும் புள்ளிவிபர மீளாய்வும்
பிரதான பணியாளர்கள் 06
தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள் 10
கூட்டிணைந்த திட்டம் 11
நீர் வழங்கலின் பிரதான செயலாற்றுகை 14
சாக்கடைத்துறையின் பிரதான செயலாற்றுகை 16
தொழிற்பாடுகளின் பொழிப்பு 17
முதலீடுகளின் பொழிப்பு 21
ஊழியர்கள் 24

நிலைபேறான அறிக்கை
தகவல் தொழில்நுட்பம் 30
வர்த்தக நடவடிக்கைகள் 32
கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு 33
பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் 34
நிகழ்ச்சித்திட்டம்
நிலக்கீழ் நீர் 34
வலுசக்தி முகாமைத்துவம் 35
சமூகவியல் செயற்பாடுகள் 36
வருவாயற்ற நீர் குறைப்பு 36
வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம் 38
ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் 39
நாட்பட்ட சிறுநீரக நோய் நிகழ்ச்சித்திட்டம் 41
நீர் பாதுகாப்புத் திட்டம் iv 42

உட்கட்டமைப்பு அபிவிருத்தி
பிராந்திய உதவி நிலையங்கள் 46

நீர் வழங்கல்
நடைமுறையிலுள்ள வெளிநாட்டு / உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் 62
நடைமுறையிலுள்ள இலங்கை அரசாங்க நிதியளிப்பிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் 78
குழாய் வழிக் கருத்திட்டங்கள் (நீ.வ.க.) 81
திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (நீ.வ.க.)

சாக்கடை 83
தற்போதுள்ள சாக்கடைத் திட்டங்கள் 86
சாக்கடைச் செயற்பாடுகள் 87
நடைமுறையிலுள்ள சாக்கடைக் கருத்திட்டங்கள் 88
இலங்கை அரசாங்க நிதியளிப்பிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சாக்கடைக் கருத்திட்டங்கள் 93
குழாய்வழிக் கருத்திட்டங்கள் (சாக்கடை) 93
திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை) 96

நிதி மற்றும் கணக்காய்வு அறிக்கைகள்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 98
நிதிக் கூற்று 102
2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 135
சுருக்க வடிவங்கள் 173
கூட்டுத்தாபனத் தகவல்கள் உட்புற அட்டை 175

அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்கள்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி

ரவூப் ஹக்கீம்
கௌரவ நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

சுதர்ஷனி பெர்ணாந்துபுள்ளே
கௌரவ இராஜாங்க அமைச்சர்

செயலாளரின் செய்தி
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

2017 ஆம் ஆண்டினுள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு (ந.தி.நீ.வ.அ) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் (தே.நீ.வ.வ.ச) இணைந்து பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வசதிகளை வழங்குவதன் மூலம் தேசத்திற்கு சேவையாற்றும் பொருட்டு தொடர்ந்தும் செயலாற்றியது. 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் தே.நீ.வ.வ.ச.யின் குழாய் நீர் வழங்கலின் மூலம் நாட்டின் மொத்த சனத்தொகையில் 38.7% ஐ உள்ளடக்குகின்றவாறு 2,219,172 நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்கு தே.நீ.வ.வ.ச.க்கு இயலுமாயிருந்தது. இது நாட்டின் மொத்த குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை 49.2% ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்தது. நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சானது ஆண்டினுள் நடைமுறையிலுள்ள வெளிநாட்டு நிதியளிப்பிலான 17 நீர் வழங்கல் கருத்திட்டங்களை அமுலாக்குவதற்கு தே.நீ.வ.வ.ச.க்கு ஒத்துழைப்பு வழங்கியது.

குழாய் மூலமான நீர் வழங்கலை வழங்குவதற்கு மேலதிகமாக நாட்டின் குழாய்வழி சாக்கடை உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கு அவர்கள் எடுத்த முயற்சியின் பெறுபேறாக, ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச. யினால் 2,500 க்கு மேற்பட்ட புதிய சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை ஆண்டினுள் வெளிநாட்டு நிதியளிப்பிலான பாரிய அளவிலான 7 சாக்கடைக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, நோய்க்காரணி அறியப்படாத குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் உள்ளிட்ட சிறிய நகர (சிறிய மற்றும் நடுத்தர) நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் நீர்துறை சார்ந்த சமுதாய வசதிறேபடுத்தல் எனும் வரவு செலவுத்திட்ட தலைப்பின் கீழ் ரூபா 1,134.76 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு ஆண்டு முழுவதிலும் தே.நீ.வ.வ.ச.யுடன் இணைந்து அமைச்சு தொடர்ந்தும் செயலாற்றி வந்தது.

2017 ஆம் ஆண்டில் எமக்கு உதவி செய்த எமது நிதியளிப்புப் பங்காளர்கள் பலருக்கும், முக்கியமாக இலங்கை அரசாங்கம், ஆ.அ.வ., JICA, SIDA, UNICEF, உலக வங்கி, அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், சீனா, பிரான்ஸ், ஹங்கேரி, இந்தியா, நெதர்லாந்து, தென் கொரியா, ஸ்பெய்ன் அரசாங்கங்கள் மற்றும் US Exim ஆகியவற்றுக்கு அமைச்சு நன்றி தெரிவிக்கின்றது.

2020 ஆம் ஆண்டளவில் குழாய் நீரை சனத்தொகையில் 60% க்கு கிடைக்கச் செய்வதையும், குழாய் வழி சாக்கடை முறையை சனத்தொகையில் 3.3% க்கு கிடைக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இலக்கை அடைவதற்காக அமைச்சு தே.நீ.வ.வ.சபையுடன் இணைந்து தொடர்ந்தும் செயற்படும். நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு எம் அனைவருக்கும் ஒத்துழைப்பு வழங்கிய, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் கௌரவ (திருமதி) சுதர்ஷனீ பெர்னாந்துபுள்ளே அவர்களுக்கும் அவர்களது தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலுக்காக நன்றி தெரிவிப்பதற்கு நான் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறேன். பொதுமக்களுக்கு உயர் தரத்திலான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைகளை வழங்குவதற்கும் 2018 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் நடைமுறைப்படுத்தவுள்ள பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்காக தே.நீ.வ.வ.சபை எடுக்கின்ற முயற்சி வெற்றியளிக்கட்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

டீ.ஜீ.எம்.வீ. ஹபுஆரச்சி
செயலாளர்
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

குடிநீர் வழங்கும் பொறுப்பு ஆரம்பத்தில் பொது வேலைகள் திணைக்களத்தின் கீழ் காணப்பட்டதோடு, 1965 ஆம் ஆண்டில் இப்பொறுப்பு நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் 1975 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

நீர் வழங்கல், சாக்கடை மற்றும் நகர திட்டமிடல் ஆகிய விடயப் பரப்புகளை தனித்தனியாக கையாளும் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு தாபிக்கப்பட்டதோடு, அதன் கீழ் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை இயங்கி வருகின்றது.

சனத்தொகையில் அண்ணளவாக 89.3% வீதமானோர் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை பெறுகின்றனர் என்பதோடு இதில் 49.2% வீதமானவர்கள் குழாய் நீர் வழங்கல் முறைமையின் வசதியைப் பெறுகின்றன

அறிக்கை பற்றிய அறிவிப்பு

கௌரவ நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்,

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,

“லக்திய மெதுர”,

இல. 35, சுனில் மாவத்தை

பெலவத்தை,

பத்தரமுல்லை.

கனம் அமைச்சர் அவர்களே,

ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் - 2017
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் நியமங்களுக்கமைவாக, 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் சபை அங்கத்தவர்களால் கௌரவத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இப்படிக்கு உண்மையுள்ள,

பொறியியலாளர் கே.ஏ. அன்சார்
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

தலைவரின் கூற்று

“2017 ஆம் ஆண்டினுள் நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற 343 நீர் வழங்கல் திட்டங்களின் கீழ் 686 மில்லியன் கி.மீ. நீர் உற்பத்தி செய்யப்பட்டதுடன், இது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகின்றபோது 5.7% அதிகரிப்பாகும்.”

2017 ஆம் ஆண்டு முழுவதிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது தேசத்திற்கு பாதுகாப்பான குடிநீரையும் சாக்கடை வசதிகளையும் வழங்குகின்ற அதன் பெறுமதிமிக்க சேவையை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. ஆண்டினுள் வெளிநாட்டு நிதியளிப்பிலான நான்கு பாரிய அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள், அதாவது மொனறாகல - புத்தள ஒருங்கிணைந்த நீ.வ., லபுகம கலட்டுவாவ புனரமைப்பு மற்றும் விரிவாக்கம், கிழக்கு மாகாண WSDP மற்றும் கிளிநொச்சி புனரமைப்பு நீ.வ.க. ஆகியன பூர்த்தி செய்யப்பட்டதன் மூலம் நாட்டினுள் குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது. இதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டினுள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தற்போதுள்ள நீர் வழங்கல் உள்ளடக்க பிரதேசங்களின் சேவை மட்டம் மேம்படுத்தப்பட்ட அதேவேளை 126,701 புதிய நீர் இணைப்புகளை வழங்க இயலுமாயிருந்தது.

2017 ஆம் ஆண்டினுள் நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற 343 நீர் வழங்கல் திட்டங்களின் கீழ் 686 மில்லியன் கி.மீ. நீர் உற்பத்தி செய்யப்பட்டதுடன், இது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகின்றபோது 5.7% அதிகரிப்பாகும். 2,219,172 சேவை இணைப்புகளின் ஊடாக பாவனையாளர்களுக்கான மேற்படி பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் இறுதியாகின்றபோது சனத்தொகையில் 4.2% க்கு குழாய்வழி குடிநீர் வழங்கல் பெற்றுக்கொடுக்கப்பட்டது. மேற்படி தொடர்ச்சியான குழாய்வழி நீர் வழங்கல் உள்ளடக்கமானது 2020 ஆம் ஆண்டில் குழாய்வழி நீர் வழங்கலை 60% க்கு பெற்றுக்கொடுக்கும் இலக்குக்கு சமாந்திரமாகச் செல்வகாகும்.

2017 ஆம் ஆண்டினுள் 2,500 க்கு மேற்பட்ட புதிய சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டு, தே.நீ.வ.வ.ச.யின் மூலம் பராமரிக்கப்படும் சாக்கடை இணைப்புகளின் எண்ணிக்கை 21,719 ஆக அதிகரிக்கப்பட்டதோடு, இது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 12% சதவீத அதிகரிப்பாகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் CMC யினால் பராமரிக்கப்படும் சாக்கடை வசதிகள் உள்ளடங்கலாக நாட்டின் மொத்த குழாய்வழி சாக்கடை வசதிகளின் உள்ளடக்கம் 2.07% ஆகும்.

இவ்வாண்டு 2016-2020 கூட்டிணைந்த திட்டம் அமுலாக்கப்படுகின்ற 2வது ஆண்டாகும் என்பதோடு, இக் கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் வகுக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையப்பெறுவதை முன்னிட்டு தே.நீ.வ.வ.சபையின் பணியாளர்கள் தொடர்ந்து செயலாற்றி வருகின்றனர்.

மூலதன வேலைகளுக்காக, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு உள்ளடக்கம் தொடர்பிலான இலக்கை முன்னிட்டு ஆண்டினுள் ரூபா 30.18 பில்லியன் பெறுமதியான முதலீட்டை மேற்கொள்வதற்கு தே.நீ.வ.வ.ச. க்கு இயலுமாயிருந்தது. இம் முதலீடானது பிரதானமாக வெளிநாட்டு நிதியளிப்பிலான 17 பாரிய அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பிலான 7 பாரிய அளவிலான சாக்கடைக் கருத்திட்டங்கள் தொடர்பிலாகும் என்பதோடு இவை ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தே.நீ.வ.வ.ச. 2017 ஆம் ஆண்டில் ரூபா 945.74 மில்லியன் பெறுமதியான அதன் சொந்த நிதியைப் பயன்படுத்தி தற்போதுள்ள நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்களை தொடர்ந்தும் மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டினுள் ரூபா 6,914 மில்லியன் உள்நாட்டு வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்று, உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான 15 நீர் வழங்கல் கருத்திட்டங்களும் அமுலாக்கப்பட்டன.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, பிராந்திய உதவி நிலையங்கள் (RSC) மட்டத்திலும் அதே போன்று பாரிய அளவிலான வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களின் மூலமும் வருவாயற்ற நீரை (NRW) குறைப்பதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை அடைவதற்காக 2017 ஆம் ஆண்டினுள் விசேட முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இதன் பெறுபேறாக கொழும்பு நகரத்தின் வருவாயற்ற நீர் 2.14% குறைப்பதற்கும், RSC

(WC) பிரதேசத்தில் 1.64% குறைப்பதற்கும், அதேவேளை நாடளாவிய ரீதியில் இதனை 1.07% குறைப்பதற்கும் இயலுமாயிருந்தது.

குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நிவாரண நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மூலதன வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 386.2 மில்லியனை செலவிட்டு, குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு தே.நீ.வ.வ.சபை பல செயற்பாடுகளை அமுல்படுத்தியது.

2017 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபையானது உலக சுகாதார அமைப்பின் (WHO) மதியுரை மற்றும் நடைமுறைப்படுத்தல் உதவியுடன் நீர் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான வேலைகளை தொடர்ந்து மேற்கொண்டு பாவனையாளர்களுக்கு வழங்கும் நீரின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு விசேட கவனத்தைச் செலுத்தியது. இதன் பெறுபேறாக 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில், கண்டியில் தாபிக்கப்பட்டுள்ள நீர் பாதுகாப்புத் திட்ட ஆலோசனை அலகின் உதவியோடு, RSC க்களின் DGM களால் நாடளாவிய ரீதியில் பல கட்டங்களில் 116 நகர நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக, வழங்கப்படுகின்ற நீரின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச.யின் மத்திய ஆய்வுகூடத்துடன் பிராந்திய ஆய்வுகூடங்களும் இணைந்து செயலாற்றுகின்றன. நாடளாவிய ரீதியில் நீர் வழங்கல் திட்டங்களின் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளின் மூல நீரின் தரம் மாதத்திற்கு இரண்டு தடவை பரிசோதிக்கப்படுகின்ற அதேவேளை, குறிப்பிட்ட நியமங்களுக்கமைய சுத்திகரிப்பு நடைமுறையின் நீர் தரம் வாராந்தம் பகுப்பாய்வு செய்யப்படுவதோடு அதன் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்கல் உறுதி செய்யப்படுகிறது.

தே.நீ.வ.வ.சபையின் வலுசக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் அதன் முறைமைகளை அளவு ரீதியிலும் தர ரீதியிலும் மேம்படுத்தி போதியளவு முன்னேற்றத்தை அடையப்பெற்றுள்ளது. தே.நீ.வ.வ.சபையின் இயந்திரவியல் மற்றும் மின்னியல் சேவைகள் பிரிவானது வலுசக்தி முகாமைத்துவ பணிகளுக்கான அனைத்து விதமான வலுசக்திக் கணக்காய்வையும் மேற்கொள்வதற்கான வலுசக்தி அளவீட்டுக் கருவிகளை முழுமையாகக் கொண்டுள்ளது.

தே.நீ.வ.வ.சபையின் வெற்றிகரமான தொழிற்பாடுகளுக்கும் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கும் தே.நீ.வ.வ.ச.யின் அனைத்து வகுதியைச் சேர்ந்த ஊழியர்களும் குறிப்பிடத்தக்கதொரு பங்களிப்பை வழங்கினர். இதில், உலக சுற்றாடல் கடப்பாடுகளுக்கு இயைபான விதத்தில் சிக்கனமான தொழிற்பாட்டை அடையப்பெறுவதை நோக்கமாகக் கொண்டு திட்டமிடல், வடிவமைப்பு, பரிசோதனைகள், சாத்தியவளக் கற்கைகள், நிர்மாணிப்புகள், தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு, நடைமுறைக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பியல்பாக்கம், வலுசக்திப் பாதுகாப்பு ஆகிய அனைத்தும் கவனமாக கையாளப்பட்டதும் உள்ளடங்குகின்றது.

ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் கௌரவ அமைச்சரால் வழங்கப்பட்ட அனைத்து உதவிகள் தொடர்பிலும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். நீர் மற்றும் சாக்கடை வசதிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அவரது முழுமையான அனுபவங்களுடன் கூடிய நெறிப்படுத்தல்கள் வழிகாட்டல்கள் எமக்கு பெறுமதிமிக்கதாயிருந்து. ஆண்டு முழுவதிலும் எமக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் உதவிகளுக்காக நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சிலுள்ள அனைத்து பணியாளர்களும் தேவையானபோது எமக்கு வழங்கிய ஒத்துழைப்பு, உதவிகள் மற்றும் இணைப்பாக்கத்தையிட்டு நாம் இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

எமது அனைத்துச் செயற்பாடுகளிலும் முன்னேற்றத்தை அடையப்பெறுவதற்காக நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் திறைசேரியின் திணைக்களத் தலைவர்கள் தொடர்ந்தும் வழங்கிய ஒத்துழைப்பையிட்டு நாம் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

நாடு முழுவதிலும் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையில் நாம் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி நல்கிய பல்தேசிய நன்கொடை வழங்குனர்கள் மற்றும் இருதரப்பு நிதி வழங்குனர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இத்துறையிலான அபிவிருத்திப் பணிகளுக்கு தே.நீ.வ.வ.சபையுடன் சேர்ந்து பங்களிப்புச் செய்வதில் அவர்கள் காட்டிய ஆர்வத்தையிட்டு நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஆண்டு முழுவதிலும் அனைத்து முன்னேற்றங்களையும் அடையப்பெற்றது தே.நீ.வ.வ.சபையின் பணிப்பாளர் சபையினதும் பணியாளர்களினதும் அர்ப்பணிப்பு மற்றும் கடும் முயற்சியின் பெறுபேறினாலாகும். அவர்களது அர்ப்பணிப்பும் கடும் உழைப்பும் இன்றேல் எம்மால் இதனைச் சாதித்திருக்க முடியாது. பாவனையாளர்கள் திருப்தியடையக்கூடிய வகையில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள மக்களின் ஆரோக்கியம், சமூக மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல ஆண்டுகளாக அவர்கள் எடுத்த முயற்சி காரணமாக அமையுமென நாம் எதிர்பார்க்கிறோம். அதேவேளை, தே.நீ.வ.வ.சபையின் புறத்திலிருந்து ஏதேனும் குறைபாடுகள் நேரிட்டிருப்பின் அதனையிட்டு எம்மை மன்னிக்குமாறும், மேலதிக மேம்பாட்டின் பொருட்டு அதைப் பற்றி எமக்கு அறிவிக்குமாறும் பாவனையாளர்களை நாம் வேண்டிக்கொள்கிறோம்.

பொறியியலாளர் கே.ஏ. அன்சார்
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

“நீரின் மூலம் நாம் அனைத்திற்கும் உயிர் கொடுக்கிறோம்.”

அல்குர்ஆன்

- பேராறு அணைக்கட்டு -

கூட்டு ஆலோசனைப்
பொறிமுறை மீதியிலான
மீளாய்வு

எமது பிரதான பணியாளர்கள்



பணிப்பாளர் சபை

- 01 தலைவர்
- 02 துணைத் தலைவர்
- 03 தொழிற்பாட்டு பணிப்பாளர்
- 04 பணிப்பாளர் சபை அங்கத்தவர்
- 05 பணிப்பாளர் சபை அங்கத்தவர்
- 06 பணிப்பாளர் சபை அங்கத்தவர்
- 07 பணிப்பாளர் சபை அங்கத்தவர்
- சபையின் செயலாளர்

சிரேஷ்ட முகாமைத்துவம்

- 08 பொது முகாமையாளர்
- 09 மேலதிக பொது முகாமையாளர்கள்
- 10 பிரிவுகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர்கள்
- 11 மாகாணங்களுக்கான பிரதிப் பொது முகாமையாளர்கள்
- 12 கருத்திட்டப் பணிப்பாளர்களான பிரதிப் பொது முகாமையாளர்கள்

பணிப்பாளர்கள் சபை

01 பொறியியலாளர் கே.ஏ. அன்சார்
Charted Civil Engineer / Lead Auditor (QMS)
M.Sc (Delft), B.Sc. Eng. (Hons.), Dip. H.E. (Delft),
C.Eng., MIE (SL),
தலைவர், தே.நீ.வ.வ.ச. (2015.02.05 தொடக்கம்)

02 திரு. எம். ஷபீக் ரஜாப்டீன்
துணைத் தலைவர், தே.நீ.வ.வ.ச. (2015.03.10 தொடக்கம்)

03 திரு. பீ.ஐ.ரீ. மஹிலால் சில்வா
BA, MA, M.S.Sc.
செயற்பாட்டு பணிப்பாளர், தே.நீ.வ.வ.ச. (2015.02.05 தொடக்கம்)

04 டாக்டர் பீ.ஜீ. மஹீபால
MBBS, M. Sc., MD, MBA, FCMA, DPM, DBS, DED, , D Mgt.
Director General of Health Services
Ministry of Health
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச (2017.01.02 வரை)

05 டாக்டர் ரீ.பீ. ஆனந்த ஜயலால்
MBBS, Msc Medical Administration, MD Medical Administration, PG Cert.in Paed. Nutrition
Director Youth, Elderly and Disabled Persons
Ministry of Health Nutrition & Indigenous Medicine
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச (2017.01.20 தொடக்கம்)

05 திரு. ஜே.எம்.யூ.பீ. ஜயமஹ
DPFM, PGD (A&F), Fellow Member of APFASL
Additional Director General, Department of Public Enterprises
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2015.04.02 தொடக்கம்)

06 திரு. சாந்த ரத்நாயக்க
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2015.02.12 தொடக்கம்)

07 திருமதி. கே.ஏ. சுபத்ரா வல்பொல
MA
Senior Assistant Secretary
Ministry of Local Government & Provincial Councils
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2015.02.13 தொடக்கம்)

சபை செயலாளர்
திருமதி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா
B.Sc. Special (Hons.)
Master of Public Management, IMSL (Membe)

2017 ஆம் ஆண்டில் 13 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சிரேஷ்ட முகாமைத்துவம்

08 பொது முகாமையாளர்
பொறியியலாளர் டி.யூ. சுமனசேகர
B.Sc. Eng., C.Eng. FIE (SL), M.Sc. (Struct. E.) UK
(22.04.2017 தொடக்கம்)
பொறியியலாளர் ஜீ.ஏ. குமாரரத்ன
B.Sc. Eng. (Hon.), M.Sc. (UK), C.Eng., FIE (SL),
MICE (Lond.), MIWEM (Lond.) P.G. Dip. in Industrial Eng.
(22.04.2017 வரை)

09 மேலதிக பொது முகாமையாளர்கள்
பொறியியலாளர் திரு. டபிள்யு.பி.ஜீ. பிரனாந்து (கூட்டிணைந்த சேவைகள்)
B.Sc. Eng., P.G. Dip. (EWREM), C.Eng., FIE (SL),
பொறியியலாளர் ஜே.ஆர்.பீ. நெதுரன் (சாக்கடை)
B.Sc. Eng (Hons), P.G. Dip. in Enviromental Sciencs & Technology (Delft.)
C.Eng.MIE(SL),
பொறியியலாளர் ஆர்.எச். ருவினிஸ் (நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)
B.Sc. Eng. (Hon.) ,P.G.Dip. (App. Hy)
MBA, C.Eng., FIE (SL), MIE (Aus), CP Eng.
பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜே. ராஜ்குமார் (வட மத்திய)
C.Eng., FIE (SL), M.Sc. in Sanitory Engineering,
M.Sc. in Environmental Engineering and Management

பொறியியலாளர் பீ.எஸ். விஜேமான்ன (மேற்கு)
B.Sc. Eng. M.Eng (Hydrology and Water Resources) IHE (Delft), Dip. in Construction Management, C.Eng., MIE (SL).

பொறியியலாளர் என்.எச். ஆர். குலநாத (தெற்கு/கிழக்கு)
B.Sc. Eng., C. Eng.MIE (SL)
பொறியியலாளர் திலின எஸ். விஜேதுங்க (கொள்கை மற்றும் திட்டமிடல்)
B.Sc.Eng., C.Eng., FIE (SL), MBA, M.Sc. (Planing), MA (Financial Economics), MIM (SL), Pg.Dip. (Finance) – (ICA(SL), Dip. (Mgt.) – DK
திரு. டி. தொட்டவத்த (நிதி)
B. Com. (Sp.), ACA, MA (Fin. Econ)
திரு. ஜீ.கே. இத்தமல்கொட
(மனித வள முகாமைத்துவம்)
B.Sc. (B. Admin). Dip. in Per. Mgt. MA (Mgt. & Admin) London)

10 பிரிவுகளின் பிரதி பொது முகாமையாளர்கள் (2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன (உள்ளக கணக்காய்வு)
B. Com (Sp.), PGDBM (Col.), ACA

செல்வி ஏ.பி. சிறிமா த சில்வா (செலவினம்)
FCA

திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன (கைத்தொழில் உறவுகள்)
BA, P.G. Dip. in Management (PIM), Member (IMSL)

திரு. ஆர்.எம்.ஏ. பண்டார (விநியோகம்)
B.Sc. (Business Administration – Spl) Dip. in Purchasing and Materials Mgt.

செல்வி எம். எம்.எஸ். பீரிஸ் (நிதி)
B.Sc. (Accountancy & Finance Mgt.), ACA (SL)

பொறியியலாளர் கே.பி.ஆர்.எஸ். சமரசிங்க (அபிவிருத்தி)
M.Sc.(Water Supply Eng.) The Netherlands
M.Sc. (Env. Eng.), Moratuwa, MIESL, AM(OACETT) Canada

பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜே. ராஜ்குமார் (வர்த்தகம்)
C.Eng., FIE (SL), M.Sc. in Sanitory Engineering,
M.Sc. in Environmental Engineering and Management

பொறியியலாளர் எஸ். சுமனவீர (உற்பத்தி – மேல்)
B.Sc.. Eng. M. Eng. (Env.) AIT, C.Eng., FIE (SL),

பொறியியலாளர் யூ. ரத்னபால (கருத்திட்ட இணைப்பு)
B.Sc. Eng. C.Eng., FIE (SL), P.G.Dip. in Hydraulic Eng. (Moratywa),
P.G. Dip. in Business & Financial Admin (ICA)

பொறியியலாளர் கே.டபிள்யு. பிரேமசிறி (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)
B.Sc. Eng., M.Eng. (Hydraulic), M.Eng. (Structural Eng. Design),
Int.PE. C.Eng., FIE(SL, MSSE(SL)

பொறியியலாளர் கே.டீ.பீ.எப். சிறிவர்தன (கூட்டிணைந்த திட்டமிடல்)
M.Sc. (Env.Eng.) Denmark, PG Dip. (const. Mgt.) SL, MIE (SL),
Charted Engineer (2016.10.28 முதல்)

பொறியியலாளர் எஸ்.ஜீ. ஜயவர்தன (சாக்கடை)
B.Sc., P.G. Dip. in Sanitary Eng., MIE (SL)

பொறியியலாளர் துலீப் குணவர்தன (கி.நீ.வ.)
B.Sc.Eng., C.Eng., MIE(SL), M.Eng.(IHE- UNESCO)

பொறியியலாளர் ஜாலிய லலித் சீக்குகே (ADB கருத்திட்டம்)
B.Sc.Eng.,Hons, C.Eng., MIE(SL), MBA(PIM- SRJ)
PG Diploma (Const. Mgt),
PG Diploma in Drinking Water Mgt.(Germany)

பொறியியலாளர் பீ.எல். குணரத்ன (எந்திரவியல் மற்றும் மின்னியல்)
B.Sc. (Eng.), P.G. Dip. (Sani. Eng) - Norway

பொறியியலாளர் ஜே. சந்திரதாச (தகவல் தொழில்நுட்பம்)
B.Sc. (Eng.), C.Eng., MIE (SL)

12. கருத்திட்டப் பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற பிரதிப் பொது முகாமையாளர்கள்

பொறியியலாளர் ஆர். குலநாத (இரத்மலான மொரட்டுவ மற்றும் ஜா-எல ஏக்கல பிரதேச கழிவு நீர் அகற்றல்)
B.Sc. Eng. C.Eng., MIE (SL).

பொறியியலாளர் பீ.எஸ். விஜேமான்ன (கொழும்பு பெரும்பாக புனரமைப்பு கருத்திட்டம்)
B.Sc. Eng., M.Eng. Hydrology and Water Resources, IHE (Delft),

11. மாகாணங்களுக்கான பிரதி பொது முகாமையாளர்கள் (2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

பொறியியலாளர் சீ.சீ.எச்.எஸ். பிரனாந்து (மேல் தெற்கு)
B.Sc.(Eng.), C.Eng. MIE(SL), M.Sc. In Sanitary Eng.(Netherlands)

பொறியியலாளர் ஆர்.ஏ.பீ.எஸ். மென்டிஸ் (மேல் வடக்கு)
B.Sc. Eng., C. Eng., MIE (SL), M. Sc. in Sanitary Eng. (Netherland)

பொறியியலாளர் எம்.எம். உமா லெப்பே (வடக்கு)
IESL, PG. Dip. (Str. Eng. Design)
PG. Dip. (Water & Waste Water Treatment)

பொறியியலாளர் ரீ.டபிள்யு.எஸ். பெரேரா (மேல் மத்திய)
B.Sc. Eng. (Spl)., C.Eng., Master in Dev. Science, MIE (SL)

பொறியியலாளர் ஐ.எம்.டபி.கே. இலங்கசிங்க (வடமேல்)
B.Sc. (Eng.), M. Eng.(Japan) C.Eng. MIE(SL)

பொறியியலாளர் ஜீ.வீ. விஜேரத்ன (வட மத்திய)
B.Sc.(Eng), M.Sc(WREM), C.Eng, MIESL

பொறியியலாளர் டபிள்யு.டபிள்யு. லியனகே (சப்பிரகமுவ)
M.Eng. (Structural Eng. & Design), M.Sc. (Environmental Eng. & Mgt.)
C. Eng., FIE(SL)

பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே (ஊவா)
B.Sc. Eng., C.Eng., FIC (SL), PGD Management, MIM, M.Sc. Eng. (Water & Environmental Resoureces Management), MBA, M.Sc. (Water Resoureces Management, Holland)

பொறியியலாளர் ஜே.கே.எஸ். பத்திரன (தென்)
B.Sc. Eng. (Hons), C.Eng., MIE (SL), M.Sc. (Sanitary) Delft.

பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட் (கிழக்கு)
M. Sc. (Sanitary Eng.) The Netherlands
P.G.Dip. (Structural Engineering Design), Sri Lanka
B.Sc. Eng. Sri Lanka, MIE (SL), C. Eng.,

பொறியியலாளர் எம்.கே.டீ.ஜே.எச். மீகொட (மத்திய)
B.Sc. Eng. M.Sc. (Water Management), MIE(SL), C.Eng.

பொறியியலாளர் பி.பி. கஹதுவ (ருஹுனுபுர நீ.வ.க.)
B.Sc.Eng., P.G.Dip.(Water &Waste Water Treatment), P.G. Dip. (B.A)
C.Eng., MIE(SL)

பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே (மஹியங்கன நீ.வ.க. மற்றும் பதுளை ஹாலிஎல நீ.வ.க.)
B.Sc. Eng., C.Eng., FIC (SL), PGD Management, MIM, M.Sc. Eng. (Water & Environmental Resoureces Management), MBA, M.Sc. (Water Resoureces Management, Holland)

Dip. in Construction Management, C.Eng. MIE (SL),

பொறியியலாளர் கே.ஜே.வீ.ஏ. பெரேரா (கம்பஹா அத்தனகல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்)

P.G. Dip. in Environmental Engineering and Management
B.Sc. Eng. FIE (SL), M.Eng., (Sanitary) IHE (Delft)

பொறியியலாளர் ஆர்.ஏ.பீ.எஸ். மென்டிஸ் (ADB 5வது கருத்திட்டம்)

B.Sc. Eng., C.Eng. MIE (SL),
M.Sc. in Sanitary Eng. (Netherlands)

பொறியியலாளர் கே.பீ.ஆர்.எஸ். சமரசிங்க (லபுகம கலட்டுவாவ நீ.வ.க. மற்றும் கொலொன்ன பலாங்கொட நீ.வ.க.)

M. Sc. (Water Suply Eng.) The Netherlands
M.Sc. (Env. Eng.) Moratuwa, MIESL, AM (OACETT), Canada

பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட் (கொழும்பு நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டு கருத்திட்டம்)

M.Sc.(Sanitary Engineering), The Netherlands
P.G.Dip.(Structural Engineering Design), Sri Lanka
B.Sc.Eng. Sri Lanka, C.Eng., MIE(SL)

பொறியியலாளர் ஆர்.ஏ.ஏ. ரணவக்க (Shift கருத்திட்டம்)

B.Sc.(Eng).Hons, PG Dip. (Env. Eng & Man), C.Eng., FIE (SL)

பொறியியலாளர் ஐ.வீ.டபி. எதிரிவீர (அம்பதலே/ ஒருகொடவத்த குழாய் இடுதல் கருத்திட்டம்)

B.Sc. Eng. M.Sc.(Water Resources Management),
M.Sc. (Development Studies), C.Eng., MIE(SL), FIE(SL), MIWA(UK)

தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்



கூட்டிணைந்த திட்டமிடல்

"சமுதாயத்தினால் நுகரப்படுகின்ற அனைத்து நீரும் பாதுகாப்பானதாயிருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தே.நீ.வ.வ.ச. முழு முற்சியெடுக்கிறது."

2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட போட்டியில் வர்த்தகப் பிரிவு 1ஆம் இடத்தை பெற்றது.

2016 – 2020 கூட்டிணைந்த திட்டத்தின் அமுலாக்கல் பற்றிய நிலைமை

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டானது, 2016 - 2020 கூட்டிணைந்த திட்டத்தின் இரண்டாவது ஆண்டாகும். இக்கூட்டிணைந்த திட்டமானது பொது முகாமையாளரால் நியமிக்கப்பட்ட தே.நீ.வ.வ.ச.யின் சிரேஷ்ட முகாமையாளர்கள் 14 பேர் உள்ளடங்கிய விசேட குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டது. முன்னைய (கூ.தி. 2012-2016) கூட்டிணைந்த திட்டத்தின் பிரதானமான பெறுபேறுகள் விடயப்பரப்பை ஒருங்கிணைப்பதன் மூலம் 2016-2020 புதிய கூட்டிணைந்த திட்டத்தின் ஏற்புடைய இலக்குகளின் ஒவ்வொரு செயற்பாட்டினதும் முன்னேற்ற நிலைமையின் மேற்பார்வையை துரிதப்படுத்துவதற்காக, இலக்குகளின் எண்ணிக்கையை 7 இல் இருந்து 4 வரை குறைப்பதற்கு விசேட குழு தீர்மானித்தது.

ஆண்டினுள் கூட்டிணைந்த திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதை முன்னிட்டான செயற்பாடுகளை தே.நீ.வ.வ.ச. தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பில் காலக்கிரமப்படி மீளாய்வினை மேற்கொள்ளல் முக்கியமானதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு முகாமையாளரினாலும் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளின் (அத்தகைய நான்கு இலக்குகள் உள்ளதோடு, ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த முகாமையாளரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது) பொருட்டு கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் பற்றிய காலாண்டு முன்னேற்றம் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. இதற்கிணங்க, கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் தொடர்பிலான 2016 ஆம் ஆண்டின் 4வது காலாண்டினதும், 2017 ஆம் ஆண்டின் 1வது, 2வது மற்றும் 3வது காலாண்டிதும் முன்னேற்ற அறிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற சபைக் கூட்டங்களில் சபை அங்கத்தவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வடிகாலமைப்புச் சேவையின் உள்ளடக்கம் பற்றிய இலக்கை முன்னிட்டான செயற்பாடுகள் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டன. வருவாயற்ற நீர் மற்றும் வலுசக்திச் செலவைக் குறைத்தல் தொடர்பில் 2017 ஆம் ஆண்டினுள் விசேட கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எவ்வாறாயினும் பாவனையாளர் தேவைகள் தொடர்பான சேவைகளின் மேம்பாடுகள் தொடர்பில் முன்னுரிமையளிக்கப்பட்டது.

நிறுவன ரீதியான அபிவிருத்தியை மேம்படுத்தல் ஒரு கூட்டிணைந்த இலக்காகும். தே.நீ.வ.வ.ச.யின் தலைமை அலுவலகம், தெலவல தொகுதி மற்றும் பெலவத்த தொகுதியின் ஒவ்வொரு பிரிவினதும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தே.நீ.வ.வ.ச.யில் "உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளை இனங்காணல்" என்பதன் கீழ் 5S நிகழ்ச்சித்திட்டத்தை சிறந்த விதத்தில் நடைமுறைப்படுத்திய பிரிவைத் தெரிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு தலைமை அலுவலகத்தின் வர்த்தகப் பிரிவு மேற்படி போட்டியில் முதலாவது இடத்தை வென்றது.

"உயர்ந்தளவில் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் பகிரங்கத்தன்மையை உறுதிசெய்தல்" என்ற இலக்கை அடையப்பெறுவதை முன்னிட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவு ஆகிய இரண்டும் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் பகிரங்கத்தன்மை பிரச்சினைகள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொண்டன. பாதுகாப்பான நீர் வழங்கல் வசதிகளைக் கொண்டிராத நாட்பட்ட சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்ட, மற்றும் கிராமிய சமுதாயத்தினர் தொடர்பில் கிடைக்கத்தக்கதான வளங்களின் ஊடாக முன்னுரிமையளிக்கப்பட்டது.

உலக சுகாதார அமைப்பின் (WHO) மதியுரை மற்றும் நடைமுறைப்படுத்தல் உதவியுடன் 2017 ஆம் ஆண்டில் இலங்கையில் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் (WSP) நடைமுறைப்படுத்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. சமுதாயத்தினால் நுகரப்படுகின்ற அனைத்து நீரும் பாதுகாப்பானதாயிருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தே.நீ.வ.வ.ச. முழு முற்சியெடுக்கிறது. இக் குறிக்கோளின் அடிப்படையில் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. 2017 இறுதியாகின்றபோது கண்டியில் தாபிக்கப்பட்ட நீர் பாதுகாப்புத் திட்ட மதியுரை அலகின் உதவியோடு பிராந்திய சேவை நிலையங்களின் பிரதிப் பொது முகாமையாளர்களால் நாடளாவிய ரீதியில் பல கட்டங்களில் 116 நகர நீர் பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

குறித்துரைக்கப்பட்ட இலக்குகள் தொடர்பிலான முன்னேற்றம்

இலக்கு	முதன்மைக் குறிக்கோள்கள்	2017 இறுதியில் இலக்கு	2017 இறுதியில் அடைவு
1. நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை உள்ளடக்கத்தை விஸ்தரித்தல்	1.1 மொத்த குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கம்	52.3%	49.2%
	1.2 குழாய் சாக்கடை உள்ளடக்கம்	2.4%	2.07%
	1.3 பாதுகாப்பான குடிநீர் வழங்கலைப் பெறுவதற்கான வாய்ப்பின் உள்ளடக்கம்	89.3%	89.3%
2. தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல்	2.1 வருவாயற்ற நீர் (நாடளாவிய)	24.97%	25.98%
	2.2 1000 இணைப்புகளுக்கு மொத்த பணியாளர்கள்	4.72%	4.66%
	2.3 மொத்த மீண்டுவரும் செலவில் வலுசக்திச் செலவு	20.38%	19.47%
	2.4 மொத்த மீண்டுவரும் செலவில் பராமரிப்புச் செலவு	5.44%	6.16%
	2.5 மொத்த மீண்டுவரும் செலவில் தாபனச் செலவு	10.23%	10.83%
	2.6 மொத்தக் கட்டணப் பட்டியல்களில் மதிப்பிடப்பட்ட கட்டணப் பட்டியல்கள்	1.0%	1.37%
	2.7 சேகரிப்பு வினைத்திறன்		
	2.8 பெறத்தக்க கணக்குகள் -	100.0%	103%
	(அ) வீட்டுப் பாவனை மற்றும் வர்த்தக நிறுவனங்கள்	30 நாட்கள்	45 நாட்கள்
	(ஆ) அரச நிறுவனங்கள்	40 நாட்கள்	10 நாட்கள்
	2.9 மனித வள அபிவிருத்தி மேம்பாடு		
	(அ) உள்ளக பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	4600	9228
	(ஆ) உள்நாட்டு வெளிவாரிப் பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	250	182
	(இ) வெளிநாட்டுப் பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	80	239
	2.10 வாடிக்கையாளர்களுக்கான சேவை மேம்பாடு மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுத்தல். நாடளாவிய ரீதியில் பொது மக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் (பாடசாலை/ஏனையவை)		
	2.11 சக்தி சேமிப்புக் கருத்திட்டங்களிலிருந்தான வருடாந்த சேமிப்பு	100	152
	2.12 வினைத்திறன்மிக்க வியாபாரத்திற்கான புதிய அறிவைப் பெறும் நோக்கத்துக்காக செயலாற்றப்படும் முறைசார்ந்த, பரிசோதனை ரீதியிலான மற்றும் பரீட்சார்த்த ரீதியிலான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பாராமரிப்பு செயற்பாடுகளை தே.நீ.வ.வ.சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.	36.7m	18.1 m
	2.13 விரிவான ICT அபிவிருத்திச் செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்தலின் மூலம் தனது வியாபாரத்தை மேம்படுத்துவதற்கான அரங்கமாக வெப் தளத்தை பயன்படுத்தி வாடிக்கையாளர் மற்றும் கூட்டிணைந்த உறவை மேம்படுத்துதல் தொடர்பில் மூலதனமிடலுக்கு தே.நீ.வ.வ.ச. தயாராக உள்ளது.		
3. உயர் பொறுப்புடைமை மற்றும் பகிரங்கத்தன்மையை உறுதி செய்தல்	மனித வள அபிவிருத்தி, முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் வியாபாரத் திட்டம் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் வியாபாரக் கருவிகளின் ஒட்டுமொத்த விடயப் பரப்பினையும் அபிவிருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ■ நிதி ரீதியான அதிகார ஒப்படைப்பு ■ வரவு-செலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சி ■ வர்த்தக தொழிற்பாடுகள் மீதான கணக்காய்வு ■ பண்டகசாலை மற்றும் வழங்கல்கள் மீதான கணக்காய்வு		

		■ காசு/காசோலைக் கொடுப்பனவுகள் மீதான கணக்காய்வு ■ நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் மீதான கணக்காய்வு ■ சொத்துக்களை மதிப்பிடல் ■ முகாமைத்துவத் தகவல்கள் மற்றும் இணைப்பாக்க மேம்பாடு		
4. கிராமிய மற்றும் குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல்	4.1	தே.நீ.வ.வ.ச. உதவியுடன் சமூக மைய அமைப்புகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனையோர்களால் பேணிவரப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள்	10.6%	10.5%

* கணக்காய்வுக்கு முன்னரான எண்ணிக்கைகள்

நீர் வழங்கலில் பிரதானமான செயலாற்றுகை

“ஆயிரம் சேவை இணைப்புகளுக்கான பணியாளர் விகிதம் 2016 ஆம் ஆண்டில் இருந்த 4.95 இல் இருந்து 2017 ஆம் ஆண்டில் 4.66வரை குறைக்கப்பட்டுள்ளது.”

பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்குள்ள இயலுமை



ஆண்டினுள் 126,701 சேவை இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம், சனத்தொகையில் 38.7% வீதமானவர்கள் தே.நீ.வ.வ.ச.யினால் வழங்கப்படுகின்ற குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆண்டினுள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒருசில பாரிய மற்றும் சிறிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதன் மூலம் புதிய நீர் வழங்கல் இணைப்புகள் வழங்கப்பட்டதோடு இருக்கின்ற வாடிக்கையாளர்களின் சேவை மட்டங்கள் மேம்படுத்தப்பட்டன. நாட்டின் குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்காக பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் பூர்த்தியடைகின்ற கட்டத்தில் உள்ளதற்கு மேலதிகமாக 19 வெளிநாட்டு நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களும் 10 உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான கருத்திட்டங்களும் நடைமுறையில் உள்ளன.

ஆயிரம் சேவை இணைப்புகளுக்கான பணியாளர் விகிதம் 2016 ஆம் ஆண்டிலிருந்த 4.95 இல் இருந்து 2017 இல் 4.66 வரை குறைக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பாட்டுச் செலவினங்கள் அதிகரித்ததற்கு ஏற்புடையவாறு அறவீட்டுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே கடந்த ஆறு ஆண்டு காலத்தினுள் காசுப் பாய்ச்சலை முகாமைத்துவம் செய்வதில் சபை கஷ்டமான நிலைமைகளை எதிர்நோக்கியது. சபையின் ஐந்தொகையை வலுப்படுத்துவதற்காக மொத்த வெளிநின்ற கடன்களை பங்குகளாக மாற்றுவதற்கான கொள்கைத் தீர்மானமொன்று 2014 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், புதிய கடன்களின் கடன் கடப்பாடுகளின் காரணமாக அது மேம்படுத்தப்படவில்லை.

2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்துவந்த கடந்த மூன்று ஆண்டுகளிலும் தே.நீ.வ.வ.ச. முறையே ரூபா 1,030,044,119, ரூபா 2,926,304,392 மற்றும் ரூபா 1,816,772,395 வரிக்கு பிந்திய இலாபத்தை பதிவு செய்தது.

வழங்கப்படுகின்ற குடிநீரின் தரத்தை உறுதி செய்வதற்கு பிராந்திய ஆய்வுகூடங்களுடன் சேர்ந்து தே.நீ.வ.வ.ச.யின் மத்திய ஆய்வுகூடம் செயலாற்றியது. ஆண்டினுள் நுண்உயிரியல் தொடர்பில் நடத்தப்பட்ட 31,752 மாதிரிப் பரிசோதனைகளில் 0.75% மாதிரிகள் மட்டுமே திருப்திகரமற்ற நிலையை காட்டியது. மேலும், பௌதீக மற்றும் இரசாயன அளவுகோல்கள் தொடர்பில் 29,838 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதோடு கலங்கிய தன்மை, நிறம் மற்றும் வன்மை தொடர்பில் 11.8% திருப்திகரமற்றதாக அறியப்பட்டது. SLS 722 வழிகாட்டல்களை பின்பற்றி மாதத்திற்கு இரண்டு தடவை நாடளாவிய ரீதியிலுள்ள திட்டங்களின் 271 நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளில் மூல நீரின் (சுத்திகரிக்கப்படாத நீர்) தரம் பரிசோதிக்கப்பட்டதோடு, சுத்திகரிப்பு நடைமுறையின் நீர் தரம் வாராந்தம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.
இரசாயன பரிசோதனையின் பொருட்டு மத்திய ஆய்வுகூடம் தராதர அங்கீகாரத்தை (ISO 17025) பெற்றது. பதுளையில் (தெமோதர) பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் அளவீடுகளுக்கான பரிசோதனை வசதிகளுடன்கூடிய புதிய முழுமையான ஆய்வுகூடம் அபிவிருத்தி செய்யப்பட்டது. பண்டாரவளையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 5வது நிதியத்திலிருந்து கிடைத்த உயர் தொழில்நுட்பக் கருவிகளுடன் (ICP/OES) கூடியதாக ஆய்வுகூட வளாகம் புதுப்பிக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு, கன உலோக பரிசோதனை வசதிகளுடன் கூடியதாக அபிவிருத்தி செய்யப்பட்டது. அனுராதபுரம் ஆய்வுகூடத்தின் பரிசோதனை இயலளவு 30% ஆல் அதிகரிக்கப்பட்டது.

ஆண்டினுள் வருவாயற்ற நீர் குறைப்பு நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்பட்டன. மூடப்பட்ட எல்லைகள் தாபிக்கப்பட்டதன் பின்னர், கொழும்பு நகரத்தினுள் முக்கியமான பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு, பிரதேச உட்பாய்ச்சல் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்புலனாகின்ற நீர்க் கசிவுகளை இனங்காண்பதற்காக இரவு கால ஆய்வு, பாதாள நீர்க் குழாய்களின் ஆய்வு மற்றும் வீட்டுக்கு வீடு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்களவு வருவாயற்ற நீர் குறைக்கப்பட்டது. இதற்கிணங்க மேல் மாகாணத்திலும் நாடளாவிய ரீதியிலும் வருவாயற்ற நீர் முறையே 27.68% மற்றும் 25.98% ஆக குறைக்கப்பட்டது.

பொது விடயங்கள்

தே.நீ.வ.வ.ச.யின் செயலெல்லையின் கீழ் 343 பாரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர் வழங்கல் திட்டங்கள் இயங்குகின்றன. இவற்றில் 55 திட்டங்கள் பிரதான நகரங்களை உள்ளடக்கியுள்ளதோடு, 288 திட்டங்கள் பட்டினங்கள் மற்றும் கிராமங்களை உள்ளடக்குகின்றன.

சனத்தொகையில் 3.2% வீதத்தினர் கைப்பம்பிக் குழாய்க் கிணறுகளின் மூலம் நீர் வழங்கலைப் பெறுகின்றனர். கிராமிய நீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தவரை சமூக மைய அமைப்புக்களின் ஊடாக சமூக முகாமைத்துவம் மேம்படுத்தப்படுகின்றது. முறைசார்ந்ததான மழை நீர் சேகரிப்பும் குடிநீர் மூலவளத்துக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க தெரிவாகக் கருதப்பட்டுள்ளது.

		2016	2017	வேறுபாடு(%)
முக்கியமான புள்ளிவிபரங்கள்: நீர் வழங்கல்				
நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை		**337**	**343**	1.78
குழாய் நீர் உற்பத்தி (மில்லியன் க.மீ.)		**649**	**686**	5.70
குழாய் நீர் நுகர்வு (மில்லியன் க.மீ.)		**483**	**508**	5.18
வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	**857,647**	**902,050**	5.18
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	**1073,609**	**1,143,859**	6.54
மொத்த வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள்		**1,931,256**	**2,045,919**	5.94
பொது நீர்க் குழாய்கள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	**470**	**489**	4.04
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	**1,159**	**1,127**	(2.76)
மொத்த பொது நீர்க் குழாய்கள்		**1,629**	**1,629**	(0.80)
வீடல்லாத நீர் இணைப்புகள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	**79,599**	**84,878**	6.63
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	**81,616**	**88,375**	8.28
மொத்த வீடல்லாத நீர் இணைப்புகள்		**161,215**	**173,253**	7.47
(பொது நீர்க் குழாய்கள் உள்ளடங்கலாக)				
மொத்த நீர் வழங்கல் சேவை இணைப்புகள்		**2,092,471**	**2,219,172**	6.06
குடும்பமொன்றின் மாதாந்த சராசரி நீர் நுகர்வு				
(வீட்டு இணைப்பு/க.மீற்றர்)	(அ) மேல் மாகாணம்	**18.12**	**17.61**	(2.81)**
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	**13.62**	**13.31**	(2.28)**
மாதாந்த சராசரி வீட்டு கட்டண பட்டியல் பெறுமதி (ரூபா)				
	(அ) மேல் மாகாணம்	**829.92**	**795,33**	(4.17)**
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	**474.76**	**464.92**	(2.07)**
மொத்த வருமானம் (ரூபா மில்லியன் - வெற் வரியுடன்)		**23,975**	**24,846**	3.63
மொத்த மீண்டுவரும் செலவினம் (ரூபா மில்லியன்)		**20,917**	*** 24,358**	16.45**
வருவாயற்ற நீர் வழங்கல் (%)				
	(அ) மேல் மாகாணம்	**28.26**	**27,68**	(2.05)
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	**22.18**	**23,92**	7.84**
	(இ) நாடளாவிய	**25.55**	**25.98**	1.68
தொ.ப.பதவியினர்/1000 இணைப்புகள்		**4.14**	**3.88**	(6.28)
மொத்த பதவியினர்/1000 இணைப்புகள்		**4.95**	**4.66**	(5.86)
நீர் உற்பத்திக்கான சராசரி மீண்டுவரும் செலவினம் (ரூபா/க.மீ.)		**32.23**	**31,63**	(1.86)
சராசரி மொத்த செலவினம்/ அலகு விற்பனை (ரூபா/க.மீ.)		**47.19**	**47,37**	0.38**
அலகொன்றுக்கான சராசரி வருமானம் (பட்டியல்/நுகர்வு) (ரூபா/க.மீ.)		**49.62**	**48,95**	(1.35)**
சேகரிப்பு வினைத்திறன்		**1.00**	**1.03**	3.00
ஆழ் கிணறுகள்	(அ) துளையிடப்பட்டவை	**299**	**291**	(2.68)
	(ஆ) வெற்றியளித்தவை	**2.65**	**2.45**	(7.55)
அபிவிருத்திச் செலவினம் (ரூபா மில்லியன்)		**30,902.42**	**30,176.68**	(2.35)**

***கணக்காய்வுக்கு முன்னரான எண்ணிக்கை.**

**** முதன்மைக் காரணிகளிலான மாற்றங்கள் பாதகமானவையாகக் கருதப்பட்டது.**

சாக்கடையின் பிரதானமான செயலாற்றுகை



		2016	2017	மாற்றம் %
முக்கியமான புள்ளிவிபரங்கள் - சாக்கடை				
வீட்டு இணைப்புகள்				
	மேல் மாகாணம்	13,757	**15,500**	11.25
	ஏனைய மாகாணங்கள்	886	**886**	0.00
வீடல்லாத இணைப்புகள்				
	மேல் மாகாணம்	1,332	**1,480**	10.00
	ஏனைய மாகாணங்கள்	185	**187**	1.07
வீட்டுத்திட்ட இணைப்புகள் (மொத்தம்)				
	மேல் மாகாணம்	2,907	**3,666**	20.70
	ஏனைய மாகாணங்கள்	-	**-**	-
மொத்த சாக்கடை இணைப்புகள்	நாடளாவிய	19,067	**21,719**	12.00
	மேல் மாகாணம்	17,996	**20,646**	12.84
	ஏனைய மாகாணங்கள்	1,071	**1,073**	0.19

தொழிற்பாடுகள் பற்றிய பொழிப்பு

“தே.நீ.வ.வ.சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 54.84% ஆன பெரும் பகுதி மேல் மாகாணத்தின் நீர் வழங்கல் முறைமைகளான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ, பியகம, பம்புகுழிய மற்றும் களுத்துறையின் கந்தான, கெத்ஹேன ஆகிய நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது.”

நீர் வழங்கல்
குடிநீர் உற்பத்தி

2017 ஆம் ஆண்டில் மொத்தமாக 686 மில்லியன் கன மீற்றர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் குடிநீர் உற்பத்தியின் போக்கு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 54.84% வீதமான பெரும் பகுதி மேல் மாகாணத்தின் நீர் வழங்கல் முறைமைகளான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ, பியகம, பம்புகுழிய மற்றும் களுத்துறையின் கந்தான, கெத்ஹேன ஆகிய நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது.



மாகாண ரீதியில் நீர் உற்பத்தி



உற்பத்திச் செலவு

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்கின்ற வகையில் மொத்த உற்பத்திச் செலவு (ரூபா. மில்லியன்) பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.



உற்பத்திச் செலவு ரூபா/கன மீற்றர்

2016	2017
47.19	47.37

உற்பத்திச் செலவு = மொத்தச் செலவு/விற்பனை செய்யப்பட்ட அலகுகள்
= (மொத்த மீண்டுவரும் செலவு + மக்களுக்கு உரிமையளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் கடன் வட்டி + பெறுமதி வீழ்ச்சியடைதல்)/ (விற்பனை செய்யப்பட்ட அளவு)

சேவை இணைப்புகள் பற்றிய ஒப்பீடு

மாகாணம்/ பி.சே.நி	மாகாண/ பி.சே.நி. ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை			தே.நீ.வ.வ.ச. பிரதேசம்	தேநீவவச பிரதேச ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை		
	2016 திசெம்பர் இறுதியில்	**2017 திசெம்பர் இறுதியில்**	மாற்றம் %		2016 திசெம்பர் இறுதியில்	**2017 திசெம்பர் இறுதியில்**	மாற்றம் %
மேல் - மத்திய	443,998	**462,290**	4.12	முன்னுரிமை**	2,293	**2,007**	(12.47)
				கொழும்பு நகரம்	140,841	**142,883**	1.45
				கோட்டே	160,781	**166,770**	3.72
				மஹரகம	140,083	**150,630**	7.53
மேல் - வடக்கு	256,513	**271,735**	5.93	களனிய	183,519	**194,207**	5.82
				கம்பஹா	72,994	**77,528**	6.21
மேல் - தெற்கு	236,735	**252,903**	6.83	தெஹிவல	105,136	**107,363**	2.12
				களுத்துறை	63,912	**67,570**	5.72
				பாணந்துறை	67,687	**77,970**	15.19
மத்திய	248,735	**261,356**	5.07	கண்டி வடக்கு	93,804	**99,303**	5.86
				கண்டி தெற்கு	80,366	**85,103**	5.89
				கண்டி கிழக்கு	74,565	**76,950**	3.20
வட மேல்	73,782	**78,036**	5.77	குருணாகல்	73,782	**78,036**	5.77
வட மத்திய	107,686	**114,351**	6.19	அனுராதபுரம்	107,686	**114,351**	6.19
சப்பிரகமுவ	100,957	**106,606**	5.60	இரத்தினபுரி	47,489	**51,219**	7.85
				கேகாலை	53,468	**55,387**	3.59
தென்	303,423	**312,024**	2.83	அம்பாந்தோட்டை	102,406	**106,237**	3.74
				மாத்தறை	94,646	**97,267**	2.77
				காலி	106,371	**108,520**	2.02
ஊவா	86,273	**94,794**	9.98	பண்டாரவளை	48,706	**53,409**	9.66
				மொனறாகலை	37,567	**41,385**	10.16
வடக்கு	17,817	**21,653**	21.53	யாழ்ப்பாணம்			
				மன்னார்	17,817	**21,653**	21.53
கிழக்கு	216,552	**243,424**	12.41	வவுனியா			
				அம்பாறை	50,967	**58,005**	13,81
				திருகோணமலை	55,902	**63,866**	14.25
				அக்கரைப்பற்று	68,935	**74,605**	8.23
				மட்டக்களப்பு	40,748	**46,948**	15.22
மொத்தம்	2,092,471	**2,219,172**	6.06	**மொத்தம்**	2,092,471	**2,219,172**	**6.06**

** 2017 ஆம் ஆண்டில் கொழும்பு நகரப் பிரதேசத்தின் முன்னுரிமை இணைப்புகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டன.

இணைப்புக்களின் அதிகரிப்பு

இணைப்புகளின் எணணிக்கை



ஆண்டுக்கான விலைப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு ஒப்பீடு

ரூபா மில்லியன்



குடும்பமொன்றுக்கான சராசரி மாதாந்த நீர் பாவனை

(தலா இணைப்புக்கான க.மீ.)



Average Household monthly Bill



விலைப்பட்டியல் புள்ளிவிபரங்கள்

விபரம்	2016 (ரூ. மில்)	**2017 (ரூ. மில்)**
விலைப்பட்டியல் இலக்கு (வெற் வரியுடன்)	22,380	**26,346**
உண்மை விலைப்பட்டியல் (வெற் வரியுடன்)	23,975	**24,846**
காசு அறவிடல் இலக்கு (வெற் வரியுடன்)	22,156	**27,913**
உண்மைச் சேகரிப்பு (வெற் வரியுடன்)	23,971	**25,567**

பாவனையாளர் வகுதிவாரியாக விற்பனையாகிய நீரின் அளவும் வருமானமும் (2017)

நுகர்வோரின் வகுதி	விற்பனையின் அளவு		வருமானம்	
	கன மீற்றர் 000	%	ரூபா மில்லியன்	%
நேரடி கட்டண அறவீடு#	371,050	72.89	14,903	59.98
பாடசாலைகள்	5,782	1.14	136	0.55
தோட்டக் குடியிருப்புகள்	2,209	0.43	87	0.35
பொது நீர்க் குழாய்கள் மூலமான நீர் வழங்கல்	480	0.09	8	0.03
அரசாங்க நிறுவனங்கள், தே.நீ.வ.வ.ச. வளவுகள்	33,474	6.58	2,406	9.68
வர்த்தக மற்றும் கைத்தொழில்	58,174	11.43	5,794	23.32
சுற்றுலா ஹோட்டல்கள்	3,169	0.62	298	1.20
கப்பல்துறை	124	0.02	69	0.28
முதலீட்டுச் சபை	9,698	1.91	692	2.79
மத வழிபாட்டுத் தலங்கள்	5,829	1.15	141	0.57
உப மொத்தம்	**489,989**	**96.26**	**24,534**	**98.74**
மொத்த வழங்கலுக்கான விலைப்பட்டியல்	15,901	3.12	303	1.22
ஏனையவை*	3,150	0.62	9.0	0.04
முழு மொத்தம்	**509,040**	**100.0**	**24,846**	**100.0**

வீடுகள், தே.நீ.வ.வ.ச. விடுதிகள், அரச விடுதிகள், கூட்டாட்சி ஆதனங்கள், வரியற்ற வீடுகள், சமூர்த்தி வீடுகள், சமூர்த்தி தொடர் வீடுகள்

* "நேரடி கட்டண அறவீடின்" கீழ் அல்லது மேலே குறித்துரைக்கப்படாதுள்ள ஏனைய அனைத்து கட்டண அறவிடல் வகுதிகளும் 'ஏனையவை' என்ற வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதி ஏற்பாடுகளை பதிலீடு செய்தலும் இவ்வகைப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் வகுதிவாரியாக உபயோகிக்கப்பட்ட நீரின் நூற்றுவீத அளவு



நுகர்வோர் வகுதிவாரியாக வருமான நூற்றுவீதம்



முதலீடுகள் பற்றிய பொழிப்பு

"மூலதன வேலைகளுக்காக நிதி வழங்குகின்ற தற்போதைய முறைக்கமைய திறைசேரி முறி வழங்கலினாலான செலவுகள் உள்ளடங்கியதாக ரூபா 30.18 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்கொள்வதற்கான இயலுமையை 2017 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.சபைக்கு வழங்கியது."

நிதியியல் மூலங்கள்

சிறிய நகர (சிறிய மற்றும் நடுத்தர) நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களை மற்றும் தெரிவு செய்யப்பட்ட 4 பாரிய அளவிலான நீர் வழங்கல்/சாக்கடைக் கருத்திட்டங்களை தோற்றுவிப்பதற்காக மாத்திரம் உள்நாட்டு திரண்ட நிதியத்திலிருந்து தே.நீ.வ.வ.சபைக்கு நிதி ஒதுக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட ஒரு பாரிய அளவிலான சாக்கடைக் கருத்திட்டத்துக்காக மீளளிப்பு வெளிநாட்டு உதவி நிதி அளிப்பும் ஒதுக்கப்பட்டது. பாரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களின் வெளிநாட்டுக் கடன் செலவீனங்களுக்காக ரூபா 16 பில்லியனான மேலுமொரு நிதி ஒதுக்கீடு காணப்பட்டது. தே.நீ.வ.வ.சபைக்கு கிடைக்கத்தக்கதாயிருந்த திறைசேரி முறிகளைக்கொண்டு வெளிநாட்டு நிதி அளிப்பிலான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களின் மீதி உள்நாட்டு நிதிப் பங்களிப்பினை ஈடுசெய்துகொள்ள முடியுமாயிருந்தது.

பாரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களைப் பொறுத்தவரை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவுகளை எவ்விதத் தடைகளுமின்றி மேற்கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.சபைக்கு இயலுமாயிருந்தது.

அதேவேளை, 2017 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 6,914 மில்லியன் தொகையின் மூலம் 15 நீர் வழங்கல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு (2016 இல் இருந்து தொடர்ந்து வருகின்ற) தே.நீ.வ.வ.சபைக்கு இயலுமாயிருந்தது. நீர் வழங்கல் துறை சமுதாய வசதியேற்பாட்டு நோக்கங்களுக்காக ரூபா 1,322.84 மில்லியன் உள்நாட்டு நிதியும் மற்றும் குறைநிரப்பு ஒதுக்கீடு ரூபா 158 மில்லியன் உள்நாட்டு நிதியும் வழங்கப்பட்டது.

2014 தொடக்கம் 2016 வரையிலான கால கட்டத்தினுள் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வசதிகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு படிப்படியாக அதிகரித்தது. 2016 ஆம் ஆண்டில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 37 பில்லியனாக காணப்பட்டது. எனினும் இது 2017 ஆம் ஆண்டில் ரூபா 30.18 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. மூலதன வேலைகளுக்காக நிதி வழங்குகின்ற தற்போதைய முறைக்கமைய திறைசேரி முறி வழங்கலினாலான செலவுகள் உள்ளடங்கியதாக ரூபா 30.18 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.சபைக்கு இயலுமாயிருந்தது. எவ்வாறாயினும் இது உள்நாட்டு வங்கி நிதி அளிப்புக் கருத்திட்டங்களுக்கான செலவுகளுக்கு மேலதிகமானதாகும்.

மூலதன வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகள்

ரூபா மில்லியன்



மூலதன நிதியங்களின் பயன்பாடு

2017 ஆம் ஆண்டில் மூலதன நிதியங்களின் பயன்பாடு 100.2% ஆக காணப்பட்டது.

மூலதன நிதியப் பயன்பாடு

ரூபா மில்லியன்



மூலதன நிதியப் பயன்பாடு பற்றிய ஒப்பீடு - 2016/2017

விளக்கம்	2016		2017	
வெளிநாட்டு நிதித் தொகை (ரூபா மில்லியன்)	24,335	91.8%	**17,749**	**109%**
வெளிநாட்டு உதவியுடன் தொடர்புடைய உள்நாட்டு நிதியத் தொகை (ரூபா மில்லியன்)	4,640	66.31%	**11,293**	**98%**
உள்நாட்டுக் கருத்திட்டங்களுக்கான திரண்ட நிதியங்கள் (ரூபா மில்லியன்)	1,927	55.95%	**1,135**	**48%**
மொத்தம்	30,902	83.6%	**30,177**	**100.2%**

இலங்கை அரச நிதியங்களின் மூலமான சிறிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு மற்றும் கருத்திட்டங்களின் மேம்பாடு

தே.நீ.வ.வ.ச.யினால் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, செலவிடப்பட்ட சில உள்நாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களை தே.நி.வ.வ.ச. கொண்டுள்ளது. மேற்படி கருத்திட்டங்களின் அமுலாக்கல் உரிய மாகாணத்தின் பணியாளர்களால் மேற்பார்வை செய்யப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மாகாண தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணியாளர்களால் பொறுப்பேற்கப்பட்டது. உள்நாட்டு நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அநேகமான கருத்திட்டங்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டவைகளாகும். வருடாந்த வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் சிறிய அளவில் கிடைத்தமையின் காரணமாக இக் கருத்திட்டங்கள் நீடித்து வருகின்றன. இதன் பெறுபேறாக விலை உயர்வுக்கு அமைய இக் கருத்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு அதிகரித்துள்ளது.

நன்கொடை வழங்குனர்களால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஏற்புடைய நிதியங்கள்



அதேபோன்று, செய்யப்பட்ட வேலைகளுக்கான ஒப்பந்தகாரர்களின் கொடுப்பனவுக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு உரிய காலத்தில் நிதியங்கள் விடுவிக்கப்படவில்லை. 2015 ஆம் ஆண்டிலிருந்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கருத்திட்டங்களுக்கான இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இந்த வகுதியின் கீழ் நாடு முழுவதிலும் நடைமுறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கருத்திட்டங்களுக்காகவும் பயன்பாடுகளின் இடம்பெயர்ச்சிப் பணிகளுக்காகவும் ரூபா 735 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் ஆரம்பமாகின்றபோது, பூர்த்தி செய்வதற்கான நிதித் தேலைப்பாடுகளைக் கொண்ட, பூர்த்தியடைதல் பல்வேறு கட்டங்களில் காணப்பட்ட 38 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கருத்திட்டங்கள் (36 நீர் வழங்கல், 2 சாக்கடை கருத்திட்டங்கள்) காணப்பட்டன.

மேற்படி கருத்திட்டங்களை நிதிப் பற்றாக்குறையின் காரணமாக (அனேகமாக பாதியளவு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில்) நிறுத்த வேண்டி நேரிட்டது. பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் தடுத்துவைக்கப்பட்ட பணத் தொகைகளையும் கட்டணப் பட்டியல்களையும் செலுத்துவதற்காக மாத்திரம் ரூபா 130.28 மில்லியன் குறைநிரப்பு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. எனினும், தே.நீ.வ.வ.ச.யினால் வேண்டப்பட்ட நிதியங்கள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக ஆண்டினுள் இவ்வகுதியின் கீழ் 39.4% நிதி ஒதுக்கீடே பயன்படுத்தப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. ரூபா 945.74 மில்லியனான தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி தற்போதுள்ள நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டை தொடர்ந்தும் மேற்கொண்டது. மேற்படி நிதியமானது நீர் வழங்களின் தரம் மற்றும் அளவினை மேம்படுத்துவதற்கும், சாக்கடைத் திட்டங்களின் பராமரிப்புக்கும், தே.நீ.வ.வ.ச.யின் சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், தொழிற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உதவிச் சேவைகளை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.

அதாவது, தே.நீ.வ.வ.ச. ரூபா 533.99 மில்லியனை புனரமைப்புக்காகவும், ரூபா 88.52 மில்லியனை வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கும், ரூபா 95.20 மில்லியனை வலுசக்தி பேணலுக்கும், ரூபா 228.3 மில்லியனை மூலதனச் சொத்துக்களை பதிலீடு செய்வதற்கும் செலவிட்டுள்ளது. நன்கொடை உதவிகள் அல்லது பிரதானமான நிதியங்கள் கிடைக்காத நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

மாவட்ட ரீதியிலான மூலதனப் பணிகள் நிகழ்ச்சித் திட்டம் - 2017

மாவட்டம்	நிதி ஒதுக்கீடு 2017 ரூபா மில்லியன்	நிதி ஒதுக்கீட்டுடனான கருத்திட்டங்களின் எண்ணிக்கை	நலன்பெறுனர்கள்
அம்பாறை	**19.65**	4	30,000
அனுராதபுரம்	**14.36**	2	155,855
பதுளை	**22.18**	2	16,000
கொழும்பு	**18.93**	2	30,300
காலி	**87.86**	3	71,700
கம்பஹா	**3.30**	1	20,000
களுத்துறை	**30.46**	1	120,000
கண்டி	**66.46**	4	187,000
கேகாலை	**66.30**	4	58,675
குருணாகல்	**73.21**	4	106,185
மாத்தளை	**27.96**	1	400,000
மாத்தறை	**58.59**	2	10,000
மொனறாகலை	**0.40**	2	16,000
நுவரெலியா	**89.64**	2	5,000
பொலனறுவை	**39.92**	2	74,800
யாழ்ப்பாணம்	**1.38**	1	200,000
இரத்தினபுரி	**73.99**	6	152,900
திருகோணமலை	**8.81**	1	25,000
அம்பாந்தோட்டை	**33.72**	3	35,500
மொத்தம்*	**736.52**	**45**	**1,714,915**

* உபயோகங்களின் இடமாற்றம் உள்ளடங்கலாக மாகாணங்களுக்கு இடையிலான விடயங்களுக்காக ரூபா 763.48 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

பிராந்திய உதவி நிலையம்	கருத்திட்டத்தின் பெயர்	முகவர்	மொ.ம.செ. ரூபா மில்லியன்	நலன்பெறுனர்
ஊவா	மொனறாகல – புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல்	KBC பெல்ஜியம்	5,515.00	50,000
மேல்	லபுகம – கலட்டுவாவ புனரமைப்பு மற்றும் விரிவாக்கம்	WTP ஹங்கேரி	7,302.00	375,000
கிழக்கு	கிழக்கு மாகாண நீ.வ.அ.நி.தி.	JICA	6,526.00	267,000
வடக்கு	கிளிநொச்சி புனரமைப்பு நீ.வ.வ.	JICA	1,942.50	38,000

ஊழியர்கள்

> **"மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு கடந்த காலத்தைப் போன்று, ஊழியர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை தொடர்ந்தும் வழங்கியது. 2017 ஆம் ஆண்டினுள் 41 புதிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயலமர்வுகள்/ விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன."**

பதவியணியின் பலம்

பதவியணி	2016	2017	மாற்றம் (%)
(அ) நிரந்தர*	10,110	**10,082**	(0.28)
(ஆ) அமைய	3	**1**	(66.67)
(இ) ஒப்பந்த	215	**229**	(6.51)
(ஈ) பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்	24	**26**	(8.33)
மொத்தம்	10,352	**10,338**	

* வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களுக்காக ஆட்சேர்க்கப்பட்ட பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கையில் உள்ளடங்கவில்லை

2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிரந்தர பதவியினர்களான 10,082 பேருக்கு மேலதிகமாக, 229 ஒப்பந்த ஊழியர்களும், 1 அமைய ஊழியரும், 26 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்களும் காணப்பட்டனர். பெரும்பாலான ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் வெளிநாட்டு நிதி உதவியின் கீழான கருத்திட்டங்களின் பொருட்டே ஆட்சேர்க்கப்பட்டனர்.

2017 சனவரி முதல் திசெம்பர் வரையிலான காலத்தினுள் பல்வேறான பதவியணியினர் வகைகளின் கீழ் 648 நிரந்தர ஊழியர்களும், 119 ஒப்பந்த ஊழியர்களும் 22 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்களும் ஆட்சேர்க்கப்பட்டனர். இதே காலப்பகுதியில் பணியாளர்களின் பல்வேறு வகைகளிலும் 676 நிரந்தர ஊழியர்கள், 2 அமைய ஊழியர்கள், 105 ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் 20 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் ஓய்வுபெறுதல், பதவி விலகல், பதவி விட்டு நீங்குதல், மற்றும் இறப்புகள் என்ற வகையில் நீங்கிச் சென்றனர். இதன் பெறுபேறாக மொத்த பதவியணியினர் தொகை 14 ஆல் குறைவடைந்தது. 26 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் பின்னர் நிரந்தரமாக்கப்பட உள்ளனர்.

பிரதானமான தொழில்களின் அடிப்படையிலான பதவியணியினர் பகிர்வு



அமைவிடத்தின்படி பதவியணியினர் பகிர்வு



பதவியணிக்கான நலன்கள்

- ஆண்டினுள் உற்பத்தித் திறன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு உள்ளடங்கலாக வருடாந்த மிகையூதியம் ரூபா 40,000.00 செலுத்தப்பட்டது.
- முன்னைய ஆண்டுகளைப் போன்று உபயோகிக்கப்படாத மருத்துவ லீவுக்கான பணக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்பட்டது.
- 2017 மார்ச் மாதத்தில் நெலும் பொக்குன மஹிந்த ராஜபக்ஷ கலை அரங்கில் நடாத்தப்பட்ட உலக நீர் தின வைபவத்தில் ஊழியர்கள் அவர்களது களங்கமற்ற சேவையின் பொருட்டு பாராட்டப்பட்டனர்.
- சலுகைக் கட்டணத்தின் கீழ் அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.
- சேவையில் ஈடுபட்டிருந்தபோது மரணமடைந்த நிரந்த ஊழியர்களின் சார்பில் மரண உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கான தேனீர் கொடுப்பனவாக ஆளொருவருக்கு மாதாந்தம் ரூபா 650.00 வழங்கப்பட்டது.
- அரசாங்க வங்கிகள் ஊடாக கடன் (வீடமைப்புக் கடன் மற்றும் வாகனக் கடன் முறையே மக்கள் வங்கியிலிருந்தும் இலங்கை வங்கியிலிருந்தும்) வசதிகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு தலா ரூபா 10,000.00 பண்டிகை முற்பணம் வழங்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் 120 ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 45,830,615.00 பன்னிரண்டு மாதக் கடனாகவும், ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 1,522,846,639.00 பத்து மாதக் கடனாகவும் சலுகை வீதத்தின் கீழ் வழங்கப்பட்டது.
- ஊழியர்களின் (குடும்ப அங்கத்தவர்கள் உள்ளடங்கலாக) மருத்துவச் செலவுகளின் மீளளிப்புக்காக (சராசரியாக) ரூபா 88 மில்லியன் உறப்பட்டது. இதற்கு மேலதிகமாக, தீவிர நோய்களுக்கான மருத்துவ செலவுகளும் உறப்பட்டன.

பதவியணியினர் ஊதியமும் நன்மைகளும்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதவியணியினர் ஊதிய ஒப்பீடு

விபரம்	2016 ரூபா மில்லியன்	2017 ரூபா மில்லியன்
சம்பளங்கள்	10,104	10,421
ஊழியர் சேம நிதியத்துக்கான பங்களிப்பு	902	911
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்பு	226	228
மொத்தம்	11,232	11,560

மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி

தே.நீ.வ.வ.சபையின் மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு 2017 ஆம் ஆண்டினுள் 29 புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியது. அவையாவன, படவரைஞர்களுக்கான தொ.பொ. வரைபட அடிப்படை, பொறியியலாளர்/பொறி. உதவியாளர்களுக்கு மீள் ஊடுகலப்பு பொறிகளின் வடிவமைப்பு, தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு, ஆய்வுகூட உதவியாளர்களுக்கான படிகார சுண்ணாம்பு பகுப்பாய்வுப் பரிசோதனை மற்றும் ஆய்வுகூட அளவீட்டுக் கருவிகளின் பராமரிப்பு மற்றும் திறன், குழாய் திருத்த முறைகள், முகப்புப் பலகைகளின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு அத்துடன் பொறியியல் உதவியாளர்களுக்கு விளைவுத்தாக்கம்மிக்க ஒரு தலைவராக வருவது எவ்வாறு, நீர் சுத்திகரிப்புக்கான அல்கீ பரிகாரம், பொறியியலாளர்களுக்கான வளிசீராக்கி முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் தொழிற்பாடு அத்துடன் FIDIC ஒப்பந்த நிலைமைகள், விபத்துகளின்போது பொறுப்புடைமை, பிரச்சினைகளை முன்னெடுத்தல் மற்றும் அறிக்கையிடல், கி.நீ.வ.திட்டங்களின் செயற்பாடுகள், உயர் தாக்கம்மிக்க சமர்ப்பணமொன்றை தயாரித்து சமர்ப்பிப்பது எவ்வாறு, நிதி ஒழுங்குவிதிகள், நிறைவேற்றதிகாரிகளுக்கான விளைவுத்தாக்கம்மிக்க பல்ஊடக சமர்ப்பணமொன்றை தயாரித்தல் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், குழாய் பொருத்துனர்கள்/தொழிலாளர்களுக்கான நீர் குழாய் இணைப்புகள் மற்றும் குழாய் இடம்பெயர்வுகள், குழு வேலைகளை ஊக்குவிப்பதற்கான வெளிவாரிப் பயிற்சி, பாவனையாளர் சேவைத் திறன்கள், பாரியளவு அஞ்சலுக்காக இணைந்த அஞ்சலைப் பயன்படுத்தல், கணினி உதவியுடனான அறிக்கை தயாரித்தல், தரவு முகாமைத்துவத்தில் Spreadsheets ஐ பயன்படுத்தல், Spreadsheets உடனான தரவுகளின் காட்சிப்படுத்தல், கணினிப் பாதுகாப்பு மற்றும் இணைய பாதுாப்பு, கலப்புக் குழுக்களுக்கான Outlook மற்றும் Webmail உடனான மின்அஞ்சல் முகாமைத்துவம், வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம், சிறந்த சேவை வழங்கலுக்கான அத்தியாவசிய தொடர்பாடல் திறன், Ms Office 2010 தொடர்பிலான தேர்ச்சியைப் பெறுதல், MAA க்கான இணையம் மற்றும் மின் அஞ்சல் பயன்பாட்டுக்கான அறிமுகம், தேர்ச்சிபெற்ற/தேர்ச்சிபெறாத தரங்களுக்கு தொழில்வாண்மைத் திறன்களுக்கான ஆட்களுக்கிடையிலான திறன்கள்.

உள்ளக பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

இப்பிரிவினால் 2017 ஆம் ஆண்டினுள் 246 உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு பல்வேறு வகுதிகளையும் சேர்ந்த 9,228 ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. (600 முகாமைத்துவ பணியாளர்கள், 2,385 ஏனைய நிறைவேற்றுத்தர பணியாளர்கள், 2,593 மேற்பார்வைத்தர பணியாளர்கள், 2,139 எழுதுவினைஞர் மற்றும் சம தரத்தைச் சேர்ந்த பணியாளர்கள், 1,511 தொழிற்பாட்டுப் பணியாளர்கள்).

நாட்டினுள் உள்ள ஏனைய பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்பட்ட பயிற்சி

மொத்தம் 2450 பயிற்சி நாட்களை உள்ளடக்கியதாக உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களின் ஊடாக 182 ஊழியர்களுக்கு மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் (MD&T) பிரிவினால் வெளிவாரிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களால் நடத்தப்பட்ட கலாநிதி, முதுமாணி மற்றும் பட்டப் பின்படிப்பு பாடநெறிகள், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NIBM), வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ நிறுவகம் (ISMM), இலங்கை பொறியியலாளர் நிறுவனம், இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், வீடமைப்பு, திட்டமிடல் மற்றும் கட்டிட நிலையம் ஆகிய நிறுவனங்களால் நடத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளும் உள்ளடங்குகின்றன. மேலும் மனித வள முகாமைத்துவம், வழங்கல் சங்கிலித்தொடர் முகாமைத்துவம், நிர்மாணிப்பு முகாமைத்துவம், தொழில்நுட்ப மற்றும் மின்னியல் துறைகள், இயந்திர தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பு ஆகிய துறைகளில் குறுகிய கால பாடநெறிகளுக்கும் ஊழியர்கள் பெயரிடப்பட்டனர்.

வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் உத்தியோபூர்வ விஜயங்கள்

இவ்வகுதியின் கீழ், சபையின் 98 ஊழியர்களுக்கு ADB மற்றும் JAICA, KOICA, ITEC, EBARA உடன் AIT, ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு, WHO, சிங்கப்பூர் கூட்டுறவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சீன விஞ்ஞானக் கல்லூரி ஆகிய குறுகிய கால இருதரப்பு நட்புறவு புலமைப் பரிசிலின் கீழ் குறுகியகால வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களின் ஊடாக 134 அலுவலர்களுக்கு கப்பலேற்றலுக்கு முன்னரான பரிசீலனை விஜயங்கள், தொழிற்சாலை ஒப்பந்த பேச்சுவார்த்தைகள், இரட்டை நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களுக்கு மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு வசதிசெய்து கொடுத்தது.

2017 ஆம் ஆண்டினுள் நீண்டகால நட்புறவு புலமைப் பரிசில்களாக, தே.நீ.வ.வ.ச.யின் பொறியியலாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் (வர்த்தகம்) நீண்ட கால வெளிநாட்டு முழு நேர நட்புறவுப் புலமைப் பரிசில்களைப் பெற்றனர்.

அ) பிரான்ஸ் நாட்டின் அரசாங்கத்தினால் அனுசரணை வழங்கப்பட்ட சர்வதேச நிறைவேற்று முகாமையாளர் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (இருவர்).

ஆ) நெதர்லாந்து நட்புறவு புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நீர் முகாமைத்துவம் மற்றும் நீர் சேவை முகாமைத்துவ சிறப்பியல்பாக்கத்துடனான ஆளுகை தொடர்பிலான விஞ்ஞான முதுமாணி.

இ) நெதர்லாந்து நட்புறவு புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நீர் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் சிறப்பியல்பாக்கம், நீர்தகவல், நீர் முகாமைத்துவத்துக்கான மாதிரியாக்கல் மற்றும் தகவல் முறைமை தொடர்பிலான விஞ்ஞான முதுமாணி.

தொழில் புரிகின்றபோது வழங்கப்படும் பயிற்சி

தொழில்பயிலுனர்களுக்கு பணியிலிருக்கும்போதே பயிற்சி வழங்கப்பட்டது (பட்டப்படிப்பு மாணவர்கள், NDT/HNDE மாணவர்கள், அருங்கலைகள் பயிலுனர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்கள், கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் (A.A.T.), வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய தொழில் பயிலுனர்கள் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) ஆகியன.) மேற்படி பயிற்சியின் கீழ் 133 பட்டப்படிப்பு மாணவர்கள், 60 தொழில்நுட்ப பயிலுனர்கள், 03 கணக்கீட்டு பயிலுனர்கள் மற்றும் 33 எழுதுவினைஞர்/ஏனைய பயிலுனர்கள் உள்ளடங்கியதாக 33,953 மனித நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.

உள்ளக பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி பற்றிய சுருக்கம்

பயிற்சியின் வகை	பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை			மனித நாட்கள்
	திட்டமிடப்பட்டது	பயிற்சி பெற்றது	பயிற்சிபெற்ற நூற்றுவீதம்	
உள்வாரிப் பயிற்சி	4600	9728	200%	13328
உள்நாட்டு வெளிவாரிப் பயிற்சி	180	182	101%	2450
வெளிநாட்டுப் பயிற்சி	80	239	299%	3758
வெளி நிறுவனங்களால் நடத்தப்பட்ட செயலமர்வுகள்/ தொழில்நுட்ப சமர்ப்பணங்கள்	240	245	102%	245
மொத்தம்	**5100**	**9894**	**194%**	**16867**

மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவினால் (MDTD) வழங்கப்பட்ட பயிற்சிகள் பற்றிய சுருக்கம்



2017 முன்னேற்றம் - பங்குபற்றியோர் எண்ணிக்கை



பங்குபற்றியோர் எண்ணிக்கை பயிற்சியின் எண்ணிக்கை

	திட்டமிடப்பட்ட	பங்குபற்றிய
வெளிவாரிப் பயிற்சி	180	182
வெளிநாட்டுப் பயிற்சி/விஜயங்கள்	80	239
தொழில்நுட்ப சமர்ப்பணங்கள்	240	245
கைத்தொழில் பயிற்சி		230
உள்வாரிப் பயிற்சி	4600	9728

“உலகின் முதன்மையானதும் முக்கியமானதுமான மருந்து
சுத்தமான நீராகும்”

சுலோவாக்கியா பழமொழி



நீலப்போரான அறிக்கை

கலட்டுவாவ நீர் சுத்திகரிப்பு நிலையம்

சேவைத் திறன் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள்

தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தியின் ஊடாக நவீனமயமாக்கல்

நவீன சூழமைவுக்கமைய நிறுவனத்தின் வளர்சியிலும் நிலைபேண்தகு தன்மையிலும் நவீனமயமாக்கல் ரீதியிலான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் பெருமளவு பங்களிப்பை வழங்கும் என்ற புரிந்துணர்வுடன் கடந்த சில ஆண்டுகளினுள், குறிப்பாக தகவல் தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பில் நிறுவனம் விசேட கவனத்தை செலுத்தியது.

தற்போதுள்ள முறைமைகள் மற்றும் தீர்வுகளை மேம்படுத்தி பராமரிக்கின்ற அதேவேளை, நிறுவனத்தின் முக்கியமான தொழிற்பாடுகளை உள்ளடக்குவதற்கான சில புதிய தீர்வுகளின் ஊடாக மேலும் நவீனமயப்படுத்தலை மேற்கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு இயலுமாயிருந்தது. மீளிணைப்பதன் ஊடாக வியாபார நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் மரபார்ந்த அணுகுமுறைகளை மேம்படுத்துதல் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் அதிக முன்னுரிமையளிக்கப்பட்ட விடயங்களாயிருந்தன. இ-ஆட்சி எண்ணக்கருவின் வளர்ச்சியுடன் சேர்ந்து செல்கின்ற அதேவேளை, பாவனையாளர் கவனிப்புச் சேவைகள் மற்றும் பல்வேறான தரப்பினர்களின் இடைத்தொடர்புகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகரித்து வருகின்ற கேள்விக்கு ஈடுகொடுக்கின்ற வகையில், நிறுவனக் கட்டமைப்பின் கீழ்மட்டம் வரை தீர்வுகள் கிடைக்கக்கூடியதாக இருக்கும் வகையில் நீடிப்பதற்கு தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டன.

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு

தகவல் தொழில்நுட்ப திர்வுகளின் பயன்பாட்டுக்கான தளமாக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு காணப்படுகின்றது. நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் பிரதானமான ஆகக்கூறுகளாக மத்திய சேவக உட்கட்டமைப்பு, இணைப்புத் தீர்வு மற்றும் இறுதிப் பயனுகரி மட்டத்திலான வன்பொருள்கள் காணப்படுகின்றன. தரவு நிலைய வசதிகளை மேம்படுத்த நடவடிக்கையெடுக்கும் அதேவேளை, பிரத்தியேக கனணிகள், சுற்றயல் கருவிகள் போன்ற இறுதிப் பயனுகரி வன்பொருள்கள் முறைமையில் சேர்க்கப்பட்டன.

பிராந்திய/மாவட்ட பொறியியலாளர் அலுவலகம், நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம், களஞ்சிய அமைவிடங்கள் போன்ற மேலும் முக்கியமான அமைவிடங்கள் வழமையான கம்பி இணைப்புடனான IP VPN இப்புகள் மற்றும் ஏனைய குறைந்த தரவு நிலையங்கள் இணைக்கப்பட்டு தொலைவிலிருந்து இயக்கக் கூடிய VPN இணைப்புகளின் ஊடாக அணுகுதல்கள் வழங்கப்பட்டதன் மூலம் IP VPN தீர்வுகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. எவ்வித இடையூறுகளும் இன்றி தற்போதுள்ள தீர்வுகளின் கிடைப்பனவை உறுதி செய்கின்ற தீவிர தேவையை கவனத்திற்கொண்டு அனர்த்த மீட்சி வசதிகளைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பாகவுள்ள முக்கியமானதொரு துறையாக உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு காணப்படுகின்றது. தேவைப்படுகின்றபோது சேவை வழங்குனர்களின் உதவியோடு வன்பொருள் / வலையமைப்பாக்கல் பணியாளர்களின் ஈடுபாட்டுடன் வன்பொருள் மற்றும் இணைப்புத் தீர்வுகளின் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நேரத்தைக் குறைக்கும் பொருட்டு அனேகமான பராமரிப்புச் சேவைகள் உள்ளகப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

மென்பொருள் தீர்வுகள்

மென்பொருள் அபிவிருத்தியாளர்களின் உள்ளகக் குழுவொன்றின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமையானது நிறுவனத்தில் மிக முக்கியமானதொரு மென்பொருள் தீர்வாகும். இத்தீர்வு 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டதோடு, மென்மேலும் தொழிற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு பரப்பெல்லையை விரிவாக்கும் பொருட்டு மேம்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. முறைப்பாடுகளைக் கையாளுதல், புதிய இணைப்பு நடவடிக்கைகள், வருவாயற்ற நீர் கணிப்பீட்டு வசதிகள், கள செயற்பாடுகளுக்கான உதவி ஆகியவற்றை உள்ளடக்குவதற்காக புதிய தொழிற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கான நீடிப்பொன்றாக பாரிய மீட்பு மொடியுல் அபிவிருத்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.

தளத்திலேயே மானி வாசிப்புத் தரவுகளை சேகரித்து கட்டணப் பட்டியல்களைத் தயாரிப்பதற்காக மானி வாசிப்பவர்களுக்கு உதவும் முகமாக செல்லிடத் தொலைபேசி பிரயோக முறையொன்று விருத்தி செய்யப்பட்டது. தற்போதுள்ள மானி வாசிப்புத் தரவு சேகரிப்பு மற்றும் தரவுப் பதிவுகளின் மூலம் கைப்பாட்டு முறையில் கட்டணப் பட்டியல்களைக் கணிப்பிடுவதில் நடைபெறுகின்ற மனித தவறுகளைக் குறைத்து அதற்குப் பதிலீடாக வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைக்கான மேலதிக வசதியாக மேற்படி மாதிரிப் பிரயோக முறை அபிவிருத்தி செய்யப்பட்டது.

புதிய தேவைப்பாடுகள் மற்றும் வியாபார நடவடிக்கைக் கட்டணங்களுக்கு பொருந்துகின்ற வகையில் மனித வள முகாமைத்துவம் மற்றும் கொடுப்பனவு மொடியுல்களுக்கான மேம்பாடுகள் மற்றும் புதுப்பித்தல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பிரதானமான செயற்பாடுகளில், பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமைக்கான மேம்பாடுகள் மற்றும் நாடளாவிய ரீதியில் தீர்வினை நடைமுறைப்படுத்தல் உள்ளடக்குகின்றது. நிதிப் பிரிவுக்கான பல்வேறு புதிய மென்பொருள் தீர்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதோடு பொதுப் பேரேட்டு முறைமைக்கான மேம்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

பாவனையாளர் கவனிப்புச் சேவைக்கான தீர்வுகள்

அழைப்பு நிலைய வசதிகள் மேலும் விருத்தி செய்யப்பட்டு, நாடளாவிய பயன்பாட்டுக்காக பொதுமைப்படுத்தப்பட்ட முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமையாக வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கு இத்தீர்வு ஒருங்கிணைக்கப்பட்டது. பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாள்வதற்காக மாளிகாகந்தையிலுள்ள அழைப்பு நிலைய வசதிகளின் மூலமும் அதேபோன்று பிராந்திய அலுவலகங்களினாலும் தற்போது இத்தீர்வு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கள அலுவலர்களுக்கான வேலைக் கட்டளைகள் அதே முறைமையிலிருந்து பிறப்பிக்கப்படுகின்றன. கள அலுவலர்களுக்கான முறைப்பாட்டுத் தகவல்களின் விநியோகப் பொறிமுறையாக குறுஞ்செய்தி முறைமை பயன்படுத்தப்படுகின்றது.

முறைமையின் மூலம் பாவனையாளர் பின்னூட்டல்கள் தன்னியக்கமாக பிறப்பிக்கப்பட்டு குறுஞ்செய்திகளின் மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

கட்டணப் பட்டியல்கள், கொடுப்பனவுகள் மற்றும் சேவைத் தேவைகளின் பல்வேறான சமர்ப்பணங்களை அவதானிக்க பாவனையாளர்களுக்கு வசதி செய்கின்றதான இணைய சேவை சாதனமானது பாவனையாளர் வசதியை மேம்படுத்தும் பொருட்டு மேலும் விருத்தி செய்யப்பட்டது. இணையத்தின் ஊடான கட்டணப் பட்டியல் கொடுப்பனவு வசதியானது இணையச் சேவைச் சாதனத்துடன் கூட்டிணைக்கப்பட்டது. மேற்படி இணையத்தின் ஊடான கொடுப்பனவு வசதியை தே.நீ.வ.வ.சபையின் உத்தியோகபூர்வ இணையத்த தளத்தின் ஊடாக அணுகக் கூடியதாக உள்ளது.

பாவனையாளர் உதவித் தொழிற்பாட்டினை மேம்படுத்தும் முகமாக பாவனையாளர் சுய-கவனிப்பு செல்லிடத் தொலைபேசி பிரயோக முறையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது. தற்போது தே.நீ.வ.வ.சபையின் உத்தியோகபூர்வ இணையத்த தளத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மேற்படி பிரயோக முறையானது, செலுத்தப்பட வேண்டியுள்ள மீதித் தொகை மற்றும் கட்டணப் பட்டியல் மற்றும் கொடுப்பனவு விபரங்களின் (இறுதி 3) வரலாற்றையும் அவதானிப்பதற்கு பாவனையாளருக்கு வசதி செய்து கொடுக்கின்றது. தே.நீ.வ.வ.சபையின் காசாளர் நிலையத்தில் அமைந்துள்ள மழைளம முறையிலான சேவை நிலையத்தின் ஊடாக பாவனையாளர்களுக்கு அணுகக் கூடியதான இணைய அடிப்படையிலான வசதிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்தீர்வின் ஊடாக, அலுவலர்களிடம் விசாரிக்காமலே செலுத்தப்பட வேண்டியுள்ள மீதித் தொகை மற்றும் கொடுப்பனவு விபரங்களின் வரலாற்றை பாவனையாளர்களால் அவதானிக்க முடியும். கடமைப்பழுமிக்க அலுவலகங்களுக்கு வருகை தராமலே அவர்களாகவே தகவல்களைப் பார்வையிடுவதற்கு பாவனையாளர்கள் அனுமதிக்கப்படுவதன் மூலம் பாவனையாளர் தொடர்பு அலுவலர்களின் வேலைப்பழுவைக் குறைப்பதற்கு இவ்வசதி உதவி செய்கின்றது.

செல்லிடத் தொலைபேசி வசதிகளுக்கு இணையத்தள சேவையின் ஊடாக வழங்கப்படுகின்ற அனைத்து வசதிகளையும் ஒருங்கிணைப்பதை பாவனையாளர் சுய-சேவை செல்லிடத் தொலைபேசி பிரயோகத்தின் அபிவிருத்தி ஆரம்பித்துவைத்துள்ளது.

சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்

புத்தாக்கமானது அரச சேவையை மேம்படுத்துவதில் முக்கியமானதொரு காரணியாகும். மேம்படுத்தப்பட்ட அரச சேவை வழங்கல் பொறிமுறையின் இயக்க சக்தியாக தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் அரசாங்கத்தின் எண்ணக்கருவாக உள்ள அதேவேளை, புவித் தகவல் முறைமை (GIS), SCADA முறைமை, குறுகிய செய்திச் சேவை மற்றும் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பம் ஆகிய தொழில் நுட்பங்கள் உலகளாவிய ரீதியில் பொதுப் பயன்பாட்டுத் துறையில் நவீன தீர்வுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இப் புதிய போக்குடன் இணைந்து செல்கின்ற வகையில் ஆண்டு முழுவதிலும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்கின்ற வகையில் தொழிற்பாட்டு வினைத்திறன், சேவைத் தரம் மற்றும் வாடிக்கையாளர் கவனிப்புச் சேவையை மேம்படுத்துவதற்காக மேற்படி தோற்றம்பெற்று வருகின்ற தொழில்நுட்பத்தைப் பிரயோகிப்பதில் தே.நீ.வ.வ.ச. குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொண்டது.

வருவாயற்ற நீர் கண்காணிப்பு நிலையத்தை தாபித்தல் மற்றும் நீர் பயன்பாட்டுச் சொத்துக்களுக்கான GIS முறைமை ஆகிய செயற்பாடுகளின் முன்னெடுப்பானது இந்நோக்கத்தை முன்னிட்டு தே.நீ.வ.வ. சபையினால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளாகும். தன்னியக்கமாக்கல், மத்திய கண்காணிப்பு மற்றும் மீளாய்வு வசதிகள், தன்னியக்கமாக்கப்பட்ட மானி வாசிப்பு மற்றும் கட்டணப் பட்டியலிடல் முறைமை ஆகியன நீர் மற்றும் சாக்கடை முறைமைகளின் வினைத்திறன்மிக்க தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பை மேம்படுத்துவதற்கு வழிசெய்யும் வகையில் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. இணையத்தின் ஊடாக முக்கியமானதொரு சாதனத்தின் அணுகுதலுக்கான வசதியை ஏற்படுத்துகின்ற பொருட்கள் இணையத்தள (IoT) தொழில்நுட்பத்தின் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இணைய வசதியை பயன்படுத்துதலானது தன்னியமாக்கலிலும் மத்திய கண்காணிப்பிலும் மிகப் புதியதொரு போக்காகும். பல்வேறு முக்கியமான சாதனங்களைத் தொழிற்படுத்துவதற்காக தன்னியமாக்கல் மற்றும் கண்காணிப்புக்கான IoT எண்ணக்கருவைப் பயன்படுத்துவதன் சாத்தியத்தன்மையானது தற்போது நிறுவனத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது.

தே.நீ.வ.வ.ச. உத்தியோகபூர்வ இணையத்தளம்

நிறுவனத்தின் தற்போதைய பிரதிமையைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் தே.நீ.வ.வ.ச.யின் உத்தியோகபூர்வ இணையத்தளம் தொடர்ந்து இற்றைப்படுத்தப்படுகின்றது. நிறுவனத்தைப் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குகின்ற அதேவேளை, வாடிக்கையாளர் இடைச் செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு ஒருசில இடைச்செயற்பாட்டு சேவைகள் இணையத்தளத்திற்கு ஒருங்கிணைக்கப்பட்டன. விண்ணப்பப் படிவங்கள், சேவைக் கோரல் படிவங்கள், துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகள் ஆகியவற்றை பாவனையாளர்களால் பதிவிறக்கம் செய்யக்கூடியதாக உள்ளது. முக்கியமான நிகழ்வுகள் பற்றிய விபரங்கள், அறிவித்தல்கள், செய்திகள் ஆகியன நாளாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றன.

கேள்விப்பத்திர அறிவித்தல்கள், தொழில் வாய்ப்புகள், பெறுகைகள் பற்றிய அறிவித்தல்கள் ஆகியன இத்தளத்தில் உள்ள மிகப் பிரபல்யமான பிரிவுகளாகும். பாவனையாளர் பின்னூட்டல்கள் மற்றும் முறைப்பாடுகள்/மனக்குறைகளை சமர்ப்பிப்பதற்கான வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. மிக விளைவுத்தாக்கம்மிக்க உள்ளடக்க இற்றைப்படுத்தல் நடைமுறை வசதிகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு திறந்த இணையத்தள வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி முறையியலைப் பயன்படுத்தி உள்ளடக்க முகாமைத்துவத் தீர்வுகளுக்கு அதனை மாற்றக்கூடியதான விதத்தில் இணையத்தளத்தை மேம்படுத்துவதற்கான ஒருசில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடன் அட்டைகளைப் பயன்படுத்தி இணையத்தின் ஊடாக நீர் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை பெறுவதற்கான வசதியேற்பாடுகளை புதிய இணையத்தளம் கொண்டுள்ளது.

அழைப்பு நிலையத் தொழிற்பாடுகள்

வாடிக்கையாளர்களுக்கு அவர்களது முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளை உடனடி அழைப்புத் தொலைபேசி இலக்கம் 1939 ஊடாக பதிவு செய்வதற்கு உதவியாக 24 மணி நேர அழைப்பு நிலைய வசதியை தே.நீ.வ.வ.ச. தொழிற்படுத்துகின்றது. அழைப்பு நிலைய வசதிகளுக்குத் தேவையான மென்பொருள் மொடியுல் தொழில்நுட்பப் பிரிவினால் அபிவிருத்திசெய்து/அமுலாக்கப்பட்டது. வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளை பெற்று குறுஞ் செய்திச் சேவையின் (SMS) ஊடாக உடனடியாக வாடிக்கையாளருக்கும் ஏற்புடைய தே.நீ.வ.வ.ச. அலுவலர்களுக்கும் பின்னூட்டலுடன் கூடியதாக, செய்தியை

வழங்குகின்ற மென்பொருள் பொதியானது அழைப்பு நிலையத் தொழிற்பாடுகளில் மிக முக்கியமானதாக அமைகின்றது. இத்தீர்வானது கடந்த 6 ஆண்டு காலமாக தொழிற்படுத்தப்பட்டு வருவதோடு, வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமையின் அபிவிருத்தியுடன் மென்பொருள் தீர்வுக்கான பாரிய மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. அழைப்பு நிலைய மென்பொருளானது தற்போது ஒரு புதிய வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமை மொடியுலாக உள்ளது.

வர்த்தக நடவடிக்கைகள்

பாவனையாளர்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றுதல், உள்ளக பணியாளர் பயிற்சிகளை மேற்கொள்ளல் மற்றும் நாடளாவிய ரீதியிலான நிலைபேண்தகு தன்மை ஆகியன வர்த்தகப் பிரிவினால் மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற பிரதானமான துறைகளாகும்.

சேவைத் திறமைக்கான மென்பொருள் அபிவிருத்தி

கட்டணப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்புக்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் "வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமை" அபிவிருத்தி செய்யப்பட்டு தாபிக்கப்பட்டதோடு, மிருதுவான தொழிற்பாடு மற்றும் கண்காணிப்பு நோக்கங்களுக்காக 400 க்கு மேற்பட்ட அறிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. நிதிப் பிரிவுடனான மீளிணக்கம் தொடர்பில் அண்மித்த கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. வினைத்திறனை மேம்படுத்துவதற்காக புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அ. செல்லிடத் தொலைபேசிக்கான பிரயோகமொன்றைப் பயன்படுத்தி நீர்மானி வாசித்தல் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, நாடளாவிய ரீதியிலான நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. கணிப்பிடல் குறைக்கப்பட்டதன் மூலம் மானி வாசிப்பவர்களுக்கு இது மிக வசதியை ஏற்படுத்திக் கொடுத்த அதேவேளை, தவறுகளற்ற கட்டணப் பட்டியல் மூலம் சிறந்த பாவனையாளர் திருப்தியை ஏற்படுத்தியது. இதற்கு மேலதிகமாக, செல்லிடத் தொலைபேசி மானிக் கண்காணிப்பு முறைமையானது தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு சிறந்த செயலாற்றுகைக்கு வசதி ஏற்படுத்துகின்றது.

ஆ. காசாளர்களிடம் வரும் பாவனையாளர்கள் "சுய சேவைப் பிரயோகத்தை" பயன்படுத்தி தற்போது செலுத்த வேண்டியுள்ள தொகையை பார்வையிட்டு அதன்படி கொடுப்பனவுகளைச் செய்யக்கூடிய நிலைமையில் உள்ளனர்.

இ. செல்லிடத் தொலைபேசிப் பிரயோகமானது செலுத்தப்படாதுள்ள நீர் கட்டணப் பட்டியல்களின் காரணமாக சேவை இணைப்பைத் துண்டிப்பதற்கு முன்னர் பாவனையாளரின் தற்போதைய நிலுவைத் தொகையை சரிபார்ப்பதற்கு களப் பணியாளர்களுக்கு இயலுமையை ஏற்படுத்துகின்றது.

ஈ. பௌதீக ரீதியிலான வாசிப்பு மேற்கொள்ளப்படாதுள்ள விடத்து மாதத்துக்கான கணணி மூலம் பிறப்பிக்கப்பட்ட கட்டணப் பட்டியலை வழங்குவதன் மூலம் பாவனையாளர் திருப்தியை மேம்படுத்துதல் விளைவுத்தாக்கம்மிக்கதாக உள்ளது.

உ. சேகரிப்பை மேம்படுத்துவதற்காக, அனைத்து அலுவலர்களுக்கும் ஒரு கட்டணப் பட்டியலாக மாதாந்த கட்டணப் பட்டியலை வழங்குவதற்கு "குழுமக் கட்டணப் பட்டியல்" தொடர்பில் நாடளாவிய ரீதியில் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குதல் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து 11 பிராந்திய சேவை நிலையங்களிலும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுவதன் மூலம் தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு "வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்தும்" தொடர்பில் பரிச்சயம் ஏற்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. மாதாந்த கட்டணப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு பற்றிய பிராந்திய கூட்டங்களில் கலந்துகொள்ளலானது துண்டிப்பைத் தவிர்த்து நிலுவைத் தொகைகளை சேகரித்தல் மற்றும் நீண்ட காலம் நிலுவையாகவுள்ள தொகைகளை சேகரிப்பதன் அவசியத்தை வலியுறுத்தல் ஆகியன தொடர்பில் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதற்கு வசதியேற்படுத்தியது.

பாவனையாளர்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றுதல்

தலைமையகத்தில் நீர் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் காசாளரால் ஏற்கப்படுகின்றது. பாவனையாளர் திருப்தியை மேம்படுத்துவதற்காக கட்டடம் திருத்தியமைக்கப்பட்டு, "பாவனையாளர் கவனிப்பு நிலையம்" எனப் பெயரிடப்பட்டது. பாவனையாளர்களுக்கு "சுய உதவி மையம்" இனைப் பயன்படுத்தி கட்டணப் பட்டியலைச் செலுத்தித் தீர்ப்பதற்கு முன்னர் அவரது நிலுவைத் தொகையை சரிபார்த்துக்கொள்வதற்கு இயலுமாயுள்ளதோடு, பாவனையாளர் கவனிப்புக் கருமபீடத்தில் ஏதேனும் சரிபார்த்தல்களை செயவதற்கும் முறைப்பாடுகளை செய்வதற்கும் முடியுமாயுள்ளது. பாவனையாளர்களுக்கு வரிசை முகாமைத்துவ முறைமை, தொலைக்காட்சி பொழுதுபோக்கு, போதியளவு இருக்கை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட பாவனையாளர் நேயம்மிக்க சூழலில் சேவையாற்றப்படுகிறது. மேற்படி மாதிரி அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

நிலுவைத் தொகைகளை அறவிடுதல்

சபையின் வருமானம் ஈட்டுதலை அதிகரிக்க நேரிட்டுள்ளது. இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ள வளவுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதான நீண்ட கால நிலுவைத் தொகைகளை சேகரிப்பதற்கு மேலதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ரூபா 100,000 மற்றும் ரூபா 200,000 க்கு மேற்பட்ட நிலுவைத் தொகைகளை சேகரிப்பதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதோடு இதன் பெறுபேறாக ரூபா 7.34 மில்லியனை திரட்ட முடியுமாயிருந்தது. கொழும்புப் பிரதேச பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் விசேட கூட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதோடு, இது தற்போதைய நிலுவைத் தொகைகள் மற்றும் நீண்டகால நிலுவைத் தொகைகளை சேகரிப்பதற்கு வழிவகுத்தது. 2003 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட மிகப் பழைய நிலுவைத் தொகைகளும் சேகரிப்பட்டதென்பதைக் குறிப்பிடுதல் முக்கியமாகும். மேலுமொரு பாரிய நிலுவைத் தொகையான ரூபா 10.1 மில்லியன் தொகை தவணை அடிப்படையில் சேகரிக்கப்பட்டு வருகின்றது. துண்டிக்கப்பட்ட பாவனையாளர்களிடமிருந்து மேலதிக வருமானத்தைத் திரட்டுவதற்காக பல்வேறு உபாயங்களைக் கடைப்பிடித்து அனைத்து பிராந்திய அலுவலகங்களும் முக்கியமானதொரு வகிபாகத்தை ஆற்றியது.

செயலாற்றுகையை அதிகரிக்கச் செய்தல் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு

செயலாற்றுகையை அதிகரிக்கச் செய்தல் தொடர்பில் கவனம் செலுத்தி பணியாளர்களுடனான மாதாந்த முன்னேற்றக் கூட்டங்கள், மாதாந்த நாடளாவிய வர்த்தக

முகாமையாளர் கூட்டங்கள் மற்றும் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற உப பிரிவு பணியாளர் கூட்டங்கள் ஆகியன வழமையான கூட்டங்களாக நடத்தப்பட்டன. செயலாற்றுகையில் உள்ள தடைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு பணியாளர்களுக்கு இடமளிக்கப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், வருமானம் திரட்டுதல், 0.67 க்கு அண்மித்த அளவில் கடன் குறைக்கப்படுதல், துண்டிப்பு நிலுவைகளைச் சேகரித்தல் மற்றும் நிதிப் பிரிவுக்கான நம்பத்தகுந்த தகவல் மாற்றம் ஆகியன தொடர்பில் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றம் காணப்பட்டது.

2017 உலக நீர் தின கொண்டாட்டத்தின்போது தலைமையகத்தின் வர்த்தகப் பிரிவு "தலைமை அலுவலகத்திலும் சுற்றிலுமுள்ள அலுவலகங்களின் மதிப்பீட்டிலும் 5S முறையை நடைமுறைப்படுத்தல்" எனும் வகுதியின் கீழ் 1 ஆம் இடத்தைப் பெற்றது.

உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியதான பகுதிகளை இனங்காண்பதற்காக பணியாளர்களின் ஒரு பிரிவினருடன் சிறு குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பணிக் குழுக்களால் கொடுக்கப்பட்ட முன்மொழிவுகள் கலந்துரையாடப்பட்டு, அணுகப்பட்டு, பயிற்சியளிப்புகள்/அறிவுள்ள ஆட்களை அணுகுதல் மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது. பல பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அறிவுப் பகிர்வின் மூலம் இயலுமாயிருந்தது. இப்பிரிவு பெருமளவில் கணினிப் பிரயோகத்தின் மீது தங்கியிருப்பதால் செயலாற்றுகைக்கான தடைகளாக சலிப்பூட்டுகின்ற கணினிப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. ஏதேனும் பொதுச் செயற்பாடுகளுக்கு அனைத்துப் பணியாளர்களும் பங்களிப்புச் செய்கின்றபோது அனைத்து செயற்பாடுகளிலும் பங்கேற்பு முகாமைத்துவம் ஊக்குவிக்கப்பட்டதோடு, அவர்களது கருத்துக்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இவ்வாண்டு பணியாளர்களின் திறன் மேம்பாட்டுக்காக அனைத்து வகுதிகளையும் சேர்ந்த பணியாளர்களை உள்ளடக்குகின்றதான மையக் குழுக்களுக்கு பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (ஒவ்வொரு பணியாளருக்கும் சராசரி 2.5 என்றவாறு மொத்தம் 86 அமர்வுகள்) நடத்தப்பட்டன. அவற்றில் சில வருமாறு: அனைத்து வர்த்தகப் பிரிவு அலுவலர்களுக்கும் - விளைவுத்தாக்கம்மிக்க பல்ஊடக சமர்ப்பணங்களை தயாரித்து வழங்குதல், பாவனையாளர் சேவைத் திறன் தொடர்பிலான செயலமர்வு, ஒழுக்காற்று நடைமுறை, உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதற்கான சாதகமான சிந்தனை.

கந்தானை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் இப்பிரிவின் அனைத்துப் பணியாளர்களுக்கும் வெளிவாரிப் பயிற்சி அளிக்கப்பட்டதோடு இது இப்பயிற்சியின் முக்கியமான செயற்பரப்பான குழுப் பணிகளுக்கான திறன்களை மேம்படுத்தலுக்கு மேலதிகமாக பணியாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் இடையில் இடைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்தது. அத்துடன் பொறித் தொகுதிகளுக்கான விஜயமானது பிரதான தீவிர சுத்திகரிப்பு நடைமுறையைப் பற்றிய சிறந்த புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் அளித்தது.

அனைத்துப் பணியாளர்களும் 2017 திசெம்பர் 28 ஆம் திகதி ரணவிரு எபரல்சுக்கு விஜயம் செய்தனர். இந்த ஆடைத்தொழிற்சாலையானது இலங்கை இராணுவத்தினால் முகாமை செய்யப்படுகின்றது. இங்கு உடலூனமுற்ற படைவீரர்கள் உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். உற்பத்தித்திறனுக்கான பல விருதுகளை இந்த ஆடைத்தொழிற்சாலை பெற்றுள்ளதோடு, இது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் இம்முறைமையைப் பற்றிக் கற்பதற்குமாக விதந்துரைக்கப்பட்ட இடங்களில் ஒன்றாகும்.

நாடளாவிய ரீதியில் அனைத்து வர்த்தகப் பிரிவு அலுவலர்களுக்குமான இயலளவு வளர்ச்சி

வர்த்தக அலுவலர்களிழன் பயிற்சித் தேவைப்பாடு இனங்காணப்பட்டு பயிற்சி நிலையங்களின் ஊடாக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்த ஆண்டில், சிறந்த முறையில் சேவை ஆற்றுவதற்கான சாதகமான சிந்தனை, பாவனையாளர் சேவைத் திறமை தொடர்பிலான செயலமர்வு, "சேலைத் திறமையை முன்னிட்டு: தனியார்துறை நிறுவனங்களில் பாவனையாளர் தொடர்பை முகாமை செய்தல்", விளைவுத்தாக்கம்மிக்க பல்ஊடக சமர்ப்பணங்களைத் தயாரித்து வழங்குதல், வரவு செலவுத்திட்ட தயாரிப்பு, வர்த்தக சுற்றறிக்கைகள் தொடர்பிலான விழிப்புணர்வூட்டல், "வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவம்" பற்றிய தொடர்ச்சியான இற்றைப்படுத்தல் ஆகிய பல விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பயிற்சிக்கான இனங்காணல்

சபையிலுள்ள பல்வேறு மட்டங்களிலான வர்த்தக பணியாளர்களுக்கான பயிற்சியளிப்பை மேற்கொள்வது தொடர்பில் பணிற்சியளிப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சியின் வகைகளும் இனங்காணப்பட்ட உள்ளக வளவாளர்களும் வழங்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க பல்வேறான பிராந்திய உதவி நிலையங்களிலுமுள்ள பணியாளர்களுக்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2018 ஆம் ஆண்டுக்கு ஒருங்கிணையும் பொருட்டு, போக்குகளுக்கு ஈடுசெய்யக்கூடிய வகையில் பல்வேறு மட்டங்களிலான பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, இனங்காணப்பட்ட பயிற்சித் தேவைகள் பயிற்சி நிலையங்களுக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும். வர்த்தக அலுவலர்கள், வர்த்தக உதவியாளர்கள், வர்த்தக எழுதுனர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், சாரதிகள், அலுவலக உதவியாளர்கள், ஆகியோரை பணியாளர்கள் வகுதி உள்ளடக்குகின்றது.

பாவனையாளர் விழிப்புணர்வூட்டல்

"திரசர யுகயக ஹரித உதானய" கண்காட்சியின்போது, தே.நீ.வ.வ.சபைக்கு ஒரு கூடம் ஒதுக்கப்பட்டிருந்தது. சுத்திகரிப்பு நடைமுறை, நீருக்கான செலவு மற்றும் நீர் அறவீடு தயாரிக்கப்படும் முறை ஆகியன தொடர்பில் வர்த்தகப் பிரிவு பணியாளர்கள் பொதுமக்களை அறிவூட்டினார்கள்.

கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாடு

கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத்துறையின் செயலாற்றுகையும் பிரதானமான செயற்பாடுகளும்

2017 உலக நீர் தினம் மார்ச் மாதம் 22 ஆம் திகதி நெழும் பொக்குன அரங்கத்தில் "ஏன் நீரை விரயம் செய்கிறோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட பல நிகழ்ச்சிகளில் கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பிரிவு பிரதானமானதொரு வகிபாகத்தை ஆற்றியது. பிரதான நிகழ்வுக்கு சமாந்திரமாக, மிகச் சிறந்த சமுதாய அடிப்படையிலான அமைப்பின் (CBO) நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியைத் தெரிவு செய்கின்ற போட்டி திட்டமிடப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் விஜயம் செய்ததன் மூலம் மிகச் சிறந்த மூன்று திட்டங்கள் கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுப் (RWS) பிரிவினால் தெரிவு செய்யப்பட்டன. மேலும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்

கற்கை கருத்தரங்கு 2017, பாடசாலை மாணவர்களுக்கு மத்தியிலான போட்டி (பாடல்/ஓவியம்/கட்டுரை) மற்றும் பிரதானமான நிகழ்வின்போது ஒரு சஞ்சிகையை வெளியிடல் ஆகியவற்றுக்கு பாரிய அளவில் ஒத்தாசை வழங்கப்பட்டது.

2017 உலக நீர் தினத்திற்கு சமாந்திரமாக CBO க்களுக்கான கள விஜயம் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படதல், சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட "சுபன் பிரஜா அபிமானி" CBO அரங்கக் கூட்டம், ஒரு சில மாவட்டங்களுக்கு (இரத்தினபுரி, குருகல், களுத்துரை) விஜயம் செய்து கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு தரவுத் தளத்தை இற்றைப்படுத்துவதற்கான தரவுகளைச் சேகரித்து தரவுத் தளத்தை பூர்த்தி செய்தல் ஆகியனவும் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. ரிதீவிட்ட CBO வில் புனரமைப்பு, நீரேந்து பிரதேச மேம்பாடு மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் RWS பிரிவில் உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்து வைப்பதற்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்ட ஏனைய சில செயற்பாடுகளாகும். இதற்கு மேலதிகமாக, 7 மாவட்டங்களில் உலக வங்கிக் கருத்திட்டங்களுக்கு பாரிய அளவில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

கிராம உத்தியோகத்தர் பிரிவுடனான டிஜிட்டல் வரைபடங்கள் பெயரிடப்பட்டு தொகுக்கப்பட்டதோடு, RWS வெப்தளங்களில் உள்ளீடு செய்யப்பட்டன. ஆங்கிலத்தில் மற்றும் சிங்களத்தில் மேலும் விருத்தி செய்யப்பட்டிருந்த நீர் பாதுகாப்புத்திட்ட சுவரொட்டிகள் மூன்று தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டதோடு RWS விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கல்வி ஒளி நாடாக்களை மொழிபெயர்த்து சிங்கள உபதலைப்பிடப்பட்டது. சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கலுக்கான புள்ளிவிபர வழிகாட்டல் நூலொன்றும் வெளியிடப்பட்டது.

SACOSAN செயற்பாடுகளின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக 9வது ICWG கூட்டம் மாலைதீவில் நடத்தப்பட்டது. இலங்கையில் துப்புரவேற்பாட்டுக்கான பிராந்திய நிலையம் (RSC) அறிவு முகாமைத்துவம் மற்றும் வலையமைப்புக்கான மத்திய நிலையமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தரவு சேகரிப்பதற்கான மேலும் பல வழிகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தரவுகளை உள்ளீடு செய்தல் விரைவாக்கப்பட்டதன் மூலம் தரவுத் தளத்தின் பூர்த்தி நிலையை மேம்படுத்துவதற்கு இயலுமாயிருந்தது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தொகுக்கப்பட்ட தரவுகளுக்கமைய CBO க்கள் உள்ளடக்குகின்ற குழாய் மூலமான கிராமிய நீர் வழங்கல் 10.5% ஆகும்.

பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

பாவனையாளர் குழுக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாவனையாளர் சங்கங்களை இலக்காகக் கொண்டு மக்கள் தொடர்புகள் (PR) அலகினால் பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. நீர் பாதூப்பு, சுற்றாடல் துறை மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு தொடர்பில் பெரும் கவனம் செலுத்தப்பட்டது. இது நாடு முழுவதிலும் நடத்தப்பட்டது. பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 35 ஆக காணப்பட்ட அதேவேளை அரச நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

2017 உலக நீர் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கு நாடகம், ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டன.

உலக நீர் தினம் 2017

நீர் சார்ந்த பல்வேறு தோற்றப்பாடுகள் பற்றி இலக்குக் குழுக்களை அறிவூட்டுவதற்காக பருவகாலச் சஞ்சிகைகளை வெளியிடுவதில் மக்கள் தொடர்புகள் அலகு ஈடுபட்டது. 2017 ஆம் ஆண்டில் நீர் சஞ்சிகை (ஜலய) மார்ச், யூன் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக மூன்று இதழ்கள் வெளியிடப்பட்டன.

பொதுமக்கள் தொடர்புப் பிரிவு அச்சு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரண்டு ஊடக வழிமுறைகளின் ஊடாகவும் தே.நீ.வ.வ.சபையின் உண்மையான நிலைமை தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டுகின்ற பணியிலும் ஈடுபட்டது. அலுவலகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் உயர் முகாமைத்துவத்திற்கு விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டன. ஊடகங்கள் ஊடாக தே.நீ.வ.வ.ச.யின் திறப்பு விழாக்கள் தொடர்பில் தகவல்கள் வழங்கப்பட்டன. இதே விடயத்தை முன்னிட்டு மேலதிக பத்திரிகைக் கட்டுரைகளும் தொகுக்கப்பட்டன. மஹியங்கனை மற்றும் கண்டியில் நடைபெற்ற நடமாடும் நீர் சேவை தொடர்பிலான ஊடகம் லமான அறிவூட்டலும் மேற்கொள்ளப்பட்டது. கடன் அட்டைகள் தொடர்பிழலான அறிவும் வழங்கப்பட்டது. பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கு பதிலிறுத்தல் தொடர்பில், பொதுமக்களால் அல்லது நீர் பாவனையாளர்களால் எழுப்பப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்காக அவசியமான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இவற்றை ஆண்டினுள் வழங்கப்பட்ட பொதுச் சேவைகளாகக் கருதலாம்.

பிரிவின் அனைத்துப் பணியாளர்களும் ஒற்றுமையாக வேலை செய்து ஒவ்வொருவருடனும் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவருகின்ற அதேவேளை அனைவரும் பணியாற்றுவதற்கான விரும்பத்தக்க சூழலில் பணிபுரிகின்றனர்.

நிலக்கீழ் நீர்

நிலக்கீழ் நீர் பிரிவானது பிரதானமாக, நகர, பகுதியளவு நகர மற்றும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான நீர் வழங்கல் வசதிகளின் பொருட்டு நிலக்கீழ் நீர் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் நிலக்கீழ் நீர் பிரிவின் மூலம் அத்தகைய பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச. மற்றும் றுயுளுளுஜீ கருத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிலக்கீழ் நீர் செயற்பாடுகள், நீர் புவிச்சரிதவியல் பரிசோதனை, ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடப்பட்ட கிணறுகளை நிர்மாணித்தல், நீண்ட கால நிலக்கீழ் நீர் பெறுகைக்காக கிணறுகள் மற்றும் நீரோட்டங்கள் பற்றிய மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், ஆழமான

மற்றும் ஆழமற்ற துளையிடப்பட்ட கிணறுகளை நீர் பாய்ச்சி சுத்தமாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல், ருஜேஊநுகு நிதியத்தின் கீழ் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோளின் கீழ் புதிய கைப்பம்பிகளை பொருத்துதல், UNICEF, பிபிதெமு பொலன்னறுவ மற்றும் தே.நீ.வ.வ.ச. வரட்சி நிவாரண நிகழ்ச்சித்திட்ட நிதி மற்றும் பொது மக்கள் வேண்டுகோள்கரளப் பயன்படுத்தி பொதுக் கைப்பம்பிக் குழாய்க் கிணறுகளை திருத்துதல் மற்றும் புனரமைத்தல், UNICEF நிதியம் மற்றும் நிலக்கீழ் நீர் கற்கைகளை பயன்படுத்தி கைப்பம்பி குழாய்க் கிணறுகளின் பராமரிப்புக்கான 3 மட்டங்களிலான முறைமைகளை நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் நீரோட்ட அளவீடுகள் ஆகியனவற்றை 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதானமான நிலக்கீழ் நீர் செயற்பாடுகளாகக் கருதலாம்.

ஆண்டினுள் மொத்தமாக, 797 நீர்புவிச்சரிதவியல் பரிசோதனைகள், 296 ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடல் கிணறுகள், 1189 நீர் பாய்ச்சி சுத்தம் செய்தல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், 679 புதிய கைப்பம்பி பொருத்தல்கள், 2118 கைப்பம்பிக் குழாய் கிணறுத் திருத்தங்கள் மற்றும் புனரமைத்தல்கள், 132 பம்பிப் பரிசோதனைகள், 3 மட்டங்களிலான 7 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன UNICEF நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி செயற்பாடுகளின் கீழ் நிலக்கீழ் நீரைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 7,642 கன மீற்றர்களால் தற்போதுள்ள குழாய்நீர் வழங்கல் திட்டங்களின் மூலவளக் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது. UNICEF நிதியத்தைப் பயன்படுத்தி குருணாகல், மொனறாகலை, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் தற்போதுள்ள கைப்பம்பிக் குழாய் கிணறுத் திருத்தங்கள் மற்றும் புனரமைத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, பிபிதெமு பொலன்னறுவ மற்றும் வரட்சி நிவாரண நிதி முறையே பொலனறுவை மற்றும் அனுராதபுரத்திற்கு பயன்படுத்தப்பட்டது.

நிலக்கீழ் நீர் துறையின் இயலளவைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம் என்றவகையில் பல்வேறு நிதிகளைப் பயன்படுத்தி புதிய இயந்திர சாதனங்கள் வழங்கப்பட்ட அதேவேளை நிலக்கீழ் நீர் பணியாளர்கள் மற்றும் ஏனையோருக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட நிலக்கீழ் நீர் அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்களின் தொடர்ச்சியான கண்காணிப்பு, அத்தனகலு ஓயா நீரேந்து பிரதேசத்துக்கான நீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் நிலக்கீழ் நீர் மாதிரியாக்கல் ஆகியன இப்பிரிவினால் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும் புதிய விடயங்களாகும்.

வலுசக்தி முகாமைத்துவம்

எந்திரவியல் மற்றும் மின்னியல் (M&E) சேவைகள் பிரிவின் கீழ் தே.நீ.வ.வ.சபையின் வலுசக்தி முகாமைத்துவம் கையாளப்படுகின்றது. வலுசக்தி முகாமைத்துவ அலகைத் தவிர, இப்பிரிவில் ஏனைய மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன. அவை எந்திரவியல் மற்றும் மின்னியல் உதவிச் சேவை, போக்குவரத்து மற்றும் கட்டட பராமரிப்பு ஆகியனவாகும்.

வலுசக்தி முகாமைத்துவ பிரிவு

2017 இல் தே.நீ.வ.வ.ச. யின் மின்சார நுகர்வுக்கான வருடாந்த செலவு அண்ணளவாக 4,120 மில்லியனாகும் என்பதோடு, இதில் 94% நீர் உற்பத்தி மற்றும் நீர் இறைத்தலுக்காக (ரூபா 3,935 மில்லியன்) செலவிடப்பட்டுள்ளதோடு, சாக்கடை இறைத்தலுக்காக ரூபா 48 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. தே.நீ.வ.வ.சபையானது மின்சார சபையின் மிகப் பெரிய வாடிக்கையாளராகவும் உள்ளது. தே.நீ.வ.வ.ச. யின் மின் நுகர்வைக் குறைக்கும் பொருட்டு 2004 ஆம் ஆண்டில் வலுசக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இது உறுதியான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் செயற்பாடுகள் தர ரீதியிலும் அளவு ரீதியிலும் உயர் மட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளன. பம்பி முறைமைகள் மற்றும் வலுசக்தி முகாமைத்துவ பணிகளுக்கான அனைத்து வித வலுசக்திக் கணக்காய்வுகளையும் மேற்கொள்வதற்கான வலுசக்தி அளவீட்டுக் கருவிகளை இயந்திரவியல் மற்றும் மின்னியல் சேவைகள் பிரிவு முழுமையாகக் கொண்டுள்ளது. அறவீட்டு வகை திருத்தங்கள், மின்னியல் மற்றும் இயந்திரவியல் மேம்பாட்டு மற்றும் வலுசக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 2004 தொடக்கம் 2017 வரையிலான காலத்தினுள் நிறைவு செய்யப்பட்டதன் பெறுபேறாக உயர் மட்டத்தில் வலுசக்தி மற்றும் செலவு சேமிக்கப்பட்டது. அத்தடன் பிரதான மின்சார முறைமையிலிருந்து பெறப்படும் மின்சாரத்தைக் குறைப்பதற்காக வலுசக்தி முகாமைத்துவ பிரிவு சில சூரிய வலுசக்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

2017 ஆம் ஆண்டில் 20 வலுசக்திக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, இதில் 15 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இக்கருத்திட்டங்களின் மூலமான செலவின சேமிப்பு ரூபா 17.81 மில்லியனாகும் என்பதோடு, இதற்கான செலவு ரூபா 84.19 மில்லியனாகும். அத்துடன் 2018 இல் 31 புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டதோடு, 2017 இல் நடைமுறையில் உள்ள கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக இக்கருத்திட்டங்களுக்கான செலவு முதலீடு அண்ணளவாக ரூபா 372 மில்லியனாகும்.

எந்திரவியல் மற்றும் மின்னியல் உதவிச் சேவைகள் பிரிவு

இப்பிரிவின் கீழ் பின்வரும் வேலைகள் கையாளப்படுகின்றன.

அ). M&E கேள்விப்பத்திர ஆவணங்களை தயாரித்தல் மற்றும் வாகனங்கள், நீர் மானி, அளவீட்டுக் கருவிகள் மற்றும் ஏனைய எந்திரவியல் மற்றும் மின்னியல் உபகரணங்களுக்கான மாதிரிகளைத் தயார் செய்தல்

ஆ). அளவு மட்டங்கள் கண்காணிப்பு முறைமையின் வழங்கல், பொருத்துதல் மற்றும் பராமரிப்பு.

போக்குவரத்துப் பிரிவு

தே.நீ.வ.வ.ச.யில் 1822 வாகனங்கள் உள்ளதோடு, போக்குவரத்துப் பிரிவானது, இவ்வாகனங்களின் அனுமதிப் பத்திரங்கள், காப்புறுதி, விபத்துத் திருத்தங்கள், மாற்றங்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகப் பிரச்சினைகளுக்கும் பொறுப்பாக உள்ளது.

ஆதனங்களின் முகாமைத்துவம்

இப்பிரிவானது, முழுமொத்த தலைமை அலுவலகத்தினதும் இரத்மலானையிலுள்ள உத்தியோகபூர்வ விடுதிகள் உள்ளடங்கலாக படோவிட்ட விடுதிகள் (7), சொய்சாபுர (B20, B23) விடுதிகள் (32), சொய்சாபுர (C23, C24) விடுதிகள் (16), சொய்சாபுர தனிநபர் விடுதிகள் (64) மற்றும் ராவதாவத்த விடுதிகள் (7) ஆகியவற்றின் அனைத்து திருத்தம், பராமரிப்பு மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளை கையாள்கின்றது.

சமூகவியல் செயற்பாடுகள்

விசேட நடவடிக்கை நடைமுறையைக் கருத்திற்கொள்கின்றபோது, 2017 யூன் தொடக்கம் ஆகஸ்ட் வரை முழுமையாகவே சமூகவியல் பிரிவினால் இணைப்பாக்கம் செய்யப்படப்பட்ட தே.நீ.வ.வ.ச. ஊழியர்களின் வெள்ளப் பாதிப்பு மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்கதாகும். அண்ணளவாக 160 பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அவர்களது வீடு மற்றும் ஆதன சேதங்களுக்கான இழப்பீடுகளைப் பெறக்கூடியதாக உள்ள இதன் இறுதிப் பெறுபேறுகளைப் பெறுவதற்காக பல கட்ட நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது.

பிராந்திய உதவிச் சேவைகள் மத்திய நிலையங்களின் சமூகவியலாளர்களின் உதவியோடு இப்பிரிவின் மூலம் பொறுப்பேற்கப்பட்ட வலுசக்தி சேமிப்பு செயற்பாடுகள் முக்கியமாக சமுதாய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் துண்டிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்குகின்றன. பிராந்திய உதவிச் சேவைகள் மத்திய நிலையம் (கிழக்கு) இன் பிராந்திய சமூகவியலாளர்கள் அதன் பணியாளர்களுடன் இணைந்து செல்வநகர் கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் 433 இணைப்புகளை தே.நீ.வ.வ.சபைக்கு கையேற்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுத்தது. அத்துடன் திருகோணமலையில் பிராந்திய உதவிச் சேவைகள் மத்திய நிலையம் (கிழக்கு) மூலம் பொது துண்டிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டதோடு, பழுதடைந்த மானிகளை மாற்றுதல் தொடர்பில் சமுதாய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிட்டமொன்றும் நடத்தப்பட்டது. துண்டிக்கப்பட்ட பாவனையாளர்களை சந்தித்தல், அவர்களை விழிப்புணர்வடையச் செய்தல், பூச்சிய கட்டணப் பட்டியல் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கையெடுத்தல் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டதோடு, காத்தான்குடி ஆழூர் அலுவலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ள அனைத்து சுகாதார பணியாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு "நீர் தரம், அளவீடு மற்றும் வருவாயற்ற நீர் குறைப்பு" தொடர்பில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு உதவி வழங்கப்பட்டது.

சமூகவியல் பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் பலவாகும். அவற்றில் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடுவதாயின், தற்போதுள்ள கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாடு மற்றும் CBO இயலளவு அபிவிருத்தி ஆகியன பிராந்திய சமூகவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டன. 2017 காலத்தினுள் நீர் வழங்கல் கருத்திட்ட நடைமுறைகளில் அவர்களது ஈடுபாட்டைக் குறிப்பிடுவதாயின், களுகங்கை நீரேந்து பிரதேசத்துக்கான பல்தரப்பு நிகழ்ச்சித்திட்ட பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கை தயாரித்தல், பாவனையாளர் திருப்தி தொடர்பிலான மதிப்பீடு, நீரேந்து பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான முன்னேற்ற கண்காணிப்பு, WASSIP யின் கீழ் தரப்பினர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் இணைப்பாக்கம், அனர்த்தத் தணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் இணைந்து செயற்படல் மற்றும் மட்டக்களப்புக்கான 4 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாட்டுத் திட்டமிடல், பாரதெக நீர் வழங்கல் திட்டத்துக்கான பாதுகாப்பு வேலியை உள்வாங்குவதற்கான உதவி, மெதிரியவில் மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குசெய்தல் ஆகியனவாகும். நாட்பட்ட சிறுநீரக நோய் (CKDu) தவிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கற்குடா மற்றும் மட்டக்களப்பில் பாடசாலைகளுக்கு RO பொறித் தொகுதிகளைப் பெறுவதற்காக சனாதிபதி செயலகத்திற்கு அறிக்கையை தயாரித்து அனுப்புதல் நடைபெற்றது.

மேலும், பெருந்தோட்ட அதிகாரிகள் மற்றும் தரப்பினர்களுடனான சந்திப்புக் கூட்டங்கள், SACOSAN திட்டத்தின் கீழ் மலசல கூடங்களை நிர்மாணித்தல் தொடர்பில் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கான தல விஜயம், நில சுவீகரிப்பு தொடர்பிலான தொடர் நடவடிக்கைகள், மீள்குடியமர்த்தல் திட்டத்தை தயாரித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகள் என்ற வகையில் கற்கை அறிக்கைகள், எண்ணக்கருப் பத்திரங்கள், வேலைப் பத்திரங்கள், செயல் நியதிகள், புரிந்துணர்வு உடன்படிக்கைகள், அகியவற்றைத் தயாரித்தல் 2017 ஆம் ஆண்டினுள் சமூகவியல் பிரிவினால் (H/O) மேற்கொள்ளப்பட்டது. "SHIFT கருத்திட்டத்துக்கான பயனுகரிகள் பங்கேற்பு மற்றும் தரப்பினர் பங்காண்மை" தொடர்பிலான அறிக்கை, நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டங்களில் பங்கேற்பு அபிவிருத்தி முறை, "படோவிட்ட பிரதேசத்துக்கான கழிவுநீர் அகற்றல் முறைமையை தாபித்தல் தொடர்பிலான SIA அறிக்கை, ஆகியன தயாரிக்கப்பட்டு பிரதிகள் H/O நூலகத்திற்கு அனுப்பப்பட்டன. பால்நிலை செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பால்நிலை கண்காணிப்பு தலம் தயாரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டது. சமூக பரிசீலனை அறிக்கை (SSR) WASSIP மாவட்டங்களின் கீழ் மீளாய்வு செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டது. பணியாளர் பயிற்சித் தேவைகளை அடையாளம் காண்பதற்கான திறன் தலத்தைத் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது. SIA அறிக்கை மற்றும் தாளயடியில் உத்தேச சுழு பொறித்தொகுதிக்கான சமூக கண்காணிப்புத் திட்டம் மற்றும் தாளயடியில் மீனவர்களுக்கான சமூக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டத்துக்கான TOR பூர்த்தி செய்யப்பட்டது.

உற்பத்தித்திறன் மேம்பாடு, இணைப்பாக்கம் மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு சமூகவியலாளர்கள் அவர்களது உரிய கடமை நிலையங்களில் கடமைக்கு சமூகமளித்தனர். இவற்றைத் தவிர, ஆண்டினுள் முன்னேற்றத்தை கண்டறிவதற்கான முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் மாதாந்த/காலாண்டு செயற்பாட்டுத் திட்டங்களைத் திரட்டுவதன் ஊடாக சமூகவியல் தொழிற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் பாவனையாளர் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படுவதன் மூலம் பாவனையாளர் விசாரணைகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோள் கடிதங்கள் தொடர்பில் நடவடிக்கையெடுத்தல் ஆகியவற்றை வலியுறுத்த முடியும்.

சமூக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

வருவாயற்ற நீரைக் குறைத்தல்

நகரமயமாக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பிரதானமான நீர் வழங்கல் முறையாக குழாய்வழி நீர் வழங்கல் காணப்படுவதோடு, பராமரிப்புக்கான பிரதானமான பணியாக காணப்படுவது குறைந்த மட்டத்திலான நீர் இழப்பைப் பேணிவருதலாகும். வருவாய் ஈட்டலுக்குப் பங்களிப்புச் செய்யாத, நீரைச் சேமிப்பதில் பாரியதொரு வகிபாகத்தை வகிக்கின்ற வருவாயற்ற நீர் பிரிவின் (NRW) மீது பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன. DGM(WC) யின் கீழ் செயற்படுகின்ற சேறு பிரிவு வருவாயற்ற நீரை தாழ் மட்டத்தில் பேணிவருவதற்காக

கட்டணப்பட்டியலிடப்படாத நீர் நுகர்விலிருந்து ஏற்படுகின்ற இழப்பைக் குறைப்பதில் கவனம் செலுத்துவதோடு, மேற்கு மத்திய பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு மிருதுவானதும் நம்பகத்தகுந்ததுமான குடிநீர் வசதியை வழங்குகின்ற அதேவேளை நீர் மூலங்களைச் சேமிக்கின்றது.

1. அறிமுகம்

இலவச நீர் குழாய்களின் ஊடாக இடம்பெறுகின்ற நீர் இழப்பைக் குறைத்தல், நீரின் அனுமதியற்ற நுகர்வைக் குறைத்தல் நீரோட்ட மற்றும் அழுத்த அளவீடுகளின் ஊடாக வருவாயற்ற நீரைக் கணிப்பிடல் மற்றும் கண்காணித்தல், DMAs களை தாபித்தல் மூலம் நீர் வழங்கலை மேம்படுத்தி வருவாயை அதிகரிக்கச் செய்வதை இலக்காகக் கொண்டு DGM (WC) யின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற NRW பிரிவு செயற்படுகின்றது.

AGM (NRW), முகாமையாளர் (NRW) மற்றும் CE (IDU), சேறு அலகு மற்றும் முகாமையாளர் (NRW) வின் கீழ் செயற்படுகின்ற ரன்திய அலகு மற்றும் CE (IDU) வின் கீழ் செயற்படுகின்ற சட்ட விரோத கண்டுபிடிப்பு அலகு ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் சேறு பிரிவின் கீழ் தொழிற்படுகின்றது.

NRW வின் பிரதான ஆக்கக்கூறுகளை பிரித்து இனங்காணுதல் அத்தியாவசியமாகும் என்பதோடு, விளைவுத்தாக்கம்மிக்க NRW முகாமைத்துவத்திற்காக NRW மட்டத்தைக் கணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தரவுகளின் துல்லியத்தன்மை உறுதிசெய்யப்படுகின்றது.

2008 தொடக்கம் 2017 வரையிலான காலத்தினுள் கொழும்பு நகரத்தின் வருவாயற்ற நீர் 53.68% இல் இருந்து 42.30% வரை குறைக்கப்பட்டதன் பெறுபேறாக நீர் விற்பனையில் 23.5% அதிகரித்த அதேவேளை அதே அளவிலான நீர் வழங்கப்பட்டது. 2017 காலகட்டத்தில் NRW குறைப்பு பற்றிய விபரங்கள் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1

2017 ஆம் ஆண்டில் ஒவ்வொரு ஆண்டுக்கும் செயற்படுத்தப்பட்ட தரவுகள், 2017 திசெம்பர் மாத தரவுகளோடு 2016 திசெம்பருக்கான தரவுகளின் ஒப்பீடு பின்வருமாறு.

பிரதேசம்	2016 திசெ.	2017 திசெ.
முகாமையாளர் (கோட்டே)	26.85	27.27
முகாமையாளர் (மஹரகம)	17.10	16.13
கொழும்பு நகரம்	44.68	42.30
மேல் மத்தி	34.26	32.64
முகாமையாளர் (களனி)	18.62	17.40
முகாமையளர் (தெஹிவளை)	24.36	22.91

மேல் மத்திய பிரிவுக்கான விநியோகமும் பாவனையும

கன மீற்/மாதம்		2016	2016
		திசெ.	திசெ.
மேல்	விநியோகிக்கப்பட்ட அளவு	17.6	17.48
மத்தி	விற்பனை அளவு	11.6	11.77

2. சங்கங்களை அமைத்தல், பொது நீர் வழங்கல் குழாய்களைத் துண்டித்தல் மற்றும் ரன்திய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குதல்

கொழும்பு நகரத்தில் 1,571 குறைந்த வருமானத்தைப் பெறும் தோட்டக் குடியிருப்புகள் உள்ளதோடு, இவர்களை உள்ளடக்குகின்றவாறு ஏற்கனவே 1778 சங்கங்கள் உருவாக்கப்பட்டு இலவசமான நீர்க் குழாய்களுக்கு மாணியிடப்பட்டுள்ளது. 2வது அட்டவணை சங்கங்கள் அமைக்கப்படுவது பற்றிய விபரங்களையும் அவர்களது நுகர்வையும் காட்டுவதோடு 3வது அட்டவணை இணைப்புகள் வழங்கப்படுதல் மற்றும் பொது நீர்க் குழாய்களின் துண்டிப்பு பற்றிய விபரங்களையும் காட்டுகின்றது.

அட்டவணை 2: பாவனையாளர் சங்கங்கள் அமைக்கப்படுதல்

	2012	2013	2014	2015	2016	2017
விலைப்பட்டியலிடப்பட்ட சங்கங்கள்	749	1,578	1,735	1,756	1,762	1,778
நுகர்வுக்கான விலைப்பட்டியலிடல் (m3/மாதத்திற்கு)	91,844	166,103	159,445	147,923	135,282	120,807
வருமானம் (ரூபா/மாதத்திற்கு)	312,732	576,609	624,438	584,933	478,796	432,171

அட்டவணை 3: இணைப்புகளை வழங்கல் மற்றும் பொதுக் குழாய்களைத் துண்டித்தல்

	2012	2013	2014	2015	2016	2017
வழங்கப்பட்ட இணைப்புகள் (எண்ணிக்கை)	817	948	528	54	110	131
துண்டிக்கப்பட்ட பொதுக் குழாய்கள் (எண்ணிக்கை)	121	110	72	40	31	78

2017 ஆம் ஆண்டில், குறைந்த வருமானத்தைப் பெறும் குடியிருப்புகளில் வசிப்பவர்களின் சுகாதார நிலையையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்காக சலுகைக் கட்டணத்தில் 131 தனிப்பட்ட இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம் 78 பொதுக் குழாய் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

அங்கீகாரமற்ற நீர் பயன்பாட்டைக் கண்டுபிடித்தல்

மேல் மத்திய பிராந்தியத்தில் வளவுகளின் வழமையான மற்றும் எழுந்தமானரியான பரிசோதனைகள், துண்டிக்கப்பட்ட வளவுகளைப் பரிசோதித்தல், முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல், உயர் கட்டணப் பட்டியலிடப்பட்ட பிரதேசங்களின் பட்டியலைப் பரிசோதித்தல் மற்றும் பூச்சிய கட்டப் பட்டியல்களைப் பரிசோதித்தல், குறைந்த பாவனை மற்றும் மதிப்பீட்டு கட்டணப் பட்டியல்கள் ஆகியன மூலம் சட்டவிரோத கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாண்டினுள் 1181 அங்கீகாரமற்ற இணைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூபா 41.62 மில்லியன் அறவிடப்பட்டது. அங்கீகாரமற்ற நீர் நுகர்வு பற்றிய விபரங்கள் அடட்வணை 4 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 4: அங்கீகாரமற்ற நீர் நுகர்வு கண்டுபிடிப்பு

	2012	2013	2014	2015	2016	2017
பரிசோதிக்கப்பட்ட வளவுகள் (எண்ணிக்கை)	13,619	13,343	12,812	12,250	13,417	9,654
கண்டுபிடிக்கப்பட்ட இணைப்புகள் (எண்ணிக்கை)	1,166	1,661	1,521	1,196	804	1,181

வருவாயற்ற நீர் முகாமைத்துவம்

கொழும்பு நகரத்தில், வருவாயற்ற நீர் கணிப்பீட்டுக்காக முக்கியமான சில பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு மூடிவிடப்பட்ட எல்லைகள் தாபிக்கப்பட்டதன் பின்னர் பிரதேச நீர்ப் பாய்ச்சல் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்புலனாகின்ற கசிவுகளை அடையாளம்காணும் பொருட்டு இரவுகால பரிசோதனைகள், மதகுப் பரிசோதனைகள் மற்றும் வீட்டுக்கு வீடு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி பிரதேசங்களில் வருவாயற்ற நீர் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டது. அத்துடன் மேற்படி நடைமுறையில் பின்வரும் செயற்பாடுகள் உள்ளடங்கியிருந்தன.

- நீர் கசிவுகளை இனங்காணல்
- நீர்ப் பாய்ச்சல் மற்றும் அழுத்த அளவீடு அத்துடன் செல்லுபடியான தன்மை
- வருவாயற்ற நீர் சம்பந்தமான வால்வு மற்றும் குழாய் அமையப்பெற்றுள்ள இடங்களை கண்காணித்தல்
- நிலக் கீழ் தகவல்களின் அமைவிடங்கள் மற்றும் பயன்பாடு
    - வால்வு அமைவிடங்களை இனங்காணல்
    - நிலக்கீழ் நீர்க் குழாய்களை இனங்காணல்
- நீர்க் கசிவை அளவிடல்

5. வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீரை 18% க்கு குறைப்பதற்காக பழைய நீர் வழங்கல் வலையமைப்பை புதிய குழாய்களை இட்டு பதிலீடு செய்தல் மற்றும் DMA/ GIS அடிப்படையிலான வருவாயற்ற நீர் முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றுக்காக ஆ.அ.வ.இன் நிதியளிப்புடன் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (GCWWMIIP) நடைமுறைப்படுத்தப்பட்டது. கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட வருவாயற்ற நீர் குறைப்பு இலக்குகளை அடைவதற்காக அண்மித்திருந்து கண்காணிப்கப்பட்டன.

6. அடைவுகள்

- 2017 ஆம் ஆண்டினுள் கொழும்பு நகரத்தினதும் பிராந்திய சேவை நிலைய (மேல் மத்திய) பிரதேசத்தினதும் வருவாயற்ற நீர் வீதம் முறையே 2.14% மற்றும் 1.64% ஆல் குறைக்கப்பட்டது.
- கொலொன்னாவ பிரதேசத்தில் நான்கு மாவட்ட மானிப் பிரதேசங்களில் (DMAs) வருவாயற்ற நீர் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

தே.நீ.வ.வ.சபையின் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த தொழிற்பாட்டில் வழங்கல் மற்றும் பண்டகசாலை முகாமைத்துவமானது மிக முக்கியமானதொரு விடயமாகும். தே.நீ.வ.வ.சபையின் தொழிற்பாட்டுக்குத் தேவையான பொருட்கள் தயார் நிலையில் உள்ளதோடு பொருட்களின் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தலைப் பொருத்தவரை சரியான கொள்வனவுக் கொள்கைகளையும் பெறுகை நடைமுறைகளையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

சீனா மற்றும் இந்தியாவின் படிகாரம் மற்றும் சுண்ணாம்புப் பொறித் தொகுதிகள் மூடப்பட்டதன் காரணமாக ஒரு சில இரசாயன கேள்விப் பத்திரங்கள் முடிவுறுத்தப்பட்ட போதிலும் எவ்விதத் தடையுமின்றி நாடளாவிய ரீதியில் தேவையான இரசாயனங்கள் 2017 ஆம் ஆண்டு முழுவதிலும் வழங்கப்பட்டன. வழங்கல் மற்றும் முகாமைத்துவ பணியாளர்கள் ஆண்டினுள் அனைத்து புதிய இணைப்புகளையும் வழங்குவதற்கு உதவியளித்தார்கள் என்பதோடு, எந்தவொரு தீவிர நிலைமைக்கும் முகம் கொடுக்கக் கூடியவாறு மேலதிக கையிருப்பு பேணிவரப்பட்டது.

கப்பல் தாமதக் கட்டணங்கள் செலுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக வினைத்திறனமிக்க கப்பற் சரக்குக் கையாளலை உறுதி செய்வதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு, அரச திறைசேரி, இலங்கை சுங்கம், வங்கிகள், இலங்கை துறைமுக அதிகாரசபை, கப்பல் சேவைகள், காப்புறுதிக் கம்பனிகள், தீர்ப்பனவு முகவர்களின் நடைமுறைகள், ஏற்புடைய கருத்திட்ட மற்றும் தொழிற்பாட்டு பராமரிப்பு அலுவலகங்கள் ஆகியன 450 க்கும் அதிகமான கப்பல் சரக்குக் கையாளல்களை இணைப்பாக்கம் செய்ததன் மூலம் உயர் மட்டத்திலான கப்பல் சரக்குக் கையாளல்களை மேற்கொள்ள முடியுமாயிருந்தது. இவற்றுக்கு மேலதிகமாக, ரூபா 990 மில்லியன் பெறுமதியுடன் உள்ளூர் கொள்வனவுக்கான 936 கொள்வனவுக் கட்டளைகளும் 120 அளிப்புக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

இவ்வாண்டினுள் புதிய பொருள்களை கொள்வனவு செய்யாது நாடளாவிய ரீதியிலான பிராந்திய உதவி நிலையங்களில் மேலதிகமாக காணப்பட்ட பொருட்கள் விநியோகிக்கப்பட்டதன் மூலம் ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை சேமிக்க முடியுமாயிருந்தது.

பொருட்பட்டியல் முகாமைத்துவ மென்பொருளின் மூலம் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து 336 களஞ்சியங்களையும் தொடர்புபடுத்துவதற்கான நடவடிக்கையொன்று நடைபெற்று வருவதோடு, அது படிப்படியாக அமுலாக்கப்படவுள்ளது. அது முழுமையாக தொழிற்படும் வரை, மேலதிக கையிருப்புகள் மற்றும் பயன்படுத்தப்படாத பண்டங்களை கண்டுபிடித்து தேவைப்படும் RSC க்களுக்கு வழங்கும் பொருட்டு மொத்த SMS முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக, ரூபா 6.5 பில்லியன் கையிருப்புகளை பகுப்பாய்வு செய்வதற்கான விபரங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு, பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள், சுனாமி மற்றும் UNICEF உதவிகளின் எஞ்சிய பொருட்களிலிருந்து ரூபா 1.8 பில்லியன் பெறுமதியான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றைத் தவிர, பெறுமதியைப் பொறுத்து அனைத்து களஞ்சியங்களும் 03 வகைகளின் கீழ் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2016.12.31 இல் உள்ளவாறு கையிருப்புப் பெறுமதிகளுக்கமைய களஞ்சியங்களின் வகைப்படுத்தல்

2016.12.31 இல் உள்ளவாறு கையிருப்புப் பெறுமதிகளுக்கமைய களஞ்சியங்களின் வகைப்படுத்தல்

வகை	களஞ்சியங்களின் எண்ணிக்கை	கையிருப்புப் பெறுமதி (ரூபா)	வகை விபரம்	கையிருப்புப் பெறுமதியின் % பெறுமதி
A	65	4,976,546,757.07	ரூபா 25 மில்லியனுக்கு மேற்பட்ட கையிருப்புப் பெறுமதி	76%
B	40	941,031,728.80	ரூபா 10 மில்லியனுக்கும் ரூபா 24,999,999.00 க்கும் இடைப்பட்ட பெறுமதி	14%
C	21	670,691,808.63	ரூபா 10 மில்லியனுக்கு குறைவான பெறுமதி	10%
மொத்தம்	336	6,588,270,294.50		100%

2017 ஆம் ஆண்டில் ரூபா 713 மில்லியன் பெறுமதியான 19 ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாண்டிலும், அனைத்து களஞ்சியங்களிலும் இருந்த தேவைக்கு அதிகமான மற்றும் பயன்பெறப்படாத பொருட்களைச் சேகரித்து 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விற்பனை செய்வதற்காக கேள்விப் பத்திரம் கோருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாண்டினுள் 2017 உலக நீர் தினத்தைக் கொண்டாடுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த உற்பத்தித்திறன் போட்டியில் 4வது இடத்தைப் பெறுவதற்கு இப்பிரிவினால் இயலுமாயிருந்தது. வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டினுள் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பிரிவினால் இயலுமாயிருந்ததோடு, ஒட்டுமொத்த செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் காணப்பட்டது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

அபிவிருத்திச் செயற்பாடுகள்

முருங்கன் வடிநிலத்தில் நில நீர் இயக்கம் தொடர்பான ஆராய்ச்சி: முருங்கன் வடிநிலத்தின் விளைவுத்தாக்கம்மிக்க முகாமைத்துவத்திற்கான சுற்றாடல் முழுமொத்தப் பெறுபேறுக் கற்கை

முருங்கன் வடிநிலத்தின் நிலநீர் படுகையானது மன்னார் மாவட்டத்தில் மிக முக்கியமானதொரு மூலவளமாகும். 45 நில மேற்பரப்பு மற்றும் நிலநீர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாராய்ச்சி 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. நில நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர் நிலைகளின் நீர்மட்ட மாற்றங்களுக்கு இடையிலான தொடர்பையும் நிலநீர் இறைக்கப்படுவதால் கடல் நீர் கலப்பதற்குள்ள சாத்தியத்தன்மையையும் புரிந்துகொள்வதற்கு இக்கற்கை மிக முக்கியமானதாகும். மேலும் நில நீர் மீள்செறிமானத்துக்கு பாரிய வாவி மற்றும் மல்வத்து ஓயாவின் பங்களிப்பு மற்றும் நில நீர் உறிஞ்செடுக்கப்படுதலின் போது கடல் நீர் ஊடுறுவலுக்கான சாத்தியத்தன்மை ஆகியவற்றின் பொருட்டும் இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இத்தகவல்கள் முருங்கன் வடிநிலத்தின் சிறந்த முகாமைத்துவத்தின் பொருட்டு அவசியமாகின்றன. ஆராய்ச்சிக்கான உண்மைச் செலவு ரூபா 0.421 மில்லியனாகும்.

நுவரெலியா, வெலிமட மற்றும் பண்டாரவளை பிரதேசங்களின் குடிநீர் வளங்களில் ஓகனோகுளோரீன் மற்றும் ஓகனோபொஸ்பேட் கிருமி நாசினிகளின் எச்சங்கள் பற்றிய பகுப்பாய்வு

உயர் விளைச்சளையும் வருமானத்தையும் பெறுவதற்காக பெருமளவு கிருமிநாசினிகள் பயன்படுத்தப்பட்டு மலைநாட்டின் மலைச் சரிவுகளில் மரக்கறிச் செய்கையும் தேயிலைப் பெருந்தோட்டச் செய்கையும் மேற்கொள்ளப்படுதல் நீர் நிலைகள் மாசடைவதில் பெருமளவு பங்களிப்பைச் செய்கின்றன. நுவரெலியா, வெலிமட மற்றும் பண்டாரவளை பிரதேசங்களின் இயற்கை நீர் நிலைகளில் கிருமி நாசினி எச்சங்களைக் கண்காணித்தல் மற்றும் நீர் மாசடைவதைத் தடுப்பதற்காக கண்டறியப்பட்ட விடயங்களைப் பயன்படுத்தல் இக்கற்கையின் பிரதானமான குறிக்கோளாகும். மாதிரிகளை பரிசோதித்தலும் கள ஆய்வும் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தரவுப் பகுப்பாய்வு, முடிபுகள் மற்றும் அறிக்கை எழுதுதல் நடைபெறவேண்டியுள்ளது.

மொனறாகல மாவட்டத்தின் புத்தள பிரதேச செயலாளர் பிரிவின் நீர்ப் பரப்பில் நீர் இறைக்கும் கிணறுகள் மற்றும் நில நீரின் ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய நிலைமை தொடர்பிலான இடர் மதிப்பீடு

மொனறாகலை மாவட்டத்தின் அநேகமான பகுதிகளில் பிரதானமான குடிநீர் மூலவளங்களில் ஒன்றாக நிலநீர் காணப்படுகின்றது. ஆபத்தைக் கண்டறிதல் மற்றும் ஆபத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தலும் நீர் இறைக்கப்படும் கிணறுகளின் நீரின் தரத்தையும் அளவையும் நிலைபேறான மட்டத்தில் பேணி வருதலும் ஆராய்ச்சியின் நோக்கமாகும். நீர் இறைத்தல் மற்றும் மழைநீரினால் மீள் செறிவூட்டப்படல் காரணமாக நிலநீர் மட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்காக புத்தள பிரதேசத்திலுள்ள இரண்டு கிணறுகளுக்கு இரண்டு நிரந்தர தரவுப் பதிவுச் சாதனங்கள் பொருத்தப்படுதல் மற்றும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆராய்ச்சி நிறைவு செய்யப்பட்டது. ஆராய்ச்சிக்கான உண்மைச் செலவு ரூபா 1.562 மில்லியனாகும்.

சுற்றாடல் மற்றும் சமூகக் காணிகளைப் பொறுத்தவரை வாழ்க்கை முறையின் அடிப்படையில் நாட்பட்ட சிறுநீரக நோய் தொடர்பிலான வரலாற்று ரீதியிலான சான்றுகளுக்கான ஆராய்ச்சி

நாட்பட்ட சிறுநீரக நோய்க்கும் குடிநீருக்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதும் நில நீர் மாசடைவதன் காரணமாக வாழ்க்கை முறையில் ஏற்படுத்தப்படுகின்ற தாக்கத்தை ஆராய்வதும் இக்கற்கையின் பிரதானமான குறிக்கோளாகும். வில்கமுவ பிரதேசத்திலும் ஏனைய அண்மித்த பிரதேசங்களிலும் சிறுநீரக நோயாளர்கள் அதிகரித்து வருதால் இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. நீர் நிலைகளின் நடத்தையைக் கற்பதற்காகவும் நிலநீர் மாசடைவதன் காரணமாக வாழ்க்கை முறையில் ஏற்படுத்தப்படும் தாக்கத்தைப் பற்றி கற்றபதற்காகவும் நிலநீர் பிரிவு மற்றும் RSC (மத்திய) மூலம் ஒரு இணைந்த ஆராய்ச்சியாக இது மேற்கொள்ளப்படுகிறது. வாழ்க்கை முறையுடன் தொடர்புடைய விடங்களுக்காக இரசாயன அளவீடுகள், சுற்றாடல் மூலக்கூறுகள் மற்றும் சமூக ஆய்வுகள் தொடர்பில் நீர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாராய்ச்சி நிறைவடைந்தது. உண்மைச் செலவு ரூபா 0.333 மில்லியனாகும்.

நிலைபேறான தன்மை மற்றும் பன்முகப்படுத்தலுக்கு சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் அறவீட்டு முறைமையின் போதுமாந்தன்மை மற்றும் விளைவுத்தாக்கத்தை மதிப்பிடுதல் தொடர்பிலான ஆராய்ச்சி

சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் முகாமைத்துவத்தை மேற்கொள்கின்ற தற்போதுள்ள சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின், சிறந்த தொழிற்பாட்டுக்காக அவற்றின் நிதிசார் இயலளவை மதிப்பீடு செய்தல் தொடர்பில் இவ்வாராய்சி கவனம் செலுத்துகின்றது. இக்கற்கை 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட சமுதாய அடிப்படையிலான அமைப்புகளால் முகாமை செய்யப்படுகின்ற குழாய் நீர் வழங்கல் திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டதோடு, இது அறவீடுகள், வருமானம் மற்றும் செலவு தொடர்பில் ஆராய்வதற்கு பயன்படுத்தப்பட்டது. CBO க்களின் உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துக்காட்டுகின்ற காரணிகளை விபரித்தல் இதன் இலக்காகும். தரவு சேகரிப்புக்காக வினாக்கொத்து ரீதியிலான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. 15 மாவட்டங்களின் CBO க்களின் தரவுகள் அளவு ரீதியிலும் தர ரீதியிலும் பகுப்பாய்வு செய் யப்பட்டதைத் தொடர்ந்து ஆராய்ச்சி நிறைவடைந்தது. ஆராய்ச்சிக்கான உண்மைச் செலவு ரூபா 0.034 மில்லியனாகும்.

விசேட நிகழ்வுகள்

தே.நீ.வ.வ.சபையின் வருடாந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கற்கை கருத்தரங்கு - 2017

மூன்றாவது வருடாந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கற்கைக் கருத்தரங்கு ஏறத்தாழ 450 பங்குபற்றுனர்களுடன் சர்வதேசத்திலிருந்தான 03 எழுத்தாளர்களின் பத்திரங்கள் உட்பட 31 பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு 2017 மார்ச் 20 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்ட அதேவேளை பேராசிரியர் அஜித் டி அல்விஸ் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வை வெற்றிபெறச் செய்யும் பொருட்டு பல்வேறு வகுதிகளையும் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணியாளர்களின் தலையீட்டுடன் குழுச் செயற்பாடுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வு நீர் மற்றும் கழிவுநீர் துறையில் கல்விமான்களும் ஆராய்ச்சியாளர்களும் தொழில்வாண்மையாளர்களும் பெற்றுள்ள அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வதற்காக ஒரு சிறந்த அரங்கத்தை உருவாக்கியதோடு, அதேபோன்று ஆராய்ச்சியாளர்களுக்கும், நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும், தீர்மானகள் மற்றும் கொள்கைகளை வகுப்போருக்கும் அத்துடன் ஏனைய தரப்பினர்களுக்கும் இடையே சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளலும், ஒருங்கிணைந்த நீர் மற்றும் கழிவுநீர் மூலோபாயங்கள் தொடர்பில் பல்வேறு நாடுகளிலிருந்தும் மெற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்/சம்பவக் கற்கைகள் தொடர்பிலான அறிவைப் பகிர்ந்துகொள்ளலும் அத்துடன் பெறப்பட்ட அறிவையும் புதிய தொழில்நுட்பத்தையும் விளைவுத்தாக்கம்மிக்க விதத்தில் நடைமுறைப்படுத்துதலும் இந்நிகழ்வின் குறிக்கோளாகும்.

இப்பிரிவின் மூலம் பொறுப்பேற்கப்பட்ட நிருவன அபிவிருத்திச் செயற்பாடுகள்

கூட்டு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளின் (PWTP) வடிவமைப்புக் கைநூல்

PWPTs சார்ந்த வடிவமைப்பு தொடர்பில் எதிர்வரும் காலத்தில் வழிகாட்டியாகப் பயன்படுத்துவதற்காக வடிவமைப்புக் கைநூல் தயாரிக்கப்பட்டு அனைத்து பிராந்திய DGM களுக்கு மத்தியிலும் விநியோகிக்கப்பட்டது. இது நாளொன்றுக்கு 500 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட PWTP வடிவமைப்புக் கணப்பீடு மற்றும் வரைதலை உள்ளடக்கியுள்ளது.

வீடு சார்ந்த நீர் நுகர்வு மதிப்பீடு 2017

மஹரகம பிரதேசத்தில் 106 வீடுகளுக்கான வினாக்கொத்து ரீதியிலான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டது. நீரின் கேள்விக்கான சிறந்ததொரு மதிப்பீட்டுக்காக கனணி மாதிரியொன்றைத் தயாரிப்பதற்காக வீட்டிலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையுடன் வீடு சார்ந்த நுகர்வு முறை மாற்றமடைவதைப் பற்றி கற்கை செய்தல் இந்த ஆய்வின் நோக்கமாகும். தரவுச் சேகரிப்பு, தரவுப்பதிவு, பகுப்பாய்வு மற்றும் ஆரம்ப சமர்ப்பணம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறிய அளவிலான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளுக்கான சவ்வு வடிகட்டல் தொடர்பில் கொரிய கூட்டிணைந்த கற்கை

ஆரம்ப கட்டத்திலிருந்து R&D பணியாளர்கள், DGM (WP) மற்றும் அவரது தொடர்புடைய பணியாளர்களின் ஈடுபாட்டுடன் இலங்கையின் சிறிய அளவிலான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளுக்காக சவ்வு வடிகட்டல் தொடர்பில் கொரிய நிதி அளிப்புடன் Kolon Global Corporation (KGC) மூலம் முன்மொழியப்பட்ட கூட்டிணைந்த ஆராய்ச்சி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள் யாதெனில், உறுதியளிக்கப்பட்ட தொழில்நுட்பத்தின் உள்ளூர்மயமாக்கல் மற்றும் செய்துகாட்டல்களின் ஊடாக சுற்றாடல் உட்கட்டமைப்பு பற்றிய பிரச்சினைகளின் தீர்வுக்காக மாற்று வழிமுறைகளை வழங்குதல், கூட்டிணைந்த ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப அறிவை முன்னெடுத்தல் மற்றும் பெறுதல் மற்றும் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளுடன் எதிர்கால கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான கூட்டிணைந்த வழிமுறைகளைக் கண்டறிதல் ஆகியனவாகும்.

உத்தேச செய்துகாட்டல் பொறித் தொகுதியானது, நாளொன்றுக்கு 100 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட முழுமையாக தன்னியக்கமாக்கப்பட்ட நுண்சவ்வு வடிகட்டல் முறைமையைக் கொண்டுள்ளதோடு, அது கலங்கியதன்மை (உயர்ந்தபட்சம் 150 NTU) மற்றும் நுண்ணுயிர்களை அகற்றும் ஆற்றலைக் கொண்டுள்ளது. கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முன்கூட்டிப் பொருத்தப்பட்ட பொறித் தொகுதியானது, KGC யின் R&D குழு, தே.நீ.வ.வ.ச. யின் R&D மற்றும் பம்புகுளிய WTP அலுவலர்களின் ஈடுபாட்டுடன் பொருத்தப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

பொறித் தொகுதி 2017.09.11 ஆம் திகதி பம்புகுளிய நீர் வழங்கல் திட்டத் தலத்தில் இடம்பெறச் செய்யப்பட்டு, மூல நீரின் கலங்கல் நிலை 150 NTU வை விடக் குறைவாயிருப்பின் 24 மணி நேரம் இயங்கிவருவதோடு, கண்காணிப்புக் காலம் 2018 பெப்ருவரி வரை செல்கின்றது.



பம்புகுளிய நீர் வழங்கல் திட்ட தலத்தில் சவ்வு வடிகட்டல் பொறித்தொகுதி தாபிக்கப்படல்

நாட்பட்ட சிறுநீரக நோய் (CKDu) நிகழ்ச்சித்திட்டம்

காரணம் அறியப்படாத குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய் (CKDu) இலங்கையில் பாரியதொரு சுகாதாரப் பிரச்சினையாக உருவாகி வருகின்றது. ஆரம்ப கட்டத்தில் இது வட மத்திய மற்றும் ஊவா மாகாணத்திற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருந்தது. தற்போது இது வடமேற்கு, வடக்கு, மத்திய, கிழக்கு, சப்பிரமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் பரவியுள்ளது. உலக சுகாதார அமைப்புக்கு (WHO) இணங்க, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 15-70 க்கு இடைப்பட்ட சனத்தொகையினரில் 15 சதவீதத்திற்கு அதிகமானோர் CKDu வினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 1991 இல் CKDu முதலாவதாக இனங்காணப்பட்டதிலிருந்து வட மத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்தில் இந்நோயினால் 35,000 க்கு மேற்பட்டோர் மரணமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, உலக சுகாதார அமைப்பு மற்றும் மருத்துவ தொழில்வாண்மையாளர்களால் விதந்துரைக்கப்பட்டவாறு CKDu பாதிப்புக்குள்ளாகிய பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (தே.நீ.வ.வ.ச.) மூலோபாயத்தையும் செயற்திட்டத்தையும் அபிவிருத்தி செய்துள்ளது. இது குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகால மூலோபாயங்களை உள்ளடக்கியுள்ளது.

நீண்ட கால தீர்வு புதிய நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்குகின்ற அதேவேளை நடுத்தர கால தீர்வு CKDu பாதிப்புக்கு உள்ளாகிய பிரதேசங்களுக்கு தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களிலிருந்து நீர் வழங்கல் நீடிப்புகளை வழங்குகின்றது. குறுகிய கால தீர்வு CKDu பாதிப்புக்கு உள்ளாகிய பிரதேசங்களுக்கு பவுசர்களின் மூலம் நீர் வழங்குதல், நில நீரை சுத்திகரிப்பதற்காக சிறிய ஊடுகலப்பு (RO) நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளை நிறுவி சமுதாயத்தினருக்கு குடிநீர் மற்றும் சமையல் நோக்கங்களுக்காக மாத்திரம் வழங்குதல், மழைநீர் சேகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

ஊழுனுர நிவாரணம் தொடர்பிலான செயற்பாடுகளுக்காக 2017 ஆம் ஆண்டில் MCPWS வினால் ரூபா 630.88 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டதோடு, இந்நிதி CKDu பாதிப்புக்கு உள்ளாகிய பிரதேசங்களுக்கு நடுத்தர கால மற்றும் குறுகிய கால தீர்வுகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது.

ஆண்டினுள் 191.8 கி.மீ. நீளமான குழாய் நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. RO பொறித் தொகுதிகளைத் தாபித்தல், மழை நீர் தாங்கிகளை நிர்மாணித்தல், பவுசர்கள் மூலம் குடிநீர் விநியோகித்தல் ஆகிய செயற்பாடுகள் குழாய் நீடிப்புகளை வழங்க முடியாத பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன. RO பொறித் தொகுதிகளைத் தாபிக்கின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு 153 சுழு பொறித் தொகுதிகள் வழங்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, மூலதன வரவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி அமைச்சினால் நேரடியாகவே 111 RO பொறித் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், CKDu க்கான அடிப்படைக் காரணிகளை பற்றி கண்டறிவதற்காக தே.நீ.வ.வ.சபையுடன் சேர்ந்து சீன விஞ்ஞானக் கல்லூரி (CAS) கருத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது. இலங்கையில் CKDu பாதிப்புக்கு உள்ளாகிய பிரதேசங்களுக்கான நிலையான நீர் சுத்திகரிப்புத் தொழில்நுட்பத்தை இனங்காண்பது தொடர்பிலும் பாதுகாப்பான, முடியுமான மற்றும் நிலைபேறான நீர் வழங்கல் தொடர்பில் கருத்திட்டம் பரந்தளவில் கவனம் செலுத்துகின்றது. சீன மக்கள் குடியரசு அரசாங்கம் 5,000 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசத்தில் அனைத்து வித உயர் நீர் தர பகுப்பாய்வு வசதிகளுடன் கூடியதும் நீர் சார்ந்த சுற்றாடல் ரீதியிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக தென் ஆசிய பிராந்தியத்தில் மிகச் சிறந்ததொரு நிலையமாக அமையக்கூடிய விதத்திலும் உயர் தர ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 97 மில்லியன் RMB யை செலவிட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்திற்கும் CAS க்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. அதற்கிணங்க, பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட வளவில் காணியொன்று தெரிவு செய்யப்பட்டது. உயர் ஆய்வுகூடத்தின் வடிவமைப்பு தொடர்பில் சீன வடிவமைப்புக் குழு தற்போது வேலை செய்து வருகின்றது. 2018 செத்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் உயர் ஆய்கூடத்தின் நிர்மாணிப்புப் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. 2020 யூன் மாதமளவில் நிர்மாணிப்பை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நீர் பாதுகாப்புத் திட்டங்கள் (WSPs)

தொடர்ச்சியாக பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதிசெய்வதற்கான மிகவும் பயனுள்ள வழிமுறையாக நீர் பாதுகாப்புத் திட்டத்தை (WSP) உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) குடிநீர் தரத்துக்கான வழிகாட்டல்கள் சிபாரிசு செய்கின்றன. உலக சுகாதார அமைப்பின் (WHO) மதியுரை மற்றும் நடைமுறைப்படுத்தல் ஒத்துழைப்பின் கீழ் இலங்கையில் நீர் பாதுகாப்புத் திட்டம் (WSP) 2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

தே.நீ.வ.வ.சபையின் மனித வலு அபிவிருத்திப் பிரிவின் கீழ் அனைத்து பிராந்திய சேவை நிலைய பிதேசங்களுக்குமாக பதினொரு நகர நீர் பாதுகாப்புத் திட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. தே.நீ.வ.வ.சபையின் அர்ப்பணிப்புடன் 149 நகர நீர் வழங்கல் திட்டங்களில் நீர் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலுமாயிருந்ததோடு, இது தே.நீ.வ.வ.சபையினால் பராமரிக்கப்படுகின்ற மொத்த நீர் வழங்கல் திட்டங்களில் அண்ணளவாக 45% ஆகும். மேலும், அம்பத்தலே, பியகம, கந்தான, நீர்கொழும்பு, கண்டி பெரும்பாகம், கண்டி தெற்கு, துருவில, கல்லேல்ல, கொண்டுவட்டுவான், ஹிமதுராவ, மட்டக்களப்பு, மாத்தறை பெரும்பாகம், காலி பெரும்பாகம் ஆகிய நாட்டிலுள்ள பிரதானமான அனைத்து நகர நீர் வழங்கல் திட்டங்களையும் மேற்படி நீர் வழங்கல் திட்டங்கள் உள்ளடக்குகின்றன. இத்திட்டங்கள் தே.நீ.வ.வ.சபையின் மொத்த நலன்பெறுனர்களில் 60% க்கு மேற்பட்டோரை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

இதற்கு மேலதிகமாக, சர்வதேச நீர் பாதுகாப்புத் திட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் WHO வின் உதவியோடு 16 நீர் வழங்கல் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. மேலும் 2018 ஆம் ஆண்டில் உள்ளக வழமையான கணக்காய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், ஏழு மாவட்டங்களில் உள்ள நீர் வழங்கல் கருத்திட்டங்களின் அமுலாக்கல் நடவடிக்கைகளை பலப்படுத்தும் பொருட்டும் இலங்கையின் கிராமிய நீர் வழங்கல் துறையின் இயலளவைக் கட்டியெழுப்புவதற்கும் உலக வங்கி உதவியுடனான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (WaSSIP) இணைந்துள்ளது.

அத்துடன். தே.நீ.வ.வ.சபையானது இலங்கை பொறியியலாளர் நிறுவனம் (IESL), இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் WHO உள்நாட்டு அலுவலகம் ஆகியவற்றுடன் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக இருக்கக்கூடிய வகையில் முதற் தடவையாக தென் கிழக்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் வெளிவாரியான முறைசார்ந்த கணக்காய்வை தாபிப்பதற்கு கலந்துரையாடியது. புது டெல்லியிலுள்ள WHO பிராந்திய அலுவலகம் இம்முயற்சியை மேற்கொள்வதற்காக சுயாதீனமான அனுசரணை முகவராக IESL க்கு ஏற்கனவே இலங்கை ரூபா 2.8 மில்லியனை வழங்கியுள்ளது.

எனவே, தே.நீ.வ.வ.சபையின் நீர் வழங்கல் கருத்திட்டக் குழுவின் தொலைநோக்கான "சுபீட்சமான வாழ்க்கைக்கு பாதுகாப்பான நீர்" என்பதற்கமைய நாட்டின் அனைத்து பிரசைகளுக்கும் பாதுகாப்பான அணுகுதலை உறுதிப்படுத்துவதற்கான முழுநிறைவான அணுகுமுறை என்ற வகையில் நீர் வழங்கல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் WSP மூலோபாய திட்டம் - 2020 இன் இலக்குகளை அடையப்பெறுவது தொடர்பில் சரியான பாதையில் தே.நீ.வ.வ.ச. செல்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

“கிணறு வரண்டுபோகும் வரை நீரின் பெறுமதியை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை”

தோமஸ் புலர்

உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பிராந்திய உதவி நிலையங்கள்

மாகாணம்/பி.உ.நி.	இணைப்புகள்
மத்திய	261,356
கிழக்கு	243,426
வட மத்திய	114,351
வடமேல்	78,036
வடக்கு	21,653
சப்பிரகமுவ	106,606
தென்	312,024
ஊவா	94,794
மேல் - மத்திய	462,290
மேல் - வடக்கு	271,735
மேல் - தெற்கு	252,903
மொத்தம்	2,219,172



பிராந்திய உதவி நிலையங்கள்

தே.நீ.வ.வ.சபையின் 11 பிராந்திய உதவி நிலையங்களிலிருந்து புதிய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. கருத்திட்ட மீளாய்வுக் குழுவின் பிரதிநிதிகள் என்ற வகையில், பிராந்திய உதவி நிலையங்களின் பணியாளர்கள் புதிய கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறையாக்கல் நடைமுறைகளை அண்மித்திருந்து இணைப்பாக்கம் செய்கின்றனர். அத்துடன் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சாக்கடைத் திட்டங்களை அவர்கள் தொழிற்படுத்தியும் பராமரித்தும் வருகின்றனர். உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வருவாயற்ற நீரைக் குறைத்தல், வலுசக்தி முகாமைத்துவம் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பணிகள் அத்துடன் பிராந்திய உதவி நிலையங்களின் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத்துறை ஆகியன ஏற்புடைய பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளடக்கப்படாதுள்ள ஏனைய சில முக்கியமான தகவல்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

மேல் - மத்திய

மேல் மத்திய பிரதேச உதவி நிலையமானது (RSC-WC) கொழும்பு நகரம் வடக்கு (CCN), கொழும்பு நகரம் தெற்கு (CCS), கோட்டே மற்றும் மஹரகம முகாமையாளர் பிராந்தியங்களை உள்ளடக்குகின்றது. 2017 ஆம் ஆண்டு காலத்தினுள் மேல் மத்திய பிராந்திய உதவி நிலையத்தில் வழமையைப் போன்று பல விசேடமான சமூக நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சிங்கள - தமிழ் புத்தாண்டு மற்றும் சனவரி 01 புத்தாண்டு விழாக்கள், வெசாக் மற்றும் பொசொன் விழாக்களின்போது தன்சாலைகள் ஆகிய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. பன மற்றும் பிரித் போன்ற சமய மற்றும் பொழுதுபோக்கு/கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஆகியனவும் பிராந்திய உதவி நிலையத்தின் (மேல்-மத்தி) மூலம் மேற்கொள்ளப்பட்டதோடு, வருடாந்த சுற்றுலா மற்றும் ஒன்றுகூடல் ஆகியனவும் RSC மற்றும் பிராந்திய முகாமையாளர்களால் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டது.

ஆண்டினுள் பிராந்திய சேவை நிலையங்களில் வருவாயற்ற நீர் குறைப்பு மற்றும் வலுசக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. பிராந்தியத்தினுள் வருவாயற்ற நீர் குறைப்பு (NRW) நிகழ்ச்சித்திட்டங்கள் (வால்வுகளை தேடிக் கண்டுபிடித்தல், குழாய்வழிகளைத் தேடிக் கண்டுபிடித்தல், சட்டவிரோத பயன்படுத்தல்களை கண்டுபிடித்தல், கசிவு ஆய்வுகள், உள்ளக கசிவு கண்டுபிடித்தல்கள், பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்தல், கசிவுத் திருத்தங்கள்) பல மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீரை 42.4% ஆக குறைக்க முடிமாயிருந்ததோடு இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.2% குறைப்பாகும். பிராந்திய சேவை நிலையம் (மேல் மத்தி) இல் வருவாயற்ற நீரின் அளவு 32.9% ஆகுமென்பதோடு இது கடந்த வருடத்தை விட 1.4% குறைப்பாகும்.

வருவாயற்ற நீர் குறைப்பானது முறைமையின் வினைத்திறன் அதிகரிப்புக்கும் ஒரு வலுசக்தி சேமிப்புக்கும் இட்டுச் செல்கின்றது. வருவாயற்ற நீரை தீவிரமாகக் குறைப்பதற்காக கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுக் கருத்திட்டத்தின் மூலம் கொழும்பு நகர குழாய் வலையமைப்புகளின் புதுப்பித்தல் மற்றும் இடுதல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் லம் இறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வலுசக்தி மேலும் குறைக்கப்படும். பம்பி நிலையங்களில் பழைய பம்பிகளை பதிலீடு செய்தல், உட்புற மற்றும் வெளிப்புற மின் குமிழிகளை LED மின் குமிழிகளுக்கு மாற்றுதல், பம்பி நிலைங்களில் அநேகமாக உச்ச நேரங்களல்லாத நேரத்தை நோக்கியதாக நீர் இறைக்கும் நேரங்களை மாற்றுதல், அனைத்து வலுசக்தி நுகர்வுத் தலங்களிலும் பொருத்தமான தடுப்புப் பராமரிப்புகள் ஆகியன கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதானமான வேலைகளுக்கு மேலதிகமாக O&M பிரிவினால் வலுசக்தி சேமிப்புக்காக மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளாகும்.

குழாய் நீடிப்புகள் / குழாய்களின் இடைவெளி நிரப்பல்கள் ஆகியனவும் RSC யினால் ஆண்டினுள் பொறுப்பேற்கப்பட்டது. மஹரகம முகாமையாளர் பிராந்தியத்தில் 63 மி.மீ. மற்றும் அதற்கு மேற்பட்ட விட்டத்தைக் கொண்ட குழாய்களுக்கான குழாய் நீடிப்பு மற்றும் பொதுக் குழாய் மேம்பாட்டின் மொத்த நீளம் 50.4 கி.மீ. ஆகும். கோட்டே முகாமையாளர் பிரிவில் இது 18.5 கி.மீ. ஆகும். கொழும்பு நகர முகாமையாளர்கள் அவர்களது பிரதேசத்தில் சிறியதொரு நீளத்திற்கு (220 மீ.) நீடிப்பை மேற்கொண்டனர்.

ஹபரகட மற்றும் கொரதொட்ட பிரதேசங்களில் கருத்திட்டத்தின் விடயப்பரப்பினுள் ஏனைய ஏற்புடைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மத்தியில் ரூபா 3.5 பில்லியன் LBF கருத்திட்டத்தின் மூலம் ரூபா 184.22 மில்லியனுக்கான, 63 மி.மீ. மற்றும் அதற்கு மேற்பட்ட விட்டத்தைக் கொண்ட 15.96 கி.மீ. நீளத்துக்கான புதிய குழாய்கள் முறைமையில் சேர்க்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மூலம் 1,232 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன.

ஆண்டினுள் புதிய இணைப்புகள், கட்டணப்பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு தொடர்பிலான இலக்குகள் வெற்றிகரமாக அடையப்பெற்றன. ஆண்டினுள் RSC-WC பிராந்தியத்தினுள் மொத்தம் 17,513 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன. 1,405 இணைப்புகளை வழங்குவதற்கே திட்டமிடப்பட்டிருந்ததால் இது இலக்கின் 100% ஐ அடைதலாகும். முகாமையாளர் (CC) வடக்கு, (CC) தெற்கு, கோட்டே, மஹரகம ஆகியவற்றில் முறையே 992, 643, 5456 மற்றும் 9781 இணைப்புகள் மற்றும் முகாமையாளர் (NRW) 641 இணைப்புகள் என்றவாறு வழங்கப்பட்டதன் மூலம் இலக்கு அடையப்பெற்றது. ஆண்டுக்கான கட்டணப் பட்டியலிடல் இலக்கு ரூபா 7,591 மில்லியன் ஆகும் என்பதோடு, 2017 நவெம்பர் வரையிலான உண்மையான கட்டணப் பட்டியல் ரூபா 7,629 மில்லியனாகும். இது 100% அடைவாகும். இதே காலத்தில் சேகரிப்பு ரூபா 7,721 மில்லியனாகும் என்பதோடு இது ஆண்டு இலக்கான ரூபா 7,992 மில்லியன் இலக்கில் 97% அடைவாகும். மொத்த RSC (WC) கடன் அளவு 0.6 மாதமாகும்.

பிராந்தியத்தின் உட்கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகள் என்ற வகையில், ஹல்பிட்ட, மிரிஸ்வத்த, ஜம்புரலிய பம்பி நிலையங்களில் குளோரீனிடல் சாதனங்களை பொருத்துதல், மாளிகாகந்தை நீர்த் தேக்கத்தில் புதிய வால்வு அறை நிர்மாணிப்பை பூர்த்தி செய்தல், முகாமையாளர் மஹரகம பிரதேசத்தில் ஹோமாகம, மஹரகம, பன்னிபிட்டிய மற்றும் மிரிஸ்வத்த நீர் கோபுரங்களின் புதுப்பித்தல் ஆகியன 2017 ஆம் ஆண்டினுள் ஏனைய பல சிறிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டதோடு, இது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு முகாமையாளர்களுக்கு கிடைத்திருந்த நிதியத்தைக் கொண்டு அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

கோட்டே, கொலொன்னாவ பிரதேங்களில் நீர் பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட அதேவேளை பத்தரமுல்ல, மஹரகம மற்றும் கொழும்பு நகர வடக்கு மற்றும் தெற்கு பிரதேசங்களுக்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன் கீழ், CI/GI குழாய்களை PE குழாய்களைக் கொண்டு பதிலீடு செய்தல், நீர் விநியோக குழாய் வழிகளில் அட்டைகள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்காக குப்பைகள் கொட்டப்படும் இடங்களுக்கு அண்மையிலுள்ள குழாய்களை இடம் மாற்றுதல், பாதுகாப்பு வலைகளைக் கொண்டு காற்றோட்டத் துறைகளை மறைப்பதன் மூலம் களஞ்சியப்படுத்தல் நீர்த் தேக்கங்களை மாசடைவதிலிருந்து பாதுகாக்கின்ற வேலைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

மழைக் காலங்களில் இப் பிரதேசங்களில் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுதல் போன்ற எதிர்பாராத நிலைமைகள் உருவாவதால் அத்தகைய அனர்த்தங்களுக்கு முகம்கொடுக்கும் பொருட்டு கோட்டே - கொலொன்னாவ பிரதேசங்களில் அவசர பிரதிபலிப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. நீர் பற்றி எதிர்காலச் சந்ததியினருக்கு கல்வியூட்டுவதற்கான பாடசாலை விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், தற்போதைய நீர் நிலைமைகள் பற்றி பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டு காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டன. RSC (WC) கீழ் தெரிவு செய்யப்பட்ட அனைத்து வகையினையும் சேர்ந்த ஊழியர்கள், வேலை செய்கின்ற அதேவேளை அவர்களது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான பல்வேறான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு (தொழில் பாதுகாப்பு, சகாதார முகாமைத்தும், பசுமை உற்பத்தித்திறன் ஆகியன) அனுப்பப்பட்டனர். பாவனையாளர்களுக்கான சேவை மேம்பாட்டுத் தரம் மற்றும் விலைப் பட்டியலிடல் துல்லியத்தன்மையை மேம்படுத்துவதற்காக பிராந்தியம் முழுவதிலும் மானி வாசிப்புக் கணக்காய்வு, பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்கின்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேல் - தெற்கு

பிராந்திய உதவி நிலையம் (மேல் தெற்கு) RSC (WS) அலுவலகம் மற்றும் முகாமையாளர் (தெஹிவலை) பிராந்தியம், முகாமையாளர் (பாணந்துறை-ஹொரனை) பிராந்தியம், முகாமையாளர் (களுத்துறை) பிராந்தியம் ஆகிய 03 பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களை உள்ளடக்குகின்றது.

2017 ஆம் ஆண்டினுள் பிராந்திய உதவி நிலையத்தில் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சாதகமான சிந்தனை, மனப்பாங்கு மாற்றம், உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான தர வட்டக் கருவிகள், சனவரி 01 ஆம் திகதி பிரித் ஓதும் வைபவம், புது வருடம், வெசாக், பொசொன் மற்றும் நத்தார் பண்டிகை ஆகிய விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள் RSC (WS) அலுவலகம் மற்றும் மூன்று முகாமையாளர் அலுவலகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டன. RSC (WS) அலுவலகம் தேசிய உற்பத்தித்திறன் போட்டி - 2017 இல் பங்கேற்பதற்காக மேலும் அதன் உற்பத்தித்திறனை அட்டவணைப்படுத்தி மேம்படுத்தியதோடு, பிராந்திய அலுவலகங்களிலும் அவற்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக சில பயிற்சி மற்றும் அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தன.

வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் பல பிராந்திய உதவி நிலையங்களில் - மேல் தெற்கு - மேற்கொள்ளப்பட்டதோடு, பிராந்தியத்தினுள் வருவாயற்ற நீர் வீதம் ஏறத்தாழ 20% ஆக பேணிவரப்பட்டது. 2017 ஆம் ஆண்டு காலத்தினுள் பிராந்தியத்தியங்களினுள் நடைமுறையிலிருந்த பல வீதிப் புனரமைப்புக் கருத்திட்டங்களுக்கு மத்தியில் களுத்துறை, பாணந்துறை-ஹொரனை மற்றும் தெஹிவளை பிராந்தியங்களில் முறையே 15%, 17% மற்றும் 25% க்கு குறைவாக வருவாற்ற நீரை பேணிவர முடியமாயிருந்தது.

சில கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் உள்ளிட்ட பல பிரதேசங்களில் நீர் தர கண்காணிப்பு மற்றும் நீர் பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டினுள் 11 நீர் வழங்கல் திட்டங்களில் அனைத்து நீர் பாதுகாப்புத் திட்ட மொடியல்களும் பூர்த்தி செய்யப்பட்டன. (மத்துகம வெத்தாவ நீ.வ.தி., அழுத்கம நி.வ.தி., பேருவளை நீ.வ.தி., பயாகல நீ.வ.தி., பாணந்துறை வலயம் - 2, 3, 4A மற்றும் 4B விநியோக முறைமை, போம்புவல - பிலமினாவத்த நீ.வ.தி., இங்கிரிய - நிமலகம நீ.வ.தி., தெஹிவலை வலயம் E/F மற்றும் மொரட்டுவ வலயம் A). மூன்று நீ.வ.தி. மொடியுல் 5 வரை பூர்த்தி செய்யப்பட்டன (களுத்துறை நீ.வ.தி., அலுபோமுல்ல நீ.வ.தி., மற்றும் தெஹிவலை வலயம் A) மற்றும் ஒரு நீ.வ.தி. மொடியுல் 4 வரை பூர்த்தி செய்யப்பட்டது (மொரட்டுவ வலயம் டீ விநியோக முறைமை). மேலும் ஒன்பது நீ.வ.தி. மொடியுல் 3 வரை பூர்த்தி செய்யப்பட்டன (அழுத்கம நீ.வ.தி., தெஹிவலை வலயம் B, D & G, மொரட்டுவை வலயம் C, D, E, F & G). மேலும் பிராந்தியத்தினுள் 13,168 இணைப்புகள் வழங்கப்பட்டதன் ஊடாக 70,000 க்கு மேற்பட்ட நலன்பெறுனர் குடும்பங்களை உள்ளடக்குகின்றவாறு 126 கிரபமிய நீர் வழங்கல் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன.

இவற்றிற்கு மேலதிகமாக, மொத்தம் 98.0 கி.மீ. நீளத்திற்கான குழாய் நீடிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு, இது களுத்துறை பிராந்தியத்தில் 20 கி.மீற்றரையும், பாணந்துறை - ஹொரனை பிராந்தியத்தில் 75 கி.மீற்றரையும், தெஹிவலை பிராந்தியத்தில் 3.0 கி.மீற்றரையும் உள்ளடக்குகின்றது. ஆண்டு முழுவதிலும் அனைத்து பிராந்தியங்களிலும் பல மீள்செறிவூட்டல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் இணைப்பு மேம்பாட்டிற்கான ரூபா 3.5 பில்லியன் உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டத்தின் மற்றும் பயன்பாட்டு இடமாற்றல் வரவு செலவுத்திட்ட நிதியம் மற்றும் முன்-அழுத்த உறுதிப்படுத்தல் மதிப்பீட்டு நிதியத்தை பயன்படுத்தி துரித புதிய இணைப்புகள் மற்றும் குழாய் இடல் நிகழ்ச்சித்திட்டத்தை RSC (W-S) மேற்கொள்கின்றது.

வறட்சிக் காலநிலைமையின் காரணமாக களுத்துறை முகாமையாளர் பிரதேசம் உவர் நீர் ஊடுருவுகின்ற தீவிர பிரச்சினையை எதிர்நோக்கியது. தற்காலிக தீர்வாக, முழு களுத்துறை முகாமையாளர் பிரதேசத்தையும் உள்ளடக்குகின்றவாறு பவுசர் மூலம் நீர் வழங்கல் ஏற்பாடு செய்யப்பட்டதோடு, களு கங்கைக்கு குறுக்காக நிரந்தரமான உவர்ப்பு நீர்த் தடையை அமைப்புதற்கு LHI மூலம் EIA அறிக்கை தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் மீளாய்வுக்காக திறக்கப்பட்டது. களுத்துறை முகாமையாளர் பிரதேசத்திற்கான பவுசர் மூலம் நீர் வழங்கலுக்கு மேலதிகமாக வரட்சி நிவாரண நிதியத்தின் ரூபா 20.00 மில்லியனைப் பயன்படுத்தி சில அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக, இந்நிலைமையை தணிக்கும் பொருட்டு அண்ணளவாக 7000 இணைப்புகள் பாணந்துறையிலிருந்து ஊட்டம் செய்யப்பட்டது.

மக்கொன மற்றும் அல்விஸ் பிளேஸ் நீர் தேக்கங்களிலிருந்தான நீர் இழப்புகள் இனங்காணப்பட்டு புனரமைப்பு நிதியத்தைப் பயன்படுத்தி மேற்படி இழப்புகளை சீர்செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இச் செயற்பாட்டுக்கு மேலதிகமாக, விநியோக மேம்பாட்டுக்காக இங்கிரிய-ஹொரண வீதியில் 225 மி.மீ. மற்றும் 160 மி.மீ. விட்டங்களைக் கொண்ட uPVC குழாய் இடல் (வகவத்தையிலிருந்து இங்கிரிய வரை 7.5 கி.மீ. நீளம்), ஹொரண - கலகெதர வீதியில் 160 மி.மீ. மற்றும் 110 மி.மீ. விட்டத்தைக் கொண்ட uPVC குழாய் இடல் (பாதுக்க வீதி நெடுகிலும் 2.5 கி.மீ. நீளத்திற்கு) மற்றும் 1 வீதிக் கருத்திட்டம் புனரமைப்பு நிதியத்தைப் பயன்படுத்தி RSC (WS) ஆரம்பித்தது. RSC (WS) அலுவலகத்தில், பாணந்துறை - ஹொரண முகாமையாளர் அலுவலகத்தில் மற்றும் தெஹிவலை முகாமையாளர் அலுவலகத்தில் வலுசக்தி சேமிப்பு நிதியத்தைப் பயன்படுத்தி தேறிய மானியிடல் சூரிய வலுசக்தி முறைமையின் தரமுயாத்தல் மற்றும் பொருத்துதல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. வலுசக்தி சேமிப்பு நிதியத்தின் கீழ் மையக்குவிவான பம்பிகளையும் பேருவளை மேல் உயர்த்திப் பம்பிகளையும் பொருத்துதல் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

தெஹிவளை முகாமையாளர் பிராந்தியம் மானி வாசிப்புப் பிரயோக மென்பொருளைப் பயன்படுத்தி அவர்களது மானி வாசிப்பை 100% மேற்கொள்வதோடு ஏனைய இரண்டு பிராந்தியங்களும் இப்பிரயோகத்தைப் பயன்படுத்தி அவர்களது மானி வாசிப்பில் 75% ஐ மேற்கொள்கின்றது.

2017 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச. யின் விசேட புலனாய்வுப் பிரிவு நாடளாவிய ரீதியில் 1,148 சட்ட விரோத இணைப்புகளை பரிசோதித்ததோடு, அதில் 123 சட்ட விரோத இணைப்புகளை உறுதிசெய்துகொள்ள முடியுமாயிருந்தது. மேற்படி 123 சட்ட விரோத இணைப்புகளில் 32 இணைப்புகள் RSC (WS) பிராந்தியத்தினுள் உள்ள அதேவேளை 349 இணைப்புகள் RSC (WS) பிராந்தியத்தினுள் பரிசோதிக்கப்பட்டன.

மேல் - வடக்கு

புறச் சுற்றுவட்ட கடுகதிப்பாதை கருத்திட்டம் (கடவத்தை தொடக்கம் கெரவலபிட்டிய வரை) - குணசேகர மாவத்தை நெடுகிலும் குழாய் இடுதல்

பிராந்திய உதவி நிலையம் (மேல் - வடக்கு) முகாமையாளர் (களனி) பிராந்தியம் மற்றும் முகாமையாளர் (கம்பஹா) பிராந்தியம் ஆகிய இரண்டு பிராந்திய முகாமையாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

2017 ஆம் ஆண்டில் RSC (WN) இல் பல விசேட சமூக நிகழ்வுகள் இடம்பெற்றன. சனவரி 1 ஆம் திகதி புத்தாண்டு பிறப்பைக் கொண்டாடும் நிகழ்ச்சித்திட்டம், வெசாக், பொசொன் மற்றும் நத்தார் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. பிரதேச பொறியியலாளர் (களனி) அலுவலக வளவில் புத்தர் சிலையொன்று நிர்மாணிக்கப்பட்டு தாபிக்கப்பட்டது. 2017 ஒக்றோபர் காலத்தினுள் முகாமையாளர் (கம்பஹா) பிராந்தியத்தினால் தாது பூஜை ஏற்பாடு செய்யப்பட்டது. முகாமையாளர் (களனி) பிராந்தியத்தில் வருட இறுதி பெதுரு பாட்டிய வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மேலும், களனி பிராந்தியத்தில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருட்களை அன்பளிப்புச் செய்தல் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக, RSC (WN) இன் நலன்புரிச் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட, "ஆன்மீக அபிவிருத்தி" மற்றும் "பொது சுகாதாரமும் போசாக்கும்" தொடர்பிலான விரிவுரைகளும், பணியாளர்களின் பொழுதுபோக்குக்காக ஒழுங்குசெய்யப்பட்ட "ஹுனுவடயே கதாவ" மேடை நாடகமும், தீவிரமாக நோய் வாய்ப்பட்டிருந்த தே.நீ.வ.வ.ச. ஊழியர் குடும்பங்களுக்கான பொருட்கள் மற்றும் பண அன்பளிப்பும் உள்ளடங்கியிருந்தது.

ஆண்டினுள், அனைத்து வகுதிகளையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஊழியர்கள் அவர்களது திறன், அறிவு மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட உள்ளக, வெளிவாரி மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். RSC (WN) இன் பயிற்சியளிப்புப் பிரிவும், ஒருசில வகுதிகளை உள்ளடக்கியவாறு 20 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்து நடத்தியது. நீர் பாதுகாப்பு, சேறு, உற்பத்தித்திறன், வர்த்தகம், கணக்காய்வு மற்றும் கணக்கீடு, ஒழுக்காற்று, களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பாவனையாளர் தொடர்பு, மேலும் "5S" முறைமை ஆகியன பிராந்தியத்தின் முழுமொத்த உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்காக களனி பிராந்தியத்தின் அனைத்து 10 அலுவலகங்களிலும் (முகாமையாளர், AE & OIC) அறிமுகப்படுத்தப்பட்டு அமுலாக்கப்பட்டது.

பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், விநியோக முறைமையில் அறிக்கையிடப்பட்டுள்ள கசிவுகளை திருத்துதல், சட்டவிரோத இணைப்புகளுக்காக கைதுசெய்தல், எழுந்தமாதிரியான வீட்டுப் பரிசோதனைகள், களனிய பிராந்தியத்துக்கான நீர் மட்ட கண்காணிப்பு முறைமையை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஆகியன NRW குறைப்பு செயற்பாடுகளாக O&M மற்றும் சேறு நிதியத்தைப் பயன்படுத்தி பிராந்தியத்தினுள் மேற்கொள்ளப்பட்டது. RSC (WN) பிராந்தியத்துக்கான தற்போதைய NRW பெறுமதி 18.57% ஆகுமென்பதோடு இது கடந்த ஆண்டின் இறுதியோடு ஒப்பிடுகின்றபோது 0.51% குறைப்பாகும்.

பம்பி நிலையத்தை புறக்கணித்துச் செல்வதன் மூலம் பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் தொழிற்பாடு மீள்ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக பிரதானமாக வலுசக்தி சேமிப்பை அடையக்கூடியதாக இருந்தது. எனவே சர்சில்ஹில் நீர் தலைப்புடன் கூடிய ஈர்ப்புச் சக்தியின் கீழ் முறைமை தொழிற்படுத்தப்படுகின்றது. மேலும், RSC (WN) அலுவலகத்தில் சூரிய சக்தி முறைமையை தாபிப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு, இது 80% பூர்த்தியடைந்துள்ளதோடு பரிசீலிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

ஆண்டினுள் ஏழு நீர் வழங்கல் திட்டங்களுக்காக (பியகம, களனி, ஜா-எல, ரத்தொழுகம, ரன்பொக்குனுகம, வேயங்கொட மற்றும் யக்கல) நீர் பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பியகம பிரதேசத்துக்காக ஏழு நீர் பாதுகாப்புத் திட்ட மொடியுல்கள் பூர்த்தி செய்யப்பட்டது, ரத்தொழுகம பிரதேசத்துக்கு ஐந்து மொடியுல்கள் பூர்த்தி செய்யப்பட்டன மற்றும் ஏனையவற்றுக்கு நான்கு மொடியுல்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

2017 ஆம் ஆண்டினுள் கடவத்தை பிராந்திய ஆய்வுகூடத்தில் குடிநீரின் COD மற்றும் BOD அத்துடன் கழிவுநீரின் COD, BOD மற்றும் TSS பகுப்பாய்வுப் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. சில கைத்தொழில்சாலைகள் அவற்றின் கழிவுகளை நேரடியாகவே களனி ஆற்றுக்கு விடுவிக்கின்றமை உறுதி செய்யப்பட்டதன் பின்னர் குறிப்பாக பூகொட நீர் வழங்கல் திட்டம் தொடர்பில் குடிநீருக்கான வழமையான நீர் தர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. WHO தரத்துக்கு அமைய பாவனையாளர்களுக்கு தரமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கும் பேணிவருவதற்குமாக கடவத்தை மற்றும் நீர்கொழும்பு ஆய்வுகூடங்களில் 2017 ஆம் ஆண்டினுள் மொத்தம் 10,071 நீர் தர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருசில வீதி புனரமைப்பு வேலைகளுக்கு சமாந்திரமாக குழாய்களை நீர் பாய்ச்சி சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் நாளாந்த வேலையாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. நீர் தர அளவீடுகள் தொடர்பில் கண்காணித்து அறிக்கை தயாரிப்பதற்காக தரவுத் தளமொன்றை அபிவிருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டதோடு இது தற்போதுள்ள நீர் வலையமைப்பு வரைபடத்துடன் தொடர்புபடுத்தப்படவுள்ளது.

LBF நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குழாய் இடம் வேலைகள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் அக்கர 50 பிரதேசத்தில் 63 மி.மீ., 90 மி.மீ., 110 மி.மீ. மற்றும் 225 மி.மீ. கொண்ட மொத்தம் 16.78 கி.மீ. நீளத்துக்கான குழாய்கள் சேர்க்கப்பட்டதோடு, கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் பஹல யாகொட பிரதேசத்தில் 90 மி.மீ. மற்றும் 110 மி.மீ. கொண்ட 3.69 கி.மீ. நீளத்துக்கான குழாய்கள் சேர்க்கப்பட்டன.

பிரதான முதலீட்டு நிதியளிப்பிலிருந்தான மாநகர சபை மற்றும் பிரதேச சபை வீதிகளின் உபயோக இடம்பெயர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கலகஹதூவ வீதி நடுகிலும் HDPE குழாய்கள் இடும் வேலைகள் 2017 மே ஆணடில் நிறைவடைந்தன. பிரதான வீதி, சிறிவர்தன பிறேஸ், புனித லோரன்ஸ் வீதி, சவுண்டர்ஸ் வீதி, ஆர். பராக்கிரம வீதி, நிக்கலஸ் வீதி, வேபொட வீதி மற்றும் புஷ்பாராம வீதி நெடுகிலும் குழாய்களை மாற்றுகின்ற வேலைகள் நடைபெற்று வருகின்றன. பியகம வீதி (களனி விஹாரையில் இருந்து கொஹுவல வீதி வரை) மற்றும் மருதானை வீதியிலுந்து ஹெந்தல வீதி வரை யுஊ குழாய்களை பதிலீடு செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மீள்செறிவூட்டல் நிதியத்தின் கீழ் RSC (WN) பிராந்தியத்தின் நிர்மாணிப்புப் பிரிவின் மூலம் சில குழாய் இடுதல் மற்றும் மேம்பாட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. கடவத்த தொடக்கம் கெரவலபிட்டிய வரையில் (கலஉடபிட்ட, குணசேகர மாவத்தை, ஹீன்கெந்த, தபோவனாராம வீதி மற்றும் பொல்பித்தி(முகலான) புற சுற்றுவட்ட கடுகதி வீதி நிர்மாணிப்புக்கு சமாந்திரமாக குழாய் மீள்இடுலெ மற்றும் திவுலபிட்டியவில் மதகுக்குக் குறுக்காக குழாய் இடுதலும் நிறைவு செய்யப்பட்டன. மேலும், கம்பஹா நீர் வழங்கல் திட்டத்துக்கான மேம்பாடுகள், கம்பஹா மற்றும் களனிய பிரதேசங்களில் குழாய் இடுதல் வேலைகள், கனேமுல்ல வீதியில் வால்வு அறைகளை உயர்த்துதல், கட்டுநாயக்க

விமான நிலைய மேம்பாட்டுக்கான குழாய் இடுதல்கள் மற்றும் இணைப்புகள், மருதானை வீதியில் AC குழாய் பதிலீடு செய்யும் வேலைகள் ஆகியன அங்கீகரிக்கப்பட்ட மீள்செறிவூட்டல் நிதியத்தின் சேமிப்புகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக கொழும்பு - கண்டி வீதி மேம்பாட்டுக் கருத்திட்டத்துக்கு சமாந்திரமாக (மிரிஸ்வத்த தொடக்கம் வீதியவத்த வரை) மீள் குழாய் இடுதல், கனேமுல்ல மேம்பாலம் மற்றும் தெரணகம பாலத்துக்கான குழாய் இடம்பெயர்வுகள் நடைபெற்று வருகின்றன.

பிரதேச செயலகங்கள், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம், மாகாண சபைகள் ஆகியவற்றின் நிதி ஏற்பாடுகளின் கீழ் கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மீதிரிகல, கலட்டுவாவ, ஆகரகம, ஹபன்கந்த, உந்துகொட, எடிகெஹெல்கல்ல மற்றும் தரல நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாட்டு வேலைகள் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக தற்போதுள்ள கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாட்டு வேலைகள் (குட்டிவிலா, பொல்ஹேன, பொலன்கந்தகம, ரன்தியதஹர, சரசிய, மங்கலதிரிய, நிக்கஹட்டிகந்த, பரகந்தெனிய, ஊருவல, கித்துலகந்த மற்றும் மத்திய கிம்புலாபிட்டிய) ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மெரிலேண்ட் பிளேஸ் மற்றும் ஹீனட்டியான புதிய கிராமிய நீர் வழங்கல் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப வடிவமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

புனரமைப்பு மற்றும் O&M நிதியத்தின் கீழ் சில உட்கட்டமைப்பு மேம்பாட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. நீர்கொழும்பு ஆய்வுகூடத்தின் புதுப்பித்தல்கள், காஸ் குளோரீனிடல் சாதனங்களை வழங்கி பொருத்துதல் (வேயங்கொட, ரத்தொழுவ புதிய மற்றும் பழைய, கம்பஹா மற்றும் யக்கல நீர் வழங்கல் திட்டங்களுக்கு), குழிக்கிணறுகளுக்கான நீர்மூழ்கிப் பம்பிகளை வழங்கி விநிகேகித்தல் (கம்பஹா, திவுலபிட்டிய, மினுவன்கொட, உடுகம்பொல மற்றும் பூகொட நீர் வழங்கல் திட்டங்களுக்கு), கட்டானவில் களஞ்சியக் கட்டிடத்தை நிர்மாணித்தல் ஆகியவற்றை பிரதான வேலைகள் உள்ளடக்குகின்றன. இதற்கு மேலதிகமாக, களஞ்சியப்படுத்தல் நோக்கங்களுக்காக கொள்கலன் கெபின்களை – 20′ மற்றும் 40′ – (AE (களனி, AE (ஜா-எல, மற்றும் OIC (ஜா-எல, ராகம, வத்தள) வழங்கிப் பொருத்துதல், அல்ட்ராசொனிக் மொத்த மானிகளை வழங்கிப் பொருத்துதல் மற்றும் பம்பிகளை வழங்கிப் பொருத்துதல் (ரன்பொகுனுவத்த உள்வாங்கு பம்பி மற்றும் கிரிந்திவெல மேல்உயர்த்திப் பம்பி) உள்ளிட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

பியகம நேரடி பம்பிப் பிரதேசம், BOI ஈர்ப்புவிசை அனுப்பல், என்டேமுல்ல பிரதேசம் ஆகியவற்றுக்கான நீர் வலையப்பு மாதிரிகள் மேற்கொள்ளப்பட்டன, பிரதேச பொறியியலாளர் (களனி) க்கான மாதிரி இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது, தற்போதுள்ள மற்றும் புதிய குழாய்கள் மற்றும் பொருத்துதல்களின் விபரங்களுடனான நீர் வலையமைப்பு வரைபடங்கள் இற்றைப்படுத்தப்பட்டன. மேலும், துண்டிப்புகள் மற்றும் பழுதடைந்த நீர் மானிகளைப் பதிலீடு செய்வதற்கு உதவியாக செல்லிடத் தொலைபேசிப் பிரயோகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

ரன்பொக்குனுகம மற்றும் கிரிந்திவெல நீர் வழங்கல் திட்டம் மற்றும் கம்பஹ நீர் வழங்கல் திட்டத்தின் உற்பத்தி இயலளவு மற்றும் அனுப்பல் இயலளவை மேம்படுத்துவதற்கான விபரமான வடிவமைப்புகள், தற்காலிக மதிப்பீடுகள் மற்றும் BOQ ஆகியன பூர்த்தி செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, திவுலபிட்டிய நீர் வழங்கல் திட்டத்தின் உள்வாங்கு நிலைய கட்டமைப்பு மற்றும் சுத்திகரிக்கப்படாத நீர் அனுப்பல் பிரதான குழாய்க்கான கேள்விப்பத்திர ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும், பியகமவில் தெரிவுசெய்யப்பட்ட சில பிரதேசங்களில் நேரடி பம்பி முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான விபரமான வடிவமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டன. பட்டலீய, மீரிகம மற்றும் உடுகம்பொல நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாட்டுக்காக தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், கொழும்பு - கண்டி வீதியின் (மிரிஸ்வத்தை தொடக்கம் நிட்டம்புவ) மேம்பாடு, புறச் சுற்றுவட்ட கடுகதி வீதி (கடவத்தை தொடக்கம் கெரவலபிட்டிய), மத்திய கடுகதி வீதி மற்றும் பாலங்களின் நிர்மாணிப்பு, புனரமைப்பு தொடர்பிலான வீதி புனரமைப்பு கருத்திட்டங்களுக்கு சமாந்திரமாக குழாய் இடம்பெயர்வு/இடுதல் வேலைகளுக்கான வடிவமைப்பு, பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

நீர்கொழும்பு RO பொறித்தொகுதியின் புனரமைப்பு மற்றும் 1000 கன மீற்றர் கொண்ட நில நீர் தேக்கத்தின் நிர்மாணிப்பு மற்றும் கட்டான நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான பம்பி நிலையம் ஆகியவற்றுக்கு ஆண்டினுள் PAC அங்கீகாரம் கிடைத்தது. இதற்கிணங்க, நீர்கொழும்பு RO பொறித்தொகுதிக்கான RFP ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும் மீரிகம நீர் வழங்கல் கருத்திட்ட – கட்டம் 1க்கான RFP ஆவணங்கள் சீன நிதியத்தின் கீழான ஆவணங்களின் மதிப்பீட்டுக்காக மீளச் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றுக்கு மேலதிகமாக, உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு, முகாமையாளர் (களனி) பிரதேசத்தில் உருக்குக் கட்டமைப்பைக் கொண்ட களஞ்சியங்கள் (3) நிர்மாணிப்பு மற்றும் முகாமையாளர் (களனி) அலுவலகத்துக்கான தடுப்புச் சுவர் நிர்மாணிப்பு ஆகியவற்றுக்கான விபரமான வடிவமைப்பு, பொறியியலாளர் மதிப்பீடு மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. மேலும், நீர்கொழும்பு ஆய்வுகூடம் மற்றும் சர்சில்ஹில் குளோரீனிடல் நிலையத்துக்கான இரண்டு மாடிக் கட்டடத்துக்கான விபரமான வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது.

ஆண்டினுள் சில நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1 க்கான ஆரம்ப வடிவமைப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்தல் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. ADB நிதியத்தின் கீழ் முகாமையாளர் (களனி) பிரதேசத்துக்கான NRW குறைப்புக் கருத்திட்ட முன்மொழிவுக்கான PAC அறிக்கை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது. மெலும், கருத்திட்டத்துக்கான நீர் வலையமைப்பு மாதிரி மற்றும் DMA வடிவமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஆண்டினுள் RSC (WN) பிராந்தியத்தினுள் மொத்தமாக 12,745 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன. கம்பஹ மற்றும் களனிய ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் போதியளவு நீர் அளவு கிடைக்காமையின் காரணமாக சில பிர்சினைகள் காணப்பட்ட போதிலும், இது இலக்கில் 85.4% அடைவாகும்.

முன்னுரிமை அடிப்படையில், ஆண்டினுள் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள், நீர்த் தேக்கங்கள், நீர்க் கோபுரங்கள், தாங்கிகள், பம்பி நிலையங்கள், குளோரினிடல் சாதனங்கள், விநியோக முறைமைகள் மற்றும் குழாய் விநியோக வலையமைப்பின் ஏனைய அனைத்து ஆக்கக்கூறுகள் தொடர்பிலும் பாதுகாப்புப் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 2017 பெப்ருவரி தொடக்கம் மே மாதம் வரையிலான காலத்தினுள் கடும் வரட்சிக் காலநிலை காணப்பட்டமையின் காரணமாக, கம்பஹா மாவட்டத்தின் காணப்பட்ட குழிக் கிணறுகள் வற்றியமையினால் தீவிர பிரச்சினையை எதிர்நோக்கியது. தற்கால தீர்வாக, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மேல் மாகாணசபையின் உதவியோடு, கட்டான, திவுலபிட்டிய. மீரிகம மற்றும் மினுவன்கொட பிரதேசத்தில் தே.நீ.வ.வ.சபையினால் உள்ளடக்கப்படாத பிரதேசங்களுக்கு தொடர்ச்சியாக பவுசர் மூலம் நீர் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து நிலவுகின்ற வரட்சிக் காலநிலையின் காரணமாக கட்டான பிரதேசத்திற்கு பவுசர் மூலம் நீர் வழங்குதல் 2017 ஒக்றோபர் வரை நீடிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் IT பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்ட “மானி வாசிப்புப் பிரயோக முறை” பயன்படுத்தப்படுவதை RSC (WN) ஆரம்பித்தது.

பத்தேகம - ஹிக்கடுவ அதிவேக வீதி பிரவேசப் பாதையில் குழாய் இடுதல்

இடைத்தொடர்புகள் மற்றும் சமூக சேவை மேம்பாட்டை முன்னிட்டு வருடாந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகள், தானம் வழங்குதல், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசைப் பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைந்த தென் பிராந்திய ஊழியர்களின் பிள்ளைகளுக்கு நலன்புரிச் சங்கத்தின் மூலம் புலமைப் பரிசில் வழங்குதல், சுகாதாரம் மற்றும் போசாக்கு, கழிவுகள் உருவாகுவதைக் குறைத்தல் தொடர்பிலான இரண்டு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், RSC வளவில் ஊழியர்களுக்கான இலவச கண் மருத்துவ சிகிச்சை நிலையம் ஆகிய பல சிறப்பு நிகழ்ச்சிகள் 2017 ஆம் ஆண்டினுள் இடம்பெற்றன.

2017 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் RSC (S) இன் ஆளுகைக்கு உட்பட்ட பல பிரதேசங்கள் பாதிக்கப்பட்டன. வெள்ளப் பெருக்கின் காரணமாக, பம்பி நிலையங்கள், மோட்டர்கள், பம்பிகள் மற்றும் கருவிகள், குழிக் கிணறுகள், உள்வாங்கு நிலையங்கள், விடுதிகள் மற்றும் அலுவலகங்கள் ஆகிய தே.நீ.வ.வ.ச.பையின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதோடு இதன் காரணமாக நீர் வழங்கலுக்கு இடையூறு ஏற்பட்டு பாவனையாளர்களுக்கான சேவைகளைக் குறைக்க வேண்டி நேரிட்டது. அணுகுதல்களுக்கான தடைகள் ஏற்பட்டதன் காரணமாக தொழிற்பாடு மற்றும் பராமரிப்புகளை மேற்கொள்வதில் கடும் சிரமங்களும் ஏற்பட்டன. எனினும் தே.நீ.வ.வ.சபையின் அனைத்து ஊழியர்களினதும் தீவிர பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்புடன் முக்கியமான துறைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் 3 நாட்களுக்குள் சீர்செய்யப்பட்டு, நீர் வழங்கல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. நடைபெற்றவற்றிலிருந்து பாடம் கற்று அவசரகால செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளுக்கு முகம்கொடுக்கக்கூடிய வெள்ளப்பெருக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு அன்பளிப்புகள், நீர், ஆடைகள் மற்றும் ஏனைய அவசியமான பொருட்கள் இக்காலத்தினுள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு அனைத்து ஊழியர்களும் பெருமளவில் பங்களிப்புச் செய்தனர். தென் பிராந்தியத்தில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களை அடையாளம்காண்பதற்காக அனர்த்தத்திற்குப் பிந்திய பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, வெள்ளெப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இப்பீடுகள் வழங்குவதற்கான விதப்புரைகள் செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியளவில் விதப்புரைகளின் பிரகாரம் அந்த ஊழியர்களுக்கு ஓரளவு இழப்பீடுகள் வழங்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் அவசரகால சேமிப்பு நிதியத்தின் கீழ் இஸ டீன் நகரத்திற்கு பம்பிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டதோடு, அதேபோன்று நாடுகல உள்வாங்கு நிலையத்தில் தாழ் உயர்த்திப் பம்பிகளை பதிலீடு செய்வதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக வலுசக்தி சேமிப்புப் பிரயோகங்களின் தேவைப்பாடு உள்ள பிரதேசங்களை இனங்காண்பதற்காக பல்வேறு வலுசக்தி கணக்காய்வுகளும் இனங்காணல் நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி வலுசக்தி இனங்காணல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திக்வெல்ல – அராஹேன பம்பி, பத்தேகம H/L மற்றும் L/L பம்பிகள், எல்பிட்டிய H/L பம்பிகள், முருதவெல உள்வாங்கு நிலைய பம்பிகள், வகமுல்ல உள்வாங்கு நிலைய மற்றும் H/L பம்பிகள் மற்றும் ரிதியகம உள்வாங்கு நிலைய பம்பிகள் ஆகியன மேம்படுத்தப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட முக்கியமான பிரதேசங்களாகும். இந்த மேம்பாடுகள் அவசரகால சேமிப்பு நிதியத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் மன்னெடுக்கப்படவுள்ளன. அதேபோன்று RSC (S) இன் M&E ஊழியர்களுக்கு வலுசக்தி சேமிப்பு செயற்பாடுகள் தொடர்பில் பல விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

RH நிதியத்தின் கீழ் காலி பிராந்தியத்தில் சேறு குறைப்பு செயற்பாடுகளின் கீழ் பழைய நீர் மானிகளுக்குப் பதிலாக புதிய நீர் மானிகளை பதிலீடு செய்தல் மற்றும் புதிய மானிக் கம்பங்களுடன் மூடிய பூட்டுப் போடக்கூடிய வால்வுகள் இடப்படுதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. குழாய் வெடிப்புகளைத் தவிர்க்கும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர மேம்பாட்டு மூலதன நிதி ஒதுக்கீட்டின் (பத்தேகவுக்கான) நிதியங்களை பயன்படுத்தி பத்தேகவிலிருந்து ஹிக்கடுவ வரை தற்போதுள்ள 280 மி.மீ. விட்டமுடைய அனுப்பல் குழாய்கள் 400 மி.மீ. விட்டமுடைய புதிய PE குழாய்கள் இடப்பட்டு பதிலீடு செய்யயயப்பட்டன.

மாத்தறை பிராந்தியத்தில், ஒலி முறையைப் பயன்படுத்தி கசிவுகளைக் கண்டறிவதற்காக குழுவொன்று நிகமிக்கப்பட்டு அக்குரஸ்ஸ நீர் வழங்கல் திட்டத்தில் இரவு கால கசிவுகளைக் கண்டறிதல் மேற்கொள்ளப்பட்டதோடு, கசிவுகள் அதே இடத்தில் திருத்தம் செய்யப்பட்டன. அத்துடன் மாத்தறை, மிரிஸ்ஸ, மாலிம்பட, வெலிகம அக்குரஸ்ஸ, கராகொட, உயன்கொட மற்றும் மாகந்துர திட்டங்களிலும் இரவு கால கசிவு கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து திட்டங்களிலும் GIS வரைபடமாக்கல் பூர்த்தி செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. சேறு யை சிறந்த முறையில் கணிப்பிடும் பொருட்டு RH நிதியத்தின் கீழ் நீர்த் தேக்கங்கள், உள்வாங்கு நிலையங்கள் மற்றும் அம்பாந்தோட்டை பிராந்தியத்தில் மொத்த மானிகள் பொருத்தப்பட்டன.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுடன், விநியோக மேம்பாடுகள், சடட் விரோத இணைப்புகள், பூச்சிய கட்டணப் பட்டியல்கள், மதிப்பீட்டு கட்டணப் பட்டியல்கள் ஆகியவற்றைப் பரிசோதித்தல், திட்டமிடப்பட்ட பாதுகாப்புப் பராமரிப்புகள் மற்றும் ஏனைய சேறு குறைப்பு நடவடிக்கைகள் ஆகியன அனைத்து மூன்று பிராந்தியங்களிலும் வழமையாக மேற்கொள்ளப்பட்டன. அனைத்து மூன்று பிராந்தியங்களிலும் குழாய் நீடிப்புகள் (63 மி.மீ. – 110 மி.மீ.) மொத்தமாக 46 கி.மீ. களுக்கு, (காலி 7.6 கி.மீ., மாத்தறை 2.4 கி.மீ. மற்றும் அம்பாந்தோட்டை 36 கி.மீ.) மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, தற்போதைய உற்பத்தி வரையறுக்கப்பட்டுள்ளதால் சில திட்டங்களில் குழாய் நீடிப்புகள் மட்டுப்படுத்தப்பட்டன.

நீரின் தரம் தொடர்பில் மாத்தறை பிராந்தியத்தில் மொத்தம் 7,393 நீர் மாதிரிகளும் அம்பாந்தோட்டை பிராந்தியத்தில் மொத்தம் 5,495 நீர் மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன. இச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக உள்வாங்கு நிலையங்களில் மற்றும் நீர் மூலங்களில் நீர் தரக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக தங்காலை, கிரிந்த, புஹுல்வெல்ல, மாத்தறை குழுமம் மற்றும் பிட்டிகல நீர் வழங்கல் திட்டங்களில் ஆண்டினுள் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

2017 ஆம் ஆண்டினுள் தென் பிரதேசத்தில் பல கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. யக்கலமுல்ல கிராமிய நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்து பிரதேச சபைக்கு கையளித்தல், பஹல மில்லேவ கிராமிய நீர் வழங்கல் திட்டம் மற்றும் ஓபாத – தவலம கிராமிய நீர் வழங்கல் திட்டத்தில் வன்மை வடிகட்டல் நிர்மாணிப்புக்கான தொழில்நுட்ப உதவி, கனேகொட தெற்கு கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் திட்டமிடல், நெலுவ கலுகல்தெனிய கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் திட்டமிடல் மற்றும் மதிப்பீடு, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்புக்காக நெலுவ மற்றும்

தவலம பிரதேச செயலகங்களுக்கு 63 மி.மீ. PVC குழாய்களை அன்பளிப்புச் செய்தல் ஆகியன காலிப் பிராந்தியத்தினுள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், அம்பாந்தோட்டை பிராந்தியத்தில் நெடுஞ்சாலை நிர்மாணிப்பின் காரணமாக கொடகொக்கலவில் குழாய் இடுதல் (4.8 கி.மீ.), மினிகிருள CBO வில் குழாய் மீளிடுதல் (500 மீ.), மற்றும் பரவக்கும்புக்கவின் கீழ் திவுலங்கெட்ட மற்றும் வளவ khc நதியில் குழாய' மீளிடுதல் (4கி.மீ.) ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

2017 ஆம் ஆண்டினுள் தெற்குப் பிராந்தியத்தில் பல அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 03 வடிகட்டல்களைத் திருத்துதல், ஹப்புகல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு வடிகட்டல் பீச்சாங் குழல்களை வழங்குதல், வடிகட்டல் ஊடகங்களை வழங்குதல், காலி பிராந்தியத்தில் - பத்தேகம மற்றும் எல்பிட்டியவில் கசிவுத் திருத்தங்கள், ஹப்புகல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்குரிய மேல்தள பெட்டிகள் மற்றும் வால்வு அறைகளின் பராமரிப்பு வேலைகள், பழைய மானிகளை மாற்றீடு செய்து பூட்டத்தக்க வால்வுகள் மற்றும் புதிய மானிக் கம்பங்களுடன் கூடிய புதிய மானிகளைப் பொருத்துதல், மேல்தள பெட்டிகள் மற்றும் வால்வு அறைகளின் பராமரிப்பு வேலைகள், கந்தவத்த வீதியில் நீர் குழாய்கள் இடப்பட்டதன் பின்னர் வீதி மீள்தாபிப்பு நடைபாதைகளை இடுதல், வெகுனுகொட வீதியில் நீர் குழாய்கள் இடப்பட்டதன் பின்னர் வீதி மீள்தாபிப்பு நடைபாதைகளை இடுதல், வாகன தரிப்பிடங்கள் மற்றும் ஹப்புகலவில் சைக்கிள் தரிப்பிடங்களை நிர்மாணித்தல் ஆகியன காலி பிராந்தியத்தினுள் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளாகும்.

மாத்தறை பிராந்தியத்தினுள் நீரின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மூல நீர் தரத்தில் அடங்கியுள்ள இரும்புத்தாதின் அளவைக் குறைப்பதற்குமான வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கிணங்க கராகொட, உயன்கொட, திஹகொட, ஹக்மன மற்றும் மாகந்துர நீர் வழங்கல் திட்டங்களில் குழாயக் கிணறுகளை அபிவிருத்தி செய்தல், மூல நீரின் அளவை மேம்படுத்துவதற்காக ரதம்பொலவில் புதிய ஆழமான குழாய்க் கிணறையும் திஹகொடவில் ஆழமற்ற குழிக் கிணறுகளையும் நிர்மாணித்தல், வெலிகம நர் வழங்கல் திட்டத்துக்கான நீர் பாதுகாப்புத் திட்டத்தை தயாரித்தல், அக்குரஸ்ஸ நீர் வழங்கல் திட்டத்திலிருந்து மாலிம்பட நீர் வழங்கல் திட்டத்துக்கு நாளொன்றுக்கு 1000 கன மீற்றர் நீரை கொண்டு செல்வதற்காக அக்குரஸ்ஸ சுற்றுவட்டப் பாதையில் குழாய்களை இடுதல், நீர் வழங்கலை மேம்படுத்துவதற்காக தெவிநுவர நீர் வழங்கல் திட்டத்தில் குமாரதாச மாவத்தை நெடுகிலும் மற்றும் பட்டிஹேன பிரதேசத்தில் குழாய்களை இடுதலும், அக்கரஸ்ஸ நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, இஸடீன் நகரம் மற்றும் மிரிஸ்ஸ பம்பி நிலையங்களில் மின் பிறப்பாக்கிகளை வழங்கிப் பொருத்துதலும், பம்பிக் கொள்ளளவை நாளொன்றுக்கு 6000 கன மீற்றர்களால் அதிகரிக்கச் செய்வதற்காக கட்டுவ உள்வாங்கு நிலையத்தில் பம்பிகளை வழங்கி பொருத்துதலும் ஆகிய அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

அம்பாந்தோட்டை பிராந்தியத்தில், 2017 ஆம் ஆண்டின் சுர் நிதியத்தின் கீழ், அம்பலாந்தோட்ட நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் புதுப்பித்தல், முருதவெல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் மின் பிறப்பாக்கித் தொகுதியை பொருத்துதல், அம்பாந்தோட்டையில் பிராந்திய முகவர் அலுவலகத்தின் புதுப்பித்தல், தங்கல்ல நீர் வழங்கல் திட்டத்தில் குளாய்க் களஞ்சியங்களை நிர்மாணித்தல் மற்றும் சங்கிலித் தொடர் வேலிகளை புதுப்பித்தல், நோனகம நீர் கோபுரத்தின் வேலியைப் புதுப்பித்தல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், அம்பாந்தோட்டை பிராந்திய அலவலகத்திற்கு கணினி வலையமைப்பு முறைமையை வழங்குதல் மற்றும் பொருத்துதல், அம்பாந்தோட்டை பிராந்தியத்தின் மானி வாசிப்பவர்களுக்கு ஸ்மார்ட் போன்களை வழங்குதல் ஆகியனவும் 2017 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

பல நடவடிக்கைகள் சாத்தியவள மட்டத்தில் உள்ளன. பிட்டிகல நீர் சுத்திகரிப்பு நடைமுறையை இறுதி முடிவை எடுட்டும் நிலையில் உள்ளதோடு, நெலுவ, காலி மாநகர சபைப் பிரதேச நீர் வழங்கல் திட்டம் பற்றிய முன்மொழிவுகள் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு கரந்தெனிய பிரதேசத்துக்கான நீர் வழங்கல் தொடர்பிலும் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. காலி பெரும்பாக நீர் வழங்கல் திட்டம் கட்டம் 111 க்கான புதிய மதிப்பீடு PAC யினால் அங்கீகரிக்கப்பட்டு சபை அங்கீகாரத்திற்காக மர்ப்பிக்கப்பட்டுள்ளது. மொரவக்க நீர் வழங்கல் திட்டம், ஊருபொக்க நீர் வழங்கல் திட்டம், மித்தெனிய நீர் வழங்கல் திட்டம், அங்குனுகொலபெலஸ்ஸ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம், வீரகெட்டிய கட்டம் 11 நீர் வழங்கல் திட்டம் (முருதவெல நீர் வழங்கல் திட்டத்துக்கான சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு, உள்வாங்கு நிலையத்தின் நிர்மாணிப்பு மற்றும் விநியோக மேம்பாடு), பரவகும்புக்க மற்றும் ரோற் நீர் வழங்கல் திட்டம், ருஹுனுபுர நீர் வழங்கல் திட்டம் கட்டம் 11 (ரிதியகமவில் நாளொன்றுக்கு 17,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணிப்பதற்கான சாத்தியவள அறிக்கையை தாயரித்தல்), லுனுகம்வெஹர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் ஆகியன சாத்தியவளக் கட்டத்தில் உள்ளன.

வடிவமைப்புக் கட்டத்தில் உள்ள கருத்திட்டங்கள்

கிரம கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம், தெனியாய நீர் வழங்கல் திட்டத்தின் விஸ்தரிப்பு ஆகியவற்றுக்கான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டு வடிவமைப்புக் கட்டத்தில் உள்ளன. காலி கொத்தணி நீர் வழங்கல் கருத்திட்டம் (மொ.ம.செ. (TEC) ரூபா 1,595 மில்லியன்), வக்வெல்ல சுத்திகரிப்பின் மேம்பாடு, பத்தேகம நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாடு. கட்டுவ உள்வாங்கு நிலையத்தின் நடைமுறைப்படுத்தல், வெலிகம நீர் வழங்கல் திட்டத்தின் ஹல்லால சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கொள்ளளவை மேம்படுத்தல், எல்லகந்த நீர் வழங்கல் திட்டத்தில் 5000 க.மீ. கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணித்தல், வீரகெட்டிய நீர் வழங்கல் திட்டத்துக்கான 5,000 க.மீ. சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் மிதப்பு உள்வாங்கு நிலையத்தின் நிர்மாணிப்பு மற்றும் தற்போதுள்ள பொறித் தொகுதியின் மேம்பாடு, அங்குனுகொலபெலஸ்ஸ நீர் வழங்கல் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் (TEC ரூபா 483 மில்லியன்) மற்றும் ரன்ன நீர் வழங்கல் திட்டத்தின் தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் தரமுயர்த்தல், திஸ்ஸமஹாராம நீர் வழங்கல் திட்டத்தின் தரம் மற்றும் கொள்ளளவை மேம்படுத்துவதற்கான வடிவமைப்பு (TEC 392 மில்லியன்) ஆகியன நடைபெற்று வருகின்றன.

முன் சாத்தியவளக் கட்டத்திலுள்ள கருத்திட்டங்கள்

அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்திற்கு நீர் வழங்கல், பத்தேகம கட்டம் 11 நீர் வழங்கல் கருத்திட்டம், கதிர்காமம் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான மேம்படுத்தல், கிரிந்திஓயா நீர் வழங்கல் திட்டத்துக்கான சாத்தியவள அறிக்கை ஆகியன தயாரிக்கப்பட்டன.

வட மத்திய

2017 ஆம் ஆண்டு காலத்தினுள் (RSC) (NC) யில், புத்தாண்டு விழா, பன போதனை நிகழ்ச்சித்திட்டம், கலாசார சங்கத்தின் நிகழ்ச்சித்திட்டம், யாழ்ப்பாணத்துக்கான வருடாந்த சுற்றுப் பயணம், கிரிக்கெட் போட்டி ஆகிய விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிறுவன ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகள் என்றவகையில், ஒருசில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. GIS தரவு மற்றும் பரிச்சயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் (23 பங்குபற்றுனர்கள்), தீர்மானம் எடுத்தலின் பொருட்டு வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமை பற்றிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் (70 பங்குபற்றுனர்கள்), கடுகதிப் பாதை போக்குவரத்து மற்றும் கடுகதிப் பாதை சமிக்ஞைகள் தொடர்பில்

விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் (60 பங்குபற்றுனர்கள்), பிரத்தியேக வளர்ச்சி, சமூக மற்றும் வியாபார செயல்நெறிகள் (100 பங்குபற்றுனர்கள்), 120 பங்குபற்றுனர்களுக்கு கைப்பம்பி திருத்தம் பற்றிய செயலமர்வு மற்றும் 100 பங்குபற்றுனர்களுக்கு 2018 செயற்பாட்டுத் திட்டம் பற்றிய செயலமர்வு ஆகியன 2017 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், நிதியியல் அதிகாரிகளின் பிரதிநிதிகளுக்கு (60 பங்குபற்றுனர்கள்), கணக்காய்வு (23 பங்குபற்றுனர்கள்), மானி வாசிப்பு (65 பங்குபற்றுனர்கள்), முகாமைத்துவ உதவியாளர்களுக்கு (30 மனித வள பங்குபற்றுனர்கள்), மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் சட்ட அதிகாரங்கள் (93 பங்குபற்றுனர்கள்), வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம் (50 பங்குபற்றுனர்கள்), ஸ்மார்ட் போன் மற்றும் ஆஐளு (160 பங்குபற்றுனர்கள்), குளோரீனிடல் சாதனங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு (140 பங்குபற்றுனர்கள்), மனித வள முகாமைத்துவம் (31 பங்குபற்றுனர்கள்) தொடர்பில் ஆண்டினுள் திருப்திகரமான விதத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மொத்த செலவு அண்ணளவாக ரூபா 283,810.00 ஆகும்.

JICA கட்டம் 11 இன் புதிய கருத்திட்டம், பொலன்னறுவை கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம், அனுராதபுரம் பெரும்பாகம் மற்றும் திருகோணமலை பெரும்பாகம் IWSP, எப்பாவல, ராஜாங்கனய, நொச்சியாகம மற்றும் கிரிபாவ IWSP மற்றும் அனுராதபுரம் தெற்கு கட்டம் 11 நீர் வழங்கல் கருத்திட்டம் ஆகியவற்றுக்கான காணி கொள்ளல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி கருத்திட்டங்களுக்காக அறுபத்தாறு காணித் துண்டுகள் ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டினுள் RSC (NC) உடன் தொடர்புடையதாக ரூபா 11,652 மில்லியனுக்கான மொத்த ஆதனங்கள் காணப்பட்டன. 2017 ஆம் ஆண்டினுள் வருடாந்த ஆதனங்களின் உறுதிப்படுத்தலும் பூர்த்தி செய்யப்பட்டது.

2017 ஆம் ஆண்டினுள் கலவான மற்றும் ரணவிருகம நீர் வழங்கல் திட்டங்கள் மூலதனமிடப்பட்டதோடு, மின்னேரிய மற்றும் மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

அனுராதபுரம் பிராந்திய முகாமையாளர் அலுவலகம் மற்றும் பொலனறுவை பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தின் கீழ் 30 நீர் வழங்கல் திட்டங்கள் தொழிற்பட்டு வந்தன. 2017.12.31 ஆம் திகதி உள்ளவாறு மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை 114,351 ஆகும். 2017 ஆம் ஆண்டினுள் மாத்திரம் வழங்கப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை 6,665 ஆகும்.

2017 திசெம்பர் வரையிலான கட்டணப் பட்டியலிடல் இலக்கு ரூபா 963,456,000.00 ஆக காணப்பட்டதோடு, இதன் அடைவு ரூபா 1,119,865,000.00 ஆக காணப்பட்டது. 2017 திசெம்பர் வரையிலான சேகரிப்பு இலக்கு 1,067,604,000.00 ஆக காணப்பட்டதோடு, இதன் அடைவு ரூபா 1,176,737,000.00 ஆக காணப்பட்டது.

ISO-17025 ஐ பெறுவதற்காக ஆய்வுகூட வசதிகள் மற்றும் நீர் தர செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டன. வட மத்திய மாகாணத்தின் வட பகுதியின் அனைத்து திட்டங்களும் நில நீர் மூலங்களையும் மல்வத்து ஓயாவின் மேற்புற நீரையும் வழங்குகின்றமையால், சில நீர் தர அளவுகோல்கள் (உதா: செறிவு, வன்மை மற்றும் புலோரைட் ஆகியன) அங்கீகரிக்கப்பட்ட மட்டத்தை விட உயர்வாக உள்ளது. வறட்சிக் காலத்தில் கிணறுகளில் போதியளவு நீர் இன்மையால் அநேகமான திட்டங்களில் 24 மணி நேரம் நீர் வழங்கப்படுவதை உறுதி செய்ய முடியாதுள்ளது. எவ்வாறாயினும் போதியளவு மட்டத்திலான சேவை பேணிவரப்பட்டது. துருவில நீர் வழங்கல் திட்டத்துக்கான நீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டத்திற்குப் பிந்திய மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டன. துருவில நீர் வழங்கல் திட்டத்துக்கான உலக சுகாதார அமைப்புடன் இணைந்ததான நீர் பாதுகாப்புத் திட்டக் கணக்காய்வு பூர்த்தி செய்யப்பட்டதோடு, நுவரவெவ, இஹலகம, புனித நகரம் மற்றும் எப்பாவல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. காலாண்டு அடிப்படையில் வாவிகளில் கன உலோகம் மற்றும் அல்கீகளுக்கான நீர் தரப்பகுப்பாய்வு உள்ளடங்கலாக அடிப்படை பௌதீக, இரசாயன, நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் பிராந்தியம் பூராவும் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்திய வேலைத்தலங்களின் மற்றும் வர்த்தகப் பிரிவின் மேம்பாடுகள் போன்ற உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உலக நீர் தினம் - 2017 நிகழ்ச்சித்திட்டத்துக்கு சமாந்திரமாக நடாத்தப்பட்ட போட்டியில் அனுராதபுரம் பிராந்திய வேலைத்தலம் மிகச் சிறந்த வேலைத்தலமாக விருது பெற்ற அதேவேளை வர்த்தகப் பிரிவுகளின் போட்டியில் அனுராதபுரம் வர்த்தகப் பிரிவு 2ஆம் இடத்தைப் பெற்றது.

ஆண்டின் இறுதியளவில், கிராமிய அடிப்படையிலான அமைப்புகளால் (CBOS) தொழிற்படுத்தப்படுகின்ற 284 கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் தே.நீ.வ.வ.ச. யின் கீழ் பதிவு செய்யப்பட்டன. பல RWS திட்டங்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் சுறுளு பிரிவினால் வழங்கப்பட்டன. CBOs களுக்கு மேலதிகமாக, அனுரததபுரம் மாவட்டத்தில் சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட கிராமிய நீர் செயற்பாடுகள் தொடர்பில் பிரதானமான தொழில்நுட்ப ஆலோசகராக கிராமிய நீர் வழங்கல் மாவட்ட அலகு செயற்பட்டது. பொலனறுவை மாவட்டத்தின் CBO அலுவலர்கள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்காக 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், ஆண்டினுள் பொலனறுவை மாவட்டத்தில் 162 ஊடுகலப்பு (RO) பொறித் தொகுதிகள், 337 நீர் தாங்கிகள் பொருத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டினுள் நில நீர் செயற்பாடுகளாக, துளையிடல் தொழிற்பாடுகள் 71, கைப்பம்பி பொருத்தல் 1, கிணறு நீர் பாய்ச்சி துப்புரவு செய்தல்கள் 417, கைப்பம்பி திருத்தல்கள் 421, கைப்பம்பி புனரமைத்தல்கள் 8, சாத்தியவளக் கற்கைகள் 64, விபரமான சரிதவியல் ஆய்வுகள் 84 மற்றும் பொலனறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பிரதேசசபை பணியாளர்களுக்கான 2 விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன தலைமை அலுவலகத்தின் கிராமிய நீர் பிரிவின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டன. கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுச் செயற்பாடுகளின் மேம்பாடு, நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகள் மற்றும் களஞ்சியத்தின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் பதினைந்து கேள்விப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டன. CKD நிதியத்தின் கீழ் மேலும் 10 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டன. பொலனறுவை கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் கைளயிக்கப்பட்டது. தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கருத்திட்ட வேலைகள்ட ஆரம்பிக்கப்பட்டன.

வடமேல்

2017 ஆம் ஆண்டினுள் பல அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுச் செயற்பாடுகளில் RSC (NW) இன் பல்வேறு பிரிவுகளும் ஈடுபட்டன. கட்டுபொத்த - பமுனகொட்டுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம், மெல்சிறிபுர நீர் வழங்கல் திட்டம், பிங்கிரிய - பன்னல – உடுபத்தாவ நீர் வழங்கல் கருத்திட்டம், சிலாபம் நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11, கற்பிட்டி உவர்ப்பு நீக்க நீர் வழங்கல் கருத்திட்டம் ஆகியவற்றுக்கான கருத்திட்ட முன்மொழிவு மற்றும் வந்துராபீனுஎல நீர்த் தேக்கத்தின் சாத்தியவளம் ஆகியவற்றை ரூபா 64 பில்லியன் மொத்த மதிப்பீட்டுச் செலவில் துறைவாரியான திட்டமிடல் பிரிவு பூர்த்தி செய்தது.

RSC (NW) என்ற வகையில், ADB நிதியளிப்பிலான சிலாபம் கட்டம் 11 - (ரூபா 7.2 பில்லியன்), புத்தளம் கட்டம் 11 (ரூபா 15 பில்லியன்), கட்டுபொத்த நீர் வழங்கல் கருத்திட்டம் (ரூபா 18 பில்லியன்) மற்றும் ஹங்கேரிய நிதியளிப்பிலான பிங்கிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் (ரூபா 10 பில்லியன்) ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்த முடியுமாக இருந்தது.

திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவானது, CKD, புரநெகும மற்றும் மீள்செறிவூட்டல் நிதியங்களின் கீழ் பல செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தது. RSC (NW) க்கான விசேட அடைவுகளாக, வரைபடமாக்கல் வேலைகள் பூர்த்தியடைந்ததன்

பின்னர் தற்போதுள்ள அனைத்துத் திட்டங்களினதும் வலையமைப்பு மாதியாக்கலைக் குறிப்பிட முடியும். 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில், நாரம்மல, வாரியபொல, ரம்படகல்ல, தொடம்கஸ்லந்த மற்றும் மாகோ / நிக்கவரட்டிய நீர் வழங்கல் திட்டங்களை O&M க்கு கையளிக்கக் கூடியதாக இருந்தது.

2017 ஆம் ஆண்டில் RSC (NW) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் மூலதன நிதியளிப்புக் கருத்திட்டங்கள் பலவற்றை ஆரம்பித்தது. இக்கருத்திட்டங்கள் நகர திட்டமிடல், CKD, RWS, RWH மற்றும் பயன்பாடுகளின் இடம்பெயர்வுக் கருத்திட்டங்கள் என்ற வகையில் முறையே ரூபா 140 மில்லியன், ரூபா 125 மில்லியன், ரூபா 37 மில்லியன், ரூபா 2 மில்லியன் மற்றும் ரூபா 26.05 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டன.

RSC (NW) அதன் நீர் சுத்திகரிப்பு மற்றும் பம்பி நடவடிக்கைகளுக்கான மின்சாரத்துக்காக வருடாந்தம் அண்ணளவாக ரூபா 120 மில்லியனை செலவிடுகின்றது. RSC யானது சக்தி சேமிப்பு நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 2.4 மில்லியனை முதலீடு செய்து குருணாகல் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் சக்தி சேமிப்புக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியதோடு, இது 2017 ஆம் ஆண்டில் ரூபா 0.66 மில்லியன் சேமிப்புக்கு வழிவகுத்தது. M&E சேவைகள் பிரிவு ரூபா 0.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு கிரிஉல்ல நீர் வழங்கல் திட்டத்தில் நீர் மட்ட கண்காணிப்பு மற்றும் தொலைவிலிருந்து இயக்குகின்ற முறைமையை நடைமுறைப்படுத்தியதோடு, இது 2017 ஆம் ஆண்டில் (மூன்று CBO தொழிற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டன) ரூபா 0.65 மில்லியன் சேமிப்புக்கு வழிவகுத்தது.

மேலும் இரண்டு கருத்திட்டங்கள், வருடாந்தம் ரூபா 3.5 மில்லியன் சேமிப்பை இலக்காகக் கொண்டு வருவாயற்ற நீர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 1.8 மில்லியனை முதலீடு செய்து, ஒன்று குருணாகல் மேல் உயர்த்திப் பம்பி மற்றும் இரண்டாவது நிக்கவெரட்டிய நீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றை 2017 இல் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தல நிலைமையின் காரணமாக கருத்திட்டத்தை 2018 இன் 1வது காலாண்டினுள் பூர்த்தி செய்யப்படுவதற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டினுள் கிரிஉல்ல, ஆனமடுவ மற்றும் பன்னல நீர் வழங்கல் திட்டங்களுக்கு தன்னியக்க முறைமை சேர்க்கப்பட்டது.

தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவானது ஒருசில முறைமை மேம்பாடுகளை நடைமுறைப்படுத்தியது. அவை, நாத்தண்டியவில் சுத்திகரிப்பு மேம்பாடு மற்றும், சிலாபம், ஆனமடுவ, நாரம்மல, அலவ்வ, ஆண்டிகம மற்றும் தொடம்கஸ்லந்தவில் குழிக் கிணறுகள் ஆகியனவாகும். 2017 ஆம் ஆண்டிலிருந்தான வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளாக, அனைத்து இணைப்புகளும் HDPE யில் வழங்கப்பட்டதோடு, இதற்கிணங்க இணைப்புகளை HDPE க்கு மாற்றுவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் காக்கபள்ளி மற்றும் நிக்கவரட்டியவில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், பிராந்தியம் முழுவதிலும் புதிய இணைப்புகளை வழங்குவதற்காக ஆண்டினுள் அண்ணளவாக 20 கி.மீ. குழாய் நீடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆறு மாதங்களாக நீடித்த கடும் வரட்சியினால் வடமேல் மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒரு அலகு என்ற வகையில் RSC இந்நிலைமையை வெற்றிகரமாக கையாண்டது. பிராந்தியம் முழுவதிலும் தொடர்ச்சியான நீர் வழங்கலை மேற்கொள்வதற்காக, காக்கபள்ளி, குருணாகல், தங்கொட்டுவ நீர் வாங்கு நிலையங்களுக்கான தீர்வுகளை வழங்குதல், PVC தாங்கிகளை விநியோகித்தல், பவுசர் மூலமான நீர் வழங்கல், மாகோவிலிருந்து கல்கமுவ வரை அழுத்தக் குழாய்களை திசைதிருப்புதல், வாரியபொல நெருக்கடி நிலையை அகற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளப்பட்ட ஒருசில நடவடிக்கைகளாக குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

நிக்கவெரட்டிய. நெலும்பொக்குன, வாரியபொல திட்டங்களில் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, இது பெரும் அளவிலான தரப்பினர்களின் பங்களிப்பின் ஊடாக நீர் துறையில் சமூக மற்றும் தர ரீதியிலான தாக்கத்தை இனங்காண்பதற்காக பெருமளவில் உதவியாக அமைந்தது.

2017 ஆம் ஆண்டில் தெதுறு நதீகம மற்றும் ராககெதர ஆகியன RWS பிரிவினால் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டன. வடமேல் மாகாணத்தில் 12 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்காக வடமேல் அபிவிருத்தி அமைச்சிலிருந்து ரூபா 250 மில்லியன் தொகையை RSC (NW) பெற்றுக்கொண்டது.

2017 ஆம் ஆண்டில், பல திணைக்களங்களிலும் பல்வேறு மேம்பாடுகளை மேற்கொள்வதற்கு RSC (NW) க்கு இயலுமாயிருந்தது. செல்லிடத் தொலைபேசிப் பிரயோகத்தைப் பயன்படுத்தி மானி வாசித்தல், கேள்விப்பத்திரங்கள், கடிதங்கள் (RSC) மற்றும் நிர்மாணிப்புச் செயற்பாடுகளுக்காக தொழிற்படு தரவுத்தளமொன்றை உருவாக்குதல் ஆகியன. குருணாகல் பிராந்திய களஞ்சியம் மற்றும் சிலாபம் களஞ்சியத்தில் ஆண்டினுள் பல மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை புதிய இரண்டு களஞ்சியங்கள், சிலாபம் மற்றும் நிர்மாணிப்புகளுக்கு களஞ்சிய IMS முறைமைகள் தாபிக்கப்பட்டன. NRW அலகு தாபிக்கப்பட்டமையையும் 2017 இன் விசேட அடைவுகளாகக் குறிப்பிட முடியும். மேற்படி அலகின் கீழ் தற்போதுள்ள குழாய் வலையமைப்புகளின் வரைபடமாக்கல் மற்றும் நீரியல் பகுப்பாய்வு மற்றும் NRW முறைமையாக்கல் மற்றும் கசிவுகள் ஆகியன தொடர்பில் செயலாற்றப்படுகின்றது. நிறுவன அபிவிருத்தி என்ற வகையில், புதிய RSC கட்டடத்துக்கான கட்டடக்கலை வடிவமைப்பு, ISO நடைமுறையை ஆரம்பித்தல், RSC வளவுகள் மற்றும் கட்டடங்களின் மேம்பாடு, வாரியபொல புறு பிரிவுக்கான மேலதிக காணி மற்றும் ISO நடைமுறைப்படுத்தல் தொடர்பில் உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், நீர் சுத்திகரிப்பு நடைமுறை, பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை, நீர் CAD I பயன்படுத்தி வலையமைப்பு மாதிரியாக்கல், மானி வாசிப்பவர்களுக்கான செல்லிடத் தொலைபேசிப் பிரயோகம் ஆகியவற்றை ஆண்டினுள் மேற்கொள்ள முடியுமாயிருந்தது.

மத்திய

தே.நீ.வ.வ.ச.யின் இலக்குகளை அடைவதற்காக பிரதி பொது முகாமையாளர் (மத்திய) இன் வழிகாட்டலின் ஊடாக அனைத்து பணியாளர்களினதும் பங்கேற்புடன் பிராந்திய உதவி நிலைய (மத்திய) அலுவலகத்தில் நடத்தப்பட்ட சமயச் செயற்பாடுகளைத் தொடர்ந்து 2017 புத்தாண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. திட்டமிடப்பட்டிருந்த ஒருசில செயற்பாடுகளை 2017 ஆம் ஆண்டினுள் அடையப்பெறுவதற்கு இயலுமாயிருந்தது. மத்திய மாகாண சனத்தொகையில் 40% வீதமான 1.1 மில்லியனை உள்ளடக்கியதாக நீர் வழங்கல் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 260,862 ஆக கொண்டுவரப்பட்டது.

வருவாற்ற நீரைக் குறைக்கும் பொருட்டு இனங்காணப்பட்ட நடவடிக்கைகளின் கீழ் சில செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கண்டி தெற்கு நீர் வழங்கல் திட்டத்தின் அங்குனவல வலயத்தில் இரவு கால நீர்ப் பாய்ச்சல் பரிசோதனைகள் மற்றும் படிமுறைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இரவு கால கசிவு ஆய்வின்போது அண்ணளவாக 41 கி.மீ. நீளத்துக்கான விநியோக குழாய்கள் உள்ளடக்கப்பட்டன. முகாமையாளர்கள் மற்றும் பிரதேச பொறியியலாளர்களின் வேண்டுகோள்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கசிவு ஆய்வின்போது 170 க்கு மேற்பட்ட கற்புலனாகாத கசிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. நீர் வழங்கல் திட்டங்களில் மொத்த மானி நிலைமைகளின் நிலவரம் தொடர்பிலான சுருக்க அறிக்கை தயாரிக்கப்பட்டதோடு, அனைத்து மூன்று பிராந்தியங்களிலும் மொத்த மானிகள் மற்றும் வால்வுகளைப் பொருத்துவதற்கான கேள்விப் பத்திர ஆவணங்களைத் தயாரித்தல் தற்போது நடைபெற்று வருகின்றது. கண்டி வடக்கு பிராந்தியத்தின் ஹாரிஸ்பத்துவ, பொல்கொல்ல, அக்குரண பிரதேசங்களில் மற்றும் கண்டி தெற்கு பிராந்தியத்தின் தவுலகல, கன்னோருவ, அங்குனவெல மற்றும் கம்பொல பிரதேசங்களிலும் கசிவுத் திருத்த ஒப்பந்தங்கள் நடைபெற்று வருகின்றன. ஈரியகம வலயத்தில் வருவாயற்ற நீர் குறைப்பு

நிகழ்ச்சித்திட்டத்துக்கான பொருட்களை வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டதோடு, சிவில் வேலைகளின் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சக்தி மற்றும் வளங்களின் சேமிப்பின் ஊடாக தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரதானமான செயற்பாடுகளில், RSC (மத்திய) அலுவலகத்தில் 58 மறு சூரிய சக்தி பலகை முறைமையின் நடைமுறைப்படுத்தல் முக்கியமானதாகும். சூரிய சக்தி முறைமையின் நடைமுறைப்படுத்தலுக்கு முன்னர் RSC (மத்திய) இன் மின்சாரக் கட்டணப் பட்டியல் மாத்திற்கு ரூபா 150,000.00 ஆக காணப்பட்டதோடு, இது மாதத்திற்கு ரூபா 30,000.00 வரை குறைக்கப்பட்டது. எதிர்வரும் காலத்தில் முழுக் கட்டணப் பட்டியலையும் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கண்டி கிழக்கு பிராந்தியத்தின் அரத்தன நீர் வழங்கல் திட்டத்தில் இரசாயன மாத்திரை முறைமையை பொருத்துவதற்கான கேள்விப்பத்திர ஆவண மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டன. கண்டி தெற்கில் எல்பிட்டிய உள்வாங்கு நிலைய பம்பிப் பொருத்துதல் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதோடு, தலவாக்கலை பம்பிப் பொருத்துதல்கள் பூர்த்தி செய்யப்பட்டன. மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தின் மேல் உயர்த்திப் பம்பி மற்றும் பொல்கொல்ல நீர் வழங்கல் திட்டத்தின் அலைக் கலங்கள் மற்றும் விசைமாற்றுப் பம்பிகளின் பொருத்துதல்கள் பூர்த்தி செய்யப்பட்டன. பொல்கொல்ல உள்வாங்குநிலைய பம்பிப் பொருத்துதல் நடைபெற்று வருகின்றது. கண்டி தெற்கு மற்றும் கண்டி வடக்கு பிராந்தியங்களில் நிதியப் பற்றாக்குறை காரணமாக சில ஆவணங்கள் இடைநிறுத்தப்பட்டன. பம்பிகளுக்கான நியமத் தொழிற்பாட்டு நடைமுறை, கசிவு கண்டுபிடித்தல், மானி வாசிப்பாளர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம், தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, ஒப்பந்த முகாமைத்துவம், சூரிய சக்தி மற்றும் மைக்ரோசொப்ட் எக்சஸ் விழிப்புணர்வூட்டல் ஆகிய உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருநாள் நிகழ்ச்சித்திட்டங்களாக பிராந்தியத்தினுள் நடாத்தப்பட்டன. குழாய் பொருத்துனர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிலாளர் விழிப்புணர்வூட்டல், குளோரீனிடல் சாதனத்தின் பராமரிப்பு ஆகியன இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களாக நடத்தப்பட்டன.

நீர் தரம் மற்றும் நீரேந்து பிரதேச நீரின் அளவை மேம்படுத்துவதற்கான தெரிவு செய்யப்பட்ட சில நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. உடதென்ன நீர் வழங்கல் திட்டத்தில் கழிவறை நிர்மாணிப்புக்காக 332 வீடுகள் இனங்காணப்பட்டு 50 கழிவறைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டது. நிர்மாணிப்புப் பணிகளில் அண்ணளவாக 90மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஐந்து கழிவறைகள் நிர்மாணிக்கப்பட்டதன் மூலம் அரத்தன நீர் வழங்கல் திட்டத்தின் நீரேந்து பிரதேச துப்புரவேற்பாட்டு மேம்பாட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நீர் தர பரிசோதனையின் பொருட்டு ஒவ்வொரு மாதமும் பிராந்திய இரசாயனவியலாளரால் ஒவ்வொரு பொறித் தொகுதியும் பரிசோதிக்கப்படுகிறது. நீர் பாதுகாப்புத் திட்ட அறிவுறுத்தல்களுக்கமைய அனைத்து பிராந்தியங்களிலும் நீரிலுள்ள கன உலோகம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. ிர் மானிகள், தகடுப் பாய்ச்சல் மற்றும் ஊழுனு செரிமானக் கருவிகள் ஆகியன வழங்கப்பட்டு கண்டி வடக்கின் ஆய்வுகூட வசதிகள் அதிகரிக்கப்பட்டன. கண்டி கிழக்குப் பிராந்தியத்தில் புதிய பிராந்திய ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டதோடு, ஆய்வுகூட கருவிகளை கொள்வனவு செய்தல் நடைபெற்று வருகின்றது.

நில நீர் வளங்களின் அபிவிருத்தியின் பொருட்டு, அண்ணளவாக 40 நீர்-புவிச்சரிதவியல் பரிசோதனைகள், 04 கிணறுகளின் அகழ்வுகள், அண்ணளவாக 50 கிணறுகளின் நீர் பாய்ச்சி துப்புரவு செய்தல்கள், 70க்கு மேற்பட்ட கைப்பம்பிகளின் புனரமைப்புகள் மற்றும் 04 தே.நீ.வ.வ.ச. திட்டங்களின் நில நீர் முகாமைத்துவம் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. குழிக் கிணறுகளின் துளையிடல் மற்றும் உடதென்ன நீர் வழங்கல் திட்டத்தின் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

தொழில்நுட்ப மதியுரை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுடன் கூடியதாக நீர் பாதுகாப்புத் திட்டத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு வசதியேற்பாடு செய்யப்பட்டது. மாத்தளை மாவட்டத்தின் 50 CBO க்களுக்கு குளோரீனிடல் சாதனங்கள் மற்றும் RCI பரிசோதனைக் கருவித் தொகுதிகளை வழங்குதல் விநியோகிக்கப்பட்டதோடு 08 ஊடீழு க்களில் அவற்றைப் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டது. 08 CBO க்கள் பதிவு செய்யப்பட்ட CBO க்களாக CBO பதிவேட்டில் இற்றைப்படுத்தப்பட்டன. 03 புதிய CBO க்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதோடு, நுவரெலியா மாவட்டத்தில் 10 CBO க்களுக்கு தொழில்நுட்ப அறிவுரை வழங்கப்பட்டது. அத்துடன் மாத்தளை மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளில் 03 RO பொறித் தொகுதிகள் தாபிக்கப்பட்டன.

09 பாடசாலைகள் மற்றும் 03 தொழில்நுட்பக் கல்லூரிகளில் நீர்/துப்புரவேற்பாடு பற்றிய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. வர்த்தக செயற்பாடுகளின் மேம்பாட்டுக்காக ஒருசில நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மானி வாசிப்புக்காக ஸ்மார்ட் போன்கள் விநியோகிக்கப்பட்டதோடு, அஞ்சல் அலுவலகங்களில் கட்டணப் பட்டியல் கொடுப்பனவு நிலையங்கள் திறக்கப்பட்டன. ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்துதல் தொடர்பில் மானி வாசிப்பவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. தகவல் வழங்கப்பட்ட உடனேயே பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்வதற்காக கண்டி தெற்கு மற்றும் கண்டி வடக்கு பிராந்தியங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நீர் மானிகளின் வயதுப் பகுப்பாய்வு அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. மதிப்பிடப்பட்ட கட்டணப் பட்டியல்கள் பற்றிய பிரச்சினையைக் குறைக்கும் பொருட்டு தற்போது பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டவிரோத இணைப்புகளைக் கண்டறிவதற்கான பரிசோதனை நடைமுறைகளைப் பலப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. துண்டிக்கப்பட்ட பாவனையாளர்களின் நீர் பாவனை முறை பற்றி பரிசோதிப்பதற்காக எழுந்தமானரியான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதிகளவு நிலுவைத் தொகைகளைக் கொண்ட பாவனையாளர்கள் துண்டிக்கப்படுவதற்கு முன்னர் அறிவிக்கப்படுகின்றனர்.

பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறையானது, வர்த்தக அலுவலர், பொறியியல் உதவியாளர் மற்றும் பொறியியலாளர் (இணைப்பாக்கம்) உள்ளிட்ட 03 பொறுப்புவாயந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டதன் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. பாவனையாளர் முறைப்பாடுகளை மேற்பார்வை செய்யும் பொருட்டு புதிய IT நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பொல்கொல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் பொறித்தொகுதி மேம்பாடு நடைபெற்று வருவதோடு, மாத்தளை உள்வாங்கு நிலையத்தின் மேம்பாட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. எல்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தில் குழாய் இடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தலவாக்கலை, மாத்தளை மற்றும் குண்டசாலை நீர் வழங்கல் திட்டங்களில் சில திட்டமிடப்பட்ட நிர்மானிப்புப் பணிகள் நிதியப் பற்றாக்குறையின் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. பலகொல்ல சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் புனரமைப்பு வேலைகளுக்கான கேள்விப்பத்திர தயாரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மெததும்பர நீர் வழங்கல் திட்டத்துக்கான விநியோக முறைமை புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. பலன-மொட்டான நீர் வழங்கல் திட்டம் 400 இணைப்புகளை வழங்குவதற்காக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டங்களின் கீழ் லக்கல மற்றும் வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டங்களின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. AFD யினால் நிதியளிக்கப்பட்ட மாத்தளை பெரும்பாகக் கருத்திட்டத்தின் வடிவமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. குண்டசாலை ஹரகம நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் நானுஒய நீர் வழங்கல் கருத்திட்டத்தின் ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் விலைக்கேள்வியாளர்களுடன் நடைபெற்று வருகின்றன. கண்டி வடக்கு பாதும்பர நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான கடன் உடன்படிக்கை நிறைவுசெய்யப்பட்டது. நுவரெலியா மாவட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டத்தின்

மூலம் நீர் வழங்கல் உள்ளடக்கத்தில் ஒருசில மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில் சபை அங்கீகாரத்தைப் பெற்ற மூன்று புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான NPD விடுவிப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாண்டில் மேலும் இரண்டு புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான இரண்டு சாத்தியவளக் கற்கைகள் தயாரிக்கப்பட்டு வருவதோடு, நான்கு நீர் வழங்கல் கருத்திட்டங்கள் முன்னெடுப்புக் கட்டத்தில் உள்ளன.

மத்திய RSC யின் நலன்புரிச் சங்கம் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் ஊழியர் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்தது. அவற்றில் சில வருமாறு: மருத்துவ முகாம், இரவு முழுவதும் பிரித் ஓதப்பட்டு தானம் வழங்குதல், வெசாக் தர்ம போதனை மற்றும் தானசாலை, போதி பூஜை, இரத்த தான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பிராந்தியங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி ஆகியனவாகும். பிராந்திய உதவி நிலையம் (மத்தி) யில் சேவையாற்றுகின்ற பீ.ஜீ.ஈ. தனசேன மற்றும் டீ.எம்.எஸ்.எஸ். திசாநாயக்க ஆகியோர் 800 மீ., 400 மீ., 200 மீ., மற்றும் 1500 மீ. ஓட்டப் போட்டிகளில் தேசிய மற்றும் சர்வதேச (சீனா) மட்டங்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பல விருதுகளை வென்றனர்.

வில்கமுவ பொறித்தொகுதி

சப்பிரகமுவ

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரிப் பிராந்தியத்தில் நீர் மட்டக் கண்காணிப்பு முறைமையைப் பொருத்துதல் மற்றும் பம்பி நிலையத்தின் வலுசக்திக் காரணியின் திருத்தத்திற்காக மின்தேக்கிக் கலங்களை பொருத்துதல் ஆகிய சில சக்தி சேமிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கருத்திட்டத்துக்கான மொத்த செலவு ரூபா 11.2 மில்லியனாகும். 2017 ஆம் ஆண்டின் இறுதியாகின்றபோது அனைத்துக் கருத்திட்டங்களும் நிறைவடைந்தன. நீர்மட்டக் கண்காணிப்பு முறைமையிலிருந்தான நேரடியற்ற சேமிப்பைத் தவிர்த்து, மாதாந்தம் எதிர்பார்க்கப்படுகின்ற சேமிப்பு அண்ணளவாக ரூபா 120,000.00 ஆகும். மேலதிக வடிந்தோடலின்றி நீர்த் தேக்கத்தின் நீர் மட்டத்தைக் கட்டுப்படுப்படுத்துதல், பாதுகாப்பான குடிநீர், வலுசக்தி, நேரம் ஆகியவற்றை சேமிக்கும் பொருட்டு மற்றும் வினைத்திறனின் பொருட்டு அவசியமாகின்றது. ஒழுங்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் நீர் வழங்கல் திட்டங்களுடன் தொடர்புடையதான அனைத்து பம்பிகள் மற்றும் ஏனைய கருவிகளுக்கான தடுப்புப் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. விநியோக மேம்பாடு, கட்டுக் குழாய்களை பதிலீடு செய்தல், பழுதடைந்த வால்வுகளை மாற்றுதல், புதிய வால்வு அறைகளை நிர்மாணித்தல், குழாய்களை பதிலீடு செய்தல், இணைப்புகளை மாற்றுதல் ஆகிய பல வருவாயற்ற நீர் குறைப்பு செயற்பாடுகள் பிராந்திய உதவி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்தியத்தில் மற்றும் பிராந்திய உதவி அலுவலகங்களில் அடிப்படை உற்பத்தித்திறன் எண்ணக்கருவுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக உற்பத்தித்திறன் மேம்பாட்டு செயற்பாடுகளும் இடம்பெற்றன. "பாதுகாப்பின்" பொருட்டு மேலுமொரு "S" அறிமுகப்படுத்தப்பட்டு "5S" எண்ணக்கரு புதுப்பிக்கப்பட்டு, பிராந்திய அலவலகங்களினுள் "6S" நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. உற்பத்தித்திறன் மேம்பாட்டு செயற்பாடுகளுக்கு சமாந்திரமாக "6S" போட்டியும் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. இரத்தினபுரி மற்றும் கேகாலை பிராந்தியங்களின் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளில் தர முகாமைத்துவ முறைமையின் (QMS) நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. இது பிராந்தியத்திலுள்ள நாளொன்றுக்கு 10,000 கன மீற்றருக்கும் மேற்பட்ட கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு ISO 9001 – 2008 சான்றிதழைப் பெறுவதற்காகும். பிராந்தியத்தில் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலும் 2015 ஆம் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. எஹலியகொட நீர் வழங்கல் திட்டம் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கான முன்னோடிக் கருத்திட்டமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேதனப் பயிர்ச் செய்கை, மர நடுகை போன்ற நீரேந்து பிரதேச பாதுகாப்புச் செயற்பாடுகள் மற்றும் நீரேந்து பிரதேசப் பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கான துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்கல் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பெல்மடுல்ல மற்றும் கொலொன்ன நீர் வழங்கல் திட்டத்தின் நீரோட்டத்தின் ஒதுக்குப் பிரதேச எல்லைகளை அடையாளமிடல் மற்றும் நீரேந்து பிரதேசத்தினுள் வசிக்கின்ற மக்களுக்காக துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்கல் போன்ற நீரேந்து பிரதேச பாதுகாப்புச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. கருத்திட்டத்துக்கான மொத்த செலவு ரூபா 3.7 மில்லியனாகும்.

நீர் சுத்திரிப்பு மற்றும் நீர் வழங்கலுடன் தொடர்புடைய அறிவு, எண்ணக்கரு மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்தும் பொருட்டு உற்பத்தித்திறன், தர முகாமைத்துவ முறைமை, குழாய் பொருத்துனர் பயிற்சி மற்றும் ஏனைய விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய பதினேழு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பிராந்திய உதவி நிலையத்தில் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. பிராந்தியத்தின் ஆய்வுகூடங்களுக்கான அங்கீகாரம் வழங்கலும் 2015 ஆம் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டிலும் தொடர்கின்றது.

ஆண்டினுள் கேகாலை பிராந்தியத்தில் 48 கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் இரத்தினபுரி பிராந்தியத்தில் 51 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களை உள்ளடக்கியவாறு ஒருசில கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு தொழில்நுட்ப ரீதியில் உதவியளிக்கப்பட்டது. பிராந்தியத்திலுள்ள CBO திட்டங்களிலிருந்து தரவுகளைச் சேகரித்தல் மற்றும் CBO திட்டங்களின் நீர் தரப் பரிசோதனைகள் ஆகியன 2017 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஏனைய ஒருசில செயற்பாடுகளாகும். இதற்கு மேலதிகமாக, உலக வங்கி நிதியளிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டங்களின் புனரமைப்பு ஆக்கக்கூறுகளுக்கான உதவியையும் கிராமிய நீர் பிரிவு வழங்கியது.

மேலும், இரத்தினபுரி மற்றும் கேகாலை பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்த குழாய் நீடிப்புகள் முறையே 19 கிலோ மீற்றர்கள் மற்றும் 12 கிலோ மீற்றர்களாகும். அத்துடன் 2017 ஆம் ஆண்டினுள் பிராந்திய உதவி நிலையத்தினால் 5,342 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன.

இரத்தினபுரி மற்றும் கேகாலை பிராந்தியங்களில் GIS வரைபடமாக்கல் நிகழ்ச்சித்திட்டமும் நடைபெற்று வருகின்றது. GIS பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2017 நவெம்பர் மாதத்தின் 24 தொடக்கம் 29 ஆம் திகதி வரை இரத்தினபுரி நூலக மண்டபத்தில் நடத்தப்பட்டது.

ஆண்டினுள் இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் மேற்கொள்ளப்பட்ட குழாய் நீடிப்புக்கான கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 295 மில்லியனாகும். நிகழ்ச்சித்திட்டத்துக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 82 மில்லியனாகும். ஆண்டின் இறுதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் அண்ணளவாக 80% ஆகும்.

2017 ஆம் ஆண்டில் பல நிர்மாணிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோடு, மூலதன நிதியத்தின் கீழ் இறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் தடுத்துவைக்கப்பட்ட நிதியாக ரூபா 11.3 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளதோடு, பயன்பாடுகளின் இடம்பெயர்வு நிதியத்தின் கீழ் ரூபா 13.6 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளது. கொனாகல நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 1000 குடும்பங்களுக்கு நீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதோடு, கேகாலை நகரத்தில் நித்தமும் நடைபெறுகின்ற குழாய் வெடிப்புச் சம்பவங்களைக் குறைப்பதற்காக கேகாலை நகர் நெடுகிலும் குழாய் இடம்பெயர்வு வேலைகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேற்படி வேலைகளுக்கான மீதிக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 3.0 மில்லியன் செலவு உறப்பட்டது.

கலிகமுவ நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, இதன் மூலம் ஏறத்தாழ 48,450 மக்களுக்கு நீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் உலக வங்கி நிதியத்தின் கீழ் பம்பஹின்ன நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டதோடு, இதன் லம் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்திற்கும் 18,200 மக்களுக்கும் நீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு கருத்திட்டங்களும் உலக வங்கி நிதியின் கீழான நீர் வழங்கல், துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் (WASSIP) கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கொரிய ஏற்றுமதி, இறக்குமதி வங்கி நிதியளிப்பின் கீழ் ருவன்வெல்ல பெரும்பாக நீர் வழங்கல் திட்டத்துக்கான பொறித்தொகுதி வடிவமைப்பு மற்றும் கட்டியெழுப்பல் ஒப்பந்தத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு விலைக்கேள்வி கோரப்பட்டது. விலைக்கேள்வி மதிப்பீடு நடைபெற்று வருகின்றது.

2016 ஆம் ஆண்டினுள் கோலையில் மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மற்றும் மண் சரிவு ஆபத்தின் காரணமாக மீளமர்த்தப்பட்ட ஏறத்தாழ 2,000 குடும்பங்களுக்கு நீர் வழங்குதல் தொடர்பிலான பாரியதொரு சவாலை எதிர்கொள்வதற்கு கேகாலை, தே.நீ.வ.வ.சபைக்கு நேரிட்டது. இடைமாறுகால நிலையங்களுக்கு நீர் வழங்குதல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியமர்த்துகைக்கான புதிய நீர் வழங்கல் திட்டங்கள் என்றவாறு இச் செயற்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கேகாலை மாவத்தின் 11 க்கு மேற்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏறத்தாழ 2000 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். UNICEF நிதியுதவியின் கீழ் தீவிர மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. 2016.09.27 ஆம் திகதிய wum/16/1840/714/036 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் படி, கோலை மாவமட்டத்தின் மண் சரிவினால் பாதிக்கப்பட்டவர்கள் மீளமர்த்தப்பட்ட கிராமங்களின் நீர் வழங்கல் வசதிகளின் ஏற்பாடுகளுக்காக ரூபா 455 மில்லியன் வழங்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 11 நீர் வழங்கல் திட்டங்களின் வடிவமைப்பை கருத்திட்டம் உள்ளடக்குவதோடு, நிதி ஒதுக்கீடு ரூபா 158 மில்லியனாகும். மேற்படி செயற்பாடுகளைத் தவிர, பல விசேட நிகழ்வுகளும் கேகாலை மற்றும் இரத்தினபுரி பிராந்தியங்களிலும் சப்பிரகமுவ RSC அலுவலகத்திலும் நடைபெற்றது. உலக நீர் தினம், சில இடங்களில் நடமாடும் சேவைகள், கிரிக்கெட் போட்டித்தொடர் மற்றும் ஒன்றுகூடல் வைபவங்கள் ஆகியன அத்தகைய விசேட நிகழ்டவுகளில் சில ஆகும்.

மாவனெல்ல சுத்திகரிப்பும் பொறித்தொகுதி

ஊவா

பதுளையில் உள்ள புதிய RSC அலுவலகக் கட்டடத்துக்கு பதவியணியினர் ஏற்கனவே சென்றுவிட்டனர். தெமோதர நீர் சுத்தினரிப்புப் பொறித்தொகுதி 2017 செப்தெம்பர் 27 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. சில திட்டங்களில் நீர் தரப் பிரச்சினைகள் மேலெழுந்ததோடு, உள்வாங்கு நிலையங்களில் தடைகளை அகற்றுதல், காரத்தன்மையைக் குறைத்தல், சிறிய நீர் வழங்கல் திட்டங்களில் குளோரீனிடல் சாதனங்களை பொருத்துதல் ஆகிய தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஹப்புத்தள நீர் வழங்கல் திட்டம், பதுளை நீர் வழங்கல்திட்டம் மற்றும் தியதலாவ நீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றுக்கான நீரேந்து பிரதேச பாதுகாப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. சக்தி சேமிப்பு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அறவீட்டு முறையை மாற்றியமைத்து மின்சார செலவைக் குறைத்தல், வினைத்திறனற்ற பம்பிகளை மாற்றீடு செய்தல் மற்றும் உச்சக்கட்ட நேரங்களில் பம்பிகள் இயக்கப்படுவதைத் தவிர்த்தல் ஆகியன இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சில சக்தி சேமிப்புச் செயற்பாடுகளாகும். மின்சாரச் செலவைக் குறைப்பதற்கு மேலதிகமாக அனைத்து பம்பி நிலையங்களிலும் தடுப்புப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மூலம் பராமரிப்புச் செலவுகள் மற்றும் பம்பிகளின் செயலிழப்புக் காலங்களும் குறைக்கப்பட்டன. வெலிமட சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு மேல் உயர்த்திப் பம்பிகள் பொருத்தப்பட்டதோடு, மொனறாகலையில் மின்தேக்க கலங்கள் மற்றும் VSD பம்பிகள் பொருத்தப்பட்டன. அத்துடன் புதிய RSC கட்டிடத்துக்கு சூரிய வலுசக்திப் பலகைகள் பொருத்தப்பட்டன. புத்தள நீர் வழங்கல் திட்டத்திற்கு SCADA முறைமையை அறிமுகப்படுத்தல், மஹியங்கன நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் பதுளை ஹாலிஎல்ல IWSP மற்றும் வருவாயற்ற நீரை அளவிடுவதற்காக மொத்த மானிகளை வழங்குதல், பழைய வால்வுகளை பதிலீடு செய்தல், கசிவு கண்டுபிடிப்புச் சாதனங்களை வழங்குதல், தற்போதுள்ள வீட்டு இணைப்புகளை திருத்தியமைத்தல், கட்டுக் குழாய்களைப் பதிலீடு செய்தல் மற்றும் பழைய குழாய்களை மீள இடுதல் ஆகியன பிராந்திய உதவி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளாகும்.

பதுளையில் ரத்கிந்த, அகலஓய, வெஹரலதென்ன நீர் வழங்கல் திட்டம் மற்றும் மொனறாகலையில் குமாரபுர நீர் வழங்கல் கருத்திட்டம் ஆகியவற்றுக்கான குழாய் நீடிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

மீள்செறிவூட்டல் செயற்பாடுகளின் கீழ், எலதழுவ விடுதிகளின் புனரமைப்பு (பௌதீக முன்னேற்றம் 20%), பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்தின் உமா ஓயவின் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குழாய் இடுதல் (பௌதீக முன்னேற்றம் 30%), வெஹரகலதென்ன (பௌதீக முன்னேற்றம் 25%) மற்றும் மகுலெல்ல (பௌதீக முன்னேற்றம் 75%) வுக்கான CBO சேவை ஒப்பந்தங்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

புனரமைப்புப் பணிகளின் கீழ், லுனுவத்த நீர் வழங்கல் திட்டத்துக்கான DI குழாய் வழங்கல், பொரலந்த நீர் வழங்கல் திட்டத்துக்கான DI குழாய் இடுதல், பண்டாரவளையில் பிராந்திய அலுவலக ஆய்வுகூடத்தின் புதுப்பித்தல், புத்தள OIC அலுவலக மேம்பாடு, அலிகொட்ட ஆர உள்வாங்கு நிலைய மேம்பாடு, தனமல்வில சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு, மொனறாகலை பிராந்திய அலுவலகத்தின் புனரமைப்பு, மொனறாகலை விடுகளின் திருத்தம், வெல்லவாய OIC அலுவலக மேம்பாடு, தனமல்வில நீர் வழங்கல் திட்டத்தின் புனரமமைப்பு மற்றும் புத்தளவில் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் மேம்பாடு ஆகியன மேற்கொள்ளப்பட்டு சில பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை ஏனையவை நடைபெற்று வருகின்றன.

பிபிளை மொதகம நீர் வழங்கல் கருத்திட்டம், உல்ஹிட்டியாவ நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் கவரம்மன போகஹகும்புர நீர் வழங்கல் கருத்திட்டம் ஆகியவற்றுக்கு ஆண்டினுள் PAC அங்கீகாரம் பெறப்பட்டது.

ஊவா RSC யின் RWS அலகின் மூலம் பல கருத்திட்டங்கள்

பொறுப்பேற்கப்பட்டன. அவை, குட்டியாகொல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் - 170, சின்னமலிகதென்ன நீர் வழங்கல் கருத்திட்டம் அண்ணளவாக 110 இணைப்புகள் (CBO வினால் பராமரிக்கப்படுகிறது), ரஹன்கல நீர் வழங்கல் கருத்திட்டம் - 120 இணைப்புகள் (தே.நீ.வ.வ.ச. யினால் பராமரிக்கப்படுகிறது), கலஉட நீர் வழங்கல் கருத்திட்டம் - 350 இணைப்புகள் (கந்தகெட்டிய பிரதேச சபையினால் பராமரிக்கப்படுகிறது). CKD நிதி ஒதுக்கீட்டின் கீழ், பதுளை, மஹியங்கன மற்றும் ரிதீமாலியத்தவில் பாடசாலை நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் (13 பாடசாலைகளுக்கு RO பொறித் தொகுதிகளை வழங்கி பொருத்துதல்) மேற்கொள்ளப்பட்டது. மேலும், அகலஒய இஹல நீர் வழங்கல் கருத்திட்டம் - 256 இணைப்புகள் (தே.நீ.வ.வ.ச.யினால் நீடிப்பு என்றவாறு பராமரிக்கப்படுகிறது), வேவத்த நீர் வழங்கல் கருத்திட்டம் - 58 இணைப்புகள் (CBO வினால் பராமரிக்கப்படுகிறது), கின்னொருவ மழை நீர் கருத்திட்டம் 34 குடும்பங்கள் மற்றும் ரத்கிந்த நீர் வழங்கல் கருத்திட்டம் (புராணகமவின் கீழ் ரூபா 110 மில்லியன்) – 803 இணைப்புகள் (தே.நீ.வ.வ.ச. யினால் பராமரிக்கப்படுகிறது) ஆகியன ஊவா RSC யின் RWS அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏனைய கருத்திட்டங்களாகும்.

பல்லெவெல்ல – கோவிந்துபுர கிராமிய நீர் வழங்கல் திட்டம் (CB – RWS நிதியம்) பூர்த்தி செய்யப்பட்டது. கங்கொடகம, கொலொன்வின்ன, குருகம்விட்டிய மற்றும் தன்வத்த கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்புக் கருத்திட்டம் (ஊவா மாகாண சபையினால் நிதியளிக்கப்பட்ட) 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டதோடு, கருத்திட்டத்துக்கான மொத்த செலவு ரூபா 21 மில்லியனாகும். மொனறாகலை மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டில் CKDu வினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு நாளொன்றுக்கு 10 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுழு பொறித் தொகுதிகளைப் பொருத்துதல் முன்னெடுக்கப்பட்டதோடு, ஏறத்தாழ 900 குடும்பங்களைக் கொண்ட லுனுகல குடியேற்றம், கல்தம்மண்டிய மற்றும் எதிமலே குடியேற்றம் ஆகிய முதல் மூன்று கருத்திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டன.

RO பொறித்தொகுதியை பொருத்துதல்

நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள் - கிராமிய நீர் வழங்கல் அலகு

பொருளாதாரக் கருத்திட்டங்கள் அமைச்சின் கீழ் மஹகெலே நீர் வழங்கல் கருத்திட்டம் (மீள்செறிவூட்டல்) மற்றும் கிராமிய நீர் வழங்கல் திட்ட மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழான மூன்று கருத்திட்டங்கள் (பொரகஸ் நீர் வழங்கல் கருத்திட்டம் - ரூபா 46.39 மில்லியன், பல்கஹதென்ன நீர் வழங்கல் கருத்திட்டம் - ரூபா 22 மில்லியன் மற்றும் ராஹுப்பொல நீர் வழங்கல் கருத்திட்டம் - ரூபா 17.8 மில்லியன்) ஆண்டினுள் நடைமுறையிலிருந்தன. இந்திகஸ்எல்ல மற்றும் தொடில்லகெட்டிய கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாடும் நடைமுறையில் இருந்தது.

நிதி ஒதுக்கீட்டின் கீழான புரனெகும கருத்திட்டத்தின் கீழ் எக்கிரியன்கும்புர (ரூபா 150 மில்லியன்) மற்றும் குரலேவெல நீர் வழங்கல் கருத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. கொஸ்லந்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட சமுதாயத்திற்கான மாகல்தெனிய நீர் வழங்கல் கருத்திட்டம் தற்போது நிறைவடைந்து, திட்டம் செயற்பட்டு வருவதோடு, ஒருசில மீதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. CKD நிதியின் கீழான பலகொல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் (ரூபா 24 மில்லியன்) மற்றும் விலஒய கிராமிய நீர் வழங்கல் திட்டம் நடைபெற்று வருகின்றது. 250 குடும்பங்களுடன் கூடிய குமாரபுர நீடிப்பு நடைபெற்று வருகின்றது. 2017 இல் குழாய் இடும் வேலைகள் நிறைவடைந்ததோடு, மதகுக் கடவை, வால்வுகளை பொருத்துதல் மற்றும் வால்வு அறைகளை நிர்மாணித்தல் ஆகியன 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளன.

தம்பெபிட்டிய மற்றும் வில்லஒய கிராமங்களில் பௌதீக முன்னேற்றம் 80% மற்றும் நிதிசார் முன்னேற்றம் 60% கொண்டதாக கிராமிய RO பொறித்தொகுதிகளைப் பொருத்துதல் நடைபெற்று வருகின்றது. CKD நிதியின் கீழ் பாடசாலைகளுக்கு RO பொறித்தொகுதிகளைப் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டது. RO பொறித்தொகுதிகளை வழங்குவதற்காக ஊவா மாகாண சபையின் உதவியோடு குறைந்த நீர் தரத்தைக் கொண்ட 14 கிராமிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. RO பொறித்தொகுதிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் நிறைவடைந்துள்ளதோடு, 2017 ஆம் ஆண்டினுள் சிவில் வேலைகளில் 90% நிறைவு செய்யப்பட்டது. பாடசாலையின் ஏறத்தாழ 3000 மாணவர்களும் 250 ஆசிரியர்களும் கருத்திட்டத்தின் மொத்த நலன்பெறுனர்களாவர். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 5.6 மில்லியனாகும். மீதி சிவில் வேலைகளும் RO பொறித் தொகுதியை ஆரம்பித்து வைத்தலும் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன.

பதுளை மாவட்டத்திலுள்ள ஒன்பது பிரதேச செயலாளர் பிரிவுகளின் CBOs களுக்கு ஒன்பது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் மொனறாகலை மாவட்டத்தின் ஏழு கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தான CBO தலைவர்களுக்கு நீர் பாதுகாப்பு தொடர்பிலான பயிற்சியும் ஆண்டினுள் நடாத்தப்பட்டன. ரிதீமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவு, விலஒய மற்றும் பல்லேவெல CBOs களில் இயலளவு வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இரண்டு பாடசாலைகளில் நீர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான துப்புரவேற்பாடு தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மடுல்ல, சியம்பலாண்டுவ, மொனறாகல, சின்னமலிகதென்ன, வேவத்த மற்றும் குட்டியகொல்ல கிராமிய நீர் வழங்கல் திட்டங்களின் O&M பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆண்டினுள் நடத்தப்பட்ட CBO மற்றும் சன்சத கூட்டங்ளில் (ஏறத்தாழ 60 கூட்டங்கள்) பங்கேற்கப்பட்டது.

வடக்கு

ஒரு உதவி பொது முகாமையாரின் (வடக்கு) ஒத்துழைப்புடன் பிரதி பொது முகாமையாளர் (DGM) RSC வடக்குக்கு தலைமை தாங்குகின்றார். தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புச் (O&M) செயற்பாடுகள் பிராந்திய முகாமையாளர் (யாழ்ப்பாணம்) மற்றும் பிராந்திய முகாமையாளர் (வவுனியா) என இரண்டு பிராந்தியங்களுக்கு பிரிக்கப்பட்டுள்ளன. மாகாணத்தின் மொத்த சனத்தொகை 1.23 மில்லியனாகும் (2015 தொகை மதிப்பீடு). தே.நீ.வ.வ.சபையினால் பராமரிக்கப்படுகின்ற மொத்த இணைப்புக்களின் எண்ணிக்கை 21,085 (2017 திசெம்பர் 31 வரை) ஆகுமென்பதோடு, குழாய்வழி நீர் வழங்கலின் ஒட்டுமொத்த உள்ளடக்கம் 8.60% ஆக காணப்படுகின்ற அதேவேளை கிராமிய நீர் வழங்கல் உள்ளடக்கம் ஏறத்தாழ 1.13% ஆக காணப்படுகின்றது.

O&M தொழிற்பாடுகளுக்காக இரண்டு பிராந்திய முாமையாளர் அலுவலகங்களுக்கும் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் பிராந்தியத்திலுள்ள தற்போதைய திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கப் பணிகள் தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்துதலும் RSC (N) இன் பிரதானமான செயற்பாடாகும். 2017 திசெம்பர் இறுதியளவில் RSC வடக்கில் மொத்தம் 230 பணியாளர்கள் சேவையாற்றினார்கள்.

CKDu தடுப்புச் செயற்பாடுகள் மற்றும் நில நீர் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்காக நகர மற்றும்

கிராமிய சனத்தொகையை உள்ளடக்குகின்றவாறு புதிய கருத்திட்ட பிரதேசங்களை இனங்கண்டு அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் AGM (வடக்கின்) பொறுப்பாகும்.

யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. யாழ்ப்பாண பிராந்தி முகாமையாளர் பிரிவின் மூலம் 22 நீர் வழங்கல் திட்டங்கள் தொழிற்படுத்தப்படுகின்றன. இப்பிராந்தியத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டினுள் RDA வீதி விஸ்தரிப்புச் செயற்பாடுகளின் காரணமாக கரவெட்டியில் AC குழாய் பதிலீடுகள் உள்ளடங்கலான விநியோக மேம்பாடுகள், பழுதடைந்த வால்வுகளை பதிலீடு செய்தல் மற்றும் கரவெட்டி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் மற்றும் மல்லாவி ஆகியவற்றில் வால்வு அறைகளை நிர்மாணித்தல் போன்ற வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சக்தி சேமிப்புச் செயற்பாடுகள் என்ற வகையில் JKWSSP நிதியுடன் கூடியதாக 2017 ஒக்றோபர் மாதத்தின் நடுப்பகுதியில் பிராந்திய மகாமையாளர் அலுவலகத்தில் சூரிய வலுசக்தி முறைமை (25 முறு) அறிமுகப்படுத்தப்பட்டது. வர்ல்ட் விஷன் லங்கா நிதியுடன் கூடியதாக 2017 திசெம்பர் இறுதி வாரத்தில் வெம்பிராய் நீர் வழங்கல் திட்டத்தில் சூரிய வலுசக்தி முறைமை (5.2 KW ரூ 4.8 KW) அறிமுகப்படுத்தப்பட்டது. வலுசக்திக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் விதந்துரைக்கப்பட்டதற்கிணங்க வலுசக்தி நிதியத்தின் ஊடாக 2017 செப்டெம்பர் முதல் வாரத்தில் ஊர்காவற்றுரையில் மையக் குவிவான பம்பி மாற்றீடு செய்யப்பட்டது. கையிருப்பு மட்டத்தைக் குறைப்பதற்காக 2016 பொருட் கணிப்பீட்டுக்கு பிந்திய அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பயன்படுத்தப்படாத பொருட்கள் அகற்றப்பட்டன. சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டத்துக்கான சங்குவெளி மற்றும் மல்லாவி நீர் வழங்கல் திட்டத்தின் பம்பி நிலையங்களின் நிர்மாணிப்பு போன்ற நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உயர் வீச்சிடையிலான பகுப்பாய்வுக் கொள்ளளவைக் கொண்டதாக இயங்குகின்ற பிராந்திய ஆய்வுகூடம் நீர் பரிசோதனை தொடர்பில் இலங்கையிலுள்ள முதன்மையானதொரு ஆய்வுகூடமாகும். அதன் மூலம் அடிப்படை நீர் தர அளவீடுகள் மற்றும் குறிப்பாக கன உலோக பகுப்பாய்வுகள் தொடர்பில் செயலாற்றக்கூடியதாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கன உலோக பகுப்பாய்வுக்காக அணு உள்ளீர்ப்பு நிறமானியை (AAS) அது இயக்கி வருகின்றது. அனைத்து விதமான பிரச்சினைக்குரிய கன உலோகங்களையும் (ஈயம், கெட்மியம், குரோமியம், பாதரசம், ஆசனிக், செப்பு, சின்க், அலுமீனியம், சோடியம் மற்றும் பொட்டேசியம்) பகுப்பாய்வு செய்யக்கூடியதாகவும் பல்வேறு சுத்திகரிப்பு முறையியல்கள் பிரயோகிக்கப்படுகின்ற நிலநீர், மேற்பரப்பு நீர் மற்றும் கடல் நீர் வழங்கல் திட்டங்களை மேற்பார்வை செய்யக்கூடியதாகவும் உள்ளது. கிளிநொச்சி சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை மேற்பார்வை செய்வதற்காக கிளிநொச்சிப் பொறித் தொகுதி வளவில் சிறிய ஆய்வுகூடமொன்று தாபிக்கப்பட்டுள்ளதோடு, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு ஆய்வுகூட வசதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அநேகமான நீர் வழங்கல் திட்டங்கள் நிலநீரில் தங்கியுள்ளதோடு, அனைத்து திட்டங்களும் தர ரீதியிலான மற்றும் அளவு ரீதியிலான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதன் காரணமாக எமக்கு பிராந்தியத்தில் இணைப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய இயலாதுள்ளதால், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கான மாற்று வளமூலங்களை தேடிக்கொண்டு உள்ளோம்.

வன்தன்மை, உவர்ப்பு மற்றும் நைட்ரேட் ஆகியன யாழ்ப்பாண பிராந்தியத்தில் பொதுவான பிரச்சினைக்குரிய பரிமாணங்களாக உள்ளதோடு, நகர் பிரதேசங்கள் உயர் அளவில் பற்றீரியாக்களினால் மாசடைந்துள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக ஒட்டுசுட்டாண் மற்றும் நெடுங்கேணி நீர் வழங்கல் திட்டங்கள் உயர் புளோரைட் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளன. நீர்நிலைகளின் நிலைமையை பொறுத்தவரை அனைத்து உற்பத்திக் கிணறுகளும் மிகவும் வரையறுக்கப்பட்டதொரு விளைச்சல் கொள்ளளவையே கொண்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறை மற்றும் வெம்பிராய் நீர் வழங்கல் திட்டங்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் மல்லாவி நீர் வழங்கல் திட்டத்துக்கும் நீர் வழங்கல் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதை நாம் முன்னெடுத்துள்ளோம். யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதகல் மற்றும் சாந்தை, கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன், வட்டக்கச்சி மற்றும் இயக்கச்சி ஆகிய ஐந்து கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் யாழ்ப்பாண கிராமிய நீர் வழங்கல் அலகின் மூலம் கண்காணிக்கப்படுவதோடு, ஒவ்வொரு திட்டமும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் மூலம் தொழிற்படுத்தப்பட்டு மற்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி, வேலணை, நெடுந்தீவு, நைனாதீவு, ஒட்டுசுட்டான், பாண்டியண்குளம், மல்லாவி மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டங்களில் 39 கி.மீ. நீளமான குழாய் நீடிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய செயற்பாடுகளின் கீழ், சுண்ணாகம் பிரதேசத்தில் எண்ணெய் மாசடைவின் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பவுசர் மூலம் நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டு வங்கியினால் நிதியிடப்பட்ட உடுப்பிட்டி குழாய் நீடிப்பு அநேகமாக பூர்த்தியடைந்துள்ளது. மேலும், உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம், ADB 6 இன் மூலம் நிதியளிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம் ஆகியன இப்பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பான பிராந்திய முகாமையாளர் பிரதேசத்தின் பொதுப் பிரச்சினைகளாக, பருத்தித்துறை நீர் வழங்கல் திட்டத்தில் இரும்புத்தாது உள்ளடங்கியுள்ளமை, ஒட்டுசுட்டான் மற்றும் நெடுங்கேணி நீர் வழங்கல் திட்டங்களில் குறைந்த புளொரைட் உள்ளடக்கம், சுண்ணாகத்தில் எண்ணெய் மூலம் மாசடைதல் ஆகியன காணப்படுகின்றன. மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்குகின்ற வவுனியா பிராந்தியம் மடு தேவாலய வைபவ காலத்தினுள் மடு யாத்திரைக்காக ஒன்றுகூடுகின்ற 600,000 பக்தர்களுக்கு குடிநீர் மற்றும் இரண்டாம்நிலை நீர் வழங்கலை மேற்கொள்கின்றது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உலர் வலய நகர நீர், துப்புரவேற்பாட்டு கருத்திட்டம் மற்றும் பெரியமடு நீர் வழங்கல் கருத்திட்டம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. மகாசிவராத்திரி விழாவுக்காக திருகேதீஸ்வரம் ஆலயத்தில் ஒன்றுகூடுகின்ற 300,000 யாத்திரிகர்களுக்கு குடிநீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கிணறுகள் அமைந்துள்ள நிலத்தின் பாதுகாப்பை முன்னிட்டு முருங்கன் கிணறுகளைச் சுற்றிலும் வேலி அமைக்கின்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மன்னார் நீர் வழங்கல் திட்டங்களை மீள இலக்கமிடல் முன்னெடுக்கப்பட்டது. வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பவுசர் மூலம் நீர் வழங்கல் நடைபெற்றது. நாளாந்த கசிவுத் திருத்தம், இரவுகால ஆய்வுகள், பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்தல், சட்ட விரோத இணைப்புகள் தொடர்பிலான கைதுகள், பூச்சிய கட்டணப் பட்டியல்களை பரிசோதித்தல், குழாய் பதிலீடுகள், மொத்த மானிகளைப் பொருத்துதல், வால்வுகளை பதிலீடு செய்தல் ஆகிய வருவாயற்ற நீர் குறைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. சில சக்தி சேமிப்புக் கருத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. மின் கட்டணப் பட்டியல் தொகைகளை சேமிப்பதற்காக சாதாரண மின் குமிழிகளுக்கு பதிலாக CFL மின் குமிழிகளை பதிலீடு செய்தல், பம்பி இயக்க நேரங்களைக் கட்டுப்படுத்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்ட சில வலுசக்தி சேமிப்புச் செயற்பாடுகளாகும். அடம்பன் நீர் வழங்கல் திட்டம், விடத்தல்தீவு நீர் வழங்கல் திட்டம், தேவன்பிட்டி நீர் வழங்கல் திட்டம், எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், மன்னார் நீர் வழங்கல் திட்டம் மற்றும் மடு நீர் வழங்கல் திட்டம் ஆகியன உள்ளடங்கியவாறு மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 25 கி.மீ. நீளத்துக்கு குழாய் நீடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டத்தில் நீர் தரப் பிரச்சினைகள் (இரும்புத்தாது மற்றும் மங்கனீசு காணப்படுதல்) தொடர்பில் நடைமுறையிலுள்ள உலர் வலய நகர நீர் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. வீதி விஸ்தரிப்பின் காரணமாக அனுப்பல் மற்றும் விநியோக குழாய்களுக்கு (280 மி.மீ) ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாக சீர்செய்யப்பட்டன. கட்டணப்பட்டியலிடல் மற்றும் சேகரிப்பின்

பொருட்டு மன்னார் நீர் வழங்கல் திட்டத்துக்கான வீதி வரைபடம் தயாரிக்கப்பட்டது.

RSC வடக்கு மூலம் உருவாக்கப்பட்ட உத்தேச நீர் வழங்கல் திட்டத்தின் கீழ், மன்னார் பெரும்பாக நீர் வழங்கல் திட்டத்திற்கு PAC அங்கீகாரம் கிடைத்ததோடு, மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 37,532.86 மில்லியனாகும். இரண்டு மாவட்டங்களுக்குமான மேற்புற நீர் வளங்கள் அடையாளம் காணப்பட்டன. அவை, மன்னார் மாவட்டத்துக்கு மல்வத்து ஓயா, கல்லாறு, வியாயடிக்குளம் மற்றும் கூறை குளம்: வவுனியாவுக்கு மல்வத்து ஓயா மற்றும் பரங்கி ஆறு: முல்லைத்தீவுக்கு பேராறு: கிளிநொச்சிக்கு இரணமடு மற்றும் கூறை குளம்: யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கீழ் பரங்கி ஆறு நீர்த் தேக்கம் மற்றும் பாலி ஆறு ஆகியனவாகும். வட மாகாணம் முழுவதற்கும் நீர் ஒதுக்கீட்டுக்கான விருப்பத்தைப் பெறுவதற்காக நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். வவுனியாவுக்கு கீழ் மல்வத்து ஓயா நீர்த் தேக்கத்திலிருந்தும், யாழ்ப்பாணம் மற்றும் மன்னாருக்கு கீழ் பரங்கி ஆறிலிருந்தும் நீர் ஒதுக்கீட்டைப் பெறுவதற்காக நீர்ப் பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு நீர் ஒதுக்கீட்டுக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மன்னாரில் CMC மற்றும் வவுனியாவில் COMPLANT ஊடாக சாத்திய வளக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மகாவலி மதியுரைப் பணியகத்தின் (MCB) மூலம் மாங்குளம் மற்றும் வவுனியா நீர் வளக் கற்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேல் பரங்கி ஆறு நீர்த் தேக்கம் மற்றும் கீழ் பரங்கி ஆறு நீர்த்தேக்கம் ஆகியன சாத்தியமான நீர் வளங்களாகும் என MCB கற்கை வெளிப்படுத்தியுள்ளது. RSC வடக்கின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள், RO பொறித் தொகுதிகள், HPTW மற்றும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுடன் தொடர்புடைய தரவுகளை சேகரித்து வரைபடமாக்குகின்ற வேலைகள் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்துக்குமான நீர் வழங்கல் உள்ளடக்கத்தை காட்டுகின்ற வரைபடத்தை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிர்மாணிப்புப் பிரிவானது, உள்நாட்டு வங்கி நிதியங்கள், UNICEF, புனரமைப்பு நிதியம் ஆகியவற்றை பயன்படுத்தி ரூபா 65.9 மில்லியன் பெறுமதியான நிர்மாணிப்புகளை மேற்கொண்டது. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் நீர் வழங்கல் திட்டங்களின் குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு விநியோக முறைமையிலுள்ள சிவில் வேலைகள் சார்ந்த இடைநிரப்புக் குழாய்களின் வழங்கல், இடல் மற்றும் ஆரம்பித்து வைத்தல் ஆகியன இதன் பணிகளாகும். மேலும், வழங்கல் மற்றும் இடுதல் வேலைகள், 80 கன மீற்றர் கொண்ட மேலுயர்த்தப்பட்ட சீமெந்தினாலான கோபுரத்தை நிர்மாணித்தல், மன்னர் மாவட்டத்தில் தோட்டக்காடு உள்வாங்கு நிலையத்தை சுற்றிலுமுள்ள வேலி போன்ற தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்தல், RSC (N) அலுவலகம் மற்றும் சில விடுதிகளின் புனரமைப்பு வேலைகள் ஆகியன பூர்த்தி செய்யப்பட்டன.

ஆரூரு பிரிவானது, நீண்ட காலமாக வட பிராந்திய வளாகத்தில் தேங்கியிருந்த பயன்பாட்டுக்கு உதவாத 15 வாகனங்களை அகற்றுதல் நிறைவு செய்யப்பட்டதோடு, சபை அங்கீகாரத்தோடு 15 வாகனங்களினதும் தே.நீ.வ.வ.ச.யின் உரிமையை மாற்றுதல் முன்னெடுக்கப்பட்டது. இவை வட பிராந்தியத்தில் மோதல் மற்றும் சுனாமி நடைபெற்ற காலத்தில் வேறு அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த வாகனங்களாகும். தலைமை அலுவலகத்தின் M&E சேவையின் ஒத்துழைப்புடன் பம்பிகள் மற்றும் வாகனங்கள் தொடர்பிலான தரவுத்தளம் பேணிவரப்பட்டு, வலுசக்தி கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, யாழ்ப்பாண பிராந்தியத்தில் அள்ளைப்பிட்டி மற்றும் கைதடியில் வலுசக்தி நிதியத்தின் கீழ் பம்பிகள் பதிலீடு செய்யப்பட்டன. வட பிராந்தியத்தின் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா O&M பிரிவுகள் நீர் வழங்கல் திட்டங்களுக்கான ரூபா 3.94 மில்லியன் பெறுமதியான ஆரூரு பொருத்துதல்களை (ரூபா 0.59 மில்லியன் பெறுமதியான மீள்செறிவூட்டல் பணிகள் உள்ளடங்கலாக) பூர்த்தி செய்து கையளித்ததோடு, ரூபா 9.24 மில்லியன் பெறுமதியான நீர் வழங்கல் திட்டங்களின் M&E வேலைகளின் நிறைவேற்றல்களை தொடர்ந்து மேற்கொள்கின்றது. மேலும், ரூபா 23.59 மில்லியன் பெறுமதிளான வெலிஓயா BIO வுக்கான M&E வேலைகளாக மீள்செறிவூட்டல் பணிகளுக்கான கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன. வவுனியா பிராந்தியத்தின் RWS பிரிவு ரூபா 4.80 மில்லியனுக்கு மன்னார் மாவட்டத்தின் மடுக்கரை நீர் வழங்கல் திட்டத்தின் சாத்திய வளக் கற்கையை தயாரித்தது. CKDu நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2016 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 02 நீர் வழங்கல் திட்டங்களின் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்று வருவதோடு, இவ்விரண்டு கருத்திட்டங்களிலிருந்தும் 800 குடும்பங்கள் நன்மை பெறுவார்கள். மேலும், 10 க.மீ. கொள்ளளவைக் கொண்ட 10 RO பொறித் தொகுதிகள் கிராமங்களில் பொருத்தப்பட்டதோடு, வட மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 34 RO பொறித் தொகுதிகளை பொருத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் நீர் முகாமைத்துவம் மற்றும் CKD விடயம் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு நான்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

கிழக்கு

பிராந்திய உதவி நிலைய (கிழக்கு) தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு (O&M) செயற்பாடுகள் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் அக்கரைப்பற்று ஆகிய நான்கு முகாமையாளர்களால் முகாமை செய்யப்படுகின்றது.

விசேட நிகழ்வுகள்

ஆண்டினுள் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் யாவையெனில், திருகோணமலை மாவட்டத்தன் சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவில் 5,418 குடும்பங்களுக்கு சேவையாற்றுவதற்கான சேருநுவர நீர் வழங்கல் திட்டம் ரூபா 950 மில்லியன் செலவில் 2017.07.15 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் எட்டு CBO திட்டங்கள் மேம்படுத்தப்பட்டு தே.நீ.வ.வ.ச.யினால் பொறுப்பேற்கப்பட்டது. புத்தங்கலவில் இரவுகால மண் பரிகாரப் பொறித்தொகுதியைத் தாபிப்பதற்காக அம்பாறை நர சபைக்கு மதியுரைச் சேவைகள் வழங்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டது. பரகஹகல மற்றும் கொனாகொல்லவில் நிலையப் பொறுப்பதிகாரி (OIC) அலுவலகங்களும் அம்பாறை மாவட்டத்தில் னுநு அலுவலகமும் ரூபா 79.0 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2017 ஏப்ரலில் திறந்துவைக்கப்பட்டது.

2017.07.15 ஆம் திகதி திருகோணமலையில் கௌரவ நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரின் பங்குபற்றுதலுடன் நடமாடும் சேவை நடத்தப்பட்டதோடு, 314 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அதில் 277 முறைப்பாடுகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டன. 334 கி.மீ. நீளத்துக்கான குழாய் நீடிப்புகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு இணக்கம் தெரிவிக்கப்பட்ட போதிலும் 12 கி.மீ. நீளத்துக்கு மாத்திரம் குழாய் இடுதல் 2017 இல் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மீதி பல நிதியங்களின் கீழ் முன்மொழியப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 2017 மார்ச் 29 தொடக்கம் ஏப்பிரல் 02 வரை நடத்தப்பட்ட யொவுன்புர நிகழ்ச்சித்திட்டத்துக்கு ரூபா 7.0 மில்லியன் செலவில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டன.

சேருநுவர பிரதேசத்தில் புதிய சேவை இணைப்புகளை துரிதப்படுத்தும் பொருட்டு திருகோணமலை பிராந்திய முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் நடமாடும் சேவை நடத்தப்பட்டு ஒரு நாளில் 536 சாத்தியவளக் கற்கைகளும் தலத்திலான மதிப்பீடுகளும் நிறைவு செய்யப்பட்டன. 2,000 நலன்பெறுனர்களுக்கான வான் எல நீர் வழங்கல் திட்டம் (ரூபா 250.00 மில்லியன்) 2017.01.08 ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

வவுனதீவு நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு ISO தராதரம் கிடைக்கப்பெற்றது.

வருவாயற்ற நீர் குறைப்பு மற்றும் வலுசக்தி சேமிப்பு

ஆண்டினுள் பல வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பழுதடைந்த மானிகளை (6,336) மாற்றுதல், கசிவுகளைத் (18,443) திருத்துதல், சட்ட விரோத இணைப்புகளை (44) கண்டுபிடித்தல் ஆகியன பிராந்தியத்தில் பிரதான செயற்பாடுகளாக மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் மற்றும் இருதயபுரம் பிரதேசங்களில் திட்ட அடிப்படையில் வருவாயற்ற நீர் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் பொருட்டு வலயமாக்கல் ஏற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அம்பாறையில் முகாமையாளர் அலுவலகத்திற்கும் உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்திற்கும் சூரியசக்தி வலையமைப்பு மானியிடல் முறைமை பொருத்தப்பட்டதோடு (ஒவ்வொரு அலுவலகத்திற்கும் 25 மற) அதற்கான செலவு ரூபா 6,300,000.00 ஆகும். KO RSC யினதும் பயன்பாட்டுக்காக ரூபா 564.800.00 செலவில் கையடக்க வலுசக்திப் பகுப்பாய்வுக் கருவி மற்றும் டிஜிடல் கூட்டு அழுத்த அளவீட்டுச் சாதனம் கொள்வனவு செய்யப்பட்டது. கல்முனை மற்றும் சம்மாந்துறை நீர் சுத்திரிப்புப் பொறித் தொகுதிகளுக்கு ரூபா 1.057 மில்லியன் செலவில் முறையே 150 kVA மற்றும் 60 மஏயு கொண்ட மின் சேமிப்புக் கலங்கள் பொருத்தப்பட்டன.

அபிவிருத்திச் செயற்பாடுகள்

2017 ஆம் ஆண்டு பல கிராமிய நீர் வழங்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பதவிசிறிபுர வைத்தியசாலை மற்றும் நொச்சிகுளம் கிராமத்திற்கு சுழு பொறித் தொகுதிகளைப் பொருத்துவதற்கான சிவில் வேலைகள் நிறைவு செய்யப்பட்டதோடு பொருத்துவதற்காக பொறித் தொகுதி தலத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் 1,120 நலன்பெறுனர்களுக்காக ரூபா 24.0 செலவில் பக்மீகம நீர் வழங்கல் கிராமிய நீர் வழங்கல் திட்டம் நிறைவு செய்யப்பட்டது. 5,000 நலன்பெறுனர்களுக்கான சூரியபொக்குன புஸ்ஸலவின்ன கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் (ரூபா 35.0 மில்லியன்) நிர்மாணிப்புகள் நிறைவு செய்யப்பட்டதோடு, 3,700 நலன்பெறுனர்களுக்கான சந்தும்புர லிஹினியாகம கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் (ரூபா 21.0 மில்லியன்) புனரமைப்பு மற்றும் 5,000 நலன்பெறுனர்களுக்கான ஹெனானிகல கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் (ரூபா 31.3 மில்லியன்) நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது.

திருகோணமலை நீர் வழங்கல் திட்டத்தின் விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கந்தளாய் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, உள்வாங்கு நிலையம் மற்றும் பம்பிக் குழாய்களின் மேம்பாடு, பழைய விநியோகக் குழாய்களை பதிலீடு செய்தல் மற்றும் விநியோகக் குழாய்களின் நீடிப்பு ஆகியன ரூபா 350 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டதோடு, வேலைக் நடைபெற்று வருகின்றன. வாழைச்சேனை நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கு RFP (மொ.ம.செ. ரூபா 12 பில்லியன்) கோரப்பட்டுள்ளது. திருகோணமலை பெரும்பாக நீர் வழங்கல் விஸ்தரிப்புக் கருத்திட்டத்துக்கான சாத்திய வளக் கற்கை நடைபெற்று வருவதோடு, ஹெட ஓயா ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்துக்கான சாத்திய வளக் கற்கை நிறைவு செய்யப்பட்டு PAC அங்கீகாரத்துக்காக காத்திருக்கின்றது.

மீள்செறிவூட்டல் வேலைகள் என்ற வகையில், 2017 ஆம் ஆண்டினுள் திருகோணமலை மாவட்டத்தில் 12.5 கி.மீ. குழாய் நிடிப்பு (ரூபா 11.5 மில்லியன்), மட்டக்களப்பு மாவட்டத்தில் 46.5 கி.மீ. குழாய் நீடிப்பு (69.6 மில்லியன்), அக்கறைப்பற்று பிராந்தியத்தல் 10.0 கி.மீ. குழாய் நீடிப்பு (ரூபா 10 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரூபா 5.0 மில்லியன் செலவில் PE குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டு அம்பாறை, பரகஹகலவிலுள்ள மீன் வளர்ப்புத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது.

உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டத்துக்கான மேலதிக வேலைகள் என்ற வகையில் (2014 ஆம் ஆண்டில் மூல விடயப்பரப்பு நிறைவு செய்யப்பட்டது) ரூபா 104 மில்லியன் செலவில் ஓட்டமாவடி பிரதேசத்துக்கு 52 கி.மீ. நீளத்துக்கு குழாய் நீடிப்பும் நில நீர் தேக்கத்தின் நிர்மாணிப்பும் நடைபெற்று வருகின்றது.

பொதுச் செயற்பாடுகளும் பிரச்சினைகளும்

RSC (கிழக்கு) மூலம் வழங்கப்பட்டுள்ள மொத்த வை இணைப்புகளின் எண்ணிக்கை 244,061 ஐ அடைந்துள்ளது. ரூபா 1,524.67 மில்லியன் கட்டணப் பட்டியலிடல் தொடர்பில் ரூபா 1,680.49 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டது. மொத்தம் 127 கேள்விப் பத்திரங்களும் ரூபா 447.95 மில்லியன் பெறுமதியான 70 ஒப்பந்தங்களும் கையாளப்பட்டன.

பிராந்திய களஞ்சியங்களில் கையிருப்பு மட்டத்தைக் குறைத்தல் தொடர்பில், 2017 கையிருப்பு உறுதிப்படுத்தலின்போது பாவனைக்கு உதவாத மற்றும் அசையாத கையிருப்புகள் அடையாளம் காணப்பட்டு, வருடாந்தாந்த மதிப்பாய்வின் பின்னர் அகற்றப்படும். மேலதிகமாக உள்ள மெதுவாக அசையும் பொருட்கள் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றபோது ஏனைய பிராந்தியங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும். அனைத்து பிராந்திய களஞ்சியங்களில் காணத்தக்கதாயுள்ள பொருட்கள் தொடர்பில் மத்தியமயப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்று தாபிக்கப்பட்டுள்ளதோடு, கேள்விப் பத்திரங்கள் கோரணப்படுவதற்கு முன்னர் அனைத்து வழங்கல் (uPVC/ DI) கேள்விப் பத்திரங்களும் தளவுத் தளத்துடன் மீளாய்வு செய்யப்படும்.

ஆதன முகாமைத்துவ செயற்பாடுகள் என்ற வகையில், நிலையான ஆதனங்களின் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு RSC (கிழக்கு) க்கான நிலையான ஆதனப்ப பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டது. புதிய கருத்திட்டங்களுக்காக காணி கொள்ளல் நடவடிக்கைகள் ஏற்புடைய நிறுவனங்களுடன் (மாவட்ட செயலகம், நில அளவைத் திணைக்கம்) இணைப்பாக்கம் செய்யப்பட்டதொடு, வாகனங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், இயந்திர சாதனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள், எடுத்துச் செல்லக்கூடிய கருவிகள், கணனிகள் மற்றும் காணிகள் பற்றிய விபரங்கள் தொடர்பிலான RSC ரீதியிலான திறைசேரி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

களஞ்சியங்களின் மேம்பாட்டிற்காக, திருகோணமலை நீர் வழங்கல் திட்டங்களின் விரிவாக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 5.0 மில்லியன் செலவில் திருகோணமலை பிராந்திய களஞ்சியத்தின் களஞ்சிய கட்டடத்தின் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஆண்டினுள் RSC ஒருசில பிரதானமான பிரச்சினைகளை எதிர்நோக்கியது. புல்மோடை நீர் வழங்கல் திட்டத்தின் உள்வாங்கு நிலையத்தில் நீரின் பாதுகாப்பு தொடர்பிலானதொரு பிரச்சினை காணப்பட்டதோடு, நிர்மாணிப்பின் பொருட்டு புதியதொரு நீர் மூலம் அடையாளம் காணப்பட்டது. மூதூர் நீர் வழங்கல் திட்டத்தில் வரட்சிப் பருவத்தில் நீலபொல உள்வாங்கு நிலையத்தில் நீர் மட்டம் வடிகட்டலுக்கு கீழ் செல்கின்றது. திருக்கோவில் நீர் வழங்கல் திட்டத்தில், கமக்காரர்களின் கேள்வி காரணமாக வரட்சிப் பருவத்தில் சாகமம் நீர்ப்பாசனக் குளத்திலிருந்து நீரை உள்ளீர்ப்பதில் வரையறை காணப்படுகின்றது. அத்துடன் பொத்துவில் நீர் வழங்கல் திட்டத்தில் நில நீர் பற்றாக்குறையின் காரணமாக பொத்துவிலில் இரண்டு மணித்தியால வரையறுக்கப்பட்ட நீர் வழங்கலே நடைபெற்று வருகின்றது.

நடைமுறையிலுள்ள வெளிநாட்டு/உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற பாரிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு நிதியளிப்பில் / உள்நாட்டு வங்கி நிதியளிப்பில் நிர்மாணிக்கப்பட்டு / விரிவாக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்

வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்கள்



கருத்திட்டத்தின் பெயர்	நிதியளிப்பு நிறுவனம்
1. அனுராதபுரம் வடக்கு நீ.வ.	ஜ.ச.கூ.மு
2. தம்புளை பெரும்பாக நீ.வ. - கட்டம் 1	இந்தியா
3. உலர் வலய நீர் மற்றும் துப்-புரவேற்பாடு	ஆ.அ.வ.
4. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு	ஆ.அ.வ.
5. கொழும்பு பெரும்பாக நீர், கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீடு	ஆ.அ.வ.
6. அம்பாறை மாவட்டத்தில் சேவை வழங்கப்படாத பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111	ஆ.அ.வ.
7. கொலன்ன ∴ பலாங்கொடை நீ.வ.க.	பெல்ஜியம்
8. லபுகம கலட்டுவான நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி	ஹங்கேரி
9. பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல நீர் வழங்கல்	யூ.எஸ். எக்சிம் வங்கி
10. கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட நீர் வழங்கல்	சீனா
11. மொனறாகல புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்-திட்டம்	KBC பெல்ஜியம்
12. அம்பதலே நீர் வழங்கல் முறைமையின் மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டம்	AFD
13. ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	ஸ்பெயின்
14. களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11	பிரான்ஸ்
15. மாத்தறை கட்டம் IV	NDB
16. மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்	பிரான்ஸ்
17. அலுத்கம, மத்துகம, அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	இந்திய எக்சிம் வங்கி

உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டங்கள்

A. பெந்தோட்ட நீ.வ.க.
B. அம்பாறை விநியோக வலையமைப்பு நீ.வ.க.
C. ருகுணுபுர விநியோக நீ.வ.க.
D. கொழும்பு நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம்
E கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீ.வ.க. - பொதி 1
F. காலி கொத்தணி நீ.வ.க.
G. அவிசாவளை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீ.வ.க.
H. கலகெதர/மாவத்தகம நீ.வ.க.
I. லக்கல புதிய நகர நீ.வ.க.
J. வெலிகம நீ.வ.க.
K. மெதிரிகிரிய நீ.வ.க.
L. எட்டம்பிட்டிய நீ.வ.க.
3.5 பில்லியன் கருத்திட்டம்

வெளிநாட்டு நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

ஐ.ச.கூ.மு. உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

1. அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் 1)

பல் மற்றும் எலும்புக்கூட்டு புளோரோசியா நோய் மற்றும் குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய்க்கு (CKDu) உள்ளாகக் கூடிய அதிக ஆபத்தைக் கொண்ட பாதுகாப்பற்ற நில நீரைப் பயன்படுத்துகின்ற மக்களைக் கொண்ட அனுராதபுரம் மாவட்டத்தின் மதவாச்சி மற்றும் ரம்பாவ பிரதேச செயலாளர் பிரிவின் 75 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய (இதற்கு மேலதிகமாக மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவின் 02 கிராம அலுவலர் பிரிவுகளும் இக்கருத்திட்டத்தில் உள்ளவாங்கப்படுகின்றது) ஏறத்தாழ 115,600 சனத்தொகையினருக்கு (2034 ஆம் ஆண்டளவில்) பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கான நீர் வழங்கல் முறைமையை நிர்மாணித்தல் கருத்திட்டத்தின் விடயப்பரப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதியளிப்பு முகவராக JICA விளங்குவதோடு, ஆரம்ப கருத்திட்ட செலவு யப்பான் யென் 5,166 மில்லியன் மற்றும் ரூபா 2,786 மில்லியனாகும். 2013 யூலை 05 ஆம் திகதி முதல் கடன் ஏற்புடையதாயுள்ளதோடு, மதியுரை ஒப்பந்தம் 2014 ஜூலை 15 ஆம் திகதி ஆரம்பமாகியது.

மஹகந்தராவ வாவியில் நாளொன்றுக்கு 19,800 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 9,400 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 89 கி.மீ. நீளமான HDPE அனுப்பல் குழாய், 163 கி.மீ. நீளமான HDPE விநியோக குழாய், 330 கி.மீ. நீளமான PVC விநியோக முறைமை, 4 உயர்த்தப்பட்ட நீர்த் தேக்கங்கள், 3 நில நீர் தேக்கங்கள் மற்றும் எந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.

அனைத்து ஒப்பந்தப் பொதிகளுக்குமான விபரமான வடிவமைத்தல் மற்றும் ஒப்பந்த ஆவணங்களை தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தொகுதி V ஒப்பந்த பொதிக்கான (உள்வாங்கு நிலைய வசதி, நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, நீர் களஞ்சியப்படுத்தல் கட்டுமாணங்கள், எந்திரவியல், மின்னியல் மற்றும் கட்டிட வேலைகளுக்கான நிர்மாணிப்புகள்) JICA வின் சம்மதம் 2017.11.22 ஆம் திகதி கிடைக்கப்பெற்று ஒப்பந்தத்தை வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்துக்கு காத்திருக்கின்றது.

தொகுதி பி (அனுப்பல் குழாய், அனுப்பல் உப குழாய் மற்றும் விநியோக பிரதான குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல்) ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது.

தொகுதி P-1 (இசின்பெஸ்ஸகல விநியோக வலயத்தில் PVC குழாய்கள், பொருத்துகள், விசேடங்களை இடுதல் மற்றும் DI மற்றும் GI குழாய்கள், பொருத்துகள் மற்றும் விசேடங்களை வழங்குதல் மற்றும் இடுதல்) ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 2017 திசெம்பர் இறுதி வரை 94.8 கி.மீ. நீளமான குழாய்கள் இடப்பட்டுள்ளன.

தொகுதி சீ-2 (PVC குழாய்கள், பொருத்துகள் மற்றும் விசேடங்களை வழங்கல் மற்றும் விநியோகித்தல்) ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 2017.02.06 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.

தொகுதி சீ-3 (PVC குழாய்கள், பொருத்துகள் மற்றும் விசேடங்களை பொருத்துதல் மற்றும் கிழக்கு ரம்பேவ, எதாகட மற்றும் ரம்பேவ விநியோக வலயத்தில் DI மற்றும் GI குழாய்கள், பொருத்துகள், விசேடங்களை வழங்குதல் மற்றும் இடுதல்) ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2017 திசெம்பர் இறுதி வரை 113.4 கி.மீ. நீளமான குழாய்கள் இடப்பட்டிருந்தது.

தொகுதி B-1 (தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் கருவிகள்) ஒப்பந்தம் நான்கு கருவிகள் மற்றும் DPC க்காக வழங்கப்பட்டு மீதி கருவிகளை வரவழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

தொகுதி B-2 (பவுசர்கள், கெப், மினி பெகோ, மோட்டார் சைக்கிள் கொள்வனவு) ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2014 ஏப்பிரல் 28 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது.

2017 இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 12.23% மற்றும் 8.64% ஆகும்.

கருத்திட்டத்தின் பொதுப் பிரச்சினைகளாக, தொகுதி V (உள்வாங்கு நிலைய வசதி, நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, நீர் களஞ்சியப்படுத்தல் கட்டுமாணங்கள், எந்திரவியல், மின்னியல் மற்றும் கட்டிட வேலைகளுக்கான நிர்மாணிப்புகள்) மற்றும் தொகுதி பி (அனுப்பல் குழாய், அனுப்பல் உப குழாய் மற்றும் விநியோக பிரதான குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல்) ஒப்பந்தங்களின் கையளிப்பானது ஆவண மதிப்பீடு, விலைக் கேள்விகளை சமர்ப்பித்தல், விலைக் கேள்விகளின் மதிப்பீடு மற்றும் JICA வின் சம்மதத்தைப் பெறுதல் ஆகியவற்றில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக தாமதமாகியது.

இந்திய உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

2. தம்புளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1

தம்புளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1 வடிவமைத்து கட்டியெழுப்புகின்ற ஒப்பந்தமாகும் என்பதோடு 2012 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்திய எக்சிம் வங்கியினாலும் இலங்கையின் மக்கள் வங்கியினாலும் இதற்கு நிதியிடப்பட்டது. கருத்திட்டத்தின் மொத்தச் செலவு அமெரிக்க டொலர் 77.8 மில்லியனாகும்.

தம்புள்ள அபிவிருத்திப் பிரதேசத்திற்கான நீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். தம்புள்ள, கலேவெல, கெக்கிராவ, பலாகல, பலுகஸ்வெவ மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் வசிக்கும் 174,100 மக்கள் நலன்பெறுனர்களாவர்.

நாளொன்றுக்கு 65,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 32,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையாகத் தன்னியக்கமாக்கப்பட்ட சுத்திகரிப்புப் பொறித் தொகுதியுடன் 2,500 கன மீற்றர் தெளிந்த நீர்த் தடாகம், 1,350 கன மீற்றர் கொண்ட நில நீர்த் தேக்கம் மற்றும் மேலும் 6 நில நீர்த் தேக்கங்கள் அத்துடன் 5,500 க.மீ. மொத்த கொள்ளளவைக் கொண்ட 2 உயர்த்தப்பட்ட கோபுரங்கள், 07 கி.மீ. நீளமான 900 மி.மீ. விட்டத்தைக் கொண்ட சுத்திகரிக்கப்படாத DI நீர் அனுப்பல் குழாய், 71.5 கி.மீ. நீளமான 450 மி.மீ. தொடக்கம் 250 மி.மீ. வரையான விட்டத்தைக் கொண்ட DI பிரதான அனுப்பல் குழாய்கள் மற்றும் 218 கி.மீ. நீளமான 280 மி.மீ. தொடக்கம் 63 மி.மீ. விட்டத்தைக் கொண்ட PVC விநியோக பிரதான குழாய்கள் மற்றும் தொழிற்படுத்தல் கட்டடம் (OIC அலுவலகக் கட்டடம் ஒன்று, 01 பராமரிப்பு அலுவலகம், பணியாளர் விடுதி மற்றும் 03 தொழிற்படுத்துனர் விடுதிகள்) ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.

உள்வாங்கு நிலையம் சுத்திகரிக்கப்படாத நீர் அனுப்பல் குழாய் நிலையம், நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, இனாமலுவ இரண்டாம் நிலை பம்பி நிலையங்கள் மற்றும் இரண்டு விநியோக வலயமைப்புகள் (இனாமலுவ மற்றும் சீகிரிய) ஆகியன ஆரம்ப ஒப்படைப்புக் கட்டத்தில் உள்ளதோடு தற்போது தே.நீ.வ.வ.ச.யினால் இயக்கப்பட்டு வருகின்றது. நீர்த் தேக்கம் மற்றும் நீர்க் கோபுரத்தின் நிர்மாணிப்பு 90% முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது. அனுப்பல் குழாய் மற்றும் விநியோக முறைமையின் முன்னேற்றம் முறையே 89.6% மற்றும் 91.5% ஆகும்.

2017.12.31 ஆம் திகதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 93.6% மற்றும் 85% ஆகும். 2018 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தை கையளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

03. உலர் வலய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம் (ஆ.அ.வ. 5 வது கருத்திட்டம்)

வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களில் உலர் வலய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான மேம்பாட்டுக் கருத்திட்டத்தை (DZUWSP) தே.நீ.வ.வ.ச. நடைமுறைப்படுத்துகின்றது. இக் கருத்திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய நகரங்களுக்கு மேம்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்படவுள்ளது. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் அமெரிக்க டொலர் 144.73 மில்லியனாகும் (ஏறத்தாழ ரூபா 17,196.39 மில்லியனாகும்). 2017 திசெம்பர் மாத இறுதியில் ஒட்டுமொத்தமான பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 93.84% மற்றும் 91.0% ஆகும். இக்கருத்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் 27 ஒப்பந்தங்கள், 2015 இல் 08 ஒப்பந்தங்கள், 2016 இல் 02 ஒப்பந்தங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் 04 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. ஷொப்பிங் ஒப்பந்தங்களின் எண்ணிக்கை இவ்வறிக்கையில் விபரிக்கப்படவில்லை.

வவுனியா:

வவுனியாவில் இக் கருத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியொன்று வழங்கப்படும் என்பதோடு பௌதீக முன்னேற்றம் 99.1% ஆக காணப்பட்டது. சுத்திகரிப்புப் பொறித் தொகுதி ஒப்பந்தத்தில் அனைத்து சிவில் வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளதோடு எந்திரவியல் மற்றும் மின்னியல் பொருத்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. பேராறுக்கு குறுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற 3.83 மி.கி.மீ. அடைக்கப்பட்ட நீர்த் தேக்கத்தின் நிர்மாணிப்பு மற்றும் கடவைப் பாலத்தின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் 15,950 குடும்பங்களுக்கு நாளொன்றுக்கு 9,800 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்காக நிலக் கீழ் நீர் மற்றும் மேற்புற நீர் ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்க்கப்படும். 3 புதிய நீர்க் கோபுரங்கள், ஒரு நீர்த் தேக்கம் மற்றும் 245 கி.மீ. நீளமான விநியோக குழாய்களை உள்ளடக்கிய இதன் பிரதானமான அம்சங்கள் பூர்த்தியடையும் கட்டத்தில் உள்ளன (ஏறத்தாழ 07 கி.மீ. விநியோகக் குழாய்கள் மற்றும் 16.5 கி.மீ. பிரதான அனுப்பல் குழாய்கள் மீதிய உள்ளன). வவுனியாவில் 4 பொது மலசல கூடங்களை வழங்குதல், நாளொன்றுக்கு 28 க.மீ. கொள்ளளவு உட்பாய்ச்சலுடன் கூடிய தற்போதுள்ள சாக்கடைப் பொறித்தொகுதியின் மேம்பாடு, மற்றும் 500 வீட்டு மலசல கூடங்களை வழங்குவதற்கான துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறு ஆகியன பூர்த்தியடைந்துள்ளன. 2035 ஆம் ஆண்டில் 109,432 நலன்பெறுனர்களை உள்ளடக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார்:

மன்னார் முருளாகன், வெங்காலி மற்றும் திருகேதீஸ்வரத்திற்கு நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்காக 10 துழையிடப்பட்ட கிணறுகளை அபிவிருத்தி செய்தல் மன்னார் மேம்படுத்தல்களில் உள்ளடங்குகின்றன. 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 6,672 குடும்பங்களுக்கு முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்கும் பொருட்டு 27.6 கி.மீ. அனுப்பல் குழாய்கள் மற்றும் 105 கி.மீ. விநியோக முறைமையுடன் கூடியதாக ஒரு புதிய நீர்க் கோபுரமும், இரண்டு நிலக் கீழ் நீர்த் தேக்கங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. நான்கு பொது மலசல கூடங்களும் 330 வீட்டு மலசல கூடங்களும் நிர்மாணிப்புக் கட்டத்தில் உள்ளன. அனைத்து வேலைகளும் முடிவடைந்துள்ளன.

மலக்கழிவு சுத்திகரிப்பு வசதி, நீர் களஞ்சியப்படுத்தல் கட்டமைப்பு, பொது மலசலகூடங்கள் மற்றும் விநியோக முறைக்கான DI, HDPE மற்றும் PVC குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டன. மலக்கழிவு சுத்திகரிப்பு வசதி மற்றும் பொது மலசலகூடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. குழாய்களை இடுதல் 100% பூர்த்தியடைந்துள்ளது. நீர் களஞ்சியப்படுத்தல் கட்டமைப்பின் சிவில் நிர்மாணிப்புகள் மற்றும் எந்திரவியல், மின்னியல் பொருத்தல்கள் 2016 திசெம்பரில் பூர்த்தியடைந்தன. 2017 இல் திட்டம் கையளிக்கப்பட்டதன் பின்னர் மொத்த நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 55,000 ஆகும் என்பதோடு 2035 ஆம் ஆண்டில் 90,000 நலன்பெறுனர்கள் உள்ளடக்கப்படும்.

மன்னார் நீர் வழங்கல் திட்டம் 2017 ஜூலை 07 ஆம் திகதி கௌரவ பிரதம அமைச்சரால் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது.

சிலாபம் :

சிலாபத்தில், தேதுரு ஓயாவிலிருந்து பெறப்படுகின்ற நீரை சுத்திகரித்து நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீரை திட்டமிடப்பட்ட 93,165 மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பிங்கிரிய பிரதேசத்தில் 12,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி (பௌதீக முன்னேற்றம் 95%), 2 நீர்த் தேக்கங்கள், 49 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்கள், 79 கி.மீ. நீளமான விநியோக குழாய்கள் ஆகியவற்றை திட்டத்தின் பிரதான அம்சங்கள் கொண்டுள்ளன. அனைத்து அனுப்பல் மற்றும் விநியோக குழாய் வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன. துப்புரவேற்பாட்டுத் துறையின் கீழ் 05 பொது மலசல கூடங்கள் மற்றும் 500 வீட்டு மலசல கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. மலக்கழிவு சுத்திகரிப்பு வசதி மற்றும் குழாய்களை இடுகின்ற ஒப்பந்தங்கள் பூர்த்தியடைந்துள்ளன. உள்வாங்கு நிலையத்தின் நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது (92%).

சிலாபம் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

புத்தளம்:

புத்தளம் நீர் வழங்கல் திட்டமானது, நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் உள்வாங்கலை உள்ளடக்கியுள்ளதோடு கலா ஓயாவிலிருந்து நீர் பெறப்படும். 197,440 மக்களுக்கு சேவையாற்றப்படவுள்ளது. உத்தேச திட்டமானது 2 நீர்த்

தேக்கங்கள், 7 பம்பி நிலையங்கள், எழுவான் குளத்திலிருந்து புத்தளம் வரை 48 கி.மீ. நீளத்திற்கான அனுப்பல் குழாய் மற்றும் நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி (பௌதீக முன்னேற்றம் 95%) மற்றும் 129 கி.மீ. விநியோக முறைமை ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும். துப்புரவேற்பாட்டு ஆக்கக்கூறானது, புத்தளம் நகரத்தில் மற்றும் நகர்சார் பிரதேசத்தினுள் 6 பொது மலசல கூடங்கள் மற்றும் 500 வீட்டு மலசல கூடங்களை நிர்மாணித்தலை உள்ளடக்கியிருக்கும். மலக்கழிவு சுத்திகரிப்பு வசதி மற்றும் பொது மலசலகூடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. குழாய் இடும் ஒப்பந்தங்கள் பூர்த்தியடைந்துள்ளதோடு, உள்வாங்கு நிலையத்தின் நிர்மாணிப்பு 92மூ முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகின்றது.

4. யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டம்

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டமானது (JKWSSP) நீர் வளம் இரணமடு குளத்திலிருந்து உவர்ப்பகற்றல் பொறித் தொகுதிக்கு மாற்றப்பட்டமையின் காரணமாக மீள்கட்டமைக்கப்பட்டு நீர் வழங்கல் ஆக்கக்கூறுகள் பலப்படுத்தப்பட்டன. பின்வரும் மாற்றங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. (i) ஆரம்பத்தில் அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவராண்மையின் (AFD) மூலம் இணைநிதியிடப்பட்டிருந்ததான நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் இரணமடு குளத்திலிருந்து மொத்தமாக நீர் ஏற்றிச் செல்லப்படுதலை இரத்துச் செய்தல், (ii) சாக்கடை ஆக்ககூறினை நீக்குதல், (iii) உவர்ப்பகற்றல் பொறித் தொகுதியை சேர்த்தல், (iv) வீடு சார்ந்த நீர் இணைப்புகளை சேர்த்துக்கொள்ளல் மற்றும் (v) நீர் வள முகாமைத்துவம் மற்றும் வெளிவாரிச் செயற்பாடுகளை சேர்த்துக்கொள்ளல். திருத்தப்பட்ட செலவு மதிப்பீடு மற்றும் யுகுனு நிதியிடலை இரத்துச் செய்தல் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்திட்ட விடயப் பரப்பில் ஏற்பட்ட மாற்றத்தை ஈடுசெய்வதற்காக இலங்கை அரசாங்கம் ADB யிலிருந்து அமெரிக்க டொலர் 120 மில்லியன் மேலதிக நிதியிடலுக்கு வேண்டுகோள் விடுத்ததோடு 2017 திசெம்பர் 15 ஆம் திகதி மேலதிக கடனுக்கு கைச்சாத்திட்டது. தற்போதைய கருத்திட்டத்தின் மற்றும் உத்தேச மேலதிக நிதியிடலின் ஊடாக திருத்தப்பட்டவாறான கருத்திட்ட விடயப்பரப்பை நிறைவு செய்தகொள்வதற்காக தற்போதைய கடன் 2017 ஆகஸ்ட் 14 இல் இருந்து 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மொத்த திருத்தப்பட்ட கருத்திட்ட செலவு மதிப்பீடானது அமெரிக்க டொலர் 266 மில்லியனாகும் (மேலதிக நிதியிடல் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து அமெரிக்க டொலர் 120 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அமெரிக்க டொலர் 33 மில்லியன்)

கருத்திட்டத்தின் கீழான பிரதானமான பொதியில் உதவிப் பொது முகாமையாளர் அலுவலகம் (ரூபா 282.36 மில்லியன்) மற்றும் ஊழியர் விடுதிகள் (ரூபா 29.51 மில்லியன்) உள்ளடங்கிய இரண்டு பொதிகள் பூர்த்தி செய்யப்பட்டன. விநியோக வலையமைப்பை வழங்கல் மற்றும் இடுதல் பொதி (ரூபா 354.88 மில்லியன்) கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டது. இரண்டு பிரதான அனுப்பல் குழாய்கள் (187 கி.மீ.) (பொதி 1 - ரூபா 2646.18 மில்லியன் மற்றும் பொதி 11 - ரூபா 2890.39 மில்லியன்), இரண்டு உயர்த்திய நீர் கோபுரங்கள் (15) (பொதி 1 ரூபா 525.34 மில்லியன் மற்றும் பொதி 11 - ரூபா 614.77 மில்லியன்) மற்றும் இரணமடு குளத்தின் பிரதான வேலைகள் உள்ளடங்கிய நான்கு ஒப்பந்தப் பொதிகள் நடைமுறையில் உள்ளன. மீதி விநியோக வலையமைப்பு - பொதி 2 (248 கி.மீ.) மற்றும் யாழ்ப்பாண நகரப் பிரதேசம் (285 கி.மீ.), உயர்த்திய நீர் கோபுரம் - பொதி 3 (5 கோபுரங்கள்) மற்றும் M&E SCADA ஆகியன பெறுகைகள் கட்டத்தில் உள்ளன. சுண்ணாகம் நீர் வழங்கல் திட்டம் ஆவணத் தயாரிப்புக் கட்டத்தில் உள்ளது.

2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் கருத்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 24.91% மற்றும் 13.91% ஆகும்.

பழைய பூங்கா நீர் கோபுரத்தின் நிர்மாணிப்பு

5. கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம் (GCWWMIIP)

1800 ஆம் ஆண்டுகளில் குழாய் நீர் வழங்கலைப் பெற்ற ஒருசில ஆசிய நகரங்களில் கொழும்பும் ஒன்றாகும். விநியோக வலையமைப்பின் பல பகுதிகள் 100 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவையாகும். அதிகரித்து வருகின்ற நீருக்கான கேள்வியை நிறைவு செய்வதற்கான பல கருத்திட்டங்கள் உள்ள போதிலும், வலையமைப்பில் குறிப்பிடத்தக்களவு புனரமைப்பு நடைபெறாததன் விளைவாக கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீர் 49% போன்றதொரு உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. மேலும், நரத்தின் ஒருசில பாகங்களில் ஏற்றஇறக்கங்களுடன் கூடிய அழுத்தமும் இடைக்கிடையிலான வழங்கலும் பொதுவாக இடம்பெறுகின்றது. 2011 ஆம் ஆண்டில் கொழும்பு நகரத்தில் ஏறத்தாழ 700,000 சனத்தொகையினருக்கு சேவையாற்றும் பொருட்டு 127,000 இணைப்புகளின் ஊடாக நாளொன்றுக்கு ஏறத்தாழ 290,000 கன மீற்றர் நீர் வழங்கப்பட்டதோடு இதில் 49% நீர் இழக்கப்பட்டு எவ்வித வருவாயும் ஈட்டப்படாதமை அவசர அடிப்படையில் வருவாயற்ற நீரைக் குறைப்பதைக் கட்டாயப்படுத்தியுள்ளது. மேற்படி முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வாக ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை அரசாங்கமும் முறையே அமெரிக்க டொலர் 202 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர் 73 மில்லியனை முதலீடு செய்துள்ளது.

கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள்கள் யாவையெனில்: (i) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் கிடைப்பனவையும் வினைத்திறனையும் அதிகரிக்கச் செய்தல், (ii) விநியோக முறைமையை மேம்படுத்தல் மற்றும் 2020 ஆம் ஆண்டாகின்றபோது வருவாயற்ற நீரை 49% இல் இருந்து 18% வரை குறைத்தல், (iii) இதன் பொருட்டு வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான நீண்ட கால பொறிமுறையொன்றை தாபித்தல் மற்றும் (iv) தே.நீ.வ.வ.ச.யின் நிறுவன ரீதியிலான, தொழிற்பாட்டு ரீதியிலான மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ இயலளவை மேம்படுத்தல் ஆகியனவாகும்.

CWSSIP கருத்திட்டமானது பிரதானமாக கொழும்பின் கொழும்பு மாநகர பிரதேசத்தை உள்ளடக்குவதோடு, இது இலகுவான தொழிற்பாடு மற்றும் பராமரிப்பின் நோக்கத்துக்காக 75 பிரதி முகாமையாளர் பிரிவுகளாக (DMAs) பிரிக்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் பிரதானமான விடயப்பரப்பாக, 565 கி.மீ. நீளமான குழாய்களை பதிலீடு செய்தல், கொழும்பு நகர எல்லையில் பதினேழு முறைமை உள்ளீட்டு மானிகளை (SIV) பொருத்துதல், நீர் மானிகளை மீள்இடம்பெறச் செய்தல் மற்றும் பழுதடைந்த நீர் மானிகளை பதிலீடு செய்தல், GIS வலையமைப்பை அளவீடு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல் அத்துடன் கட்டடங்களை நிர்மாணித்தல் ஆகியன காணப்படுகின்றன. னுஆயு வடிவமைப்புக்கமைய 26 DMA க்களில் குழாய் இடுதல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் 3 DMA வேலைகள் 100% பூர்த்தி செய்யப்பட்டன. இதன்படி 2017 திசெம்பர் வரை 565 கி.மீ. குழாய் இடுதல்களில் 142 கி.மீ. குழாய் இடுதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி இரண்டு பூர்த்தி செய்யப்பட்ட DMA க்களிலும் (DMA 1 மற்றும் DMA 3) வருவாயற்ற நீர் 18%

க்கு குறைவாகக் குறைக்கப்பட்டுள்ளதென்பதை வருவாயற்ற நீர் முகாமைத்துவக் கற்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதற்கு மேலதிகமாக கொழும்பு நகரத்துக்கான உள்ளீட்டு இடங்களில் SIV மானிகளைப் பொருத்

துதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்திட்டம் மற்றும் நாளாந்த தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளின் காரணமாக கொழும்பு நகரத்தின் வருவாயற்ற நீர் ஏறத்தாழ 42% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டம் 2017 மார்ச் 27 ஆம் திகதி கௌரவ நிதி அமைச்சர், கௌரவ நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், கௌரவ நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் மற்றும் கருத்திட்டத்தின் அனைத்து தரப்பினர்களினதும் பங்கேற்புடன் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. கருத்திட்டத்தின் அனைத்து பங்குதாரர்களினதும் ஒத்துழைப்புடன் சிங்கள தமிழ் புத்தாண்டு வைபவம் நடத்தப்பட்டது. நடைபெற்று வருகின்ற கொழும்பு நீர் வழங்கல் சேவை மேம்பாடு (CWSSIP) தொடர்பில் பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதை முன்னிட்டான கண்காட்சி மற்றும் 'அபிவிருத்தியடைந்துவரும் கொழும்புக்கான நீர் வழங்கலை புதுப்பித்தல்' எனும் தலைப்பிலான பாடசாலை ஓவியப் போட்டியின் பரிசளிப்பு உட்பட மேலும் பல நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.



குழாய் இடுதல்

இலங்கை அரசாங்க கொடுப்பனவுகளை பெறுவதில் ஏற்பட்ட தாமதம், கொழும்பு நகர பிரதேசத்தில் துறைமுக பிரவேச உயத்தப்பட்ட அதிவேக வீதியின் காரணமாக செல்லும் பாதையில் மாற்றம், நிதி ஒதுக்கீடுகள் போதாமை (ரூபா 15 பில்லியனான வரவு செலவுத்திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டினுள் செய்ய வேண்டியிருந்தமை) மற்றும் எதிர்பாரா நிலக்கீழ் பயன்பாடுகள் (கொழும்பு மாநகர சபை சாக்கடைக் குழாய் அமைப்பு, CEB மின்கம்பி அமைப்பு, SLT தொலைபேசி கம்பி அமைப்பு) ஆகியன 2017 ஆம் ஆண்டில் எதிர்நோக்கிய பொதுப் பிரச்சினைகளாகும்.

அவுஸ்திரேலிய உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

6. அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கான ஒழுங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111

இக் கருத்திட்டம் அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசத்தில் வசிக்கும் ஏறத்தாழ 200,000 மக்களுக்கும் அதேபோன்று மொனறாகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் ஒருசில பகுதிகளுக்கும் சேவையாற்றவுள்ளது. நாளொன்றுக்கு 27,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, உள்வாங்கு நிலையம், உயர்த்தப்பட்ட கோபுரம் (கோணேஷபுரம் மற்றும் பக்கிஎல்ல 1,000 கன மீற்றர், நாமல் ஓயா, இங்கினியாகல, சென்றல் கேம்ப் 750 கன மீற்றர், தோட்டம் 600 கன.மீற்றர்), நீர் தேக்கங்கள் (ஹிமிதுராவ 2,500 கன மீற்றர், பரகஹகெலே, தடயந்தலாவ மற்றும் கொனாகொல்ல 1,600 கன மீற்றர்), 100 கிலோ மீற்றர்களுக்கான DI பிரதான அனுப்பல் குழாய்களை வழங்கல் மற்றும் இடுதல் மற்றும் விநியோக முறைக்கான PE குழாய்கள் மற்றும் பொருத்துதல்களை வழங்கல் மற்றும் இடுதல் (ஏறத்தாழ 900 கிலோ மீற்றர்) ஆகியன கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகளாகும். இக்கருத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 40,000 புதிய இணைப்புகளை வழங்க முடியும் என்பதோடு கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 20,825 மில்லியனாகும்.

2017 திசெம்பர் இறுதியில் கருத்திட்டம் 98.95% பௌதீக முன்னேற்றத்தையும் 76.17% நிதிசார் முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது.

பெல்ஜியத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்

7. கொலொன்ன/பலாங்கொடை நீர் வழங்கல் கருத்திட்டம்

இத்திட்டமானது பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் கொலன்னவுக்கான புதிய நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்பு ஆகிய இரண்டு பிரதானமான ஆக்கக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது. கருத்திட்டத்திற்கு இலங்கை அரசாங்கத்தினாலும் பெல்ஜியம் அரசாங்கத்தினாலும் நிதியளிக்கப்படுகின்றது. மொத்த (திருத்தப்பட்ட) மதிப்பீட்டுச் செலவான இலங்கை ரூபாய் 4,988 மில்லியனில் ரூபா 1,562 மில்லியன் உள்நாட்டு நிதியாகவும் (இலங்கை அரசாங்கம்) ரூபா 3,426 மில்லியன் வெளிநாட்டு நிதியாகவும் (பெல்ஜியம்) உள்ளது. இது 2015 இறுதியில் பௌதீக ரீதியில் 100% பூர்த்தி செய்யப்பட்டது.

தற்போதைய பற்றாக்குறையை நிறைவு செய்யும் வகையில் 8,000 குடும்பங்களுக்கு புதிய இணைப்புகளை வழங்குவதன் மூலம் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை விஸ்தரிப்பதற்கு பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்துக்கான விரிவாக்கத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைப் பொறுத்தவரை, பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கமானது பலாங்கொடை பிரதேச சபைப் பிரதேசம், பலாங்கொடை நகர சபைப் பிரதேசம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள இம்புல்பே பிரதேச சபைப் பிரதேசத்தின் ஒரு பகுதியிலுள்ள 40,000 மக்களினதும், வர்த்தக மற்றும் கைத்தொழில் ரீதியிலுமான நீருக்கான கேள்வியை நிறைவு செய்யும். இதற்கிணங்க, 2030 ஆம் ஆண்டளவில் நீருக்கான மொத்தக் கேள்வி நாளொன்றுக்கு 7,000 கன மீற்றர்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, தற்போதுள்ள பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்திற்கான உள்வாங்கு நிலையம் அமைந்துள்ள வளவே கங்கையின் வெலிஹாரனாவயிலிருந்து இதற்கான நீர் உள்வாங்கப்படும்.

கொலொன்ன நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் கொலொன்ன பிரதேச சபைப் பிரதேசத்தின் 40,000 மக்களுக்கு ஆண்டு முழுவதிலும், எம்பிலிபிட்டிய பிரதேச சபைப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கு மழை காலத்திலும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆதலால், வர்த்தக மற்றும் கைத்தொழில் கேள்விக்கு மேலதிகமாக 8,000 புதிய இணைப்புகள் வழங்கப்படும். 2030 ஆம் ஆண்டளவில் மொத்த நீருக்கான கேள்வி நாளொன்றுக்கு 7,000 கன மீற்றர்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, இதற்கான நீர் 3 மீற்றர் உயரமும் 25 மீற்றர் நீளமும் கொண்ட அணையொன்றை கட்டுவதன் மூலம் விஜேரியாவிலுள்ள ஏரபோருவ ஆற்றிலிருந்து உள்வாங்கப்படும். மேலும், நீர்ப்பாசனத் திணைக்களமும் கமநல அபிவிருத்தித் திணைக்களமும் குறிப்பிட்ட அணைக்கட்டின்

நீரோட்டத்திலிருந்து ஏறத்தாழ 1,500 ஏக்கர் நெற் செய்கைக்காக நீரைப் பெறுகின்றன. ஆதலால், குறிப்பாக வரட்சிக் காலத்தில் நீரைப் பகிர்ந்து கொள்வதற்காக நீர்ப்பாசனத் திணைக்களமும், கமநல அபிவிருத்தித் திணைக்களமும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திட்டுள்ளது.

கருத்திட்டத்தின் மீதி நிதியைப் பன்படுத்தி பனாமுர நில நீர்த் தேக்கத்தின் சரிவு நிலைபேறாக்கலும் (இலங்கை அரசாங்கம்) மற்றும் பலாங்கொடை தற்போதுள்ள சுத்திகரிக்கப்படாத பிரதான நீர்க் குழாயின் AC குழாய்களை பதிலீடு செய்தலும் (இலங்கை அரசாங்கம்) மேற்கொள்ளப்பட்டது.

பனாமுர நில நீர்த் தேக்கமானது மண் சரிவின் ஆபத்துக்கு உள்ளாகும் நிலைமையில் இருந்ததால் சரிவை நிலைபேறாக்கல் இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பலாங்கொடையில் தற்போதுள்ள சுத்திகரிக்கப்படாத பிரதான நீர்க்குழாய் (AC) தொழிற்பாட்டுக்குப் பொருத்தமான சிறந்த நிலைமையில் காணப்படவில்லை. அத்துடன் தற்போதுள்ள பொறித் தொகுதியின் கொள்ளளவை எதிர் காலத்தில் 3000 க.மீ. இல் இருந்து 5000 க.மீ. வரை அதிகரிக்கச் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆதலால், 200 மி.மீ. விட்டத்தைக் கொண்ட AC குழாய்கள் பதிலீடு செய்யப்பட்டு 400 மி.மீ. விட்டத்தைக் கொண்ட 1785 மீ. நீளமான HDPE குழாய் இடுதல் மேற்கொள்ளப்பட்டது.

கொலொன்ன பலாங்கொடை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் அனைத்து வேலைகளும் கணிசமான அளவு பூர்த்தியடைந்துள்ளதாலும் பரிசோதனைகளில் தேர்ச்சியடைந்துள்ளதாலும் 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதி கணிசமான அளவு பூர்த்தியடைந்தமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. எந்தவொரு பாரிய பிரச்சினையும் இன்றி தே.நீ.வ.வ.சபையின் O&M பணியாளர்களால் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி தொழிற்படுத்தப்பட்டு வருகின்றதோடு பொதுமக்களுக்கு நீர் இணைப்புகளை வழங்குதல் நடைபெற்று வருகின்றது. அத்துடன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக முழுக் கருத்திட்டமும் O&M பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

பனாமுர நில நீர்த் தேக்கத்தின் சரிவு நிலைபேறாக்கலும் பலாங்கொடை தற்போதுள்ள சுத்திகரிக்கப்படாத பிரதான நீர்க் குழாயின் AC குழாய்களை பதிலீடு செய்தலும் பூர்த்தியடைந்துள்ளது. கொலொன்ன நீர் வழங்கல் திட்டத்தின் (பனாமுர வலயம்) விநியோக முறைமைக்கான HDPE/DI குழாய்கள், பொருத்துகள், விசேடங்கள், DI வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் இடுதல் அத்துடன் பலாங்கொடை நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக முறைமைக்கான HDPE/DI குழாய்கள், பொருத்துகள், விசேடங்கள், DI வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் இடுதல் K&BWSP க்காக ஒதுக்கப்பட்ட இலங்கை அரசாங்க நிதியத்தின் கீழும் K&BWSP யின் மேற்பார்வையின் கீழும் நடைபெற்று வருகின்றது.

குழாய் இடும் செயற்பாடுகளுக்கு RDA அங்கீகாரத்தைப் பெறுதல் 2017 ஆம் ஆண்டில் பாரியதொரு பிரச்சினையாகக் காணப்பட்டது. அத்துடன் பாதகமான காலநிலை நிலைமையும், நிதி விடுவித்தல் போதியதாக இல்லாதிருந்தமையும் கருத்திட்டத்தின் முன்னேற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் தொழிற்பாட்டின் போது எழுந்த குறைபாடுகள் தொடர்பில் ஒப்பந்தகாரர் போதியளவு கவனம் செலுத்தாதிருந்தமை மேலுமொரு பிரச்சினையாகும். கொலொன்ன பலாங்கொடை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் அனைத்து நிர்மாணிப்புகளும் 2015 ஆம் ஆண்டு காலத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டது. இரண்டு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளுக்குமான நீர் தரம் மற்றும் தேவைப்படும் கொள்ளளவு பரிசோதிக்கப்பட்டதோடு அனைத்து பரிசோதனைகளிலும் தேர்ச்சியடைந்துள்ளது. ஆதலால் கருத்திட்டம் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டதாகக் கருதக்கூடியதாயள்ளது. கருத்திட்டத்தின் பரப்பெல்லையில் வரையறுக்கப்பட்ட விநியோகங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி முழுமையான இயலளவுடன் இயக்கப்படவில்லை. ஆதலால், இக்கருத்திட்டத்தின் கட்டம் 11 (விநியோகம்) விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

ஹங்கேரிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

8. லுகம – கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக் கருத்திட்டத்தின் புனரமைப்பு

ஹங்கேரிய அரசாங்கத்தினதும் இலங்கை அரசாங்கத்தினதும் நிதியளிப்பின் கீழ் இக் கருத்திட்டம் இயங்கி வருகின்றது. கருத்திட்ட செலவு, லுகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்புக்காக - யூரோ 16,714,045 மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்புக்காக - யூரோ 17,383,906 ஆகும்.

இக்கருத்திட்டம் லுகம மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் இனங்காணப்பட்ட ஆக்கக்கூறுகளுக்கான புதுப்பித்தல் வேலைகளையும் புதிய நிர்மாணிப்பு வேலைகளையும் உள்ளடக்குகின்றது. கருத்திட்டம் 2013 ஒக்றோபர் 21 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு 2017 பெப்ருவரி 26 இல் கையேற்கப்பட்டது.

லுகம மற்றும் கலட்டுவாவவில் அமைந்துள்ள இரண்டு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளினதும் உற்பத்திக் கொள்ளளவையும் அதேபோன்று நீர் தரத்தையும் மேம்படுத்தல் கருத்திட்டதின் குறிக்கோளாகும். இதற்கிணங்க லுகம மற்றும் கலட்டுவாவவின் மொத்த உற்பத்திக் கொள்ளளவு நாளொன்றுக்கு 45,000 கன மீற்றர்களாக அதிகரிக்கப்பட்டது.

தற்போது கருத்திட்டம் 3 படிநிலைகளைக் கொண்டுள்ளதோடு, அது பொறித்தொகுதியிலுள்ள புதிய முறைமையின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்புக்கான பன்னிரண்டு மாத கால தொழில்நுட்ப உதவியாகும்.

சேறு சுத்திகரிப்பு அலகு

ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கை அரசாங்கத்தின் உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

9. பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

இது, கருத்திட்ட பிரதேசத்தில் பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல பிரதேசங்களை உள்ளடக்குகின்ற வகையில் குழாய் நீர் வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்து பாதுகாப்பானதும் நம்கத்தன்மையுடன் கூடியதுமான நீரை வழங்குகின்ற ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு கருத்திட்டமாகும். கருத்திட்டத்தின் இலக்கு, பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல அபிவிருத்தித் திட்டத்தின் மிருதுவான மற்றும் உரிய நேரத்திலான நடைமுறைப்படுத்தலுக்கு உதவியளிதலும் கருத்திட்ட பிரதேசத்தில் கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தலுமாகும்.

கருத்திட்டத்தின் நிர்மாணிப்புகள் கடந்த திசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டது. பதுளை நகரத்தில் பதுளு ஓயாவின் ஏறத்தாழ 12 கி.மீ. மேல் நீரோட்டப் பகுதியில் அமைந்துள்ள புதிய தெமோதர அணைக்கட்டில் நீர் வழங்கல் திட்டம் தொடங்குகிறது. முறைமைக்கான மூல நீரைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக அணைக்கட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டின் கீழ் நீரோட்டப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பம்பி நிலையம் முறைமையின் மற்றைய பாரிய ஆக்கக்கூறான தெமோதர நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு மூல நீரை அனுப்பி வைக்கின்றது.

நான்கு உயர் திட சுத்திகரிப்பு அலகுப் பொதிகளைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 15,000 கன மீற்றர் வரையிலான நீரை புதிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் மூலம் சுத்திகரிக்கலாம். சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் ஒருங்கிணைந்த நீர் முறைமையின் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வசதிகள் எட்டு பூட்டப்பட்ட உருக்குத் தாங்கிகளையும் பல்வேறு தூரத் தலங்களில் அமைந்துள்ள சறுகலாக மேலெழுப்பப்பட்ட ஊக்குவிப்புப் பம்பி நிலையங்களையும் உள்ளடக்கியுள்ளது. குழாய் முறைமையானது 46 கி.மீ. அனுப்பல் குழாய், நேர் தடக் குழாய் மற்றும் பிரதான குழாய் ஆகியவற்றையும், 111 விநியோக முறைமைக் குழாய்களையும் உள்ளடக்கியுள்ளது.

ஏறத்தாழ 110,000 மக்கள் கருத்திட்டத்திலிருந்து நலன்பெறுகின்றனர் என்பதோடு, முழு உள்ளடக்கப் பிரதேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தில் நேரடி மேம்பாட்டை ஏற்படுத்துகின்ற வகையில் பாதுகாப்பான குடிநீரின் தொடர்ச்சியான நீர் வழங்கலில் தங்கியிருக்க முடியுமாயுள்ளது. பண்டாரபுர, எலதழுவ, மெதிரிய மற்றும் ஹாலிஎலவில் அமைந்துள்ள தற்போதைய சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் உள்வாங்கு நிலையத்தின் புனரமைப்பும் கருத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.



தெமோதர நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் நீர்த் தேக்கம்

RSC அலுவலகக் கட்டடம் மற்றும் மற்றும் பண்டாரபுர, பிங்கராவ, குமாரசிங்க மாவத்தை, தெமோதர மற்றும் கொட்டுவலவில் அமைந்துள்ள ஏழு பணியாளர் விடுதிகள் பூர்த்தி செய்யப்பட்டு தே.நீ.வ.வ.சபைக்கு கையளிக்கப்பட்டது. இலங்கை அரசாங்க நிதியின் கீழ் ரூபா 1,322 மில்லியன் பெறுமதியிலான மீதி குழாய் வழங்கல் மற்றும் இடுதலுக்கான கேள்விப் பத்திர ஆவணங்கள் தே.நீ.வ.வ.சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளன. தே.நீ.வ.வ.சபையினால் நிரந்தரமான வீதி மீளமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

சீன உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

10. கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்

கம்பஹா, அத்தனகல்ல, மினுவன்கொட பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மீரிகம மற்றும் மஹர பிரதேச செயலாளர் பிரிவுகளின் ஒரு பகுதியிலும் உள்ள 449 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பாதுகாப்பானதும் நம்பத்தகுந்ததுமான குழாய் நீர் வழங்கலை மேற்கொள்ளல் கருத்திட்டத்தின் விடயப் பரப்பாகும். உத்தேச கருத்திட்டமானது கருத்திட்ட பிரதேசத்தில் உள்ள உள்ளடக்கப்படாத பிரதேசங்களுக்கான நீர் வழங்கலையும், தற்போதைய பாவனையாளர்களின் சேவை மட்டத்தை மேம்படுத்துவதையும் எதிர்பார்க்கின்றது. கருத்திட்ட காலகட்டமானது 2017 பெப்ரவரி 20 தொடக்கம் 2020 பெப்ரவரி 19 வரையிலாகும்.

கருத்திட்டம் கம்பஹா, அத்தனகல்ல, மினுவன்கொட பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மீரிகம பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியிலும் மற்றும் மஹர பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியிலும் நடைபெறுகின்றது. 300,000 ஆட்களுக்கு புதிய சேவை இணைப்புகளை வழங்குவதையும், 100,000 பாவனையாளர்களுக்கான தற்போதைய முறைமையின் சேவை மட்டத்தின் மேம்பாடும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தனகலு ஓயாவிலுள்ள பஸ்னாகொட நீர்த் தேக்கம் நீர் மூலமாகும்.

3.5 மி.க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர்த் தேக்கம், நாளொன்றுக்கு 85,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலைய வசதி, நாளொன்றுக்கு 54,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 10,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உயர்மட்ட நீர்த் தேக்கம், ரன்பொக்குனுகம, பெலும்மஹர, நைவல, மினுவன்கொட மற்றும் பஸ்யாலவில் 1,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட ஐந்து உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள், 89.2 கி.மீ. நீளத்திற்கு (DI) பிரதான ஈர்ப்புவிசை அனுப்பல் குழாய், நைவல, அத்தனகல்ல, பஸ்யால, மினுவன்கொட, பெலும்மஹர, கம்பஹா மற்றும் நிட்டம்புவ ஆகிய ஏழு உப கருத்திட்டங்களின் கீழ் 630 கி.மீ. மற்றும் பிராந்திய அலுவலகத்தில் 500 மீ., பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தில் 200 மீ., இரண்டு OIC அலுவலகங்களில் 150 மீ. , ஐந்து விடுகளில் 150 மீ. நீளத்திற்கு குழாய்களை இடுதல் ஆகியன கருத்திட்டத்தின் ஆக்கக்கூறுகளாகும்.

2017 திசெம்பரில் உள்ளவாறு தற்போதைய நிலைமை

நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான நில தயார்படுத்தல் வேலைகளை பிரதான ஒப்பந்தகாரர் பூர்த்தி செய்துள்ளார் என்பதோடு, நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் வடிவமைப்புப் பணிகள் 2017 பெப்ரவரி மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பஸ்யால, பலும்மஹர, நைவல மற்றும் மினுவன்கொட பிரதேசங்களுக்கான உயர்த்தப்பட்ட கோபுரங்களுடன் கூடிய விநியோக முறைமையின் வடிவமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெல்ஜியம் KBC யின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

11. மொனறாகலை - புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

மொனறாகல (22), புத்தள (20), மற்றும் மடுல்ல (11) வில் 53 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான பாதுகாப்பான குடிநீர் வசதிகளின் கேள்வியை நிறைவு செய்வதற்காக மெனறாகலை - புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் 2014 திசெம்பர் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது பிரதேச மக்களின் குழாய்வழி நீர் வழங்கல் வசதிக்கான தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவையை நிறைவு செய்வதற்கும் அவர்களது ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாகும். 6,000 புதிய இணைப்புகள் உள்ளடங்கிதாக தற்போதுள்ள 12,000 நுகர்வோரின் சேவை மட்டம் மேம்படுத்தப்படுவதோடு, 60,000 மக்கள் இக்கருத்திட்டத்திலிருந்து நன்மை பெறுகின்றனர். இக்கருத்திட்டம் வடிவமைத்துக் கட்டியெழுப்படுகின்ற ஒரு கருத்திட்டமாகும் என்பதோடு, மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 5,515 மில்லியனாகும். இதில் பெல்ஜியத்தின் KBC வங்கியின் ஊடாக பெல்ஜியம் அரசாங்கம் மற்றும் இலங்கையின் HNB வங்கி ரூபா 4,205 மில்லியனை நிதியிடுவதோடு, மீதி ரூபா 1,310 மில்லியனை இலங்கை அரசாங்கம் நிதியிடுகின்றது.

கருத்திட்டம் 2014 திசெம்பர் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, அட்டவணைப்படுத்தப்பட்ட தினத்திற்கு 3 மாதங்களுக்கு முன்னர் 2017 மார்ச் 30 ஆம் திகதி நிறைவடைந்தது.

கும்புக்கன் ஓயா உள்வாங்கு நிலையம்

பிரான்ஸ் அபிவிருத்தி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியோடு மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்

12. அம்பதலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்புக் கருத்திட்டம்

2012/2013 இல் மேற்கொள்ளப்பட்ட கொழும்பு பிரதான திட்ட கருத்திட்டத்தின் விதப்புரைகளுக்கமைய தே.நீ.வ.வ.ச. அம்பதலே நீர் வழங்கல் முறைமை மேம்பாட்டு மற்றும் சக்தி சேமிப்புக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இந்த திட்டத்தின் நோக்கம் யாதெனில், உற்பத்தியின் நம்பகத்தன்மையை அதிகரிக்கச் செய்தல், சக்தி சேமிப்பு நடவடிக்கைகள் அறிமுகம் செய்தல் மற்றும் அம்பதலேயில் உள்ள அனுப்பல் வசதிகளின் வினைத்திறனை மேம்படுத்தல் ஆகும். இக் கருத்திட்டத்திற்கான நிதியை பிரஞ்சு அபிவிருத்தி நிறுவனம் (AFD), ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசு வழங்குகிறது. மொத்த கருத்திட்ட மதிப்பீடு அமெரிக்க டொலர் 100 மில்லியனாகும். இந்த திட்டத்தின் கீழ் ஐந்து ஒப்பந்தப் பொதிகள் உள்ளன. அவை, வடிவமைப்பு மீளாய்வு மற்றும் கட்டுமான மேற்பார்வை ஆலோசனைச் சேவைகள் (DRCSC), கொதட்டுவயில் 15,000 க.மீ. நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல் மற்றும் 5கி.மீ., 1200 மி.மீ. DI குழாய்களை (ICB 03) வழங்குதல் மற்றும் இடுதலுடன் கூடிய ஊக்குவிப்புப் பம்பி நிலையம், அம்பதலையலிலிருந்து எள்ளி ஹவுஸ் நீர்த்தேக்கம் வரை உப பாகங்களுடன் கூடியதாக 9 கி.மீ. DI குழாய்களை (1200 மி.மீ. விட்டம்) வழங்குதல் மற்றும் இடுதல் (ICB 04), அம்பத்தலை உற்பத்தி வசதிகளின் நம்பகத்தன்மை மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்பு (ICB 05) மற்றும் தே.நீ.வ.வ.ச. யின் மேற்கு உற்பத்திக்கான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை விநியோகித்தல் (ICB 06).

முக்கியமாக, பிரதான அனுப்பல் குழாய்களின் உயர்ந்தளவு உராய்வின் காரணமாக ஏற்படுகின்ற மின்சக்தி இழப்பை குறைப்பதற்காக நீர் அனுப்பல் முறைமையை மேம்படுத்துவதன் மூலம் அம்பதலையின் நீர் வழங்கல் முறைமையிலிருந்து நுகர்வு செய்யப்படுகின்ற வலுசக்தியை சேமித்தல், வடிகட்டி மீண்டும் கழுவி மீட்கின்ற முறைமையை நிர்மாணித்தல், உயர் வேலைச் செயல்திறன் கொண்ட பம்பிகளை அறிமுகம் செய்தல் மற்றும் தொழிழற்பாட்ட செயல்திறனை மேம்படுத்துவதற்கான தன்னியக்க செயல் முறைமைளை தாபித்தல் ஆகியவற்றுக்காக இக் கருத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இந்த மேம்பாடுகள் முக்கியமாக 2040 இன் சனத்தொகையனரை இலக்கு வைத்துள்ளது.

மேலே உள்ள ஐந்து பொதிகளிலிருந்து, மூன்று பொதிகள் (DRCSC, ICB 03 & ICB 04) அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ICB 03 ஒப்பந்தத்தின் கீழ், இரண்டு காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன (நிலக்கீழ் நீர்த்தேக்கத்திற்கான IDH காணி, ஊக்குவிப்புப் பம்பி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான கொத்தட்டுவ / மொரகஸமுல்ல காணி). ICB 04 ஒப்பந்தத்தின் கீழ் குழாய் மற்றும் பொருத்துதல்களின் வழங்கலில் 50% நிறைவுசெய்யப்பட்டது.

எனினும், தேவையான உள்ளூர் நிதி கிடைக்காததால், ஒப்பந்தகாரர்களுக்கான டேவு ரூ ஏயுவு கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு உள்ளதோடு, ஒப்பந்தக்காரர்கள் செலுத்தப்படாத VAT & NBT க்கான வட்டியைக் கோரலாம். அது தவிர, ICB 04 ஒப்பந்தத்தின் கீழ் குழாய் மற்றும் பொருத்துதல்களை வழங்குவதற்கான 1வது சரக்குகளை வழங்குவதில் நீண்ட தாமதம் காணப்பட்டது. இது தேவையான ஒப்புதல்களை பெறுவதில் ஒப்பந்தகாரரின் தாமதத்தின் காரணமாகவும் தேவையான பெறுகை வேலைகளின் தாமதத்தின் காரணமாகவும் ஏற்பட்டது. எனவே, கருத்திட்டத்தின் முன்னேற்றம் அட்டவணைப்படுத்தப்பட்டதை விட பின்னால் உள்ளது.

கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் இலக்கிடப்பட்ட பௌதீக முன்னேற்றமான 26.94% இல் 7.70% ஆகும். ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் இலக்கிடப்பட்ட நிதிசார் முன்னேற்றமான 19.54% இல் 5.49% ஆகும்.

ஸ்பெயின அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்.

13. ஆனமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

இந்த கருத்திட்டம் ஸ்பெயினின் அரசாங்கத்தினாலும் இலங்கையின் ஹட்டன் நெஷனல் வங்கியினாலும் நிதியளிக்கப்படுகிறது. கருத்திட்டம் தே.நீ.வ.வ.ச.யின் கீழ் செயல்படுத்தப்படுவதோடு, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் பாதுகாப்பான குழாய் நீர் வழங்கல் வசதிகளை அதிகரிப்பதறகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. உத்தேச ஆனமடுவை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டமானது புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களின் தற்போது ஒரு மிதமான வரட்சிக் காலகட்டத்தில்கூட நீர் பற்றாக்குறை காரணமாக பாதிக்கப்படுகின்ற நிலநீர் வளத்தில் தங்கியிருக்கின்ற சுமார் 81,700 மக்களை உள்ளடக்கும். இக்கருத்திட்டம் ஆனமடுவ பிரதேச செயலாளர் பகுதி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் குடிநீர் பிரச்சினை குறித்து நிரந்தரமாக தீர்வு வழங்கும். இது கருத்திட்ட பிரதேசத்தினுள் சமூக அடிப்படையிலான அமைப்புகளால் நடத்தப்படும் திட்டங்களில் (CBOs) நீரின் தரம் சாந்த பிரச்சினைகளை அகற்றும் என்பதோடு உத்தேச திட்டத்தில் இருந்து மொத்தமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கலை அவர்களால் பெற முடியும்.

ஆனமடுவை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டமானது, இன்கிமிட்டிய நீர்த்தேக்கத்தில் நாளொன்றுக்கு 12,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட ஒரு புதிய உள்வாங்கு நிலையத்தை நிர்மாணித்தல், கழிவு நீர் சுத்திகரிப்பு உள்ளடங்கியதாக நாளொன்றுக்கு 11,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நவீன முழுச் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 1 கி.மீ. நீளமுள்ள சுத்திகரிக்கப்படாத பிரதான நீர்க் குழாய். 61 கி.மீ. நீளமுள்ள தெளிவான நீர் அனுப்பல் குழாய், 1,500 க.மீ., 1000 க.மீ., 300 க.மீ. கொள்ளளவுகளுடன் கூடிய சேவை நீர் கோபுரங்கள் மற்றும் அனைத்து மின்மயமான உபகரணங்கள் உட்பட 328 கி.மீ. நீளமுள்ள விநியோக முறைமை ஆகியவற்றை உத்தேச ஆனுமடுவை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் உள்ளடக்குகின்றது. புவித்தொழில்நுட்ப மற்றும் நீரியல் ஆய்வுகளுடன் கூடிய அனுப்பல் மற்றும் விநியோக முறைகளின் விரிவான வடிவமைப்பு கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்டது. நவகத்தேகம மற்றும் கொட்டவெஹர விநியோக வலையமைப்பு முடிவடைந்துள்ளது. கொட்டவெஹர கோபுரத்தின் விரிவான வடிவமைப்பு முடிவடைந்துள்ளதோடு நிர்மாணிப்பு ஏற்கனவே தொடங்கியுள்ளது. 2017.12.31 அன்று கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் ஒட்டுமொத்த முன்னேற்றம் முறையே 17% மற்றும் 21.9% ஆகும்.

கொட்டவெஹர நீர் கோபுர அமைவிடம்

கிரடிற் எக்ரிகோல் கோபரேட் மற்றும் சர்வதேச ப்ராங்க் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்

14. களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 2

களனி வலது கரை நீர் வழங்கல் திட்டம் கட்டம் - 2, வடிவமைத்து கட்டியெழுப்பும் ஒப்பந்தமாகும் என்பதோடு, அது 2017 சனவரி 23 இல் ஆரம்பிக்கப்பட்டது. நிதியளிப்பு நிறுவனங்கள் கிரடிற் எக்ரிகோல் கோபரேட் மற்றும் சர்வதேச ∴ப்ராங்க் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி மற்றும் இலங்கை அரசாங்க திறைசேரி ஆகியனவாகும். கருத்திட்ட செலவு ரூபா 32,700 மில்லியனாகும். இந்த கருத்திட்டத்தின் பரப்பெல்லையானது, விசாரணை, வடிவமைப்பு, செயற்படுத்தல் மற்றும் நாளொன்றுக்கு 180,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிறைவு செய்தல், குடிநீர் அனுப்பல் பிரதான குழாயை இடுதல் மற்றும் வலையமைப்பாக்கல், சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு உள்வாங்கப்படும் ஆற்று நீரின் தரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மேலும், இந்த கருத்திட்டம் சாத்தியவளக் கற்கைக்கும் மற்றும் கேகாலை மாவட்டத்திலுள்ள உத்தேச வீ ஓயா நீர்த் தேக்கதத்தின் EIA க்கான நிதியையும் வழங்குகிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை 120,000 புதிய நீர் இணைப்புடன் 1,750,000 ஆகும். சுத்திகரிக்கப்பட்ட நீர் களனி, கடவத்த, மஹர, வத்தளை, பேலியகொட, றாகம, பியகம, வெலிசர, கந்தான, ஜாஎல, பமுனுகம, ஏக்கல மற்றும் கட்டுநாயக்க ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்படும். கருத்திட்டப் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டதுடன், வேலைகள் நடைபெற்று வருகின்றன. வடிவமைப்பு வேலைகள், கட்டுமானத் தயாரித்தல் வரைபடங்கள், மண் பரிசோதனைகள், காணிகளை கையகப்படுத்துதல், DI / PE குழாய்களின் வழங்கல் மற்றும் உருக்கு குழாய்களின் கட்டுமானம் ஆகியன நடைபெற்று வருகின்றன. DI / PE குழாய்களின் ஒரு பகுதி ஏற்கனவே தளங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் DI குழாய்களை இடுதல் ஆரம்பிக்கப்பட்டது.

2017 இறுதியில் பௌதீக முன்னேற்றம் 13% ஆகுமென்பதோடு, திட்டமிட்ட பௌதீக முன்னேற்றம் 15% ஆகும். ஒப்பந்ததாரர் 4 இடைக்கால கொடுப்பனவுகளை சமர்ப்பித்துள்ளார் என்பதோடு, கொடுப்பனவுத் தொகை ஏற்கனவே ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அடைந்துள்ள நிதிசார் முன்னேற்றம் 31.84% ஆகும் என்பதோடு திட்டமிட்ட நிதிசார் முன்னேற்றம் 31.04% ஆகும்.

NDB உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டம்

15. மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் கருத்திட்டம்

கருத்திட்டம் 2017 ஒக்டோபர் 11 ஆம் அன்று தொடங்கியது. குறிக்கோள் யதெனில், மாத்தறை மாவட்டத்திலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் உத்தேச சேவைப் பிரதேசத்தில் பயனுள்ள மற்றும் நிலைபேறான நீர் பயன்பாட்டினை அடைய சேவை மட்டத்தையும், சேவையின் உள்ளடக்கத்தையும் அதிகரிக்கச் செய்தலாகும்.

கருத்திட்டத்தின் மொத்த உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 60,000 க.மீ. ஆகும். நாளொன்றுக்கு 60,000 க.மீ. நீரை வழங்குவதற்குத் தேவையான, சுத்திகரிப்புப் பொறித்தொகுதி தவிர்ந்த குழாய்கள் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்புகளும் நிர்மாணிக்கப்படுமெனினும், இக்கட்டத்தின் கீழான சுத்திகரிப்புக் கொள்ளளவு நாளொன்றுக்கு 30,000 க.மீ. ஆகும். தற்போதுள்ள மாத்தறை - மிரிஸ்ஸ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் தற்போதைய சேவை உள்ளடக்கமானது 284,808 மக்கள் தொகையாகும் என்பதோடு, புதிய கருத்திட்டமானது 2046 ஆம் ஆண்டில் மாத்தறை, திஹாகொட, தெவிநுவர, திக்வெல்ல, வெலிகம, வெலிபிட்டிய, மாலிம்பட, கம்புறுபிட்டிய, கிரிந்த-புஹுல்வெல்ல, அதுறலியா, பெலியத்த மற்றும் தங்காலை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 285,000 மக்கள் தொகையை உள்ளடக்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நில்வலா நதி இந்த திட்டத்தின் ஒரு மூலாதாரமாக விளங்குகிறது. கட்டுவன்கொடவிலுள்ள உள்வாங்கு நிலையம் (நாளொன்றுக்கு 66,000 க.மீ.), கட்டுவன்கொடவிலுள்ள சுத்திகரிப்புப் பொறித்தொகுதி (நாளொன்றுக்கு 30,000 க.மீ.), மூல நீர்க் குழாய் (அண்ணளவாக) - 300 மீ., பிரதான அனுப்பல் குழாய் (அண்ணளவாக) 78 கி.மீ., விநியோக முறைமை (அண்ணளவாக) 200 கி.மீ., மாலிம்பட, கல்கடிய, யட்டியன, தண்தெனிய, கொடகஹகந்த மற்றும் மிரிவிஸ்வத்தவில் 06 நில நீர்த் தேக்கங்கள்.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 18,208 மில்லியன் (வெளிநாட்டு - ரூ 14,000 மில்லியன் மற்றும் உள்ளூர் - ரூ .4,208 மில்லியன்) மற்றும் கருத்திட்டத்தின் ஒப்பந்த காலம் 36 மாதங்கள் ஆகும் (90 நாட்கள் தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பு காலம தவிர்ந்த). சபையின் ஒதுக்கீடு ரூ. 4,208 மில்லியன் முடிவு செய்யப்படவில்லை என்பதோடு, நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான காணி மற்றும் பிற கையகப்படுத்தல் நடைமுறை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அமைச்சரும் அரச உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர்

மாத்தறை கட்டடத்தின கட்டம் IV நீர் வழங்கல் திட்டம் 2017.08.06 ஆம் திகதி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் கௌரவ அமைச்சரினதும் ஏனைய மதிப்புக்குரிய விருந்தினர்களினதும் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்ட ஊழியர்கள் குறைந்தபட்சம் தேவையான பணியாளர்களுடன் நிறுவப்பட்டது (கருத்திட்ட பணிப்பாளர், மூன்று தலைமை பொறியாளர்கள், இரண்டு பொறியாளர்கள், செயலாளர் மற்றும் ஆறு பொறியியல் உதவியாளர்கள்). ஆரம்ப வடிவமைப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு விரிவான வடிவமைப்பு மீளாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

கடன் ஒப்பந்தம் உள்ளூர் வங்கியுடன் (NDB) கையெழுத்திட்டது, ஒப்பந்த உடன்படிக்கையில் கையெழுத்திடப்பட்டதோடு 2017.10.11 ஆம் திகதி முற்பணம் செலுத்தப்பட்டது.

இந்தியா எக்சீம் வங்கி மற்றும் இலங்கை வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

16. அளுத்கம, மத்துகம, அகலவத்த

இந்த கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் யாவையெனில், கெத்ஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் உற்பத்திக் கொள்ளளவை விஸ்தரிப்பதன் மூலம் மத்துகம, தொடங்கொட, களுத்துறை, பேருவளை, அகலவத்த மற்றும் மதுராவல பிரதேச செயலாளர் பிரிவுகளின் 269 கிராம அலுவலர் பிரிவுகளில் அதிகரித்துவரும் நீருக்கான தேவைகளை பூர்த்தி செய்ய பாதுகாப்பான குடிநீர் வசதிகளை வழங்குதலும் தற்போதைய உப்புத்தன்மை ஊடுருவல் சிக்கலைத் தணிப்பதுமாகும்.

இந்த கருத்திட்டத்திற்கு இந்தியாவின் எக்சீம் வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் நிதியளிக்கின்றது. மொத்த மதிப்பீட்டு செலவு ரூபா 32,278 மில்லியனாகும். இதில் ரூபா 24,285 மில்லியன் இந்தியாவின் எக்சீம் வங்கியில் இருந்தும் ரூபா 4,286 மில்லியன் இலங்கை வங்கியிலிருந்தும் மற்றும் ரூபா 3,707 மில்லியன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பாகவும் உள்ளது.

இந்த கருத்திட்டம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் அமுல்படுத்தப்படுகிறது.

இந்த கருத்திட்டம் 32,000 புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்கும் 2030 ஆம் ஆண்டில் 573,000 பயனாளிகளுக்கு மேம்படுத்தப்பட்ட சேவை வசதிகளை வழங்குவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் முக்கியமான ஆக்கக்கூறுகள், கொளமோதரவில் புதிய உள்வாங்கு நிலைய கட்டுமானம், கொட்டஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான மூல நீர் அனுப்பல் முறைமை, தெபுவன உள்வாங்கு நிலையம் மற்றும் கெத்ஹேனவில் தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை 3 ஆபுனு கொள்ளளவுடன் கூடிய புதிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியாக புனரமைப்பு செய்தல், நீர்த்தேக்கங்கள் (மத்துகம -2,000 க.மீ, தொடங்கொட - 1,500 க.மீ.), நீர் கோபுரங்கள் (நேபொட - 600 க.மீ., மத்துகம கந்த - 225 க.மீ. மற்றும் அகலவத்த - 600 க.மீ.), DI/PE அனுப்பல் பிரதான குழாய் 58 கி.மீ. (800/300 மி.மீ. விட்டம்), விநியோக முறைமை (260 கி.மீ.), அலுவலகங்கள் மற்றும் ஊழியர் விடுதிகள் மற்றும் முழுமையான தன்னியக்கத்துடனான SCADA முறைமை ஆகியன.

இக்கருத்திட்டம் 2017.05.15 அன்று தொடங்கப்பட்டதோடு 2020.05.14 இல் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2017.12.31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 8.5% மற்றும் 26.59% ஆகும்.

ஹீகெத்ஹேனவில் இருப்பிலுள்ள தெளிவாக்கித் தாங்கியின் புனரமைப்பு

பிரான்சுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

17. மாத்தளை பெரும்பாக கருத்திட்டம்

மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் 2017 ஏப்ரல் 17இல் வேலைகளை ஆரம்பித்தது. 2017 ஆம் ஆண்டில் 08 மாத காலங்களாக கருத்திட்டம் வடிவமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சென்றதோடு, கட்டுமான பணிகள் 2018 ஆம் ஆண்டு துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கருத்திட்டத்தில் மாத்தளை மாவட்டத்தினுள் ஐந்து சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள் மற்றும் ஐந்து உள்வாங்கு நிலையங்களுடன் ஐந்து தனியான விநியோக அமைப்புகள் உள்ளன. மொத்த கருத்திட்டமானது, மாத்தளை, ரத்தொட்ட, உக்குவெல, பல்லேபொல, யடவத்த மற்றும் நாவுல பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு பாதுகாப்பான குடிநீர் வழங்கலை எதிர்பார்க்கிறது. பிரதானமான ஒப்பந்தம் யூரோ 105,645,791 + ரூபா 8,210,959,043 (1 யூரோ ஸ்ரீ ரூபா 162.69 நாணய மாற்று விகிதத்தின்படி மொத்தம் யூரோ 156,115,758 க்கு சமன்) ஆகுமென்பதோடு, ஒப்பந்த காலம் 36 மாதங்கள் ஆகும். கருத்திட்டம் வடிவமைத்து கட்டியெழுப்பும் வகை ஒப்பந்தமாகும் என்பதோடு, ஆரம்ப வடிவமைப்பு தே.நீ.வ.வ.ச. யின் RSC (மத்திய) இன் பிரிவுத் திட்டமிடல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் ஒரு பகுதி இலங்கை அரசாங்க நிதியின் கீழ் செய்யப்பட வேண்டும் என்பதோடு, இதற்காக ரூபா 5,081 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அது ரூபா 14,500 மில்லியன் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

கருத்திட்ட முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது, இருப்பினும் விநியோக முறைமையின் வடிவமைப்பில் சிறிய தாமதம் காணப்படுகிறது. அனுப்பல் குழாய்களுக்கான குழாய்களின் விநியோகங்களின் பெறுகைகளை ஏற்கெனவே ஒப்பந்தக்காரர் தொடங்கிவிட்டார், அதே நேரத்தில் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் நிர்மாணிப்பு வேலைகளுக்கு உள்ளூர் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலைக் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

ஆண்டினுள் சிறப்பு நிகழ்ச்சிகளாக, கருத்திட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் கருத்திட்ட பணியாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. தேசிய வழிப்படுத்தல் குழுக் கூட்டம் நவம்பர் 26 இல் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சில் நடைபெற்றது. மகாவலி ஆற்றில் இருந்து பல இடங்களில் நீர் பெறுவதற்காகத் திட்டமிடப்பட்ட உத்தேச சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளில் நான்குக்கு. நீரை உள்ளீர்ப்பதற்கு, உத்தேச உள்வாங்கு நிலைய கட்டமைப்புக்கு MASL அங்கீகாரம் வழங்கப்பட்டது. ரத்தொட்ட நீர் வழங்கல் திட்டத்துக்கான உத்தேச உள்வாங்கு நிலையங்களாக உள்ள பம்பரகிஎல்ல மற்றும் வெரலுகஸ்தென்ன ஆகிய பிற நீர் மூலங்களிலிருந்து உள்ளீர்க்கப்படும் அளவு தொடர்பில் விவசாய அமைப்புகளுடனான பல பேச்சுவார்த்தைகளின் பின்னர் கமநல சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டது.

05 சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள், உள்வாங்கு நிலையங்கள், சேவை நீர்த் தேக்கங்கள், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றுக்கான உத்தேச 17 காணிகளில் 12 காணிகள் பொறுப்பேற்கும் கட்டத்தில் உள்ளதோடு, மற்றைய 05 காணிகளும், வடிவமைப்புக் கட்ட காலத்தினுள் அமைவிடங்கள் மாற்றமடைந்தமையின் காரணமாக இன்னமுமே கையகப்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ் காணப்படுகின்றன. RDA மற்றும் PRDA வீதிகளில் குழாய்களை இடுவதற்கு அங்கீகாரம் பெறுதல் நடைபெற்று வருகின்றது. புதிதாக காப்பட் இடப்பட்ட RDA வீதிகளுக்கு சேதம் ஏற்படுத்தப்படுதல் பற்றிய பிரச்சினை இன்னமுமே தீர்க்கப்படாதுள்ளதோடு, ஏனைய நிறுவனங்களால் பராமரிக்கப்படும் வீதிகளில் குழாய் இடுதல் தொடர்பில் அங்கீகாரம் பெறுதல் நடைபெற்று வருகின்றது.

இலங்கை அரசாங்க நிதிகள் கிடைக்காமை கருத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரிய பிரச்சினையாக காணப்படுகிறது. சில கொடுப்பனவுகள் தாமதமாகி உள்ளதோடு, இதன் காரணமாக அதே நிறுவனத்திலிருந்து மேலும் வேலைகளைப் பெறுதல் பிரச்சினையாக உள்ளது. இது கருத்திட்டம் தாமதமடைவதற்கு வழிவகுக்கிறது. VAT, சுங்கத் தீர்வைகள், RDA கட்டணம், சேறு நீக்க முறைமை, ஊழியர்கள் சம்பளம் முதலியன இந்த நிதியின் கீழ் வருகிறது.

கருத்திட்ட பணிப்பாளர், 02 தலைமை பொறியாளர்கள் மற்றும் ஒரு பொறியாளர் தவிர்ந்த எஞ்சியுள்ள ஊழியர்கள் தே.நீ.வ.வ.ச. க்கு வெளியே புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆளுனு சுற்றறிக்கை 2016 இன் படி ஆட்சேர்ப்பு நடைபெற்றதன் காரணமாக திறன் வாய்ந்த மற்றும் திறமையான ஊழியர்களைப் பெறுவதில் சிரமங்கள் எழுந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன.

உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

1. பெந்தோட்டை நீர் வழங்கல் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள், பெந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கொஸ்கொடையிலிருந்து பெந்தோட்டை பாலம் வரை காலி வீதி நெடுகிலும் 9 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் 22 கிராம அலுவலர் பிரிவுகளின் உப வீதிகளிலும் விநியோக குழாய்களை நீடிப்பதாகும். மதிப்பிடப்பட்ட கருத்திட்ட செலவு ரூபா 1,239 மில்லியனாகும். தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து நிதியிடப்படுகின்றது. கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக் கூறுகள், PVC/DI குழாய்கள், DI/CI வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்கல், PVC/DI குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களை இடுதல், பத்தேகமவில் நீர் பீச்சுக் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல், அம்பலாங்கொடையில் ஊக்குவிப்புப் பம்பிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஆகியனவாகும். கருத்திட்டம் 2014 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு அனைத்து வேலைகளும் 2017 ஒக்றோபரில் பூர்த்தியடைந்துள்ளது. இணைப்புகளை வழங்கும் பொருட்டு கருத்திட்டம் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் இணைப்புகளின் எண்ணிக்கை 4,500 ஆகுமென்பதோடு நலனபெறுனர்களின் எண்ணிக்கை 18,000 ஆகும்.

பத்தேகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் பீச்சுக் குழாய்களை பொருத்துதல்

2. காலி கொத்தணி நீர் வழங்கல் கருத்திட்டம்

கருத்திட்டமானது வெலிகம, ஊரகஸ்மன்சந்தி, கோனபீனுவல மற்றும் திக்கும்புர நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாட்டு வேலைகளை உள்ளடக்குகிறது. மதிப்பிடப்பட்ட கருத்திட்ட செலவு ரூபா 1,755 மில்லியனாகும். நிதியிடல் வக்கள் வங்கியிலிருந்தும் இலங்கை வங்கியிலிருந்துமாகும். பிரதானமான கருத்திட்ட ஆக்கக்கூறுகள் 4 திட்டங்களிலும் 93.5 கி.மீ. நீளத்துக்கு PVC/DI குழாய்கள், DI/CI வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், 89.7 கி.மீ. நீளத்திற்கு PVC/DI குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களை இடுதல் ஆகியனவாகும். ஊரகஸ்மன்சந்தி, கோனபீனுவல, கொவுல்ஹேன, வக்வெல்ல மற்றும் வெலிகமவில் பம்பிகளை பொருத்துதல், ஊரகஸ்மன்சந்தியில் 100 க.மீ. கொள்ளளவு கொண்ட நில நீர்த் தேக்கம் மற்றும் மேலுயர்த்தப்பட்ட பம்பி நிலையம், வெலிகமவில் 225 க.மீ. நில நீர்த்தேக்கம், பொறுப்பாளர் விடுதி மற்றும் பம்பி நிலையம் ஆகியன கருத்திட்டத்தின் ஏனைய ஆக்கக்கூறுகளாகும். இக்கருதத்திட்டம் மொத்தம் 55 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. எதிர்பார்க்கப்படும் இணைப்புகளின் எண்ணிக்கை 20,000 ஆகுமென்பதோடு நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 82,000 ஆகும். கருத்திட்டம் 2017 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 19% ஆகுமென்பதோடு நிதிசார் முன்னேற்றம் 18மூ ஆகும்.

3. அம்பாறை விநியோக வலையமைப்பு நீ.வ.க.

அம்பாறை கட்டம் 111 கருத்திட்டம் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு பிரதான ஆக்கக் கூறுகளின் நிர்மாணிப்பு 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. பிரதான ஆக்கக்கூறுகள் நாளொன்றுக்கு 27,000 க.மீ. கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் உள்வாங்கு நிலையம், நீர்த் தேக்கம் (ஹிமதுராவ 2,500 க.மீ., பரகஹகெலே, தடயந்தலாவ மற்றும் கொனாகொல்ல 1,600 க.மீ.) ஆகியவற்றை நிர்மாணித்தல், 100 கி.மீ. நீளத்திற்கு DI அனுப்பல் குழாய்களை வழங்கல் மற்றும் இடுதல், 698 கி.மீ. நீளத்திற்கு விநியோக வலையமைப்புக்கான PE குழாய்களை வழங்கல் ஆகும்.

எவ்வாறாயினும் தேவையான நிதியங்கள் கிடைக்காமையின் காரணமாக தேவையான விநியோக முறைமையை வழங்குதலும் இடுதலும் நடைபெறவில்லை. இப்பிரதேசத்தில் தேவைப்பாட்டைக் கொண்டுள்ள மக்களுக்கு 40,000 புதிய நீர் இணைப்புகளை வழங்குதல் கருத்திட்டத்தின் இறுதி முயற்சியாகும். ஆதலால் இலங்கையின் ஒருசில உள்நாட்டு வங்கிகளிலிருந்தான நிதியளிப்பின் கீழ் அம்பாறை விநியோக வலையமைப்பு நீர் வழங்கல் கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அம்பாறை விநியோக வலையமைப்பு கருத்திட்டத்தின் கீழ், 1,119.33 கி.மீ. விநியோக வலையமைப்பை நிர்மாணித்தல், 527 கி.மீ. நீளத்திற்கு PE குழாய்களை வழங்குதல், தேவையான பொருத்துகள் மற்றும் விசேடங்களை கீழே காட்டப்பட்டுள்ளவாறு

ஒருசில பொதிகளின் கீழ் ஏற்பாடு செய்தல் மற்றும் 10,000 + 2,000 வீட்டு இணைப்புகள் ஆகியவற்றை தே.நீ.வ.வ.ச. கையளித்துள்ளது.

பொதி ஏ - மொத்தம் 527 கி.மீ. நீளத்திற்கு HDPE குழாய்கள் மற்றும் பொருத்துகளை வழங்கல் மற்றும் விநியோகித்தல், DI/CI வால்வுகள், துணைப்பாகங்கள், பிரதான குழிஅறை மூடிகள் மற்றும் மேற்தல பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தலை உள்ளடக்கியுள்ளது.

பொதி பி - பாலக் கடவைகள், மதகுக் கடவைகள், வால்வு அறைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய சில கட்டமைப்புகள் உள்ளடங்கலாக பக்கிஎல்ல பிரதேசத்தில் 124 கி.மீ. நீளத்திற்கு மற்றும் கொனாகொல்ல பிரதேசத்தில் 218 கி.மீ. நீளத்திற்கு PE குழாய்கள், பொருத்துகள், விசேடங்கள், DI/CI வால்வுகள், மற்றும் துணைப்பாகங்களை இடுதலை உள்ளடக்கியுள்ளது.

பொதி சீ - பாலக் கடவைகள், மதகுக் கடவைகள், வால்வு அறைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய சில கட்டமைப்புகள் உள்ளடங்கலாக மொத்தம் 776 கி.மீ. நீளத்திற்கு PE குழாய்கள், பொருத்துகள், விசேடங்கள், DI/CI வால்வுகள், மற்றும் துணைப்பாகங்களை இடுதலை உள்ளடக்கியுள்ளது.

பொதி டீ - பரகஹகெலே, கொனாகொல்ல மற்றும் நாமல்ஓய பிரதேசத்தில் பண்டகசாலைகளுடன், தனி விடுதிகள், பணியாளர் விடுதிகள், முகாமையாளர் விடுதிகள், மாவட்ட பொறியியலாளர் விடுதிகள், பொறுப்பாளர் விடுதிகள், உஹன, தமன மற்றும் மத்திய முகாம் பிரதேசத்தில் நிலையப் பொறுப்பதிகாரி (O.I.C.) விடுதிகள் நிர்மாணிப்பதை உள்ளடக்கியுள்ளது.

அம்பாறை விநியோக வலையமைப்பு நீர் வழங்கல் கருத்திட்டமானது அட்டவணைப்படுத்தப்பட்டவாறு நடைபெற்று வருகின்றது. மெலதிக வேலைகள் தவிர்ந்த அனைத்து வேலைகளும் 2017 ஒக்றோபர் 31 ஆம் திகதி பூர்த்தியடைந்தது. திட்டத்தின் பிரகாரம் 10,000 + 2000 இணைப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

2017 க்கான நிதி ஒதுக்கீடு ரூபா 1,278.5 மில்லியனாகும் என்பதோடு, செலவு ரூபா 731.37 மில்லியனாகும். பௌதீக முன்னேற்றத்தின் அடைவு 99.6% ஆகும்.

OIC அலுவலகம் - பரகஹகெலே.

4. ருஹுனுபுர விநியோக நீ.வ.க.

சூரியவெவ, அம்பாந்தோட்டை, லுனுகம்வெஹர மற்றும் செவனகல பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய 24 கிராம அலுவலர் பிரிவுகளில் நீர் இணைப்புகளை மேம்படுத்தல் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். கருத்திட்டச் செலவு ரூபா 1,929.61 மில்லியனாகும் என்பதோடு கருத்திட்ட காலம் 2014 நவெம்பர் 20 ஆம் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலாகும். இலங்கையின் கெமர்ஷல் வங்கி நிதியளிப்பு வங்கியாகும். சூரியவெவ மற்றும் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் 15,630 இணைப்புகள் காணப்படுகின்றன. 63 மி.மீ. தொடக்கம் 255 மி.மீ. விட்டத்துடன் கூடியதாக 600 மற்றும் 1000 வகையினை சார்ந்த PVC குழாய்கள் 238 கி.மீ. நீளத்திற்கு இடுதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பௌதீக முன்னேற்றம் 99.97% ஆகவும் நிதிசார் முன்னற்றம் 53% ஆகவும் காணப்படுகின்றது.

பம்பி நிலையம்

5. கொழும்பு நகர நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் - கட்டம் 1

எதிர்கால அபிவிருத்தியை கருத்திற்கொண்டு, 2040 ஆம் ஆண்டுக்கான தேவையை நிறைவு செய்யும் பொருட்டு கொள்ளுப்பிட்டி, கோட்டை, காலி முகத்திடல், B.MH. விஜேவர்தன மாவத்தை, பொரளை மற்றும் கம்பனித் தெருவிலுள்ள தற்போதைய கொழும்பு நகர விநியோக முறைமையை மேம்படுத்துவதற்காக கொழும்பு நகர நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் கட்டம் 1 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ், அண்ணளவாக 6.1 கி.மீ. நீளத்திற்கு DI குழாய்களை இடுவதற்கும், ஆறு பாலக் கடவைகளைக் கட்டுதல் மற்றும் 3.6 கி.மீ. நீளத்திற்கு HDPE குழாய்களை இடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் மொத்தச் செலவு அமெரிக்க டொலர் 6.3 மில்லியன் மற்றும் ரூபாய் 1,948 மில்லியனாகும் என்பதோடு உள்நாட்டு வங்கி நிதியளிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். கருத்திட்டம் 2014 நவெம்பர் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2016 நவெம்பர் 19 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டு, 2017 செத்தெம்பர் இறுதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 100% ஆகவும் நிதிசார் முன்னேற்றம் 94.9மூ ஆகவும் உள்ளது. காமினி மண்டப சந்தியில் 132 முஏயு மின் கம்பிகளுக்குக் குறுக்காகச் செல்வதற்கு இலங்கை மின்சார சபை (CEB) ஆட்சேபனை தெரிவித்தமையின் காரணமாக கருத்திட்டம் தாமதமடைந்ததோடு, ஏற்படக்கூடிய கட்டுமான சிரமங்களை நீக்கும் பொருட்டு மாளிகாகந்த வால்வு நிலைய வளவில் அவர்களது கருத்திட்டத்துடன் சேர்த்து அதேநேரம் குழாய் இடும் வேலைகளையும் பூர்த்தி செய்வதற்கு PD (GCWRP) வேண்டுகோள் விடுத்தது.

6. கொழும்பு மாவட்ட கிழக்கு நகரங்கள் நீ.வ.க. – திட்டம் 1

ஹோமாகம, கடுவல, பாதுக்க, சீதாவக்க மற்றும் ஹொரன பிரதேச செயலாளர் பிரதேங்களின் மதிப்பிடப்பட்ட 373,000 மக்களுக்கு பாதுகாப்பான குழாய்வழி குடிநீர் வழங்குதல் இக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். மக்களுக்கு இந்நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் 91,000 க்கு மேற்பட்ட நீர் வழங்கல் இணைப்புகளை வழங்க உத்தேசமாயுள்ளது. கருத்திட்டமானது 03 ஒப்பந்தப் பொதிகளைக் கொண்டுள்ளதோடு, கருத்திட்டத்தின் பொதி 1, (பிரான அனுப்பல் குழாய் 4 கி.மீ. மற்றும் பிரதான விநியோக குழாய் 222 கி.மீ.) பொதி 2, (பிரான அனுப்பல் குழாய் 8 கி.மீ. மற்றும் பிரதான விநியோக குழாய் 10 கி.மீ. நில நீர்த் தேக்கம் - 18,000 கன மீற்றர் கொள்ளளவு மற்றும் கட்டிடங்கள்), பொதி 3 (பிரதான விநியோக குழாய் 400 கி.மீ. முற்றும் வீட்டு இணைப்புகள் 10,000) க்கான செலவு முறையே ரூபா 5,170 மில்லியன், ரூபா 4,823 மில்லியன் மற்றும் ரூபா 10,049 மில்லியன் ஆகும். 2017 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதமளவில் அனைத்து மூன்று ஒப்பந்தப் பொதிகளினதும் முன்னேற்றம் பல்வேறு மட்டங்களில் காணப்பட்டது.

ஒப்பந்தப் பொதி 1 இன் கீழ், 201 கி.மீ. நீளமான விநியோக குழாய்களும் 0.64 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்களும் இடப்பட்டிருந்தன. பௌதீக முன்னேற்றம் 87% ஆகுமென்பதோடு நிதிசார் முன்னேற்றம் 57% ஆகும். பொதி 2 க்கான ஒப்பந்தத்தில் 4.6 கி.மீ. நீளமான விநியோக குழாய்கள் மற்றும் 2.6 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்கள் இடப்பட்டுள்ள அதேவேளை, OIC கட்டடத்தின் நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தி நிலையை அடைந்துள்ளன. பொதி 2 இன் பௌதீக முன்னேற்றம் 23% ஆகுமென்பதோடு நிதிசார் முன்னேற்றம் 28% ஆகும். ஒப்பந்தப் பொதி 3 இன் கீழ் 321 கி.மீ. நீளத்துக்கான விநியோக குழாய்கள் இடப்பட்டிருந்ததோடு, பௌதீக முன்னேற்றம் 72% ஆகுமென்பதோடு. நிதிசார் முன்னேற்றம் 54% ஆகும்.

கொடகம சந்தியில் நீர் வழங்கலை நிறுத்தாது பராமரிப்பு (ரழவ வயீனை) செய்தல்

ஒப்பந்தப் பொதி 01 மற்றும் ஒப்பந்தப் பொதி 03 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், RDA அங்கீகாரத்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, பூர்த்தி செய்யப்படும் திகதி 2018 ஆம் ஆண்டு வரை பின்தள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பொதி 02 ஏற்கனவே தாமதமாகியுள்ளது. ஏனெனில், தளத்திலிருந்து குடியமர்ந்துள்ளவர்களை அகற்றுவதற்கு தாமதமாகியதன் காரணமாக நீர்த்தேக்க பிரதேசம் ஒப்பந்தகாரருக்கு 15 மாதங்கள் தாதமாகியே கையளிக்கப்பட்டது. ஒப்பந்த ஆவணத்தில் சில தெளிவற்ற நிலைமைகள் காணப்பட்டதோடு அவை மதிப்பீட்டுக் காலத்தினுள் உரியவாறு தீர்த்துவைக்கப்படவில்லை. ஆதலால் ஒப்பந்த நிர்வாகமானது சவால்மிக்கதாக அமைந்தது. மேலும், RDA மற்றும் PRDA வீதிகளில் பிரச்சினைகள் காரணமாக குழாய் இடுவதில் ஏற்பட்ட தாமதங்கள், தேவையான ஆளணியினரை அமர்த்துவதில் MSD அங்கீகாரத்துகாக காத்திருக்க வேடியிருந்தமை, நீர் கிடைப்பனவில் காணப்பட்ட சில வரையறைகளின் காரணமாக, தற்போதுள்ள பிரதான அனுப்பல் குழாய்களுக்கு பூர்த்தி செய்யப்பட்ட குழாய்களை இணைப்பதில் காணப்பட்ட பிரச்சினைகள், RDA அங்கீகாரத்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதங்கள், நீர்த்தேக்க பிரதேசத்திலிருந்து அத்துமீறிய குடியேற்றவாசிகளை அகற்றுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நீர்த்தேக்கத்தின் நிர்மாணிப்பில் ஏற்பட்ட தாமதம் மற்றும் வன பரிபாலனத் திணைக்களத்திலிருந்து அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டியிருந்தமை ஆகியன எதிர்நோக்கப்பட்ட ஏனைய பொதுப் பிரச்சினைகளாகும்.

PD யின் அனுமதியுடன் கருத்திட்டத்துக்கு குழுவாக செயற்படுவதற்கு விருப்பமுள்ள உரிய தகுதிவாய்ந்த பணியார்களை ஆட்சேர்த்தல் முதன்மையானதொரு தேவைப்பாடாகக் காணப்படுகின்றது. ருத்திட்டத்தில் இத்தேவைப்பாடு நிறைவு செய்யப்படவில்லை. மேலும், ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்கள் ஒழுங்காக தயாரிக்கப்படாவிடின் நிர்மாணிப்புக் கட்டத்தில் பாரிய அளவில் பிரச்சினைகள் எழலாம் என்பதற்கு இக்கருத்திட்டம் நல்லதொரு உதாரணமாகத் திகழ்கின்றது.

இத்தகைய அனைத்துத் தடைகளுக்கும் மத்தியில் பிரதான அனுப்பல் குழாயை 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதால், கிடைக்கத்தாக்கதாயுள்ள நீரை அனுப்பவதில் எதிர்நோக்கிய பிரச்சினை தீர்க்கப்படலாம்.

7. அவிசாவளை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் அவிசாவளை மற்றும் கொஸ்கம பிரதேசங்களில் நீர் குழாய் விநியோக முறைமையை மேம்படுத்தலாகும். P&P/DB/LBF/AVISSAWELLA/201/01 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் அவிசாவளை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் PVC/ DI குழாய்கள், பொருத்துகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் இடுதலுக்கும் ஏனைய வேலைகளுக்குமாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. (ரூபா 1,382.4 மில்லியன்). உள்நாட்டு வங்கி (LBF) நிதியம் நிதியிடல் மூலமாகும் என்பதோடு, கருத்திட்ட காலகட்டமானது ஆரம்பிக்கப்படும் நாளிலிருந்து கொஸ்கம உப கருத்திட்டத்துக்கு 12 மாதங்களும் அவிசாவளையின் அதே விடயத்துக்கு 18 மாதங்களுமாகும். கருத்திட்டம் உண்மையிலேயே ஆரம்பிக்கப்பட்ட திகதி 2016.06.01 ஆகும்.

இக்கருத்திட்டத்தின் கீழான வேலைகள் கொஸ்கம மற்றும் அவிசாவளை பிரதேசத்தில் 51 கி.மீ. (மொத்த நீளம் 2017 இல் திருத்தியமைக்கப்பட்டது) நீளமான விநியோக குழாய் முறைமையை வழங்குதல் மற்றும் இடுதல், கொஸ்கமவில் உள்வாங்கு நிலைய மேம்பாட்டு வேலைகள், அவிசாவளை வேலைத்தளத்தில் கட்டட நிர்மாணிப்பு மற்றும் புனரமைப்பு வேலைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 85.80% ஆகுமென்பதோடு நிதியியல் முன்னேற்றம் 45.29% ஆகும். கடனிலிருந்து செலவழிக்கப்பட்ட மொத்த தொகை ரூபா 626.1 மில்லியனாகும்.

குழாய்க் கடவை

8. கலகெதர/மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டம்

கலகெதர பிரதேச செயலாளர் பிரிவின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகள், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில் 23 கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் BOI, மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் 02 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கலாக கலகெதர, மாவத்தகம மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதற்காக தே.நீ.வ.வ.சபையினால் இக்கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 33,000 குடும்பங்களாகும் என்பதோடு கருத்திட்ட செலவு 3,126 மில்லியனாகும். உள்நாட்டு வங்கி நிதியளிப்பின் கீழ் (LBF) வரையறுக்கப்பட்ட DFCC வங்கியிலிருந்து நிதியளிக்கப்படுகிறது.

இக்கருத்திட்டத்தின் கீழ் கண்டி பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கட்டுகஸ்தொட்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து நாளொன்றுக்கு 5,000 க.மீ. சுத்திகரிக்கப்பட்ட நீர் திசைதிருப்பப்படும். இதில் நாளொன்றுக்கு 3,000 க.மீ. மாவத்தகம மற்றும் BOI உள்ளிட்ட சுற்றிலுமுள்ள பிரதேசத்துக்கு வழங்கப்படும் என்பதோடு மீதி நாளொன்றுக்கு 2,000 க.மீ. கலகெதர நீர் வழங்கல் திட்டத்துக்கு வழங்கப்படும்.

கருத்திட்ட ஆக்கக்கூறுகள் யாவையெனில், 27 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாயை (400 மி.மீ. - 800 மி.மீ. விட்டம் கொண்ட HDPE மற்றும் 250 மி.மீ. - 200 மி.மீ. விட்டம் கொண்ட DI) வழங்குதல் மற்றும் இடுதல், 113 கி.மீ. நீளம் கொண்ட (250 மி.மீ. - 63 மி.மீ. விட்டம்) PVC விநியோக முறைமையை வழங்குதல் மற்றும் இடுதல், மாவத்தகமவில் 1,000 க.மீ. நீர் கோபுரத்தை நிர்மாணித்தல், பில்லஸ்ஸவில் 450 க.மீ. நீர்த்தேக்கம், இரண்டு அழுத்தக் குறைப்புத் தாங்கிகள், அலுவலக கட்டடம் மற்றும் குளோரீனிடல் அறை ஆகியனவாகும்.

கருத்திட்டம் 2014.11.17 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2015.02.12 தொடக்கம் 2016.08.23 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் 2016.08.23 இல் கருத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதோடு 2018.06.12 இல் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது கருத்திட்டம் சிறந்த முறையில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. எவ்வாறாயினும் காணி கையப்படுத்தல் பூர்த்தியடையாதுள்ளதால் கருத்திட்டத்தின் ஒருசில விடயங்களை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாமற் போகலாம். நீர்த்தேக்க காணி மற்றும் OIC அலுவலகக் கட்டட காணி கையப்படுத்தல் தாமதமடைந்துள்ளது. விநியோக முறைமையின் குழாய் இடுதல் வேலைகள் 70% பூர்த்தியடைந்துள்ளதோடு, 1,000 க.மீ. உயர்த்தப்பட்ட நீர் கோபுரம் 71% பூர்த்தியடைந்துள்ளது.

HDPE/DI பிரதான அனுப்பல் குழாய்களை இடுதல் நடைபெற்று வருகின்றது. ஏறத்தாழ 40 கி.மீ. குழாய் நீடிப்புக்கான வேண்டுகோள் கிடைக்கப்பெற்றுள்ளது. ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 56.39% ஆகுமென்பதோடு நிதியியல் முன்னேற்றம் 41% ஆகும்.

9. லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம்

குழாய் பதித்தல் வேலைகள்

மொரகஹகந்த - களுகங்கை நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியமர்த்துவதற்காக வடிவமைக்கப்பட்ட லக்கல புதிய நகரத்துக்கு நீர் வழங்கல் வசதியை வழங்கும் பொருட்டு கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவின் 11 கிராம அலுவலர் பிரிவு உட்பட சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு சேவையாற்றவுள்ளது. 2036 ஆம் ஆண்டளவில் உள்ளடக்கப்படுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இக்கருத்திட்டம் 8,000 சேவை இணைப்புகளின் ஊடாக மொத்தம் 30,133 நலன்பெறுனர்களைக் கொண்டுள்ளது. கருத்திட்ட செலவு ரூபா 4,496 மில்லியனாகும் என்பதோடு, உள்ளூர் வங்கி நிதியத்தின் மூலம் (HNB) நிதியளிக்கப்படுகிறது. கருத்திட்டம் 2016.07.21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2018 யூலை 20 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. களுகங்கையின் கிளை ஆறான ரம்புக்கொழுவ நீரோட்டம் நீர் மூலமாகும். கருத்திட்டத்தின் பரப்பெல்லையானது, நாளொன்றுக்கு 4,250 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையமொன்று, நாளொன்றுக்கு 4,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 05 சேவை நீர்த் தேக்கங்கள் (கொள்ளளவு 200 க.மீ., 225 க.மீ. இரண்டு, 450 க.மீ. மற்றும் 600 க.மீ.), முறையே ஏறத்தாழ 23.5, கி.மீ., 17.5 கி.மீ. மற்றும் 190 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாய், பிரதான விநியோக குழாய் மற்றும் விநியோக முறைமை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக, நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம், விடுதிகள், ஆய்வுகூடம் களஞ்சியம் மற்றும் 3 பொறுப்பாளர் விடுதிகள் ஆகியவை இக்கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

நிர்மாணிப்பு வேலைகள் 2017 நவெம்பர் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது குழாய் பதித்தல், விடுதிள் மற்றும் அலுவலகத்தின் நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது.

பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக உள்வாங்கு நிலையம் மற்றும் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் அமைவிடங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டதோடு, அதற்கிணங்க மூல நீர் பிரதான குழாய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் பிரதான குழாய்கள் செல்லும் வழியும் மாற்றப்பட வேண்டி ஏற்பட்டது. இது வடிவமைப்பு வேலைகளில் குறிப்பிடத்தக்களவு தாமதத்தை ஏற்படுத்தியது. விடயப்பரப்பு மாற்றமடைந்ததன் காரணமாக இச் செயற்பாடுகள் மாற்றமடைதல் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அத்துடன் ரம்புக்கொழுவ உள்வாங்கு நிலையம் மற்றும் வெல்லாவல நீர்த் தேக்கத்துக்க தளத்துக்கான பிரவேசத்துக்கு வன பரிபாலனத் திணைக்களத்தின்/மகாவலி அதிகார சபையின் அங்கீகாரம் இன்னமுமே பெறப்பட வேண்டியுள்ளது. கருத்திட்டத்துக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் இன்னொரு பிரச்சினையாகும். கருத்திட்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் கிடைக்க வேண்டியுள்ளது.

நவெம்பர் மாதத்தில், ஏனைய தரப்பினர்கள், ஒப்பந்தகாரர், தே.நீ.வ.வ.ச. யின் பணியாளர்களின் பங்கேற்புடன் LNTWSP தொடர்பில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்று தம்புள்ளவில் நடாத்தப்பட்டது. கருத்திட்டத்தின் முழுமொத்த செலவு ரூபா 883 மில்லியனாகும். 2017 இறுதியில் ஒட்டுமொத்த

பௌதீக முன்னேற்றம் 17.5% ஆகுமென்பதோடு நிதியியல் முன்னேற்றம் 17.44% ஆகும்.

10. வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டம்

வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டமானது தேசிய அபிவிருத்தி வங்கிக் கடனுடன் கூடிய உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டமொன்றாகும் என்பதோடு, ஒப்பந்தத் தொகை ரூபா 3,580 மில்லியனாகும். கருத்திட்டம் 2016 ஆகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2018 யூலை 31 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டமானது மாத்தளை மாகாணதர்தின் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரதேசத்தில் நிலவுகின்ற நாட்பட்ட சிறுநீரக நோய்ப் பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கையாக அப் பிரதேசத்திற்கு நீர் வழங்கல் வசதியை வழங்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட்டது. ஹீன் கங்கையிலிருந்து நீர் உள்ளீர்க்கப்படும். 2034 ஆம் ஆண்டில் உள்ளடக்குவதற்கு இலக்கிடப்பட்ட சனத்தொகை 33,725 ஆகும். நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி நாளொன்றுக்கு 5,500 க.மீ. கொள்ளளவைக் கொண்டுள்ளது. நீர் இறைக்கப்பட்டு சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளுக்கு நீர் அனுப்பப்படும் என்பதால், மின் பொறியியல் சாதனங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல், பம்பிகள் மற்றும் அதற்கான துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஆகியனவும் கருத்திட்டத்தின் ஒரு பகுதியாகக் காணப்படும்.

நாளொன்றுக்கு 5,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 800 க.மீ. களஞ்சியத் தாங்கி, 225 க.மீ. கொண்ட 2 களஞ்சியத் தாங்கிகள், 100 க.மீ. கொண்ட களஞ்சியத் தாங்கி, 1 கி.மீ. நீளமான சுத்திகரிக்கப்படாத பிரதான நீர்க் குழாய், 18 கி.மீ. நீளமான தெளிந்த நீர் அனுப்பல் குழாய், 100 கி.மீ. நீளமான விநியோக குழாய்கள், ஒரு நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம், ஒரு இயக்குனர் விடுதி, ஒரு தனி மாடி பணியாளர் விடுதி மற்றும் ஒரு பொறுப்பாளர் விடுதி ஆகியன கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகளாகும்.

2017 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் கருத்திட்டத்தின் செலவு ரூபா 665 மில்லியனாகும் என்பதோடு, ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 12.8% மற்றும் 18.57% ஆகும்.

கருத்திட்ட பணிகளில் ஈடுபட்டுள்ள கருத்திட்ட பணியாளர்களுக்கும் RSC பணியாளர்களுக்கும், பிரதான பொறியியலாளர், பொறியியலாளர்கள் மற்றும் பொறியியல் உதவியாளர்கள் ஆகியோருக்கும் "நிர்மாணிப்புக் கருத்திட்ட முகாமைத்துவம்" தொடர்பில் 4 நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது.

நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் அமைவிடத்தில் சேறு கெட்டியாக்கலுக்காக R/F மற்றும் F/W க்களை பொருத்துதல்

ஆண்டினுள் எதிர்நோக்கிய பொதுப் பிரச்சினைகள் யாவையெனில், ஹீன்கங்க அணைக்கட்டிலிருந்து நீரைப் பகிர்ந்துகொள்ளல் தொடர்பில் வன பரிபாலனத் திணைக்கம் மற்றும் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து அனுமதியைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம், காணி கொள்ளல் தொடர்பில் வன பரிபாலனத் திணைக்களம் மற்றும் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து அனுமதியைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம், மேலும், அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் பட்டியல் கேள்விப்பத்திர உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்தமையால் ர்னீரு குழாய்கள் மற்றும் ஏனைய அனைத்துப் பொருட்களையும் பெறுவதில் தாமதம் ஏற்பட்டமை என்பனவாகும்.

11. எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்

இக்கருத்திட்டம், எட்டம்பிட்டிய, ஊவா மஹவெலகம, நெலுதண்ட தெஹிவின்ன, மலித்த, ஹின்னாரங்கொல்ல, நிலிஅத்துகொட, குடுமாஹ்வெல, நெலுவ, மாளிகாதென்ன, பல்லெகம, வெபஸ்ஸவெல, கட்டுகஹ, பஹமுனுதொட்ட, உடுகம ஆகியவற்றை உள்ளடக்கிய பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பிரதேசத்திலுள்ள 15,000 நலன்பெறுனர்களுக்கு நீர் வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. உமா ஒய நிலக்கீழ் நீர்த் தேக்கம் நீர் வளமாகும். சுத்திரிப்புப் பொறித்தொகுதிளின் கொள்ளளவு நாளொன்றுக்கு 3500 க.மீ. ஆகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 2,244 மில்லியன். 2017 இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 6% மற்றும் 15% ஆகும்.

ஊக்குவிப்புப் பம்பி நிலையம்

12. மெதிரிகிரிய விநியோகம் கட்டம் 11

மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியில் நீர் வழங்கல் விநியோக முறைமையை உள்ளடக்குவதற்காக உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டமொன்றாக மெதிரிகிரிய விநியோகம் கட்டம் 11 கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 2030 ஆம் ஆண்டளவில் மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் 31 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு 15,000 வீட்டு இணைப்புகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது 2016 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு 2018 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நிதியிடும் வங்கியாக இலங்கை வங்கி உள்ளதோடு ரூபா 1,500 மில்லியன் தொகையை நிதியிடுகின்றது.

ஒப்பந்தத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகள், பழைய நகர மற்றும் புதிய நகர விநியோக முறைமைக்கு PVC/DI குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் விசேடங்களை வழங்குதல் மற்றும் இடுதல் உட்பட மதிப்பாய்வு செய்தல் மற்றும் வடிவமைத்தல், கவுடுல்ல ஓயாவுக்கு குறுக்காக குழாய் பாலத்தை நிர்மாணித்தல் மற்றும் அலுவலகம் மற்றும் விடுதிகளை நிர்மாணித்தல் ஆகியனவாகும்.

கருத்திட்டத்தின் மொத்த குழாய் இடுதலின் நீளம் 243 கி.மீ. (பழைய நகர கோபுர விநியோக குழாய் - 14 கி.மீ., புதிய நகர உள்ளக விநியோக முறைமை – 102 கி.மீ. மற்றும் பழைய நகர உள்ளக விநியோக முறைமை – 127 கி.மீ.) ஆகும். 217 கி.மீ. களுக்கு குழாய் இடுதல் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 91% ஆகும். ஹிங்ரக்கொட – மெதிரிகிரிய வீதியில் வீதிக்கு குறுக்காக குழாய் இடுவதற்கு RDA அங்கீகாரத்தைப் பெறுவதில் மற்றும் DI குழாய்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமை காரணமாக குழாய் இடும் வேலைகள் தாமதமடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டு இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதியியல் முன்னேற்றம் 54%

ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட பிரிவுகளில் புதிய இணைப்புகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டதோடு, இது அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2017 திசெம்பர் 06 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. மேலும், குறைந்த வருமானம் பெறும் மற்றும் CKDu வினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5,000 இப்புகளை வழங்குவதற்காக CKDu தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு சனாதிபதி செயலணி ரூபா 45 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

13. 3.5 பில்லியன் கருத்திட்டம் (22 நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)

இக்கருத்திட்டம் உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், தற்போதுள்ள விநியோக முறைமைக்கு நீடிப்புகளை வழங்குதல் மற்றும் இடைநிரப்பல்களை மேற்கொள்வதன் மூலம் 11 RSC க்களில் (ஊவா, தெற்கு, வடக்கு, மேல் மத்தி, மேலட வடக்கு, மேல் தெற்கு, கிழக்கு, வடமேல், வடமத்திய, மத்திய, சப்பிரகமுவ) உள்ள இணைப்புகளின் எண்ணிக்கையை மேம்படுத்துவதாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 3.5 பில்லியனாகும் என்பதோடு,கருத்திட்டத்தின் இறுதியில் எதிர்பார்க்கப்படும் இணைப்புகளின் எண்ணிக்கை 33,250 ஆகும். கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2018 இல் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2017 திசெம்பரில் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 89% ஆகுமென்பதோடு நிதியியல் முன்னேற்றம் 61% ஆகும்.

இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு/ விரிவாக்கப்பட்டு வருகின்ற கருக்கிட்டங்களின் அமைவிட வரைபடம்



இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

1.) மத்திய மாகாணம்

இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்ற குண்டசாலை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், மாத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம், மாரஸ்ஸன நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் தலவாக்கலை/லிந்துல நீர் வழங்கல் கருத்திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் பணிகளை 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இக்கருத்திட்டங்களுக்கான உள்நாட்டு நிதியளிப்புகளின் ஒதுக்கீடுகள் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே மேற்படி கருத்திட்டங்களின் முன்னேற்றம் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்டவாறே உள்ளது.

2.) வடமத்திய மாகாணம்

2017 ஆம் ஆண்டு காலத்தினுள் வடமத்திய மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை.

3.) வட மாகாணம்

2017 ஆம் ஆண்டு காலத்தினுள் வட மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை.

4.) சப்பிரகமுவ மாகாணம்

i) எம்பிலிப்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்

இது நிந்தகம்பெலஸ்ஸ, எம்பிலிபிட்டிய, புதிய நகரம், பல்லெகம, உடகம, கலகெடியார, ஹல்மில்லகெட்டிய, யோதகம, கும்புகொடஆர, மொரகெட்டிய, ஹிங்குர, துங்கம, கெட்டகல்ஆர பிரதேசத்தின் 84,000 நலன்பெறுனர்களுக்கு சேவையாற்றுவதற்குக் கருதியுள்ள சுத்திகரிப்புப் பொறித் தொகுதியுடன் கூடியதான, தற்போதுள்ள திட்டத்தின் விரிவாக்கமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 607.89 மில்லியனாகும். உள்வாங்கு நிலையம், நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, நீர் கோபுரம், அலுவலக கட்டடம், விநியோக முறைமை ஆகியவற்றின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்துள்ளது. 2017 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 101% ஆகும். கருத்திட்டம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளதுடன், தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 3,630,067.00 செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ii) உடவளவை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 1 மற்றும் 11

இது தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் ஒரு விரிவாக்கமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 973.20 மில்லியன் ஆகும். கொலம்பகே ஆர, நிந்தகம்பெலஸ்ஸ, ரஞ்சாமடம, திம்புல்கெட்டிய, உடவளவ, யாய 2, அந்தழுவ, மடுவன்வெல, பனஹதூவ, ரத்கரவ்வ, கங்கயாய, சன்கபால, மிரிஸ்வெல்பொத்த, மஹகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 62,500 பேர் மொத்த நலன்பெறுனர்களாவர். வேலைகளின் ஆரம்ப விடயப்பரப்பு பூர்த்தியடைந்துள்ளது. 2017 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 75% ஆகும். கருத்திட்டம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளதுடன், தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 461,318.00 செலுத்தப்பட வேண்டியுள்ளது.

iii) கொடகவல நீர் வழங்கல் கருத்திட்டம்

இது கொடகவல, கலஹிட்டிய, மாசிம்புல மற்றும் சுற்றுபுறத்திலுள்ள பிரதேசங்கள், எல்பிட்டிய, பலவின்ன கிழக்கு, கொடகவெல வராயாய, பல்வின்ன மேற்கு, பல்வின்ன வடக்கு, கோம்பிட்டிய, மாவத்தலந்த, மெத்தேகம, ரிதிவிட்ட, தம்பவின்ன, கபுஹேன்தென்ன, பலவின்ன கிழக்கு, மாவத்தலந்த, மல்வத்த ஆகிய பிரதேசங்களின் 22,500 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதியுள்ள ஒரு புதிய கருத்திட்டமாகும். நாளொன்றுக்கு 4,500 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் முழுமையான சுத்திகரிப்பைக் கொண்ட இதன் நீர் வளம் ரக்வான கங்கை ஆகும். நீர் உள்வாங்கு நிலையம், நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, களஞ்சியத் தாங்கி மற்றும் விநியோக முறைமை ஆகியன பூர்த்தியடைந்துள்ளன. மூல விடயப்பரப்பு பூர்த்தியடைந்துள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 288.80 மில்லியனாகும். 2017 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் 100% ஆகும். கருத்திட்டம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளதுடன், தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 575,700.00 செலுத்தப்பட வேண்டியுள்ளது.

iv) கலிகமுவ நீர் வழங்கல் கருத்திட்டம்

இலங்கை அரசாங்க நிதியளிப்பின் கீழான கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் இவ்வாண்டினுள் நிறுத்தப்பட்டுள்ளது. குழாய் இடல்களின் ஒப்பந்த நடைமுறைப்படுத்தலுக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ள மீதிக் கொடுப்பனவான ரூபா 0.84 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட வேண்டியுள்ளதோடு, கருத்திட்டத்தை உலக வங்கி நிதியளிப்பின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு மாற்றப்பட்டுள்ளது.

v) நிவித்திகல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தின் வட்டபொத, சிதுருபிட்டிய, துத்திரிபிட்டிய, ஹல்கந்தலிய, நிவித்திகல, யக்தெஹிவத்த ஆகிய பிரதேசங்களிலுள்ள 6000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 153.4 மில்லியனாகும். திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. காணிப் பிரச்சினை காரணமாக அலுவலக கட்டடத்தின் நிர்மாணிப்பு கைவிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 68% ஆகும். கருத்திட்டம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளதுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 236,850.00 செலுத்தப்பட வேண்டியுள்ளது.

vi) பெல்மடுல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டம் மூலம் பெல்மடுல்ல பிரதேசத்திலுள்ள இஹல போப்பிட்டிய, பெல்மடுலுகம, பெல்மடுல்ல நகரம், பஹல போபிட்டிய, கூட்டபிட்டிய, கனேகம, கொடகம, ரில்ஹேன, உடதுல, தெனவக்க, உடகட, பனாவென்ன பொரள, மொரதொட்ட, நுகவெல கிழக்கு, நுகவெல மேற்கு, கட்டங்கே, கொடகெதன, வெல்லந்துர, யாஇன்ன மற்றும் நாரன்கொட பிரதேசத்தின் 22,500 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 421.09 மில்லியனாகும். 2017 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 98% ஆகும். விடயப்பரப்பின் மூல வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. கருத்திட்டம்

கையளிக்கப்பட்டுள்ளதுடன், தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 359,472.00 செலுத்தப்பட வேண்டியுள்ளது.

vii) கிரிஎல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டத்தின் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தின் இடன்கொட மற்றும் கிரிஎல்ல பிரதேசத்தின் 8,000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 205 மில்லியனாகும். இக் கருத்திட்டத்தின் கட்டம் 1 பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 100% (கட்டம் 1) மற்றும் 25% ஆகும். கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 680,723.00 செலுத்தப்பட வேண்டியுள்ளது.

viii) மாதொல நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டமானது அவிசாவளை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் விகும்சிங்ஹகம கிராம அலுவலர் பிரிவின் மாதொலவுக்கு குழாய் நீரை வழங்குகின்றது. கருத்திட்ட நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 4,000 ஆகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 132 மில்லியனாகும். ராஜசேவக கம்மானயவுக்கான விநியோக நீடிப்பின்றி கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது (நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக). 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 82% மற்றும் 58% ஆகும். கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகையான ரூபா 1,147.878.00 செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ix) மாவனல்லை நீர் வழங்கல் கருத்திட்டம்

மாவனல்லை நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கமானது அழுத்தப் பொறி, துரித மணல் வடிகட்டல், பம்பி நிலையம் ஆகியவற்றின் நிர்மாணிப்பு, உள்வாங்கு நிலைய பம்பிகள் மற்றும் மேலுயர்த்தப்பட்ட பம்பிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஆகியவற்றை பூர்த்தி செய்கின்ற வகையில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய தற்போதுள்ள நாளொன்றுக்கு 9,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித் தொகுதி நாளொன்றுக்கு 5,500 க.மீ. கொள்ளளவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இறுதிக் கட்டணப்பட்டியல்களும் தடுத்துவைக்கப்பட்ட ரூபா 1.6 மில்லியனும் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

x) பதலங்கல நீர் வழங்கல் திட்டம்

இப் புதிய கருத்திட்டத்தின் மூலம் பதலங்கல பிரதேசத்தின் 10,000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு கருதப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 609.05 மில்லியனாகும். கருத்திட்ட ஆக்கக்கூறுகள், பம்பி நிலையம் மற்றும் 100 க.மீ. நீர் கோபுரத்தை நிர்மாணித்தல், விநியோக முறைமையை வழங்கல் மற்றும் இடுதல், பிரதான பம்பிக் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல், ஆரூநு கருவிகளுடன் பம்பிகளை வழங்குதல் ஆகியனவாகும். ஆக்கக்கூறுகளின் முதல் மூன்று பகுதிகளும் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் என்பதோடு, ஏனைய இரண்டு ஆக்கக்கூறுகளும் தே.நீ.வ.வ.ச. யினால் பூர்த்தி செய்யப்படும். தே.நீ.வ.வ.ச. யின் பகுதியின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 185.7 மில்லியனாகும். பிரதான பம்பிக் குழாய்களின் வழங்கல் மற்றும் இடுதல் நடைபெற்று வருவதோடு, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 45% மற்றும் 20% ஆகும்.

5.) தென் மாகாணம்

i) பத்தேகம நீர் வழங்கல் திட்டம்

பத்தேகம நீர் வழங்கல் திட்டமானது பத்தேகம மற்றும் சுற்றுப்புறங்களுக்கான விநியோக மேம்பாட்டுக்காக 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டமானது இப்பிரதேசத்தில் PVC குழாய்கள் / DI குழாய்கள் / PE குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதலை உள்ளடக்குகின்றது. தற்போது வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதோடு நிதிசார் முன்னேற்றம் 85% ஆகும். கருத்திட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 441 மில்லியனாகும். எதிர்பார்க்கப்படும் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 33,800 ஆகும்.

ii) சிதுல்பவ்வ நீர் வழங்கல் திட்டம்

சித்துல்பவ்வ நீர் வழங்கல் திட்டமானது, உள்வாங்கு கிணறு, தொட்டி அறை, பம்பி நிலைய கட்டுப்பாட்டு அறை மற்றும் 25 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர்த் தேக்கம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கும் தாழ் உயர்த்திப் பம்பி, மேல் உயர்த்திப் பம்பி, பின்நோக்கி நீர் பாய்ச்சும் பம்பி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் பொருத்துவதையும், தொழிற்பாட்டுக் கட்டடம் மற்றும் அதுசார்ந்த வேலைகளின் நிர்மாணிப்பையும் உள்ளடக்குகின்றது. நாளொன்றுக்கு 500 க.மீ. உற்பத்திக் கொள்ளளவைக் கொண்ட இக்கருத்திட்டத்தின் மூலம் சிதுல்பவ்வ ஆலயம் மற்றும் 10,000 யாத்திரிகர்களுக்கு சேவையாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்பாட்டுக் கட்டடம் தவிர்ந்த அனைத்து வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன. கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபா 116 மில்லியனாகும். ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 85% மற்றும் 65% ஆகும்.

iii) திஸ்ஸமகாராம நீர் வழங்கல் திட்டம்

திஸ்ஸமகாராம நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் மத்திப்பிடப்பட்ட செலவு ரூபா 393 மில்லியனாகும். கருத்திட்டத்தின் முதலாவது கட்டம் திஸ்ஸமகாராம நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாட்டை உள்ளடக்கியுள்ளதோடு, ஒப்பந்தம் ரூபா 113 மில்லியனுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கருத்திட்டமானது, காற்றூட்டல் கருவி, வண்டல் படிவத் தாங்கி, இரசாயன கூடம் மற்றும் தொழிற்படுத்தல் கட்டடம் ஆகியவற்றின் நிர்மாணிப்பை உள்ளடக்கியாக உள்ளது. எதிர்பார்க்கப்படும் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 10,000 ஆகும். கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 9% ஆகுமென்பதோடு கருத்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் 18% ஆகும்.

iv) அந்தரகஸ்யாய நீர் வழங்கல் திட்டம்

அந்தரகஸ்யாய மற்றும் பண்டாகிரிய பிரதேசங்களுக்கு சேவையாற்றுதல் திட்டத்தின் குறிக்கோளாகும். அந்தரகஸ்யாய நீர் வழங்கல் திட்டமானது, DI குழாய் பொருத்தல்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தலையும் DI குழாய் பொருத்தல்களை இடுதலையும் உள்ளடக்கியுள்ளது. நீர் மட்ட கண்காணிப்பு முறைமை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், குழாய்களின் வழங்கல் 75% மற்றும் குழாய்களை இடுதல் 24% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 214 மில்லியனாகும் எனினும் ஒப்பந்த கடப்பாட்டுச் செலவு ரூபா 66 மில்லியனாகும். கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

44% ஆகுமென்பதோடு நிதிசார் முன்னேற்றம் 45% ஆகும்.

v) **பலாபொத்த நீர் வழங்கல் திட்டம்**

பலாபொத்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பிரதான பம்பிக் குழாய்களை இடுதல் எதிர்பார்க்கப்படுவதோடு, இப்பணிகள் பலாபொத்த நீர் வழங்கல் திட்டத்தின் DI குழாய்கள் மற்றும் பொருத்தல்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல், DI குழாய்கள், பொருத்துகள் மற்றும் துணைப்பாகங்களை இடுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. DI குழாய்ககளை வழங்குதல் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, குழாய் இடுதல் நடைபெற்று வருகின்றது. ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 8% ஆகுமென்பதோடு ஒப்பந்தத்தின் நிதிசார் முன்னேற்றம் 20% ஆகும்.

6.) ஊவா மாகாணம்

2017 ஆம் ஆண்டு காலத்தினுள் ஊவா மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை.

7.) மேல் மாகாணம்

மேல் வடக்கு, மேல் மத்தி மற்றும் மேல் தெற்கு

2017 ஆம் ஆண்டினுள் மேல் வடக்கு, மேல் மத்தி மற்றும் மேல் தெற்கு மாகாணங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை.

8.) கிழக்கு மாகாணம்

கந்தளாய் (அக்போபுர) நீர் வழங்கல் கருத்திட்டம் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டு காலத்தினுள் ரூபா 29.0 மில்லியன் செலவில் மடகம, தலஸஸ்வெவ, பெரமடுவ கிராமங்களுகான மேலதிக குழாய் நீடிப்புகள் பொறுப்பேற்கப்பட்டு 2017 இல் பூர்த்தி செய்யப்பட்டது. வான்எல நீர் வழங்கல் திட்டத்தின் குழாய் இடும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நேரடி பம்பி செய்தல் ஊடாக நீர் வழங்கல் நடைபெற்று வருகின்றது. மட்டக்களப்பு பிராந்தியத்தில் இருதயபுரம், செங்கலடி மற்றும் ஏறாவூர் பிரதேசங்களுக்கான 7.0 கி.மீ. குழாய் நீடிப்பு ரூபா 12.0 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

9.) வடமேல் மாகாணம்

2017 ஆம் ஆண்டினுள் வடமேல் மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை.

குழாய்வழிக் கருத்திட்டங்கள் (நீ.வ.க.)

1. கிரம கட்டுவன நீர் வழங்கல் கருத்திட்டம்

கிரம மற்றும் கட்டுவன பிரதேசங்களில் வசிக்கின்ற மக்களுக்கு பாதுகாப்பானதும் நம்பகத்தன்மையுடன் கூடியதுமான குடிநீர் வழங்கலை மேம்படுத்தல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். தற்போது கட்டுவன பிரதேசத்தில் நெபிலிதொல, பீரிதெனிய தொல மற்றும் எதவலகந்த தொல ஆகிய நீரூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஈர்ப்புவிசைக் குழாய் நீர் வழங்கல் திட்டமொன்று காணப்படுகின்றது. தற்போதுள்ள கட்டுவன நீர் வழங்கல் திட்டத்தில் 976 வீட்டு இணைப்புகளும், 58 வர்த்தக ரீதியிலான இணைப்புகளும் உள்ளன. அதேபோன்று, கிரம பிரதேசத்தில் ரம்பலேகந்த தொல எனப்படும் நீரூற்றை அடிப்படையாகக் கொண்ட தற்போதுள்ள ஈர்ப்புவிசைக் குழாய் நீர் வழங்கல் திட்டத்தில் 497 வீட்டு இணைப்புகளும் 31 வர்த்தக ரீதியிலான இணைப்புகளும் காணப்படுகின்றன. உத்தேச நீர் வழங்கல் திட்டத்துக்கான மேலதிக நீர் வளமாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள கெகிரியோபட நீர்த் தேக்கத்தை பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. கிரம மற்றும் கட்டுவனவுக்கான சராசரி குடிநீர் தேவைப்பாடு நாளொன்றுக்கு 3,500 க.மீ. ஆகுமென்பதோடு, இதில் நாளொன்றுக்கு 2,500 க.மீ. தருவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் இணங்கியுள்ளது. ஆதலால், நாளொன்றுக்கு 1,000 க.மீ. மீதி நீரை தற்போதுள்ள நீர் மூலத்திலிருந்து பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி முன்மொழிவின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்குச் சொந்தமான கட்டுவன பிரதேச சபையின் 34 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குவதற்கு உத்தேசகிக்கப்பட்டுள்ளது.

2. ஹசலக நீர் வழங்கல் கருத்திட்டம்

மேற்படி உத்தேச திட்டத்தின் கருத்திட்ட பிரதேசமானது, மத்திய மாகாணத்தின் மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவினுள் கண்டி மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவானது 48 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதோடு, பிரதேச செயலாளர் பிரிவின் மொத்த காணிப் பரப்பளவு 165 சதுர கி.மீ. ஆகும். எவ்வாறாயினும், இப்பிரதேசத்தின் சிக்கலான புவியியல் நிலப்பரப்பு காரணமாக 48 கிராம அலுவலர் பிரிவுகளில் 33 பிரிவுகளையே உத்தேச ஹசலக நீர் வழங்கல் திட்டம் உள்ளடக்குகின்றது. இந்த உள்ளடக்கப் பிரதேசமானது, உரிய கிராம அலுவலர் பிரிவின் அமைவிடம் மற்றும் உயர்வைப் பொறுத்து முழுமையாக அல்லது பகுதியளவில் மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவின் மொரயாய, ஹதகனாவ, புலத்வெல்கந்துர, வேரகந்தொட்ட, தியபுபுல, ஹசலக்க, ரத்னஎல்ல மற்றும் தம்பேபிட்டிய ஆகிய பிரதேசங்களை உள்ளடக்குகின்றது. தற்போது மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவின் குருளுபொத்த, ஒருவலயாய, போகஹயாய, மகாஅஸ்வெத்தும, தொம்பகஹவெல மற்றும் லுனுமடலகெட்டிய போன்ற பல நீர் வழங்கல் திட்டங்கள் ஹவலக்க உள்ளூராட்சி சபையின் மூலம் பேணிவரப்படுவதோடு இதில் ஹசலக்க நகரத்திற்கும் சுற்றுப்புறங்களுக்கும் சேவையாற்றுகின்ற குருளுபொத்த பிரதானமான திட்டமாகும். தற்போதுள்ள விநியோக முறைமையில் தற்போது 950 சேவை இணைப்புகள் காணப்படுகின்றன.

3. கிரிதர நீர் வழங்கல் திட்டம்

கிரிதர மற்றும் சுற்றிலுமுள்ள நீர் பற்றாகட்குறையாகக் ாணப்படுகின்ற பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்குவதற்குப் பொருத்தமான முறையொன்றைக் கண்டறிதல் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். உத்தேச கிரிதர பிரதேசமானது களனி கங்கையின் வலது கரையில் அமைந்துள்ளது. கம்பஹ மாவட்டத்தின் தொம்பே பிரதேச செயலாளர் பிரிவின் சேவை வழங்கப்படாதுள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நீர் வழங்குவதற்கு உத்தேச கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. கருத்திட்ட பிரதேசத்தின் தற்போதுள்ள நீர் வளங்களாக குழிக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் மற்றும் ஆறுகள் காணப்படுகின்றன. வரட்சிக் காலத்தில் பல பிரதேசங்களில் குழிக் கிணறுகள் வரண்டு விடுவதோடு, மக்கள் அவர்களது அன்றாடத் தேவைகளுக்கு நீரைச் சேகரிப்பதில் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இப்பிரதேசத்தின் தற்போதைய பிரதானமான நீர் வளமாக களனி கங்கை காணப்படுவதோடு, இப்பிரதேசத்தில் ஏனைய நீர் வளங்களாக நிலநீர் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், குடிநீர்க்கான அதிகரித்துள்ள கேள்வி மற்றும் நில நீரின் தரப் பிரச்சினை காரணமாக அதனை நம்பகத்தன்மையுடன் கூடிய ஒரு நீர் வளமாகப் பயன்படுத்த முடியாதுள்ளது. வரட்சிக் காலத்தில் பிரதேசத்திலுள்ள சில கிணறுகள் வற்றி விடுகின்றன. ஆதலால், களனி கங்கையானது தொம்பே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நம்பகத்தன்மையுடன் கூடிய ஒரேயொரு நீர் வளமாக இனங்காணப்பட்டுள்ளது.

4. வாளைச்சேனை நீர் வழங்கல் கருத்திட்டம்

2004 ஆம் ஆண்டில் இலங்கையில் சுனாமியினால் தாக்கப்பட்டதன் மூலம் பெரும் சேதத்திற்கு உள்ளாகிய சனத்தொகையினரின்

வாழ்க்கைத் தரத்தை மீளக் கட்டியெப்புவதற்கும் மேம்படுத்துவதற்குமாக வாளைச்சேனை நீர் வழங்கல் கருத்திட்டம் பங்களிப்புச் செய்கின்றது. மேற்படி உத்தேச பிரதேசத்தில் பொது நீர் வழங்கல் முறைமை காணப்படவில்லை. கிணறுகள் தொடர்பிலான மாதிரிப் பரிசோதனையின் போது சனத்தொகை நெரிசல் மிக்க பிரதேசங்களில் உள்ள கிணறுகளில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள பெறுமானமான ஒரு லீட்டருக்கு 250 மி.கி. க்கு மேற்பட்ட அளவில் குளோரைட் உள்ளடக்கம் காணப்படுகின்றதென்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, ஆளமற்ற கிணறுகள் தொடர்பிலான பரிசோதனை ஈ-கொளி பற்றீரியா உள்ளதென்பதைக் காட்டுகின்றது.

இக்கருத்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள பிரதேசம் கோரளைப்பற்று, கோரளைப்பற்று மேற்கு, கோரளைப்பற்று மத்தி, கோரளைப்பற்று தெற்கு, கோரளைப்பற்று வடக்கு மற்றும் ஏறாவூர்பற்று ஆகிய 06 பிரதே செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டமானது, வாளைச்சேனை தொடக்கம் ஏறாவூர் வரையிலுள்ள கரையோர பிரதேசங்களின் 4 யுனுடீ கருத்திட்டங்களை ஒருங்கிணைக்கின்றது. இக்கருத்திட்டத்தின் மூலம் 2025 ஆம் ஆண்டில் 148,581 மக்கள் நேரடியாக நன்மை பெறுவார்கள் என்பதோடு, இது நாளொன்றுக்கு 27,000 க.மீ. நீருக்கான கேள்வியைக் கொண்டுள்ளது. ரூகம் நீர்ப்பாசன நீர்த் தேக்கத்திற்கு பக்கத்திலுள்ள உள்வாங்கு நிலையத்திலிருந்து நீர் உள்ளீர்க்கப்படும் என்பதோடு, உள்வாங்கு நிலையத்துக்கு பக்கத்தில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் சுத்திகரிக்கப்படும். வாளைச்சேனை, கல்குடா, கிராண் சித்தண்டி மற்றும் ரூகம் ஆகிய பிரதானமான நான்கு பிரதேசங்களில் ஏறத்தாழ 423 கி.மீ. நீளக் குழாய்களுடன் கூடியதாக நீர் விநியேகிக்கப்படும்.

5. பொலனறுவை கிழக்கு நீர் வழங்கல் கருத்திட்டம்

பொலனறுவை மாவட்டத்தின 07 பிரதேச செயலாளர் பிரிவுகளில், வெலிகந்த, திம்புலாகல, தம்மன்கடுவ, லங்காபுர மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவுகள் மிகக் குறைந்த பாதுகாப்பான குழாய் நீர் வழங்கலைப் பெறுகின்ற பிரதேசங்களாகும். தற்போது வரையறுக்கப்பட்ட சில பிரதேசங்கள் மட்டுமே தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, மக்களில் அநேகமானோர் குழாயக் கிணறு, குழிக் கிணறு போன்ற ஆழமான மற்றும் ஆளமற்ற நில நீர் வளங்களிலேயே தங்கியுள்ளனர் என்பதோடு, உயர்ந்தளவு புளோரைட் மற்றும் வன்தன்மையின் காரணமாக நில நீரின் தரம் நியமத்திற்கு இணங்கியதாகக் காணப்படுவதில்லை.

இலக்கிடப்பட்ட பிரதேசத்தைப் பொறுத்தவரை இரண்டு நீர் வழங்கல் திட்டங்களுடனான இரண்டு தனியான வலயங்களாகக் கருதப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 15,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உத்தேச மனம்பிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியானது, மகாவலி ஆற்றின் வலது பக்கத்தில் அமைந்துள்ள வெலிகந்த மற்றும் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரதேசங்களுக்கு நீர் வழங்கும் என்பதோடு, நாளொன்றுக்கு 12,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட கல்லேல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியானது மகாவலி ஆற்றின் இடது பக்கத்தில் அமைந்துள்ள தம்மன்கடுவ, லங்காபுர மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நீர் வழங்கும்.

6. பண்டாரவளை, அப்புத்தளை, தியதலாவ ஸ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்

பண்டாரவளை, அப்புத்தளை மற்றும் தியதலாவ பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு குழாய் நீர் வழங்கல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். கருத்திட்ட பிரதேசத்தில் பண்டாரவளை நீர் வழங்கல் திட்டம், தியதலாவ நீர் வழங்கல் திட்டம் மற்றும் அப்புத்தலை நீர் வழங்கல் திட்டம் எனப்படும் தொழிற்படுகின்ற மூன்று நீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கனவே காணப்படுகின்றன. எவ்வாறாயினும், வரட்சிக் காலகட்டத்தில் மூல நீர் வரையறக்கப்பட்ட அளவில் காணப்படுகின்றமையாலும், ஈரழிப்புக் காலகட்டத்தில் உற்பத்திக் கொள்ளளவு வரையறுக்கப்பட்டு காணப்படுகின்றமையாலும் நீர் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, இக்கருத்திட்டத்தின் குழாய் நீர் மூலம் நீர் வழங்கல் காணப்படாத பிரதேசங்களும் நன்மைபெறும்.

கருத்திட்டப் பிரதேசமானது, 52 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்ற பண்டாரவளை, தியதலாவ மற்றும் அப்புத்தளை நகரங்களையும் அதனைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றது. இக்கருத்திட்டத்தின் மூலம் இப்பிரதேசத்தின் வடிவமைப்புக்குட்பட்ட 141,000 மக்கள் நன்மை பெறுவார்கள்.

7. குண்டசாலை, ஹரகம நீர் வழங்கல் திட்டம்

இக்கற்கையின் கீழான கருத்திட்டப் பிரதேசமானது, கண்டி மாவட்டத்தின் குண்டசாலை, கண்டி பட்டினம் மற்றும் சுற்றயல் மற்றும் பாதும்பர பிரதேச செயலாளர் பிரதேசங்கள் இணைந்ததான மத்திய மாகாணத்தின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. இக்கருத்திட்டத்தின் கற்கைப் பிரதேசமானது, கண்டி - மஹியங்கன வீதி மற்றும் கண்டி - பதுளை வீதி நெடுகிலும் கண்டியிலிருந்து ஏறத்தாழ 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. உத்தேச பிரதேசத்தில் தே.நீ.வ.வ.ச. யின் மூலம் பராமரிக்கப்படுகின்ற குண்டசாலை நீர் வழங்கல் திட்டம், ஹரகம நீர் வழங்கல் திட்டம், அரத்தன நீர் வழங்கல் திட்டம், மாரஸ்ஸன நீர் வழங்கல் திட்டம் மற்றும் மெததும்பர நீர் வழங்கல் திட்டம் எனப்படும் ஐந்து நீர் வழங்கல் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் கொள்ளளவானது பிரதேசத்தின் நீருக்கான கேள்வியை நிறைவு செய்வதற்குப் போதுமானதாக இல்லை. இந்த அனைத்துத் திட்டங்களும் மேம்படுத்தப்படுவதற்கான அவசரத் தேவையைக் கொண்டுள்ளன.

மேற்படி உத்தேச குண்டசாலை - ஹரகம நீர் வழங்கல் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 136 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு குழாய் மூலமான பாதுகாப்பான குடிநீர் வசதிகள் வழங்கப்படும். வடிவமைப்பின்படி, மொத்தம் 251,387 சனத்தொகையினருக்கு சேவையாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படும் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 70,500 ஆகும்.

8. பாதும்பர - கண்டி வடக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

கண்டி மாவட்டத்தின் பாதும்பர, பூஜாபிட்டிய, அக்குரண, ஹாரிஸ்பத்துவ மற்றும் கங்கவத்த கோரளை மற்றும் கலகெதரவின் ஒரு பகுதி உள்ளடங்கிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய கண்டி நகரத்தின் வடக்குப் பகுதிக்கு 24 மணி நேரமும் குடிநீர் வசதியை வழங்குதல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

உத்தேச பாதும்பர - கண்டி வடக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டமானது இலங்கையின் மலை நாட்டின் வடமேல் பகுதியில் பரவியுள்ள மலைப்பாங்கான பிராந்தியத்தில் அமைந்துள்ளது.

உத்தேச பாதும்பர - கண்டி வடக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்திற்கு பொல்கொல்ல அணைக்கட்டின் 4.1 கி.மீ. நீளமான மேல் நீரோட்டப் பகுதியான புமுறுளீ யின் கட்டம் 1 க்கான அதே நீர் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் கண்டி நகரம் மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய மொத்தம் 450,000 மக்கள் நன்மை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்வரும் கருத்திட்டங்களும் குழாய்க் கருத்திட்டங்களில் உள்ளன.

1. அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் 11) JICA கடன் SLP115
2. அனுராதபுரம் வடக்கு பெரும்பாகம் மற்றும் திருகோணமலை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
3. BOI வலயங்களான பியகம.·. கொக்கல.·. வத்துபிட்டியாலவுக்கு நீர் வழங்குவதற்கான நீர் வழங்கல் கருத்திட்டம்
4. மாகந்துர, பன்னல, குளியாப்பிட்டிய
5. அம்பதலே சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மேம்பாட்டு நீர் வழங்கல் கருத்திட்டம்

6. களுகங்கை நீர் வழங்கல் - விரிவாக்க கருத்திட்டம் கட்டம் 1
7. நானுஓய நீர் வழங்கல் கருத்திட்டம்
8. காத்தன்குடி நீர் வழங்ல் கருத்திட்டம்
9. அனுராதபுரம் தெற்கு நீர் வழங்ல் கருத்திட்டம்
10. கல்கமுவ நீர் வழங்ல் கருத்திட்டம்
11. எப்பாவல ராஜாங்கனய கிரிபாவ நீர் வழங்ல் கருத்திட்டம்
12. தெல்தொட்ட நீர் வழங்ல் கருத்திட்டம்
13. அம்பாறை விநியோக இடைநிரப்பு நீர் வழங்ல் கருத்திட்டம்
14. தெஹிவளை கல்கிசை WWMP நீடிப்பு
15. தங்கொட்டுவ நீர் வழங்கல் கருத்திட்டம்
16. பகுதியளவு சுத்திகரிப்பு நீர் வழங்ல் கருத்திட்டம்
17. அம்பாந்தோட்டை WWDP

திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் (நீ.வ.க.)

திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் (நீர் வழங்கல்) மேற்கு பிரிவு

2017 காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள்

திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவின் மேற்கு உப பிரிவு பின்வரும் கருத்திட்டங்களின் திட்டமிடல் பணிகளை மேற்கொண்டது.

- ஜுபிலி முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டத்துக்கான சாத்தியவள அறிக்கையை தயாரித்தல்

  ஜுபிலி நீர்த் தேக்கமானது கொழும்பு மாநகரபைப் பிரதேசத்தின் தெற்குப் பகுதி மற்றும் கோட்டேயின் ஒரு பகுதி மற்றும் மஹரகம பிரதேச செயலாளர் பிரதேசத்திற்கு நீர் வழங்கும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

  மேற்படி பிரதேசத்தின் நீர் வழங்கலுக்காக எதிர்பார்கப்பட்ட தீவிர தேவையை கவனத்திற் கொண்டு, இக்கருத்திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உள்நாட்டு தொழிற்பாட்டு வியாபாரத் திட்டத்தின் (2018-2019) கீழ் முன்மொழியப்பட்ட முன்னுரிமை நகர நீர் வழங்கல் கருத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

  இக்கருத்திட்டமானது, ஜுபிலியில் களஞ்சியப்படுத்தல் கொள்ளளவை மேம்படுத்தல், புதிய அனுப்பல் பிரதான குழாய், DMA முகாமைத்துவத்துடன் கூடிய விநியோக மேம்பாடு, பம்பி நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

  இக்கருத்திட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 8,627 மில்லியனாகும்.

- அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நாளொன்றுக்கு 50,000 க.மீ. களால் விஸ்தரிக்கச் செய்தல்.

  மேல் மாகாண பிரதான திட்டக் கற்கை - 2013 இன் பிரகாரம், முழு கொழும்பு மாநகர சபைப் பிரதேசம் மற்றும் சில சுற்றுப்புற பிரதேசங்களுக்கு அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்து நீர் வழங்கப்படும். எனவே, கொழும்பு மாநகர சபைப் பிரதேசத்தில் மேல் மாகாண பாரிய நகரத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள பல்துறை அபிவிருத்திக்கான எப்போதும் அதிகரித்து வருகின்ற நீருக்கான தேவையின் காரணமாக அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான கொள்ளளவு மேம்பாடு தவிர்க்க முடியாததாக உள்ளது.

  ஆதலால், அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி விஸ்தரிப்புக் கருத்திட்டமானது, உள்வாங்கு நிலையம், தெளிவாக்கல் அலகு, 02 வடிகட்டல் அலகுகளை நிர்மாணித்தல் மற்றும் அது சார்ந்த ஏனைய சில பணிகளின் மூலம் தற்போதுள்ள கொள்ளளவை நாளொன்றுக்கு 50,000 க.மீ. கொள்ளளவால் அதிகரிக்கச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

  இக்கருத்திட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 5,460 மில்லியனாகும்.

- களுகங்கை நீர் வழங்கல் விஸ்தரிப்புக் கருத்திட்டம் (1) இன் கீழ் மதியுரைச் சேவைகளுக்கான RFP ஆவணங்களைத் தயாரித்தல்.

  உத்தேச கருத்திட்டமானது கந்தானவில் நாளொன்றுக்கு 294,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம் மற்றும் நாளொன்றுக்கு 140,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, DI பிரதான அனுப்பல் குழாய்கள், விநியோக வலையமைப்பு மற்றும் கோபுரங்கள் மற்றும் நில நீர்த் தேக்கங்களை நிர்மாணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாயுள்ளது.

- தலைமை அலுவலக மேம்பாட்டு வேலைகளை திட்டமிடல்.

2017 இல் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைத்தல்கள்

- ஜுபிலி தளத்தில் 10,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நில நீர்த் தேக்கத்தின் விபரமான வடிவமைத்தல் மற்றும் வரைதல்களைத் தயாரித்தல்.
- ஜுபிலி தளத்தில் 6,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நில நீர்த் தேக்கத்தின் விபரமான வடிவமைத்தல் மற்றும் வரைதல்களைத் தயாரித்தல்.
- தலைமை அலுவலக கட்டடத்தின் புதுப்பித்தல்/மேம்பாடு.

2017 இல் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

- கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் வடிவமைப்பு மீளாய்வு.
- களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11 இன் வடிவமைப்பு மீளாய்வு.
- கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் பொதி 1, 2 மற்றும் 3
- கட்டான நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வடிவமைப்பு மீளாய்வு.
- அழுத்கம, மத்துகம மற்றும் அகலவத்த ஒருங்கிந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வடிவமைப்பு மீளாய்வ.

(வடக்கு/ வடமத்திய) பிரிவு

2017 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள்:

- முல்லைத்தீவு நீர் வழங்கல் திட்டத்தின் விலைக் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கேள்விப் பத்திரங்கள் கோருதல் (உலக வங்கி நிதியின் கீழ்)
- எருக்களம்பிட்டி நீர் வழங்கல் திட்டத்தின் திட்டமிடல்
- முளங்காவில் நீர் வழங்கல் திட்டத்தின் விலைக் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கேள்விப் பத்திரங்கள் கோருதல (உலக வங்கி நிதியின் கீழ்)

2017 இல் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

- ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் விபரமான வடிவமைப்பு மீளாய்வு.
- பொல்கஹவெல நீர் வழங்கல் கருத்திட்டத்தின் விபரமான வடிவமைப்பு மீளாய்வு.

- மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மீளாய்வு.

2017 இல் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைப்புகள்

- முல்லைத்தீவு நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான (உலக வங்கி நிதியளிப்பின் கீழ்) செப்பனற்ற வடிகட்டல், நீர் கோபுரம், நிலக்கீழ் நீர்த் தேக்கம், பம்பி நிலையம் மற்றும் துணைக் கட்டடங்கள் ஆகியவற்றின் வடிவமைப்பு மற்றும் நிறைவு செய்தல் மற்றும் வரைதல்கள் மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்களை நிறைவு செய்தல்.
- முளங்காவில் நீர் வழங்ல் திட்டத்துக்கான (உலக வங்கி நிதியின் கீழ்) காற்றூட்டல் கருவி, சுண்ணாம்பு அளவிடல் தாங்கி, செப்பனற்ற வடிகட்டல், நீர் கோபுரம், நிலக்கீழ் நீர்த் தேக்கம், பம்பி நிலையம் மற்றும் துணைக் கட்டடங்கள் ஆகியவற்றின் வடிவமைப்பு, நிறைவுசெய்தல் மற்றும் வரைதல்களை நிறைவு செய்தல்.
- முளங்காவில் நீர் வழங்ல் திட்டத்துக்கான (உலக வங்கி நிதியின் கீழ்) விநியோக வலைமைப்பு, நீர் கோபுரம் மற்றும் கட்டடங்களின் வடிவமைப்பு மற்றும் நிறைவு செய்தல்.
- பொலனறுவை பெரும்பாக நகர அபிவிருத்தி நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வடிவமைப்பு.

தெற்கு/கிழக்கு பிரிவு

2017 இல் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள்

- எஹளியகொட நீர் வழங்கல் திட்டம்

  எஹளியகொட நீர் வழங்கல் திட்டத்தின் கருத்திட்ட தயார் செய்தல்கள் M.m.t. கடன் 3348 PDF இன் உதவியின் கீழ் நிதியிடப்பட்டது. (GCWWMIP 3 பகுதிக்கும்) கருத்திட்ட தயாரிப்புகளை மேற்கொள்வதற்கு P&D பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உட்கட்டமைப்புகளுக்கான காணிகளை P&D நிறைவு செய்தள்ளதோடு, காணி கொள்ளல் நடைபெற்று வருகின்றது. புவிச் சரிதவியல் அளவை, நிலப்பரப்பரப்பு அளவை ஆகியவற்றுக்கான கேள்விப்பத்திர ஆவணங்களைக் கோருதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, காணி உறுதிப்பாடு தொடர்பிலான NBRO அங்கீகாரம் பெறப்பட்டது.

- ஹெடஓய நீர் வழங்கல் திட்டம்

  முன் சாத்தியவள அறிக்கைக்கு PAC அங்கீகாரம் பெறப்பட்டது.

- பதுளை - ஹாலிஎல நீர் வழங்கல் கருத்திட்டம்.

  தெமோதர நடைபாலக் கடவைக்கான வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது.

2017 இல் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைப்புகள்

- அம்பாறை கட்டம் 111 நீர் வழங்கல் திட்டம் - அம்பாறை கட்டம் 111 கருத்திட்டத்தின் ஆறு கோபுரங்கள் தளத்தின் முற்றக் குழாயிடல்களுக்கான முற்றக் குழாயிடல் வடிவமைத்தல் நடைபெற்று வருகின்றது.
- ஹல்துமுல்ல நீர் வழங்கல் திட்டம்

  ஹல்துமுல்ல நீர் வழங்கல் திட்டத்தின் வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு கேள்விப்பத்திரம் கோரப்பட்டது.

- ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்.

மதியுரை

EOI ஐ மீண்டும் கோருதல் மற்றும் மதியுரையாளர்களை குறும் பட்டியலிடல் மேற்கொள்ளப்பட்டது. RFP ஐ வழங்குவதற்காக வங்கியின் சம்மதத்தைப் பெறுவதற்கு காத்திருக்கின்றது.

வடிவமைப்புக் கட்டியெழுப்பல்

SCAPC யின் மூலம் வேண்டப்பட்டவாறு பொறியியலாளர்களின் மதிப்பீட்டின் மீளாய்வு (3வது மீளாய்வு) மேற்கொள்ளப்பட்டது. மதிப்பீடு நடைபெற்று வருகின்றது.

வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

மாத்தரை கட்டம் IV ஆரம்ப வடிவமைப்புகள் மீளாய்வு செய்யப்பட்டன.

எந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு

திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவின் எந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவு 2017 ஆம் ஆண்டினுள் பல வடிவமைப்பு வேலைகளை மேற்கொண்டது.

திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் ஆவணப்படுத்தல்

- கொத்தட்டுவ - மொரகஸ்முல்ல பம்பி நிலையம்
- கட்புல மற்றும் அரங்காற்றல்கலை பல்கலைக்கழகத்தின் தெஹிவலையிலுள்ள ஆண் மாணவர்களுக்கான விடுதியில் சாக்கடைப் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
- ஹெட - ஒய RFP மற்றும் M&E வேலைகளுக்கான பொறியியல் மதிப்பீட்டை தயாரித்தல்.
- கணக்காய்வு / சாக்கடை / தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றுக்கான அலுவலக வலவுகள், A/C மற்றும் மின்னியல் வேலைகளின் விபரக் குறிப்புகள் மற்றும் BOQ ஐ தயாரித்தல்.
- மொரட்டுவை - இரத்மலானை சாக்கடை கருத்திட்ட RFP தயாரித்தல்.
- பொலனறுவை கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்ட M&E வேலைகளுக்கான பொறியியல் மதிப்பீட்டை தயாரித்தல்.
- உமா ஒய நீர் வழங்கல் கருத்திட்ட ஊழியர்களது தேவைப்பாடுகள் மற்றும் M&E வேலைகளுக்கான பொறியியல் மதிப்பீட்டை தயாரித்தல்.
- பிபதெமு பொலனறுவை M&E வடிவமைப்பு வேலைகள்
- முல்லைத்தீவு நீர் வழங்கல் முறைமை
- ருவன்வெல்ல பொறியியல் மதிப்பீடு.
- D5 கைநூலின் இற்றைப்படுத்தல் மற்றும் ICTAD வெளியீடுகள்
- முளங்காவில் நீர் வழங்கல் கருத்திட்டம்
- சிறு வலுசக்திக்கான வடிவமைத்தல் மற்றும் E-கிளை மற்றும் கணக்காய்வுப் பிரிவுக்கான ஒளியூட்டல்
- ஜுபிலி பம்பி நிலையத்துக்கான சூரிய சக்தி முன்மொழிவு

மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வு வேலைகள்

2017 ஆம் ஆண்டில் பின்வரும் வடிவமைப்பு மீளாய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கம்பஹ, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்.
- அம்பாறை மாவட்ட கட்டம் 111 சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கான நீர் வழங்கல் திட்டம்.
- தென்பாக கட்டடத்தின் எந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகளின் மேற்பார்வை வேலைகள்
- களனி வலது கரை (KRB-2) கட்டம் 11 நீர் வழங்கல் கருத்திட்டம்
- மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்
- ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
- தேதுறு ஓயா நீர் வழங்கல் திட்டம்

- பொல்கஹவெல அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
- அழுத்தம, மத்துகம மற்றும் அகலவத்த ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
- கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம்

ஆவணப்படுத்தல் பிரிவு

ஆவணப்படுத்தல் பிரிவானது, ஆவணப்படுத்தல் உப பிரிவு, வடிவமைப்புக் கைநூல் இற்றைப்படுத்தல் உப பிரிவு மற்றும் கணிய அளவை உப பிரிவு ஆகிய மூன்று உப பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

1. ஆவணப்படுத்தல் உப பிரிவு

தரநியமத்துடன் கூடிய விலைக் கேள்வி ஆவணங்கள், தரநியமம், மாதிரிகள், முன் தகைமை ஆவணங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதையும் இற்றைப்படுத்தலையும் மற்றும் தே.நீ.வ.வ.சபையின் இணையத்தளத்தின் பதிவேற்றத்தையும் ஆவணப்படுத்தல் பிரிவு மேற்கொள்கின்றது.

2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டவற்றின் சுருக்கம் பின்வருமாறு:

- புதிய தரநியமங்களுடன் கூடிய 05 விலைக் கேள்வி ஆவணங்களை தயாரித்தல்.
- புதிய தரநியமங்களுடன் கூடிய 62 விலைக் கேள்வி ஆவணங்களின் மீளாய்வு
- 02 புதிய மாதிரிகளை தயாரித்தல்.
- 08 புதிய மாதிரிகளின் மீளாய்வு
- 01 புதிய முன் தகைமை ஆவணத்தை தயாரித்தல்.
- முன் தகைமைக்காக 08 DI குழாய் தயாரிப்பாளர்களின் மதிப்பீடுகள்
- முன் தகைமைக்காக 02 DI/CI வால்வு தயாரிப்பாளர்களின் மதிப்பீடுகள்

மேற்படி செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஆவணப்படுத்தல் உப பிரிவானது, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் விலைக் கேள்வி ஆவணங்கள் மற்றும் பெறுகைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் மீளத் தாபிக்கப்பட்ட தரநியம விலைக் கேள்வி மீளாய்வுக் குழுவின் செயலகமாகவும் செயற்படுகின்றது. தரநியம விலைக் கேள்வி ஆவணங்கள் மீளாய்வுக் குழு 22 கூட்டங்களை நடத்தியது.

மேலும் ஆவணப்படுத்தல் உப பிரிவானது திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் நடத்தப்படுகின்ற மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்கான செயலகமாகவும் செயற்பட்டு வருகின்றது.

2. வடிவமைப்புக் கைநூல் இற்றைப்படுத்தல் உப பிரிவு

திட்டமிடல் மற்றும் வடிவமைபுப் பிரிவின் ஆவணப்படுத்தல் பிரிவின் கீழ் தொழிற்படுகின்ற வடிவமைப்புக் கைநூலின் இற்றைப்படுத்தல் உப பிரிவு தே.நீ.வ.வ.சபையின் நடைமுறை / வடிவமைப்புக் கைநூலின் இற்றைப்படுத்தலை / தயாரித்தலை மேற்கொள்கின்றது. 2017 ஆம் ஆண்டினுள் திட்டமிடல் வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழுவின் (PDMRC) வழிகாட்டல் மற்றும் அறிவுரையின் கீழ் பின்வரும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

- PI கைநூலின் இறுதி வரைவு நிறைவு செய்யப்பட்டு PDMRC கருத்துக்களை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.
- 3D கைநூலுக்கான இறுதி வரைவானது கைநூலில் PDMRC கருத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது PDMRC க்கு இறுதி அங்கீகாரத்துக்காக விநியோகிக்கப்பட வேண்டியதாயுள்ளது. இப்பணியைப் பூர்த்தி செய்வதற்காக, 3D கைநூல் தொடர்பில் 2017 ஆம் ஆண்டினுள் மொத்தம் இறுபத்தாறு மீளாய்வுக் கூட்டங்களில் வடிவமைப்புக் கைநூல் மீளாய்வுக் கூட்டங்கள் ஐந்து நடத்தப்பட்டன.
- வட்டத் தாங்கிகளுக்கான முன் அழுத்தக் கொங்கிறீட் கைநூலின் இறுதி வரைவு (D10) மற்றும் விபரமான கட்டமைபட்புக் கணிப்பீடானது ஒப்பந்தகாரர் ABE Nikko, JPU பிரிவு மற்றும் பிரதான பொறியியலாளர் (கைநூல்) ஆகியோரது பங்கேற்புடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது இறுதி அங்கீகாரத்திற்காக PDMRC க்கு விநியோக்கிப்பட வேண்டியுள்ளது.
- D2 கைநூலின் மீளாய்வு ஆரம்பிக்கப்பட்டதோடு பொறியியலாளரால் (வடிவமைப்புக் கைநூல்) தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

3. அளவுக் கணிய உப பிரிவு

அளவுக் கணியப் பணியானது தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற அளவுப் பத்திரத்தின் அனைத்து வடிவமைப்பு வேலைகளையும் தயாரித்தல், பொறியியலாளரின் மதிப்பீடுகளைத் தயாரித்தல், நீர் மற்றும் சாக்கடை வேலைகளுக்கான கட்டணப் புத்தகம், மாற்றங்கள் பற்றிய மதிப்பீடுகள், வேலை விடயங்கள் பற்றிய விலையிடல்களுக்கான வேலை நியதிகளைத் தயாரிப்பதற்கான நீர் மற்றும் சாக்கடை வேலைகள் பற்றிய கற்கை, கருத்திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட பொறியியலாளரின் மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

2017 ஆம் ஆண்டினுள் மேற்படி உப பிரிவானது 146 அளவுப் பத்திரங்கள், உள்நாட்டு நிதியளிப்பு ஒப்பந்தங்களுக்கான 16 பொறியியலாளர் மதிப்பீடுகள், வெளிநாட்டு நிதியளிப்பிலான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டங்களுக்கான 02 பொறியியலாளர் மதிப்பீடுகள், பகுதியளவு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான வடிவமைத்து கட்டியெழுப்புகின்ற கருத்திட்டத்துக்கான 02 செலவு முன்மொழிவுகள், 2018 ஆம் ஆண்டுக்கான நீருக்கான வருடாந்த அறவீட்டுப் புத்தகம் மற்றும் சாக்கடைக்கான வருடாந்த அறவீட்டுப் புத்தகம் ஆகியவற்றை தயாரித்துள்ளது. சில கருத்திட்டங்களுக்கான அளவுப் பத்திரம் மற்றும் பொறியியலாளர் மதிப்பீட்டைத் தயாரிப்பதற்காக தல விஜயங்களும் மேற்கொள்ளப்பட்டன. சில கருத்திங்களுக்காக ஒப்பந்தகாரர்களுடன் விலை பற்றிய பேச்சுவார்த்தைகளிலும் இப்பிரிவு ஈடுபட்டது.

தற்போதுள்ள சாக்கடைத் திட்டங்கள்

மாகாணம்/பி.சே.நி.	சாக்கடைத் திட்டங்களின் எண்ணிக்கை
மத்திய	01
கிழக்கு	00
வட மத்திய	00
வட மேல்	00
வடக்கு	00
சப்பிரகமுவ	00
தென்	01
ஊவா	01
மேல் மத்திய	07
மேல் வடக்கு	03
மேல் தெற்கு	01
மொத்தம்	14*

* இது கொழும்பு மாநகர சபையினால் கையாளப்படுகின்ற சாக்கடைத் திட்டத்தையும் தே.நீ.வ.வ.ச.யினால் கையாளப்படுகின்ற 13 திட்டங்களையும் உள்ளடக்குகின்றது.



சாக்கடைச் செயற்பாடுகள்

சாக்கடைச் சேவைகளின் விரிவாக்கலைத் தொடர்ந்து 2007 ஆம் ஆண்டில் மேலதிக பொதுமுகாமையாளர் ஒருவரால் தலைமை வகிக்கப்படுகின்ற கழிவுநீர் செயற்பாடுகளுக்கான தனியானதொரு பிரிவை தே.நீ.வ.வ.ச. உருவாக்கியது. புதிய பிரிவுகளின் கீழ் வருகின்ற பிரிவுகள் கொழும்பு பெரும்பாக சாக்கடைத் தொழிற்பாட்டுப் பிரிவு, திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவு அத்துடன் சாக்கடைக் கருத்திட்டங்கள் ஆகியனவாகும்.

கருத்திட்ட உருவாக்கம் மற்றும் அமுல்படுத்தல், திறமையான பணியாளர்களின் முழுமையான உதவியோடு வழிகாட்டல்கள் மற்றும் அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் தரப்பினர்களை திருப்திப்படுத்துவதற்கும் செல்வாக்குச் செலுத்துவதற்கும் துப்புரவேற்பாட்டுத் தீர்வுகளை வழங்குதல், தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பு தேவைகளை நிறைவு செய்வதற்கும் சாக்கடைப் பிரிவு உயர்ந்தபட்ச முயற்சியை மேற்கொள்கின்றது.

தற்போதுள்ள சாக்கடை முறைமையானது இரத்மலானை, மொரட்டுவை, ஜா-எல, ஏக்கல, தெஹவளை, கொலொன்னாவ, ஹிக்கடுவை, கதிர்காமம் பிரதேசங்களிலும் ஹன்தான, ரத்தொழுகம, மத்தெகொட, மத்துமகெவத்த மற்றும் ஜயவடனகம ஆகிய சில வீடமைப்புத் திட்டங்களிலும் 16,000 இணைப்புகளைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தே.நீ.வ.வ.ச.யின் சேவையிலுள்ள நம்பிக்கை மற்றும் அதன் பணியாளர்களது விரிவான தொழில்நுட்ப அறிவின் காரணமாக சீதாவக்க, பியகம மற்றும் கொக்கல ஆகிய முதலீட்டுச் சபைக்குரிய சாக்கடைத் திட்டங்களின் பராமரிப்புப் பொறுப்பும் தே.நீ.வ.வ.ச.க்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள்

கொழும்பு பெரும்பாக சாக்கடைப் பிரிவானது, தெஹிவலை - கல்கிசை மாநகர சபை ஆளுகைப் பிரதேசம், மொரட்டுவை மாநகர சபை பிரதேசம், ஜா-எல நகர சபை பிரதேசம், கொலன்னாவ நகர சபை பிரதேசம் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்திலுள்ள ஒருசில அரசாங்க நிறுவனங்களின் சாக்கடை முறைமைகளின் தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றது. தே.நீ.வ.வ.ச.யினால் ஏறத்தாழ 17,429 சாக்கடை இணைப்புகள் பராமரிக்கப்பட்டன.

இதற்கமைய, சொய்ஸாபுர, மத்தேகொடை, ஜயவடனகம, ரத்தொழுகம, மத்துமகேவத்தை மற்றும் மோதரவில வீடமைப்புத் திட்டங்களும் சனாதிபதி செயலகம், சபாநாயகர் இல்லம், பாராளுமன்றம் (நீர் மற்றும் சாக்கடை), செத்சிறிபாய (நீர் மற்றும் சாக்கடை), இசுருபாய (நீர் மற்றும் சாக்கடை), ஜயவர்தனபுர ஆஸ்பத்திரி போன்ற அரச நிறுவனங்களும் தே.நீ.வ.வ.ச.யினால் பராமரிக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, கதிர்காமம், ஹிக்கடுவை மற்றும் ஹந்தான வீடமைப்புத் திட்டங்களின் சாக்கடை முறைமைகளும் அந்தந்த பிராந்திய உதவி நிலையங்களின் கீழுள்ள பிரதேச முகாமையாளர்களால் பராமரிக்கப்பட்டன. மேலும், கொக்கல, பியகம மற்றும் சீதாவக்க ஆகிய BIO க்கு சொந்தமான கைத்தொழில் பேட்டைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்புச் சேவைகள் வழங்கப்பட்டன.

மஹரகம தேசிய இளைஞர் சேவைகளின் மீள்செறிவூட்டல் நிதியத்தின் கீழ் மஹரகம தேசிய இளைஞர் சேவைகளின் தற்போதுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையின் புனரமைப்புக்காக கொழும்பு பெரும்பாக சாக்கடைப் பிரிவு கருத்திட்டமொன்றை அமுல்படுத்தியது. மொத்த கருத்திட்ட செலவு ரூபா 48.3 மில்லியனாகும் என்பதோடு, சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கொள்ளளவு நாளொன்றுக்கு 45 க.மீ. ஆகும்.

சட்டவிரோத இணைப்புகளை சட்டரீதியாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆண்டினுள் 14 சட்டவிரோத இணைப்புகள் சட்டரீதியானதாக்கப்பட்டது. சாக்கடைக் குழாய் நீடிப்புக் கருத்திட்டத்தின் கீழ் 389 மீற்றர் நீளமான PVC குழாய்கள் இடப்பட்டன. அவசரகால சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 10.3 மில்லியன் செலவில் அத்துல்கோட்டே பம்பி நிலையத்தில் புதிய பம்பிகள் பொருத்தப்பட்டன. புனரமைப்பு வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 40 மில்லியனாகும்.

நடைமுறையிலுள்ள சாக்கடைக் கருத்திட்டங்கள்

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் நிறைவேற்றப்படும் பாரிய சாக்கடைக் கருத்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு:-விரிவாக்கத்தின் கீழ் இருந்த வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்

	கருத்திட்டத்தின் பெயர்	நிதியளிப்பு முகவராண்மை
1	கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவம்	ADB
2	இரத்மலான/மொரட்டுவை மற்றும் ஜா-எல/ஏக்கல பிரதேசத்துக்கான கழிவுநீர் அகற்றல் முறைமை	SIDA
3	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவம்	JICA
4	கொழும்பு பெரும்பாகத்தில் சாக்கடை இணைப்புகளை அதிகரிக்ச் செய்வதற்கான ஐரீழுடீயு கருத்திட்டம்	உலக வங்கி
5	குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு	சீனா
6	நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்புக் (SHIFT) கருத்திட்டம்	AFD
7	கதிர்காமம் கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்	ஆஸ்திரியா



வெளிநாட்டு நிதியளிப்புச் சாக்கடைக் கருத்திட்டங்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

1.) கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்

தெஹிவலை / கல்கிசை மாநகர சபை மற்றும் கொலன்னாவை மாநகர சபை பிரதேசங்களில் அமைந்துள்ள 6 கழிவு நீர் பம்பி நிலையங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கம் சுருக்கமாக இக்கருத்திட்டத்தின் விடயப்பரப்பாகும். தே.நீ.வ.வ.சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற தெஹிவலை / கல்கிசை மற்றும் கொலன்னாவை - மீதொட்டமுல்ல பிரதேசங்களில் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் சாக்கடை முறைமைகளை மேம்படுத்துவதற்காக இக்கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் 2009 திசெம்பரில் கைச்சாத்திடப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2557-SRI (SF) கடனின் ஊடாக நிதியளிக்கப்பட்டது.

சர்வதேச போட்டி ரீதியிலான விலைக் கேள்வி நடைமுறையைத் தொடர்ந்து அமெரிக்க டொலர் 7.795 மில்லியன் தொகைக்கு கையளிக்கப்பட்ட தனியொரு ஒப்பந்தமாக அனைத்து நிர்மாணிப்புச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான கருத்திட்ட விடயப்பரப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்துக்கான மொத்த ADB நிதி ஒதுக்கீடு (2016 இல் பெறப்பட்ட மீள்ஒதுக்கீட்டுடன் சேர்த்து) அமெரிக்க டொலர் 9.43 மில்லியனாகின்ற அதேவேளை இலங்கை அரச பங்களிப்பு ரூபா 364 மில்லியனாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 1430 மில்லியனாகும் (2016 திசெம்பர் 30 ஆம் திகதிக்கு செல்லுபடியான அமெரிக்க டொலர் 1 = ரூபா 151.66 என்ற இலங்கை மத்திய வங்கி செலாவணி வீதத்தின்படி).

KP- 2 பம்பி நிலையம்

கருத்திட்டத்தின் ஆரம்பத் திகதி 2014 செத்தெம்பர் 16 ஆக நிறுவப்பட்டிருந்த அதேவேளை பூர்த்தி செய்கின்ற திகதியாக ஆரம்பத்தில் 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நிர்மாணிப்புச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக 2017 மார்ச் 31 வரை 'கால நீடிப்பு' வழங்கப்பட்டது. எவ்வித இடையூறுகளும் இன்றி ஒவ்வொரு பம்பி நிலையமும் இயங்கும் முறைமையில் இருக்கத்தக்க விதத்தில் கருத்திட்ட விடயப்பரப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து 06 பம்பி நிலையங்களும் O&M பிரிவுக்கு கையளிக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அனைத்து 15 பிரதான பம்பிகளும் பொருத்தப்பட்டு 6 பம்பி நிலையங்களிலும் இயங்கி வருகின்றன. அனைத்து 6 பம்பி நிலையங்களுக்குமான உறிஞ்சும் எழுச்சிக் குழாய் மற்றும் கட்டமைப்பு புதுப்பித்தல்கள் மற்றும் நவீனமயப்படுத்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டன. வினைத்திறன்மிக்க பம்பி செய்தல் மூலம் பம்பி நிலையங்களின் நிரம்பிவழியும் ஆபத்து முகாமை செய்யப்பட்டதோடு நடைமுறையிலுள்ள இயங்கும் முறைமைக்கான இடையூறுகள் குறைக்கப்பட்டன. மின்னியல் பலகைகள் மற்றும் SCADA கருவிகள் இயங்கி வருகின்றன.

MLP – 1 க்கான நிரம்பிவழிதல் மற்றும் பம்பி நிலையங்களின் குறைபாடுகளை இனங்கண்டு திருத்தல் தவிர்ந்த மூல விடயப்பரப்பின் அனைத்து கருத்திட்ட செயற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. 2017 திசெம்பர் இறுதியில் மூல விடயப்பரப்பில் சில ஒப்பந்த மாற்றங்கள் நடைபெற்றுள்ளதற்கு மேலதிகமாக 99% பௌதீக முன்னேற்றம் அடையப்பெற்றுள்ள அதேவேளை நிதியியல் முன்னேற்றம் 82% ஆக காணப்படுகின்றது.

MLP - 1 பம்பி நிலையத்துக்கான அவசர நிரம்பிவழிதல், கடற்கரை பிரிவிலிருந்து விடுபடுவதற்காக நீரோட்டங்களுக்கு அப்பால் கடலினுள் தூர இடத்திற்கு நீடிப்பதற்கான தேவை காணப்படுகின்றது. நிதியங்களின் பற்றாக்குறை காரணமாக துர்ப்பாக்கிய வசமாக இவ்வேலையை இவ்விடத்தில் முடிவுறுத்த நேரிட்டது.

சுற்றாடல் ஆபத்துக்களைக் குறைப்பதற்காக ஒழுங்கான சாக்கடைக் கழிவகற்றல் முறைமையொன்றை அமுல்படுத்துமாறு பொலீஸ் (தெஹிவளை பொலீஸ் நிலையம்) தே.நீ.வ.வ.ச.க்கு அறிவித்தல் வழங்கியுள்ளது. பொறிமுறையாக்கப்பட்ட வடிகட்டல் மற்றும் துணிக்கைகளை அகற்றல் மற்றும் சேகரிப்புடன் கூடிய ஒழுங்கான சாக்கடைக் கழிவகற்றல் முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு கருத்திட்ட அலுவலகத்தின் மூலம் முழுமையான உள்நாட்டு வடிவமைத்தல் முன்மொழியப்பட்டது. ADB நிதியம் வரையறுக்கப்பட்டுள்ளதனால் உள்நாட்டு ஒப்பந்தகாரர்களின் ஊடாக பெறுகைகளுக்கு முன்மொழியப்பட்டுள்ளது. துணிக்கைகள் பம்பி, துணிக்கைகள் வகைப்படுத்தல் அலகு மற்றும் பொறியியல் ரீதியிலான திரைத் தடை அகற்றல் ஆகிய மூன்று கருவிகளும் கிடைப்பனவைப் பொறுத்து ADB நிதியளிப்பின் ஊடாக பெறுகை செய்யப்பட வேண்டியுள்ளது.

சுவீடன் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

2.) மொரட்டுவை மற்றும் ஏக்கல பிரதேசங்களுக்கான குழாய் எழுலமான கழிவகற்றல் உள்ளடக்கத்தின் விரிவாக்கம்

இரத்மலானை/மொரட்டுவ மற்றும் ஜா-எல/ஏக்கலவுக்கான கழிவு நீர் அகற்றல் முறைமை SIDA நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு இலக்கிடப்பட்ட பிரதேசத்தின் 20% சேகரிப்பு வலையமைப்புடன் கூடியதாக 2016 ஜூன் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டது.

மொரட்டுவ மற்றும் ஏக்கல பிரதேசங்களுக்கான குழாய் மூல சாக்கடை உள்ளடக்கத்தின் விரிவாக்கம், இரத்மலானை மொரட்டுவ மற்றும் ஜா-எல/ஏக்கல ஆகிய இரண்டு பிரதேசத்திலுமுள்ள சனத்தொகையின் 65% வரையிலான தற்போதைய உள்ளடக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்காக இரத்மலானை மொரட்டுவ மற்றும் ஜா-எல/ஏக்கல கழிவுநீர் அகற்றல் முறைமையின் தற்போதுள்ள கேரிப்பு வலையமைப்பை விரிவாக்குவதற்கு கருத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. நிதியத்தின் மற்றும் ஏனைய வளங்களின் கிடைப்பனவின் காரணமாக விரிவாக்கமானது கட்டம் 1 படிநிலை 11 மற்றும் கட்டம் 1 படிநிலை 111 என்றவாறு இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இரத்மலானை / மொரட்டுவை பிரதேச கட்டம் 1 படிநிலை 11 க்கு, 07 புதிய பம்பி நிலையங்களின் நிர்மாணிப்பை நடைமுறைப்படுத்தல், 110 கி.மீ. சேகரிப்புக் குழாய் வலையமைப்பை இடுதல், 11,600 துறைசார் இணைப்புகள் மற்றும் தற்போதுள்ள பம்பி நிலையத்தினதும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியினதும் மேம்பாடு ஆகியவற்றுக்கு யுகுனு நிதியம் இனங்காணப்பட்டுள்ளது.

கருத்திட்ட செலவு ரூபா 16,073 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு, 2040 இல் நலன்பெறுனர்கள் 56,429 என மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டம் 1 படிநிலை 11 இன் கீழ் தே.நீ.வ.வ.ச. யின் உள்வாரி வளங்களைப் பயன்படுத்தி இரத்மலானை / மொரட்டுவை பிரதேசத்துக்கான பம்பி நிலையங்களின் ஆரம்ப வடிவமைப்பு மற்றும் சேகரிப்பு வலையமைப்பின் விபரமான வடிவமைப்பும் மேற்கொள்ளப்பட்டது. விலைக் கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் நடைபெற்று வருகின்றது. கடன் உடன்படிக்கை மற்றும் நன்கொடை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக காத்திருக்கின்றது. ஜா-எல / ஏக்கல பிரதேச கட்டம் 1 படிநிலை 111, 2019 ஆம் அண்டில் ஜா-எல/ஏக்கல பிரதேசத்துக்கான நிதியளிப்புக்கு யுகுனு விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. கருத்திட்ட ஆக்கக்கூறுகள் யாவையெனில், 07 புதிய பம்பி நிலையங்களை நிர்மாணித்தல், 75 கி.மீ. சேகரிப்பு

குழாய் வலையமைப்பை இடுதல், 4,100 துறைசார் இணைப்புகள் மற்றும் தற்போதுள்ள பம்பி நிலையத்தினதும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியினதும் மேம்பாடு ஆகியனவாகும். கருத்திட்ட செலவு ரூபா 8,105 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு, 2040 இல் நலன்பெறுனர்கள் தொகை 19,945 என மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டம் 1 படிநிலை 111 இன் கீழ் காணி கொள்ளல் வேலைகள் உள்ளிட்ட ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஜா-எல / ஏக்கல பிரதேசத்திற்கான விபரமான வடிவமைத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் இதே வளங்களைப் பயன்படுத்தி 2018 இல் ஆரம்பிக்கப்படும்.

JICA உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

3.) கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்

பொதி 4 இன் அங்குரார்ப்பண வைபவம்

கண்டி நகரத்தில் மிக சிக்கலான விதத்தில் நடைபெறுகின்ற கழிவு நீரகற்றலினால் கண்டி வாவி, மெத எல அத்துடன் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களின் பிரதான குடிநீர் வளமாயுள்ள மகாவலி கங்கை மாசடைந்துள்ளது. இதற்கான ஒரு நிரந்தர தீர்வைக் காணும் பொருட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கண்டி நகரத்திற்கான கழிவுநீர் அகற்றல் முறைமையொன்றை அமுலாக்குவதற்கு உத்தேசித்துள்ளது. உத்தேச கருத்திட்டத்தின் மூலம், நகரத்தின் 732 ஹெக்றயார்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவு நீர், பின்னர் 92 கிலோ மீற்றர் நீளமான குழாய் வலையமைப்பொன்றின் ஊடாக நாளொன்றுக்கு 14,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு அனுப்பப்படும்.

இக் கருத்திட்டம் 2018 இல் பூர்த்திசெய்யப்படும். இக்கருத்திட்டத்தின் மூலம் நகரத்தில் வசிப்பிடத்தைக் கொண்டுள்ள 55,000 மக்களும் நாளாந்தம் கண்டிக்கு வருகைதரும் 150,000 மக்களும் பயனடைவார்கள்.

சுத்திகரிக்கப்பட்ட பொறித்தொகுதியானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் சுற்றாடலுக்கு திருப்பி விடுவிக்கப்படுவதை உறுதி செய்யும்.

கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 22,585 மில்லியனாகும். JICA கடன் தொகை யப்பானிய யென் 14,087 மில்லியனாகும். அரசாங்க திரண்ட நிதியமான ரூபா 4060 மில்லியன் நிர்வாக செலவுகள், வரிகள், தீர்வைகள், மற்றும் காணி கொள்ளல் ஆகிய செலவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தில் 4 பிரதானமான பொதிகள் உள்ளன என்பதோடு மேற்படி அனைத்து 4 பொதிகளுக்குமான ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

பொதி 1 கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, பிரதான பம்பி நிலையம், சுத்திகரிக்கப்பட்ட கழிவகற்றல் முறைமை மற்றும் சேற்று வண்டல் உலர்த்தல் மேடை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. பொதி 1 இன் வடிவமைப்புச் செயற்பாடுகள் 2015 மார்ச் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், நிர்மாணிப்புச் செயற்பாடுகள் 2016 பெப்ருவரி 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான வண்டல் படிவத் தாங்கி, ஒட்சிசன் கலப்புக் காண்கள், முதல்நிலை நடவடிக்கைக் கட்டிடங்கள், சேறு சுத்திகரிப்புக் கட்டிடம் மற்றும் நிர்வாகக் கட்டிடம் ஆகியவற்றின் நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது. பிரதான பம்பி நிலையம், நிரந்தரப் பாலம் மற்றும் பணியாளர் விடுதிகளின் நிர்மாணிப்பு நடைபெற்று வருகின்றது. சேறு உலர்த்தல் மேடைகளின் நிர்மாணிப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த முன்னேற்றம் 44.09% ஆகும்.

பொதி 2 சாக்கடை பிரதான குழாய், சாக்கடைக் கிளை மற்றும் சேவை இணைப்புகள், பம்பி நிலைய பிரதான துவார வழி ஆகியவற்றின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு கருவிகளின் வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. பொதி 2 இன் நிர்மாணிப்பு வேலைகள் 2015 ஏப்பிரலில் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. பிரதான துவார வழியை நிறுவுதல் (2,789 இல் 1,811 பூர்த்தி செய்யப்பட்டது), சேவைக் குழாய்கள், IC மற்றும் வெளிச்சம் மற்றும் ஒளித் தெரிப்புக் கண்ணாடி ஆகியவற்றின் பரிசோதனை, காற்றுப் பரிசோதனை போன்ற அத்தியாவசிய பரிசோதனைகள் உள்ளடங்கலாக 103 கி.மீ. சாக்கடைக் குழாய்கள் (பிரதான மற்றும் கிளை - 47 கி.மீ., சேவை - 56 கி.மீ.) இடப்பட்டன. பிரதான பம்பி நிலைய துவார வழி இலக்கம் 13-1 மற்றும் 08-02 இன் நிர்மாணிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. நுண் சுரங்கமிடல் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த முன்னேற்றம் 45.82% ஆகும்.

பொதி 3 ஆதன இணைப்புகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அத்துடன் பரீட்சித்தல் மற்றும் கையளித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இவ்வொப்பந்தம் 9,205 ஆதன இணைப்புகளை உள்ளடக்குகின்றது. ஒப்பந்த வேலைகள் 2016 யூலை 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட ஆதனங்களுக்கான விபரமான வடிவமைப்புகள் மற்றும் நிர்மாணிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. 2017 திசெம்பர் வரை ஒப்பந்தகாரர் 458 வளவுகளைப் பூர்த்தி செய்துள்ளார். 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த முன்னேற்றம் 18.42% ஆகும்.

பொதி 4 குறித்துரைக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் பிரதேசங்களில் சமுதாய துப்புரவேற்பாட்டு வசதிகளை நிர்மாணித்தல், பரீட்சித்தல் மற்றும் கையளித்தலை உள்ளடக்குகின்றது. கண்டி நகரசபைப் பிரதேசத்தில் 138 மலசலகூடங்கள் மற்றும் 02 குளிக்கும் இடங்களை உள்ளடக்கியதான 14 கழிவறைத் தொகுதிகளை நிர்மாணிப்பதையும் புனரமைத்தலையும் இவ்வொப்பந்தம் உள்ளடக்கியுள்ளது. ஒப்பந்த செயற்பாடுகள் 2016 பெப்ருவரி 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 11 கழிவறைத் தொகுதிகள் மற்றும் 01 குளியலறையின் நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டு, கண்டி மாநகர சபையின் ஊடாக சமுதாயத்திற்கு கையளிக்கப்பட்டது. வேறு 02 கழிவறைத் தொகுதிகளின் நிர்மாணிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. கண்டி மாநகரசபை உப அலுவலகத்தின் நிர்மாணிப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த முன்னேற்றம் 93.90% ஆகும்.

தனியார் மலசலகூட நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 512 தனி மலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட உள்ளன. இவ்வேலைகள் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் (CBO) ஊடாக செயற்படுத்தப்படும். 03 CBO க்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளதோடு, நிதி கையாள்கை, தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பு வேலைகள் தொடர்பில் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. போகஹவத்த பிரதேசத்தில் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (29 வீடுகளில் 20 வீடுகள்). 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த முன்னேற்றம் 21.0% ஆகும். கருத்திட்டத்துக்கு ISO 9001: 2015 தர முகாமைத்துவ

முறைமை சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

எதிர்நோக்கிய பொதுப் பிர்சினைகள் என்றவகையில், மலைப்பாங்கான நிலப்பரப்பு, சனநெருக்கடிமிக்க நகரம் மற்றும் ஏனைய தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும் கண்டி நகரத்தின் அபிவிருத்தி காரணமாக தொல்பொருளியல் ரீதியிலும் அதேபோன்று வடிவமைப்பிலும் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக எதிர்பாக்கப்பட்ட முன்னேற்றம் அடையப்பெறவில்லை.

4.) கொழும்பு பெரும்பாக (GC) பிரதேசத்தில் சாக்கடை இணைப்புகளை அதிகரிக்கச் செய்வதற்கான GPOBA (உலக வங்கி) நிதியளிப்பிலான கருத்திட்டம்.

பம்பிகளுடன் கூடியதான படோவிட்ட சுருக்கப்பட்ட குழாய் நீடிப்பின் முன்னேற்றம் பற்றிய படம்

கருத்திட்ட விபரம்/விடயப்பரப்பு சுருக்கமாக, கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீடுகளுக்கான சாக்கடை இணைப்புகளை அதிகரிக்கச் செய்தலும் வலையமைப்புக்குப் புறம்பான துப்புரவேற்பாட்டுத் தீர்வுகளும் இக்கருத்திட்டத்தின் பிரதானமான விடயப்பரப்பாகும். தெஹிவல / கல்கிசை, ஜா-எல / ஏக்கல, இரத்மலானை / மொரட்டுவை மற்றும் கொலொன்னாவ பிரதேசங்களின் வீடுகளுக்கு நேரடி இணைப்புகளை வழங்குவதற்கான உப கருத்திட்டமானது, சோமானந்த மாவத்தையின் வளவுகளினுள் 100 இணைப்புகள் உட்பட 1,234 சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. கடப்பாட்டுக்குட்பட்ட காலத்தினுள் தியவரபுர வீடமைப்புத் திட்டத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமையின் (DEWTS) கீழ் 64 மீனவ வீடுகள் வெற்றிகரமாக கையளிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது.

படோவிட்ட சுருக்கப்பட்ட நீடிப்பின் கீழ் பம்பிகளுடன் கூடியதாக மூன்று பம்பி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டதோடு, வளவுகளுக்கான சாக்கடைகளுடன் 1,500 சாக்கடை இணைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டன.

328 சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டு, தற்போதுள்ள சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் புனரமைப்பின் மூலம் இரத்மலானை சுனாமி வீடமைப்புத் திட்ட உப கருத்திட்டத்துக்கான னுநுறுயுவுளு பூர்த்தி செய்யப்பட்டது.

தெஹிவளை/கல்கிசை, மொரட்டுவ, கொலொன்னாவ மற்றும் ஜா-எல/ஏக்கல பிரதேசத்தில் 1,475 இணைப்புகளை உள்ளடக்குகின்ற சுருக்கப்பட்ட மற்றும் மரபு ரீதியிலான நீடிப்பு உப கருத்திட்டத்தில் 12 கி.மீ. ஈர்ப்புவிசை சாக்கடை நிர்மாணிப்பு பூர்த்திசெய்யப்பட்டதோடு பௌதீக முன்னேற்றம் 98.5% ஆகும்.

3,785 வீடுகளுக்கான தலத்திலான துப்புரவேற்பாட்டு மேம்பாடுகள் நடைபெற்று வருவதோடு, கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 26.52% ஆகும்.

160 குடும்பங்களுக்கு நன்மைபயக்கின்ற, 12 வடிகட்டல்கள், பம்பி நிலையம், கடலுக்கு வெளியேற்றும் குழாய் உள்ளடங்கியதான லுனாவ சமுத்ர சக்தி வீடமைப்புத் திட்டத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையின் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

கருத்திட்ட பிரதேசத்தில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் கூட்டங்களும் நடத்தப்பட்டதோடு, சுவரொட்டிகள் மூலமான பிரசாரம் மற்றும் இடத்துக்கிடம் சென்று அறிவித்தல்களை விடுக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. GS மற்றும் DO க்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான கூட்டங்கள் DS அலுவலகத்தில் நடத்தப்பட்டன. கருத்திட்டத்தில் உற்பத்தித் திறன் மேம்பாடு என்ற வகையில் 5S நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஒப்பந்ததாரர்களின் கூற்றுப்படி, சாக்கடை வேலைகளுக்கான மனிதவலுவைப் பெற்றுக்கொள்ளல் சிரமமாயிருந்ததோடு, இக்காரணத்தினால் சில கருத்திட்டங்கள் தாமதமடைந்தன.

5.) குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் சாக்கடை கருத்திட்டம்

குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டமானது, குருணாகல் நகர எல்லை மற்றும் அதனை அடுத்துள்ள பிரதேசங்களின் நீர் பற்றாக்குறைக்கான தீர்வாகவும் போதியளவு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதற்குமாக மொத்தம் ரூபா 13,250 மில்லியன் தொகையான சீனா அரசாங்கத்தின் கடன் நிதி (77.3 மில்லியன் அமெரிக்க டொலர்) மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி (ரூபா 3,200 மில்லியன்) உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் கருத்திட்டமானது நீர் மற்றும் சாக்கடை ஆகிய இரண்டு ஆக்கக்கூறுகளையும் உள்ளடக்கியுள்ள இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதலாவது கருத்திட்டமாகவும் கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களுக்குப் புறம்பாக உள்ள 01வது பாரிய சர்கடைக் கருத்திட்டமாகவும் உள்ளது.

இக்கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள் யாதெனில், பாதுகாப்பான குடிநீர் வழங்கலையும் போதியளவு துப்புரவேற்பாட்டு வசதிகளையும் வழங்குவதன் மூலம் குருணாகல் நகரத்தைச் சுற்றிலும் வசிக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலாகும். கருத்திட்டம் பிரதானமான இரண்டு ஆக்கக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

நீர் வழங்கல் ஆக்கக்கூறு

தற்போது குருணாகல் மாநகரசபைப் பிரதேசத்தில் நீர் வழங்கல் வசதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால், இது குருணாகல் பிரதேச சபைப் பிரதேசத்திற்கு ஓரளவு விஸ்தரிக்கப்படவுள்ளது. மொத்த நலன்பெறுனர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 71,000 ஆகும். இதற்கு மேலதிகமாக, இதன் மூலம் குருணாகல் போதனா வைத்தியசாலைக்கும் குருணாகல் மாநகரசபைப் பிரதேசத்தில் வசிக்கின்ற 35,000 பேர்களான தற்போதைய நீர் பாவனையாளர்களுக்கும் 24 மணி நேர தடைப்படாத நீர் வழங்கலையும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், புலம்பெயரும் சனத்தொகையினரான ஏறத்தாழ ஓர் இலட்சம் மக்களும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளைப் பெறுவார்கள்.

புதிய உள்வாங்கு கட்டமைப்புடனான பம்பி நிலையம், சுத்திகரிக்கப்படாத பிரதான அனுப்பல் குழாயை (8.5 கி.மீ. - 500 மி.மீ. Dl) இடுதல், தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நாளொன்றுக்கு 9000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்டதாக மேம்படுத்தல், நாளொன்றுக்கு 5,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணித்தல் 100% பூர்த்தியடைந்துள்ளது. மூன்று வலயங்களுக்கு விநியோக வலையமைப்பை விஸ்தரித்தல் (ஏறத்தாழ 118 கி.மீ.) 98% பூர்த்தியடைந்துள்ளது. 1500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உயர்த்தப்பட்ட நீர்த் தாங்கி 100% பூர்த்தியடைந்துள்ளது.

6,500 புதிய நீர் இணைப்புகளை வழங்குதல், குருணாகல் போதனா வைத்தியசாலைக்கான பிரதான நீர் வழங்கல் குழாய் ஆகியனவும் இக்கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

சாக்கடை ஆக்கக்கூறுகள்

குருணாகல் நகரத்தைப் பொறுத்தவரை, முழு மாநகரசபைப் பிரதேசமும், எவ்வித கழிவுநீர் சுத்திகரிப்பு முறையும் காணப்படாமையால், தலத்திலான துப்புரவேற்பாட்டின் மீதே தங்கியுள்ளது. வாவியைச் சுற்றிலும் அமைந்துள்ள சில ஹோட்டல்கள் அவற்றின் கழிவுகளை நேரடியாகவே வாவிக்கு விடுவிக்கின்றன. இந்நிலைமையானது நகரத்தினுள் கடும் சுற்றாடல் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான ஒரு சாக்கடைத் திட்டம் இப்பிரதேசத்தில் உள்ளதோடு, இது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முற்றிலும் இயங்கவில்லை.

மேற்படி அனைத்துக் காரணிகளையும் கவனத்திற்கொண்டு, குருணாகல் போதனா வைத்தியசாலை உள்ளிட்டதாக மாநகரசபை எல்லையினுள் வசிக்கின்ற 43,000 மக்களை உள்ளடக்கியதாக சாக்கடை முறைமையொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டது. இக்கருத்திட்டமானது மாநகரசபை எல்லையினுள் எழுகின்ற பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்கும்.

சாக்கடை சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

சாக்கடைக் கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகள் பூர்த்தியடைதலை அண்மித்த நிலையில் உள்ளது. சாக்கடை சுத்திகரிப்புப்பொறித்தொகுதி (நாளொன்றுக்கு 4,500 க.மீ. கொள்ளளவு) மற்றும் அதன் பம்பி நிலையம் 100% பூர்த்தியடைந்துள்ளது. சாக்கடை வலையமைப்பின் 6 பம்பி நிலையங்களினதும் நிர்மாணிப்பு வேலைகள் 94% பூர்த்தியடைந்துள்ளது. 138 கி.மீ. நீளமான சாக்கடை வலையமைப்பில் 98.5 கி.மீ. இடுதல் பூர்த்தியடைந்துள்ளது. குருணாகல் போதனா வைத்தியசாலையின் சாக்கடை வலையமைப்பும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 98.2% மற்றும் 73.75% ஆகும்.

ISO 9001:2015 தரநியமத்தைப் பெறுதல் 2017 ஜூன் 03 ஆம் திகதி, தேசிய வழிப்படுத்தல் குழுக் கூட்டம் 2017 மார்ச் 28 இல் நடாத்தப்படுதல், உள்வாங்கு நிலையம், மூல நீர் பிரதான குழாய் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றின் பரீட்சிப்புத் தொழிற்பாடு நடைபெற்று வருதல் ஆகியவற்றை 2017 ஆம் ஆண்டினுள் கருத்திட்டத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகளாகக் கருதலாம்.

கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், குருணாகல் மாநகரசபைப் பிரதேசத்தைச் சுற்றிலும் வசிக்கின்ற மக்கள் 24 மணி நேரமும் போதியளவானதும் பாதுகாப்பானதுமான குடிநீர் வசதிகளையும் அனைத்து வீடுகள், நிறுவனங்கள், வைத்தியசாலை ஆகியனவும் ஒழுங்கான துப்புரவேற்பாட்டு வசதிகளையும் பெறுவார்கள் என்பதோடு, பிரதேசத்தின் சுற்றாடல் நிலைமைகளும் மேம்படுத்தப்படும்.

கருத்திட்டமானது, குருணாகல் நகரத்தின் நீர் வழங்கல் உள்ளடக்கத்தையும் துப்புரவேற்பாட்டு வசதிகளையும் மேம்படுத்துவதற்கும் அதேவேளை பொதுமக்களின் அரோக்கியமான வாழக்கைத் தரத்தை உறுதிசெய்வதற்கான சுற்றாடல் நேயம்மிக்க சூழலை மேம்படுத்துவதற்குமான திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6). நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT) கருத்திட்டம்

நீர்கொழும்பு, காலி – உனவட்டுன மற்றும் களனிய – பேளியகொட ஆகிய தெற்கு மற்றும் மேற்குக் கரையோரங்களில் வசிக்கும் 200,000 மக்களுக்கு கழிவுநீர் அகற்றல் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் SHIFT கருத்திட்டத்தின் நோக்காகும்.

நீர்கொழும்பு நகரத்திற்கான கழிவுநீர் அகற்றல் உட்கட்டமைப்பு வசதியை வழங்குதல், கற்கைகள், காலி – உனவட்டுன மற்றும் களனிய – பேலியகொட பிரதேசங்களுக்கான விபரமான வடிவமைப்பு மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்களை செய்தல், கருத்திட்ட பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதற்கான வறியோர் சார்பான நிதியம் ஆகியவற்றை SHIFT 1 உள்ளடக்குகின்றது.

இதற்கு மேலதிகமாக, நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறை நிறுவன வரைச்சட்டகத்தை மேம்படுத்துவதற்கான சிபாரிசுகளை வழங்குவதற்கு தொழில்நுட்ப உதவி (TA) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குதல், அதன் நிலைபேறான நிதியிடலை உறுதிசெய்தல் மற்றும் சாக்கடை முகாமைத்துவத் திறன் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றையும் இது வழங்குகின்றது.

அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவராண்மையுடன் (AFD) யுரோ 76 மில்லியன் தொகைக்கான கடன் உடன்படிக்கை 2016 ஜூனில் கைச்சாத்திடப்பட்டதோடு, AFD ஊடாக ஐரோப்பிய சங்கத்தினால் நிதியளிக்கப்படும் TA ஆக்கக்கூறுகளுக்கான யுரோ 5.7 மில்லியனுக்கான அன்பளிப்பு உடன்படிக்கை 2016 மார்ச் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தின் (GOSL) பங்களிப்புடன் மொத்த கருத்திட்டச் செலவு யூரோ 107.7 மில்லியனாகும்.

வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை வேலைகளுக்கான ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கான ஆலோசனை மற்றும் கொள்கை மற்றும் நிறுவன மேம்பாட்டு ஆலோசனை ஒப்பந்தத்தின் பெறுகைகள் அநேகமாக 2017 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டதோடு, ஆலோசகர்கள் 2018 மார்ச் மாதத்தில் தலத்தில் செயற்பட உத்தேசமாயுள்ளனர்.

TA இன் கீழான முகாமைத்துவ உதவி ஆலோசனைச் சேவை ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதோடு, ஆலோசகர் 2017 இல் செயற்பட ஆரம்பித்தார்.

நீர்கொழும்பு நகரத்திற்கான வடிவமைப்பு மற்றும் விலைக் கேள்வி ஆவணங்கதை தயாரிப்பதை 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கும் 2022 ஆம் ஆண்டில் நிர்மாணிப்புகளை நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

களனி/பேலியகொட மற்றும் காலி/உனவட்டுனவுக்கான விபரமான வடிவமைப்பு மற்றும் ஆவணப்படுத்தல்கள் 2018 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளதோடு 2022 இல் நிறைவு செய்யப்படவுள்ளது.

7.) கதிர்காம கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

மாணிக்க கங்கை மற்றும் சுற்றறிலுமுள்ள சுற்றாடல் மேலும் மாசடைவதை தடுக்கும் பொருட்டு நகர எல்லைப் பிரதேசங்களில் உள்ள யாத்திரிகர் ஓய்வுகூடங்கள், ஹோட்டல்கள், கடைகள், வீட்டு அலகுகள் மற்றும் அலுவலகங்களுக்கு குழாய்வழி சாக்கடை வசதிகளை வழங்குவதற்கு கதிர்காமம் புனித நகர கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம் கவனம் செலுத்தியுள்ளது. சாக்கடை வலையமைப்பை விஸ்தரிப்பதன் மூலம் தற்போதுள்ள முறைமையை தரமுயர்த்துதலையும் சாக்கடை சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை மேம்படுத்தலையும் பிரதான விடயப்பரப்பு உள்ளடக்குகின்றது. கதிர்காமத்துக்கு வருகை தருகின்ற பெருமளவு சனத்தொகையினருக்கு வசதியளிக்கும் பொருட்டு இயந்திரவியல் காற்றூட்டல் கருவியை பொருத்துதவன் மூலம் தற்போதுள்ள நாளொன்றுக்கு 750 கன மீற்றர் கொள்ளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித் தொகுதி நாளொன்றுக்கு 3,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்டதாக தரமுயத்தப்படும். இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு Uni Credit Bank Austria AG நிதியளிப்புச் செய்கின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 2,040 மில்லியனாகும்.

கருத்திட்ட வேலைகள் 2014 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாட்டு ஆக்கக்கூறுகளின் கீழான விடயப்பரப்பு 2017 திசெம்பரில் நிறைவு செய்யப்பட்டது. நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 15,000 ஆகும். பம்பிகளை பொருத்துதல் மற்றும் தேவையான மின்னியல் பொருட்களுடன் கூடியதாக 7 பம்பி நிலையங்கள், 16.5 கி.மீ. நீளமான சாக்கடைக் குழாய் வலையமைப்பு, கீழ் நீரோட்ட முதிர்ச்சித் தடாகத்துடனும் காற்றூட்டல் நீரோடைகளுடனும் கூடியதாக நாளொன்றுக்கு 3000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் சேறு சுத்திகரிப்பு முறைமையை நிர்மாணித்தல் கருத்திட்டத்தின் ஆக்கக்கூறுகளாகும்.

சேறு சுத்திகரிப்பு முறைமை தவிர்ந்த அனைத்து ஆக்கக்கூறுகளும் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கருத்திட்ட முகாமைத்துவ அலகு 2014 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. காணி கொள்ளல் பணிகளில் 80% நிறைவு செய்யப்பட்டுள்ளது. கருத்திட்டத்துக்கான சுற்றாடல் தாக்க மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, அங்கீகாரம் பெறப்பட வேண்டியுள்ளது. கருத்திட்டத்தின் பிரதானமான விடயப்பரப்பை ஒப்பந்தகாரர் பூர்த்தி செய்துள்ளார் என்பதோடு சேறு சுத்திகரிப்பு முறைமை தவிர முறைமையானது தொழிற்பட்டு வருகின்றது. உள்நாட்டு ஆக்கக்கூறுகளின் கீழ் சேறு சுத்திகரிப்பு முறைமை நிறைவு செய்யப்படவுள்ளதோடு, கேள்விப்பத்திர ஆவணங்கள் ஏற்னவே தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் கோரப்படவுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட காற்றூட்டல் நீரோர்

இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சாக்கடைக் கருத்திட்டங்கள்

மேல் மாகாணம்

மொரட்டுவை / இரத்மலானை பிரதேசம் - இரத்மலானை ரஜ மாவத்தை வரை குழாய்களை நீடித்தல்

அவசர நீர் வழங்கல் மற்றும் சாக்கடை கருத்திட்டம் - 2016 க்கான ஏற்பாடுகளின் கீழ் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் இரத்மலானை ரஜ மாவத்தையின் சாக்கடை நீடிப்படை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 48.7 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரத்மலானை / மொரட்டுவை சாக்கடைக் கருத்திட்டத்தின் கட்டம் 11 இன் நீரேந்து பிரதேசத்தில் 250 வீடுகளை இக்கருத்திட்டம் உள்ளடக்குகின்றது. ஒப்பந்தம் 2017 ஜூன் மாதத்தில் கையளிக்கப்பட்டதோடு, 60மூ நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

குழாய்வழிக் கருத்திட்டங்கள் (சாக்கடை)

மேல் மாகாணம்

1. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயின் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயின் துரித அபிவிருத்தியைத் தொடர்ந்து, அநேகமான அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகள், வீடமைப்புத் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் பிரதான வீதி நெடுகிலும் வர்த்தக அபிவிருத்திக்காகவும் துண்டாடப்பட்டுள்ளது. கட்டட்ங்களுக்கான காணித்துண்டுகளின் அளவு குறைவடைந்துள்ளமையாலும், காணிகளுக்கு பக்கத்தில் ஆழமற்ற கிணறுகள் உள்ளதாலும், வழங்கப்பட்டுள்ள கட்டடக் காணித் துண்டுகளில் ஒழுங்கான நச்சுத்தடை தாங்கிகளை தாபித்தல் சிரமமாக காணப்படுகின்றது.

காணித் தேவைகளை நிறைவு செய்வதற்காக தாழ்நில பிரதேசங்களும் நிரப்பப்பட்டு வருகின்றன. இது சதுப்பு நிலங்களிலும் நீர் வழிகளிலும் உள்ள நீர் பரவுவதை அதிகரிக்கச் செய்துள்ளதோடு வெள்ளப் பெருக்குக்கும் பங்களிப்புச் செய்கின்றது. நில நீர் மட்டம் அதிகரிப்பதைத் தொடர்ந்தும், மண்ணின் ஊடுறுவும் தன்மை குறைவாயுள்ளமையாலும், குறைவாகச் செயற்படுகின்ற நச்சுத்தடை தாங்களிலிருந்தும் நிலத்தில் உறிஞ்சப்படும் குழிகளிலிருந்தும் பெருமளவிலான கழிவுநீர் பக்கதிலுள்ள வடிகாண்களிலும் அதேபோன்று அருகிலுள்ள நில மேற்பரப்பு நீரிலும் ஒன்றுசேர்வதன் மூலம் இறுதியாக நில நீர் மூலங்கள் மாசடையச் செய்யப்படுகின்றன. ஆதலால், வெலிகட - ராஜகிரிய பிரதேசம் அதேபோன்று ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபைப் பிரதேசம், கடுவெல பிரதேச செயலாளர் பிரதேசத்தின் பகுதிகள் மற்றும் மஹரகம நகரசபைப் பிரதேசம் ஆகியவற்றில் இடம்பெறுகின்ற துரித அபிவிருத்தியை முன்னிட்டு இப்பிரதேசங்களின் கழிவுநீர் அகற்றல் தேவையை நிறைவு செய்யக் கூடியவாறு மத்தியமயப்படுத்தப்பட்ட சாக்கடை முறைமையொன்றின் தேவை அவசியமாகக் காணப்படுகின்றது.

உருவாகின்ற கழிவுநீர் ஈர்ப்புவிசை மற்றும் பிரதான பம்பிக் குழாய் மூலம் சேகரிக்கப்பட்டு பத்தரமுல்லை, கொஸ்வத்த வீதியில் அமைந்துள்ள சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் சுத்திகரிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவுகள் தியவன்ன ஓயவுக்கு விடுவிக்கப்படும். ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்தின் சாத்திய வளக் கற்கை JICA ஊடாக நடைபெற்று வருவதோடு, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுக் கற்கை நடைபெற்று வருகின்றது.

2. மஹரகம மற்றும் பொரலெஸ்கமுவ கழிவுநீர் அகற்றல் முறைமை

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம், தேசிய புற்றுநோய் நிறுவனம் போன்ற பல முக்கியமான தேசிய நிறுவனங்கள் மஹரகம பிரதேசத்தில் அமைந்துள்ளன. மஹரகம மற்றும் பொரலஸ்கமுவ நகரங்களில் இடம்பெறுகின்ற துரித அபிவிருத்திக்கான தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டும் சுற்றாடல் மேலும் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டும் மத்தியமயப்படுத்தப்பட்ட சாக்கடை முறைமையொன்று அத்தியாவசியமாயுள்ளது.

இரத்மலான-மொரட்டுவை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரத்மலான-மொரட்டுவை சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு மஹரகம பொரலஸ்கமுவவின் கழிவுநீர் பாய்ச்சப்படுகின்றது. இதன் மூலம் 5000 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 5,125 மில்லியனாகும்.

கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2014 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதி M/s CCOEC- GSE JV (China National Corporation for Overseas Economic Corporation and Golden State Environment Corporation Joint Venture) க்கு வழங்கப்பட்டதோடு, சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி நிதியிடுகின்றது. சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடனான கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. M/s Uni Consultancy services மூலமான ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE) கற்கை நடைபெற்று வருகின்றது. இறுதி அறிக்கையின் வரைவு தொடர்பிலான IEE தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நடத்தப்பட்டது. பம்பி நிலையத்துக்கான காணி கொள்ளல் நடைபெற்று வருகின்றது.

3. தெஹிவல / கல்கிசை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

தெஹிவளை கல்கிசையானது முறையே இலங்கையின் வர்த்தக தலைநகரம் மற்றும் நிர்வாகத் தலைநகரமாகிய கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேக்கு பக்கத்தில் அமைந்துள்ளதால் அது உயர்ந்தளவு நகரமயமாக்கப்பட்ட, வதிவிட மற்றும் வர்த்தகமயமாக்கப்பட்ட நகரமாக உள்ளது. இது கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதோடு, தெஹிவளை மற்றும் இரத்மலான பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

சாக்கடை சேவை வழங்கப்படாத பிரதேசங்களில் ஒழுங்கான கழிவு நீர் அகற்றல் முறைமையொன்று இன்மையின் காரணமாக தற்போது இங்கு குழாய் சாக்கடை முறைமைக்கான அதிகளவு கேள்வி நிலவுகின்றது. ஆதலால் தெஹிவளை கல்கிசையின் ஏனைய பிரதேசங்களுடன் கெஸ்பாவ பிரதேச செயலாளர்

பிரிவின் பக்கத்திலுள்ள மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உத்தேச கருத்திட்ட பிரதேசத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற மதிப்பிடப்பட்ட மொத்த பரப்பளவு அண்ணளவாக 919 ஹெக்ரயார்களாகும் என்பதோடு, 2040 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை 138,230 ஆகும். உத்தேச கருத்திட்டமானது 41.2 கி.மீ. ஈர்ப்பு விசை சாக்கடை பிரதான குழாய், 4.1 கி.மீ. ஈர்ப்பு விசை பிரதான சுரங்கக் குழாய், 39 கி.மீ. பிரதான மற்றும் கிளை சாக்கடைக் குழாய்கள், 12 ஈரழிப்புக் கிணறு பம்பி நிலையங்கள், 6.5 கி.மீ. பிரதான பம்பிக் குழாய் மற்றும் 1.7 கி.மீ. நீளமான கடலுக்கு செலுத்தப்படுகின்ற குழாய் (1500 மி.மீ. விட்டம்) ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 28,523 மில்லியன் ஆகும்.

தற்போது ஒப்பந்தத்தை M/s Vinci Construction Grands Projects/ LUDWIG PFEIFFER Hoch-u Tiefabau GmbH& Co. க்கு கையளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கருத்திட்டத்தின் EIA கற்கை, M/s Uni Consultancy services மூலம் மேற்கொள்ளப்பட்டதோடு, EIA இறுதி அறிக்கையானது சுற்றாடல் அனுமதியைப் பெறுவதற்காக CEA க்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. பம்பி நிலையத்துக்கான காணி ஏற்கனவே P&D (சாக்கடை) பிரிவினால் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு கொள்ளல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

4. கம்பஹா கழிவு நீர் அகற்றல் கருத்திட்டம்

இலங்கையின் வர்த்தக மற்றும் நிர்வாகத் தலைநகரங்களான கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுரவுக்கு கொழும்பு - கண்டி அதிவெக பாதை மற்றும் கொழும்பு - கண்டி புகையிரப் பாதையின் A வகுப்பிலான வீதி வலையமைப்பின் ஊடாக இணைப்பட்டுள்ளதால் கம்பஹ ஒரு நகரமென்ற வகையில் உயர்ந்தளவு பிரவேச வசதியைக் கொண்டுள்ளது. உயர்ந்தளவு பிரவேச வசதிகளைக் கொண்டுள்ளதாலும் கம்பஹ மாவட்டத்தின் பிரதானமான நிர்வாக மத்திய நிலையமாக விளங்குவதாலும் கம்பஹா நகரம் நாளாந்தம் ஏறத்தாழ ஓர் இலட்சம் புலம்பெயர் சனத்தொகையை ஈர்க்கக்கூடியதாக உள்ள அதேவேளை ய்கல மற்றும் மிரிஸ்வத்த இறுபதாயிரம் மதிப்பிடப்பட்ட சனத்தொகையை ஈர்க்கக்கூடியதாக உள்ளது. இதைத் தவிர, கம்பஹ மாநகரசபை மேல் மாகாணத்தில் அமைந்துள்ளதாலும் இலங்கையின் வர்த்தக தலைநகரமான கொழும்புக்கு பக்கத்தில் அமைந்துள்ளதாலும் உயர்ந்தளவு நகரமயமாக்கப்பட்ட மற்றும் வர்த்தகமயமாக்கப்பட்ட நகரமாக காணப்படுகின்றது.

உத்தேச கருத்திட்ட பிரதேசமானனது, கம்பஹ மாநகர சபைப் பிரதேசத்தின் கம்பஹ நகரம், யக்கல மற்றும் மிரிஸ்வத்தை உள்ளடங்கலாக 21 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கின்றது. 2045 ஆம் ஆண்டில் நேரடியாகவே சேவையாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உள்ளூர் சனத்தொகை 21 கிராம அலுவலர் பிரிவுகளில் 33,601 ஆகும். உத்தேச கருத்திட்டத்தின் மூலம் நிரந்தரமாக வதிபவர்களுக்கு மேலதிகமாக பிரதேசத்திற்கு வந்துசெல்கின்ற 172,175 பேர் நன்மையடைவார்கள். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 20,751 ஆகும்.

உத்தேச கழிவுநீர் அகற்றல் முறைமையானது, 30.4 கி.மீ. ஈர்ப்பு விசை சாக்கடை பிரதான குழாய், 61 கி.மீ. பிரதான மற்றும் கிளை சாக்கடைக் குழாய்கள், 6.4 கி.மீ. பிரதான பம்பிக் குழாய், 17 பம்பி நிலையங்கள் மற்றும் நாளொன்றுக்கு 15,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்றதோடு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது அத்தனகலு ஓயாவுக்கு செலுத்தப்படுகின்ற 3.1 கி.மீ. நீளமான வெளியேற்றல் குழாயின் மூலம் அகற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது கருத்திட்டத்துக்கு கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

வடமேல் மாகாணம்

1. சிலாபம் கழிவுநீர் அகற்றல் முறைமை

சிலாபம் கொழும்பிலிருந்து 75 கி.மீ. வடக்காக அமைந்துள்ள சனநெருக்கடி மிக்க நகரமொன்றாகும் என்பதோடு, தெங்கு, இறால் மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்றதாகும். சிலாபத்தின் புவிப்பண்பியலின் சமதரையான நிலைமையின் காரணமாக, இனங்காணப்பட்ட வடிகாலமைப்பு முறையொன்று இங்கு காணப்படுவதில்லை, எனினும் நான்கு பிரதான மழைநீர் வடிகால் கால்வாய்கள் நேரடியாகவே கடலுக்கு விடப்படுகின்றது. கால்வாய் மட்டங்களில் உள்ள தவறுகளின் காரணமாக வடிகால் முறைமை குறிப்பாக சவாலானதாக உள்ளதுடன் நீரேரியின் நீர் நகரப் பிரதேசங்களில் பிரதான வடிகால்களின் ஊடாக உள்நோக்கி பெருக்கெடுக்கின்றது. சிலாபம் நகர சபை தாங்கிகளிலிருந்தும் குழிகளிலிருந்தும் சேகரிக்கின்ற கழிவுகளை நேரடியாகவே நில மேற்பரப்பில் அகற்றுகின்றது. ஆதார வைத்தியசாலையிலிருந்து கழிவு நீர் நேரடியாக கடலுக்கும் புகையிரத வீதிக்கும் இடையே அமைந்துள்ள தடாகமொன்றுக்கு அகற்றப்படுகின்றது.

முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு 1000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியுடன் 500 மீற்றர் நீளமான கடல்வழிக் குழாய் முன்மொழியப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 3,776 மில்லியனாகும் என்பதோடு 1050 வீடுகள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படும். கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2014 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதி M/s CCOEC-GSE JV (China National Corporation for Overseas Economic Corporation and Golden State Environment Corporation Joint Venture) க்கு வழங்கப்பட்டதோடு, சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி நிதியிடுவதற்கு உத்தேசமாயுள்ள வங்கியாகும். சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) இறுதி அறிக்கையின் வரைவு, கருத்துக்களைப் பெறுவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தரப்பினர்களின் கூட்டம் நடாத்தப்பட்டதோடு ஏற்புடைய மேலாண்மைகளிலிருந்தான கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

2. புத்தளம் கழிவுநீர் அகற்றல் முறைமை

புத்தளம் கொழும்புக்கு வடக்கே 125 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சிறிய மற்றும் சனநெருக்கடி மிக்க நகரமொன்றாகும் என்பதோடு உப்பு மற்றும் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பிரசித்திபெற்றதாகும். புத்தளம் கடல் நீரேரி இலங்கையில் மிகப் பெரிய கடல் நீரேரிகளில் ஒன்றாகும். நுரைச்சோலை நிலக்கரி நீர் மின் நிலையம் புத்தளத்திலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் கற்பிட்டி தீபகற்பத்தில் அமைந்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு 1000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதியுடன் 500 மீற்றர் நீளமான கடல்வழிக் குழாய் முன்மொழியப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 4,025 மில்லியனாகும் என்பதோடு 1250 வீடுகள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படும்.

கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2014 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதி M/s CCOEC- GSE JV (China National Corporation for Overseas Economic Corporation and Golden State Environment Corporation Joint Venture) க்கு வழங்கப்பட்டதோடு, சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி நிதியிடுவதற்கு உத்தேசமாயுள்ள வங்கியாகும். சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) இறுதி அறிக்கையின் வரைவு, கருத்துக்களைப் பெறுவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தரப்பினர்களின் கூட்டம் நடாத்தப்பட்டதோடு ஏற்புடைய மேலாண்மைகளிலிருந்தான கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

தென் மாகாணம்

1. அம்பாந்தோட்டை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

சர்வதேச துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான அதிக சாத்தியத்தன்மையைக் கொண்டுள்ள இயற்கைத்

துறைமுகத்துடன் இணைக்கப்பட்டதான பொருளாதார மத்திய நிலையமாக அம்பாந்தோட்டை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள உட்கட்டமைப்புகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், கைத்தொழில் வலயம் மற்றும் நிர்வாக மத்திய நிலையம், சர்வதேச மாநாட்டு நிலையம், தாவரவியல் பூங்கா, சர்வதேச விளையாட்டுக்கள் தொகுதி மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இதன் மூலம் 9,034 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. துறைமுக வளவுகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு சேவையாற்றும் பொருட்டு அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திப் பிரதேசத்தில் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 11,519 மில்லியனாகும்.

அம்பாந்தோட்டை கழிவு நீர் கருத்திட்டம் M/s China Textile Industrial Corporation for Foreign Economic and Technical Cooperation க்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு, இரண்டு தரப்பினர்களுக்கும் மத்தியில் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. பம்பி நிலையத்திற்கும் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்குமான காணி ஏற்கனவே கொள்ளப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் EIA கற்கைக்கான சுற்றாடல் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

உத்தேச கழிவுநீர் அகற்றல் முறைமையானது, 42 கி.மீ. நீளமான ஈர்ப்புவிசை பிரதான குழாய், 72 கி.மீ. நீளமான பிரதான மற்றும் கிளை சாக்கடைக் குழாய்கள், 14 கி.மீ. நீளமான பிரதான பம்பிக் குழாய், 12 பம்பி நிலையங்கள் மற்றும் நாளொன்றுக்கு 12,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றை உள்ளட்கியுள்ளதோடு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுகள் நீர்ப்பான நோக்கத்துக்காக மீளப் பயன்படுத்தப்படும்.

2. மாத்தறை கழிவுநீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை

மாத்தறை இலங்கையின் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலுள்ள பிரசித்திபெற்றதொரு நகரமாகும். தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பிராந்திய கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் முதல் நிலையிலுள்ள நகர மத்திய நிலைமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கு இந்நகரம் இனங்காணப்பட்டுள்ளது. முதல் நிலையிலுள்ள நகரமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற ஒரு நகரமாகையால், நகரத்தில் உருவாகின்ற கழிவுநீரைக் கையாள்தல் முக்கியமாகும். மாத்தறை பட்டினமும் நகர்சார்ந்த பிரதேசம் மற்றும் 38 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய மாத்தறை மாநகரசபைப் பிரதேசத்தில் ஏறத்தாழ 74,193 மக்கள் வசிக்கிறார்கள். மேலும் உத்தேச கருத்திட்டத்தின் மூலம் 37 கிராம அலுவலர் பிரிவுகள் நன்மை பெறும். ஏறத்தாழ 69,471 சனத்தொகையினரை உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, இக்கருத்திட்டத்துக்கான திட்டமிடப்பட்ட ஈரழிப்புக் காலநிலை பாய்ச்சல் நாளொன்றுக்கு 11,000 க.மீ. ஆகும். அண்ணளவாக சனத்தொகையில் 80% உத்தேச சாக்கடைத் திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படுகின்றனர். 15,312 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 21,362 ஆகும். மாத்தறை கழிவுநீர் கருத்திட்டத்துக்கு PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோடு, கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரம் NPD அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், மொத்த மதிப்பீட்டுச் செலவு 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டதோடு, திருத்தப்பட்ட மதிப்பீட்டுக்கு PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்துக்கான சாத்திய வளக் கற்கையை M/s ISAN corporation Korea மூலம் தே.நீ.வ.வ.ச.யின் ஒத்துழைப்புடன் நடத்துவதற்கும் கொரிய சுற்றாடல் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (KEITI) kw;Wk; M/s ISAN corporation of Korea மூலம் நிதி அளிப்பதற்கும் அங்கீகாரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணம்

1. காத்தன்குடி கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம்

காத்தன்குடி, கிழக்கு மாகாணத்தின், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு நகரத்துக்கு தெற்கே 7.0 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கரையோர நகரமொன்றாகும் என்பதோடு 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 3.89 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. காத்தான்குடி பிரதேசத்தினுள்ளேயே சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, இவ்வாண்டு காணி உரிமையாளர்களின் விருப்பமும் பெறப்பட்டது. இதன் மூலம் 13,308 சாக்கடை இணைப்புகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 11,407 மில்லியனாகும்.

காத்தன்குடி கழிவுநீர் கருத்திட்டம் ஏற்கனவே M/s Hunan Construction Engineering Group Corporation க்கு வழங்கப்பட்டுள்ளதோடு, அதனைத் தொடர்ந்து தே.நீ.வ.வ.சபைக்கும் ஒப்பந்தகாரருக்கும் இடையே உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. கடன் உடன்படிக்கை குறுகிய காலத்தில் கைச்சாத்திடப்பட உள்ளதோடு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IIE) கற்கை பேராதனை பல்கலைக் கழகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, கற்கைக்கான சுற்றாடல் அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது. பம்பி நிலையத்திற்கும் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்குமான காணி கொள்ளல் நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.

2. மட்டக்களப்பு கழிவுநீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் கருத்திட்டம்

மட்டக்களப்பு நகரமானது சுற்றுலாத் துறை அபிவிருத்தி மற்றும் கடற்றொழில் விரிவாக்கத்துக்கான உயர் சாத்தியத்தன்மையைக் கொண்டுள்ளமையின் காரணமாக, கடற்றொழில் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த நகரத் தொகுதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்நகரமானது, நகர நிலையங்களின் உத்தேச படிநிலையின்படி, 2030 ஆம் ஆண்டளவில் இரண்டாம் நிலையிலுள்ள சேவை நிலையமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இப் பிரதேசம் கடலுக்கும் கடனீரேரிக்கும் இடையிலான குறுகியதொரு தொடர் நிலப் பகுதியாக காணப்படுகின்றது. நில நீர் மட்டமானது மிகவும் ஆழமற்றதாக உள்ளதோடு, சனத்தொகை அடர்த்தியானது தலத்திலான துப்புரவேற்பாட்டை நிலைபேறற்றதாக ஆக்கியுள்ளது. ஆதலால், மட்டக்களப்பு சனத்தொகையின் சுகாதாரம் மற்றும் நல்லிருப்பை முன்னிட்டும், மீன்பிடித்துறை சார்ந்த வாழ்வாதாரமாக பயன்படுத்தப்படுகின்ற கடனீரேரிக்கு மாசடைந்த நீர் நேரடியாக விடுவிக்கப்படுவதைக் குறைப்பதற்காகவும், பொருத்தமானதொரு சாக்கடை முறைமை மிகப் பெரியதும் மிக அவசரமானதுமான தேவையாக இனங்காணப்பட்டுள்ளது. மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணிப்புகளுக்கான தற்காலிக செலவு மதிப்பீடு ரூபா 14,915 மில்லியனாகும்.

மட்டக்களப்பு கழிவு நீர் கருத்திட்டத்துக்கான PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோடு, கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரம் அங்கீகாரத்துக்காக NPD க்கு அனுப்பப்பட்டுள்ளது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணிப்பதற்காக DS இடமிருந்து 50 ஏக்கர் காணி பெறப்பட்டுள்ளது. பம்பி நிலையத்துக்கான காணி கொள்ளல் நடைபெற்று வருகின்றது. கருத்திட்டத்துக்கான EIA கற்கை 2018 இல் மேற்கொள்ளப்பட உள்ளது.

3. ஏறாவூருக்கான கழிவுநீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை

ஏறாவூர் அதன் பொருளாதார அபிவிருத்திக்கான உயர்ந்தளவு ஆற்றலைக் கொண்டுள்ளதால் பொருளாதாரம் சார்ந்த நகர மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. நகரமானது கமத்தொழில் முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் பொருளாதார வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறாவூரில் உள்ள கடனீரேரியின் பாதுகாப்பு மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்தல் முன்னுரிமையளிக்கப்பட்ட செயற்பாடுகளாக விளங்கும். இத்தலையீடுகள் பொருளாதார

மற்றும் கடற்றொழில் சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தலாம்.

நில நீர் மட்டமானது மிகவும் ஆழமற்றதாக உள்ளதோடு, சனத்தொகை அடர்த்தியானது தலத்திலான துப்புரவேற்பாட்டை நிலைபேறற்றதாக ஆக்கியுள்ளது. ஆதலால், ஏறாவூர் சனத்தொகையின் சுகாதாரம் மற்றும் நல்லிருப்பை முன்னிட்டு கடனீரேரிக்கு மாசடைந்த நீர் நேரடியாக விடுவிக்கப்படுவதைக் குறைப்பதற்காக, பொருத்தமானதொரு சாக்கடை முறைமை மிகப் பெரியதும் மிக அவசரமானதுமான தேவையாக இனங்காணப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் மூலம் 17 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள ஏறத்தாழ 40,364 சனத்தொகையினர் (8,073 குடும்பத்தினர்) நேரடியாக நன்மையடைவார்கள். மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணிப்புக்கான தற்காலிக செலவு மதிப்பீடு ரூபா 12,127 மில்லியன் ஆகும்.

கருத்திட்டத்துக்கான PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோடு, கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரம் NPD அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான காணிக்கு DS (ஏறாவூர்) இடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. பம்பி நிலையத்துக்கான காணி இனங்காணப்பட வேண்டியுள்ளது.

4. கல்முனைக்கான கழிவுநீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை

கல்முனை நகரம் கமத்தொழில் முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் பொருளாதார வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தலையீடுகள் பொருளாதார மற்றும் கடற்றொழில் சார்ந்த செயற்பாடுகளுக்கு வசதியேற்படுத்தி மேம்படுத்தும். கல்முனை மாநகரசபையானது அம்பாறை மாவட்டத்தில் கிழக்குக் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள தாழ் நில கரையோர நகரமொன்றாகும். இப்பிரதேசமானது ஏறத்தாழ 1 கி.மீ. கெலத்தையும் 10 கி.மீ. நீளத்தையும் கொண்ட கரையோரம் நெடுகிலும் உள்ள நிலப் பகுதியொன்றாகும்.

உத்தேச பிரதேசமானது கல்முனை தமிழ் பிரிவு, கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவு எனப்படும் மூன்று பிரதேச செயலாளர் பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது. இக்கருத்திட்டத்தின் மூலம் 75 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள ஏறத்தாழ 137,230 சனத்தொகையினர் (34,307 குடும்மபங்கள்) நேரடியாக நன்மையடைவார்கள். மேற்படி உத்தேச கருத்திட்டத்துக்கான ஈரழிப்புக் காலநிலை நீர்ப் பாய்ச்சல் நாளொன்றுக்கு 21,731 க.மீ. ஆகும்.

கழிவுநீர் ஏறத்தாழ 200 கி.மீ. குழாய்களை உள்ளடக்கிய கொண்டுசெல்லல் முறைமையின் மூலம் சேகரிக்கப்பட்டு, கல்முனை கடல் நோக்கிய வீதியில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு பம்பி செய்யப்படும். சுத்தகரிப்பு நடைமுறையானது தேவைப்படும் கழிவு அகற்றல் தரத்திற்கு மாசுக்களைக் குறைவடையச் செய்யம். மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணிப்புக்கான தற்காலிக செலவு மதிப்பீடு ரூபா 34,667 மில்லியன் ஆகும்.

கருத்திட்டத்துக்கு PAC அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. சபை அங்கீகாரம் 2018 இல் பெறப்பட வேண்டியுள்ளதோடு, கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரம் NPD அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட வேண்டியுள்ளது. பம்பி நிலையத்துக்கும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்குமான காணி இனங்காணப்பட வேண்டியுள்ளது.

ஊவா மாகாணம்

1) பதுளை கழிவுநீர் சேகரிப்பு மற்றும் அகற்றல் கருத்திட்டம்

பதுளை மாநகரசபைப் பிரதேசமானது அதிக நகரமயமாக்கப்பட்ட, குடியிருப்புகளைக் கொண்ட மற்றும் வர்த்தக நகரமாக காணப்படுகின்றதோடு குறிப்பிடத்தக்களவு அதிக கழிவுநீர் உருவாகுவதை காணக்கூடியதாக உள்ளது. பதுளை நகரத்தில் ஒழுங்கான கழிவுநீர் சேகரிப்பு மற்றும் அகற்றல் வசதிகள் இன்மையின் காரணமாக, நகரத்தைச் சுற்றிலுமுள்ள பதுளு ஓயவில் குறிப்பிடத்தக்களவு மாசடைதல் நிகழ்கின்றது. நகரத்தின் கீழ் நீரோட்டப் பிரதேசத்தில் வசிப்பவர்களின் பிரதானமான நீர் வளமாகக் காணப்படும் பதுளுஓயவின் நீரின் தரம் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதோடு, இது பதுளை மாநகர சபைப் பிரதேசத்துக்கான குழாய்வழி சாக்கடை முறைமையொன்றை தாபிப்பதற்கான தேவையை அதிகரிக்கச் செய்துள்ளது.

உத்தேச கருத்திட்ட பிரதேசமானது அதிக குடியேற்றப் பிரதேசமான பதுளுபிட்டிய, பதுளை கிழக்கு மற்றும் பதுளை மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பதுளை நகர் பிரதேசத்தை உள்ளடக்கியுள்ளது.

03 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 2044 ஆம் ஆண்டில் நேரடியாக சேவையாற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சனத்தொகை 16,798 ஆகும் (3,732 வீடுகள்). உத்தேச கருத்திட்டத்தின் மூலம் நிரந்தரமாக வதிபவர்களுக்கு மேலதிகமாக பிரதேசத்திற்கு வந்துசெல்கின்ற 27,000 பேர் நன்மையடைவார்கள். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 7,473 மில்லியனாகும்.

உத்தேச சாக்கடை முறைமையானது, கழிவுநீர் வலையமைப்பு முறைமை, 16.9 கி.மீ. ஈர்ப்பு விசை சாக்கடை பிரதான குழாய் உள்ளடங்கிய கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 10 கி.மீ. உப குழாய்கள், 5.3 கி.மீ. பிரதான பம்பிக் குழாய், 11 பம்பி நிலையங்கள், நாளொன்றுக்கு 4,000 க.மீ. கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்றதுடன் இறுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது பதுளுஓயவுக்கு விடுவிக்கப்படுகிறது.

திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை)

2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் வேலைகள்

திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை) பிரிவானது, உத்தேச சாக்கடைத் திட்டங்களுக்கான சாத்திய வளக் கற்கைகளை மேற்கொள்ளல், நடைமுறையிலுள்ள கழிவுநீர் அகற்றல் கருத்திட்டங்களின் வடிவமைப்பு மீளாய்வு, பல்வேறான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மீள்செறிவூட்டல் கருத்திட்டங்களுக்கான விபரமான வடிவமைப்புகளை மேற்கொள்ளல் அத்துடன் உத்தேச சாக்கடைக் கருத்திட்டங்களின் இணைப்பாக்கம், கண்காணிப்பு, சுற்றாடல் கற்கைகள் (சுற்றாடல் தாக்க மதிப்பீடு) ஆகிய ஆரம்பத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றதான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக பொதுமுகாமையாளர் (சாக்கடை) அலுவலகத்தின் கீழ் தொழிற்படுகின்றது.

2017 ஆம் ஆண்டு காலத்தினுள் கல்முனை, ஏறாவூர் மற்றும் பொலனறுவை நகர பிரதேசங்களுக்கு குழாய் கழிவுநீர் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான சாத்திய வளக் கற்கைகள் நிறைவு செய்யப்பட்டதோடு, அனைத்து சாத்திய வள அறிக்கைகளும் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டன. களுத்துறை, அழுத்கம நகர பிரதேசங்கள் உள்ளிட்ட கரையோரப் பகுதிக்கு குழாய் கழிவுநீர் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கானபுதிய சாத்திய வளக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும், உலக வங்கியின் மூலம் நிதியளிக்கப்படுகின்ற நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் (WaSSIP) கீழ் மொனறாகலை சாக்கடை சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான கழிவு நிலைபேறாக்கல் தடாக (WSP) முறைமை வடிவமைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் அறிவுரையின் கீழ் இரத்மலானை ரஜ மாவத்தைக்கான சர்கடை வலையமைப்பு முறைமை, சாக்கடை பம்பி நிலையம் ஆகியவற்றுக்கான விபரமான வடிவமைப்பு மற்றும் கேள்விப்பத்திரம் கோரல் மேற்கொள்ளப்பட்டது.

நடைமுறையிலுள்ள கதிர்காம புனித நகர பிரதேச சாக்கடை உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான வடிவமைப்பு, வரைதல்களை தயார் செய்தல், உத்தேச சேறு உலர்த்தல் மேடை, OIC விடுதி, சாக்கடைக் குழாய்களை வழங்கல் மற்றும் இடுதல் ஆகியவற்றுக்கான அளவைப் பத்திரம் மற்றும் மதிப்பீடு P&D (சாக்கடை) பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

குழாய்வழியிலான பாரிய சாக்கடைக் கருத்திட்டங்களுக்கான

EIA/IEE கற்கைகளின் ஆவணப்படுத்தல், கேள்விப்பத்திரம் கோரல் மற்றும் நிறைவேற்றல் ஆகியன P&D (சாக்கடை) பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. இதன் கீழ் கதிர்காமம் மற்றும் அம்பாந்தோட்டை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்துக்கான ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE) நிறைவு செய்யப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டு காலத்தினுள் CEA அனுமதி பெறப்பட்டது. மேலும், காத்தன்குடி, மஹரகம - பொரலஸ்கமுவ, சிலாபம் - புத்தளம் கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்துக்கான IEE கற்கை மற்றும் தெஹிவளை - கல்கிசை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்துக்கான EIA கற்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அம்பாந்தோட்டை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்துக்கான காணி கொள்ளல் நிறைவடைந்துள்ளது. மேலும், தெஹிவளை - கல்கிசை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, மஹரகம - பொரலஸ்கமுவ, மாத்தறை, சிலாபம் - புத்தளம், பதுளை, கம்பஹா, பொலனறுவை, காத்தன்குடி, மட்டக்களப்பு, கல்முனை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்திற்கான காணி கொள்ளல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் பம்பி நிலையத்துக்கான காணிப் பகுதிகளை சுவீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

"மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 05 தடவைகள் கூடியது"



கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

1999 நவெம்பர் 19 ஆம் திகதிய பீஎப்/பீ.ஈ/3 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க, 590 ஆம் இலக்க சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 2965(பீ) இலக்க சபைத் தீர்மானத்தின் ஊடாக தே.நீ.வ.வ.ச.யின் பணிப்பாளர் சபையின் இணக்கப்பாடு பெறப்பட்டு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது.

2010.12.14 ஆம் திகதிய PED 55 ஆம் இலக்க வழிகாட்டல்களுக்கமைய பணிப்பாளர் சபைக்கு உதவுதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நோக்கமாகும்.

குழுவின் குறித்துரைக்கப்பட்ட வகிபாகம் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு:

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் அவர்களது வினைத்திறனின் பக்கச்சார்பின்மையை தொடர்ந்து மீளாய்வு செய்யத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதியியல் அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்வதற்கான சபையின் மேற்பார்வைப் பணிக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உதவுதல் வேண்டும்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, அனைத்து ஏற்புடைய விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், மீளாய்வு மற்றும் கண்காணிப்பின்போது தொடர்ச்சியாக கடைப்பிடிக்கப்படுவதென்பதை உறுதி செய்வதற்கு சபைக்கு உதவுதல் வேண்டுமென்பதோடு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்களில் சபைக்கு சிபாரிசுகளைச் செய்தலும் வேண்டும்.
- கணக்காய்வு முற்றும் முகாமைத்துவக் குழுவானது உள்ளக/ வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள் மற்றும் COPE விதப்புரைகளை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதோடு, தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபைக்கு உதவுதலும் வேண்டும்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் சபைக்கு உதவுதல் வேண்டும்.

2017 ஆம் ஆண்டினுள் குழு பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது.

1. திரு. ஜே.எம்.யு.பீ. ஜயமஹ	- சபை உறுப்பினர்	- குழுவின் தலைவர்	
2. திரு. சாந்த ரத்நாயக்க	- சபை உறுப்பினர்		
3. திருமதி கே.ஏ. கபத்ரா வல்பொல	- சபை உறுப்பினர்		
4. திரு. ஜீ.ஏ. குமாரரத்ன	- பொது முகாமையாளர்		
திரு. டீ.யூ. சுமனசேகர	-		
5. திரு. டி. தொட்டவத்த	- மேலதிக பொ.மு. (நிதி)		
6. திரு. ஜீ.கே. இத்தமல்கொட	- மேலதிக பொ.மு. (ம.வ.மு.)		உறுப்பினர்
7. திரு. டபிள்யு.பி.ஜீ. பர்னாந்து	- மேலதிக பொ.மு. (CS)		
8. திரு. ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன	- பிரதி பொ.மு. (உ.க.)		
9. திரு. எம். ஷபீக் ரஜாப்தீன்	- உப தலைவர்		
10. செல்வி டீ.என். பீரிஸ்	- கணக்காய்வு அத்தியட்சகர்		
திரு. ஈ.ஏ.ஜீ. ஆனந்த	- பிரதி கணக்காய்வாளர் நாயகம்		
11. திருமதி எஸ்.டபிள்யு. குணவர்தன	- பிரதம உள்ளக கணக்காய்வாளர் – நகர மற்றும் நீர் வழங்கல் அமைச்சு		
12. திருமதி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா	- சபையின் செயலாளர்	- குழுவின் செயலாளர்	

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 05 தடவைகள் கூடியதோடு கலந்துரையாடிய விடயங்களில் பின்வருவன முக்கியமானவைகளாகும்.

i. 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பெறுகைகள் திட்டம்

ii. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

iii. 2018 வரவு செலவுத்திட்டம்

iv. 2016 ஆம் ஆண்டின் 3வது மற்றும் 4வது காலாண்டுகளுக்கான கணக்காய்வுச் சுருக்கம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 1வது, 2வது மற்றும் 3வது காலாண்டுகளுக்கான கணக்காய்வுச் சுருக்கம்

v. அரசாங்க கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலிறுத்தல்.

vi. 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று.

vii. வருவாயற்ற நீர் (NRW)

viii. தே.நீ.வ.வ.ச.யின் காசுப் பாய்ச்சல் கூற்று

ix. 2014.'.2015 மற்றும் 2016 ஆண்டறிக்கை

x. நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

xi. ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR)

xii. தே.நீ.வ.வ.ச.யின் கையேடு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஒவ்வொரு விதப்புரையும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு, சபைக் கூட்டத்தின்போது சில விடயங்கள் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டன.

நிதியியல் நிலைமைக் கூற்று

102 நிதியியல் நிலைமைக் கூற்று

103-104 வருமானக் கூற்று

105 உரிமை மூலதன மாற்றக் கூற்று

106 காசுப்பாய்ச்சல கூற்று

107-134 நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

135-172 2017 மார்கழி 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காளர் தலைமை அதிபரின் நிதிக்கூற்றுக்கள்




Rs

நிதி நிலைமைக் கூற்று
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

சொத்துக்கள்		2017 ரூபா	2016 ரூபா மீண்டும் கூறப்பட்ட மீதி
நடைமுறையல்லாச் சொத்துக்கள்	**குறிப்புகள்**		
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	15	**172,574,439,103**	162,321,652,152
கற்பனைச் சொத்துக்கள்	16	**6,485,383**	7,310,270
செயற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள்	17	**194,543,873,679**	158,512,035,894
நிதிச் சொத்துக்கள்	18	**8,230,469**	11,023,063
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**367,133,028,633**	320,852,021,379
நடைமுறைச் சொத்துக்கள்			
பொருளிருப்புகள்	19	**7,374,367,615**	6,643,472,555
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	20	**8,588,182,099**	6,512,154,920
வைப்புக்கள் மற்றும் முற்பணம்	21	**42,124,651,650**	26,830,599,011
முதலீடுகள்	22	**12,240,208,742**	10,265,721,944
காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்	23	**3,777,448,306**	12,092,709,720
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**74,104,858,412**	62,344,658,150
மொத்தச் சொத்துக்கள்		**441,237,887,046**	383,196,679,531
உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்			
உரிமை மூலதனம்			
அரசாங்க திணைக்களத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள்	24	**185,480,387**	185,480,387
அரசாங்க மூலதனம் (பங்கு)	25	**77,512,499,566**	69,470,969,610
உத்தியோகத்தர் நலன்புரி நிதியம்	26	**22,527,125**	17,228,139
நிறுத்திவைத்த இலாபங்கள்		**(8,053,512,615)**	(9,785,684,856)
அரசாங்க மானியங்கள்	27	**94,838,588,669**	92,742,583,734
மூலதன மானியங்கள்	28	**190,373,819,444**	181,542,682,665
உரிமை மூலதனம்		**354,879,402,575**	334,173,259,679
நடைமுறையல்லாப் பொறுப்புகள்			
பெறவேண்டிய கடன்கள்	29	**64,327,755,750**	34,441,527,519
ஏனைய பிற்போட்ட பொறுப்புகள்	30	**4,110,746,151**	4,125,023,486
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்		**68,438,501,901**	38,566,551,005
நடைமுறைப் பொறுப்புகள்			
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	31	**13,925,103,379**	9,831,046,543
செலுத்த வேண்டிய கடன் மூலதனம்		**2,833,921,592**	625,822,304
செலுத்த வேண்டிய கடன் வட்டி		**1,160,957,598**	
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**17,919,982,569**	10,456,868,847
மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்		**441,237,887,046**	383,196,679,531

டி.தொடவத்த
மேலதிக பொது முகாமையாளர் (நிதி)

டி. யூ. சுமனசேகர
பொது முகாமையாளர்

பக்க இலக்கம் 08 முதல் 15 வரையான பக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 16 முதல் 30 வரையான பக்கங்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறிப்புக்கள் யாவும் நிதி கூற்றுக்களின் முக்கியமான பகுதிகளாகும். நிதி கூற்றினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமாக பணிப்பாளர்கள் சபை பொறுப்புக் கூறுவர். இந்த நிதிக் கூற்றுக்கான அங்கீகாரம் பணிப்பாளர்கள் சபையினால் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் பொருட்டு கையொப்பமிடப்படுகின்றது.

கே. ஏ. அன்சார்
தலைவர்

எம். எச்.எம். சல்மான்
உப தலைவர்

விரிவான வருமானக் கூற்று
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்பு	பாதீடு 2017 ரூபா	உள்ளபடியானது 2017 ரூபா	உள்ளபடியானது 2016 ரூபா
				மீண்டும் கூறப்பட்ட மீதி
வருமானம்	7	29,523,486,200	**23,859,760,119**	23,584,727,487
விற்பனைக் கிரயம்	8	(15,807,092,652)	**(14,196,350,460)**	(13,485,727,343)
மொத்த இலாபம்		13,716,393,548	**9,663,409,658**	10,099,000,145
ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம்	9	1,126,924,800	**1,724,463,148**	1,477,546,705
நிர்வாகச் செலவினம்	10	(10,712,479,348)	**(9,935,315,824)**	(9,136,910,599)
ஏனைய செயற்பாட்டுச் செலவினம்	11	(550,000,000)	**(714,465,635)**	(680,664,041)
செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)		3,580,839,000	**738,091,347**	1,758,972,209
நிதி வருமானம்	12	600,000,000	**1,157,359,094**	1,236,278,724
நிதிக் கிரயம்	13	(8,198,000)	**(12,994,621)**	(3,281,535)
வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)		4,172,641,000	**1,882,455,821**	2,991,969,398
வருமான வரி ஒதுக்கீடு	14	(100,000,000)	**(65,683,426)**	(63,287,387)
ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)		4,072,641,000	**1,816,772,395**	2,928,682,011

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 30 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

விரிவான வருமானக் கூற்று
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	பாதீடு	உள்ளபடியானது	உள்ளபடியானது
	2017	2017	2016
	ரூபா	ரூபா	ரூபா
வருடத்திற்கான இலாபம்/நஷ்டம்	(4,072,641,000)	1,816,772,395	2,928,682,011
வருடத்திற்கான பிற விரிவான வருமானம்			
திறைசேரி பிணையின்		(79,301,168)	(541,135,514)
	4,072,641,000	1,737,471,227	(541,135,514)
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்	4,072,641,000	1,737,471,227	2,387,546,497

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 30 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

பங்கு மாற்றங்கள் சம்பந்தமான கூற்று

2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக.

	குறிப்பு	அரசாங்க திணைக்களங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற சொத்துக்கள்	அரசாங்க மானியங்கள்	அரச மூலதனம்	மூலதன மானியங்கள்	பணிக்குழாம் நலன்புரி நிதி	திரட்டிய இலாபம்/ நஷ்டம்	மொத்தம்
		ரூபா	ரூபா		ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2016 ஜனவரி 01 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை		185,480,387	91,517,718,832	63,736,423,921	164,846,710,175	16,506,484	(11,847,217,278)	308,455,622,521
முன்னைய ஆண்டுச் சீராக்கல் -								
சொத்துக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல்	35.1.1						22,447,765	22,447,765
சொத்துக்களை கண்டறிவதற்கும் அகற்றுவதற்குமான பெறுமானத்தேய்வுச் சீராக்கல்	35.1.2						19,932,321	19,932,321
நீண்டகாலமாக நிலுவையிலுள்ள முற்பணங்களை நீக்குதல்	35.2						(18,150,388)	(18,150,388)
புனரமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள்	35.2						(185,399,524)	(185,399,524)
இருப்புக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல்	35.2						(27,921,254)	(27,921,254)
வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகளை கண்டறிதலும், அகற்றுதலும்	35.2						(137,739,576)	(137,739,576)
வங்கி நிலுவைகளை சரி செய்தல்	35.2						(1,532,647)	(1,532,647)
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகளை சரி செய்தல்	35.2						3,378,627	3,378,627
2016.01.01 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை		185,480,387	91,517,718,832	63,736,423,921	164,846,710,175	16,506,484	(12,172,201,953)	308,130,637,846
ஆண்டிற்கான தேறிய இலாபம்							2,387,546,497	2,387,546,497
இருப்புக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல்							(14,984,026)	(14,984,026)
சொத்துக்களை கண்டறிதல், நீக்குவதற்காக தேய்வுகளை சீராக்குதல்	35.1.2						(2,377,620)	(2,377,620)
வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகளை கண்டறிதலும், அகற்றுதலும்							(2,716,099)	(2,716,099)
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகளை சரி செய்தல்							19,770,000	19,770,000
வருடத்தினுளான வரவுகள்/மாற்றங்கள்			2,216,825,457				-	2,216,825,457
தவறுகளை சரி செய்தல் உட்பட கடன், பங்கு மாற்ற மூலதனமாக மாற்றுதல்	35.2			5,734,545,689	15,962,447,745			21,696,993,434
கடன் தொகையை மூலதனமாக மாற்றுதல்			(991,960,556)		733,524,745			(258,435,811)
பணிக்குழாம் நலன்புரி நிதிக்கு மாற்றுதல்						721,655	(721,655)	-
2016.12.31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை		185,480,387	92,742,583,734	69,470,969,610	181,542,682,665	17,228,139	(9,785,684,856)	334,173,259,679
ஆண்டிற்கான தேறிய இலாபம்							1,737,471,227	1,737,471,227
வரவுகள் /மாற்றங்கள்			2,096,004,935		8,831,136,779			10,927,141,714
கடன் தொகையை மூலதனமாக மாற்றம்				8,041,529,956				8,041,529,956
மூலதனமாக மாற்றுதல்								-
பணிக்குழாம் நலன்புரி நிதிக்கு மாற்றுதல்						5,298,986	(5,298,986)	-
2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை		185,480,387	94,838,588,669	77,512,499,566	190,373,819,444	22,527,125	(8,053,512,615)	354,879,402,576

பக்க இலக்கம் 08 முதல் 30 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் யாவும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று

2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்பு	2017 ரூபா	2016 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
வரிக்கு முன்னரான தேறிய இலாபம் /(நட்டம்)		**1,882,455,821**	**2,989,591,779**
சீராக்கலிற்கானது			
வட்டி வருமானம்	12	**(1,157,359,094)**	**(1,236,278,724)**
நிலையான சொத்து கைதவிர்பில் இலாபம் /(நட்டம்)		**4,495,307**	**(13,600,051)**
பெறுமானத் தேய்வு	10.2	**3,339,845,190**	**2,724,963,394**
ஒய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு	29.1	**488,661,467**	**394,618,174**
ஆரம்ப மீதி சரிசெய்தல்		**-**	**-**
வட்டிச் செலவினம்	13	**12,994,621**	**3,281,535**
தொழிறிபடு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		**4,571,093,311**	**4,862,576,106**
பொருளிருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு		**(730,895,060)**	**(280,100,515)**
கடன்பட்டோர், பெறவேண்டியவை மற்றும் வைப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு		**(17,491,801,822)**	**(14,799,143,670)**
கடன்கொடுத்தோர் மற்றும் ஏற்பாடுகளில் அதிகரிப்பு)/ குறைவு		**4,094,056,836**	**423,509,912**
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு		**(9,557,546,735)**	**(9,793,158,167)**
செலுத்திய வரி		**(65,683,426)**	**(63,287,387)**
செலுத்திய பணிக்கொடை	11	**(488,661,467)**	**(394,618,174)**
செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசுப் பாய்ச்சல்		**(10,111,891,628)**	**(10,251,063,729)**
முதலீட்டு நடவடிக்கைகள் / பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
நிலையான சொத்துக்கள் மற்றும் நடைபெறும் வேலைகளில் முதலீடு		**(44,539,798,926)**	**(33,718,679,086)**
சொத்துக்களின் பற்றுதல்		**2,792,594**	**5,464,174**
கைதவிர்ப்பு சொத்துக்களிற்கான விற்பனை இலாபம்		**2,001,798**	**27,083,204**
பெறப்பட்ட முதலீட்டு வருமானம்		**1,157,359,094**	**1,236,278,724**
முதலீடுகளின் (முதலீடு) / பற்றுதல்கள்		**(8,783,171,959)**	**2,037,971,571**
செயற்பாட்டு நடவடிக்கைகள்/ (பயன்படுத்தலில்) இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		**(52,160,817,399)**	**(30,411,881,414)**
நிதி நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
முன்னைய ஆண்டின் போதான அரசாங்க மானியம்		**2,096,004,935**	**2,123,327,889**
முன்னைய ஆண்டின் போதான மூலதன மானியம்		**10,019,103,285**	**17,040,060,639**
புதிய கடன்கள்		**40,795,834,610**	**31,391,418,876**
கடன் திருப்பிச் செலுத்தல்கள்		**(659,977,136)**	**(896,230)**
செலுத்திய வட்டி		**(5,130,346,746)**	**(1,670,213,515)**
திறைசேரி பிணையின் ஊடான விற்பனைகள		**6,836,828,662**	**-**
		53,957,447,610	**48,883,697,659**
காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு		**(8,315,261,416)**	**8,220,752,516**
ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்		**12,092,709,720**	**3,876,918,395**
ஆண்டு இறுதியிலுள்ள் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்		**3,777,448,306**	**12,092,709,720**

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 30 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டு

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

1. திரட்டிய தகவல்கள்

1.1 பொதுவானவை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 1974 இன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரச்சட்டதின் கீழ் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டச் சபையொன்றாக உள்ளது. சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இரத்மலானை, காலி வீதியில் அமைந்துள்ளதுடன் வியாபாரத்தின் பிரதான அமைவிடம் அதே இடத்தில் அமைந்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது (என்டபிள்யூஎஸ்&டிபீ) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் மேற்பார்வையின் கீழான நிறுவனமொன்றாக உள்ளது.

1.2 பிரதான நடவடிக்கைகள்

சமுதாயத்திற்கான சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை தயார்செய்து விற்பனை செய்யவதே சபையின் பிரதான நடவடிக்கைகளாக உள்ளது.

நாடு முழுவதும் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை விருத்தி செய்து இலங்கையை சிறந்த நாடாக கட்டியொழுப்புவதே தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குறிக்கோள்களாக உள்ளது.

2. தயாரிப்பு அடிப்படை

2.1 நிதிக்கூற்றுக்களின் இணக்கம்

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

2011 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆணடும் மற்றும் அவ்வாண்டு வரையும் உள்ளடக்கிய சகல காலமும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது அதன் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்) அமைய தயாரித்திருந்தது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2012 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்க தயாரிக்கப்பட்டிருந்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை எப்படி எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ் ஐ பின்பற்றியது பற்றி தகவல் 7 ஆவது குறிப்பை பார்க்கவும்.

2.2 அளவீட்டு அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதிக் கூற்றுக்கள் ரூபா வில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடப்பட்டவற்றைத் தவிர சகல பெறுமதிகளும் அண்ணளவாக ஆயிரத்திற்கு (ரூபா 000) குறிப்பிடப்பட்டது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களானது கிரயம், திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய பெறுமதிகுறைப்பு நட்டங்கள் என்வற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏதாவது பிரமாணம் அங்கீகாரம் செய்கின்ற போது ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மீளளிப்பு கிரயத்திலும் நீண்டகால நிர்மாண செயற்திட்டங்களிற்கான கடன்பெறல் கிரயங்களிலும் என்பவற்றை அத்தகைய கிரயங்கள் உள்ளடக்குகிறது. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முக்கிய பகுதிகள் ஒரேயளவு இடைவெளிகளில் மீள்நிரப்பப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அவற்றினை இதன்படி குறிப்பாக பாவணைக் காலம் மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றுடன் தனித்தனியான சொத்துக்களாக அத்தகைய பகுதிகளாக அடையாளப்படுத்துகிறது. அவ்வாறே, பிரதான பரிசோதனைகளை செயற்படுத்தும் போது அதன் கிரயம் பிரமாண அங்கீகாரங்களை திருப்திசெய்கையில் மாற்றீடாக பொறி மற்றும் உபகரணங்களின் தொகையை மேற்கொள்கையில் அங்கீகரிக்கின்றது. ஏனைய சகல திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்கள் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டது.

நிதியேற்பாடுகளிற்கான பிரமாண அங்கிகாரங்களை செய்கையில் உரிய சொத்துக்களின் கிரயத்தில் அதன் காலத்தின் பின்னர் சொத்தொன்றின் தரகு குறைப்பதற்காக எதிபார்க்கப்பட்ட கிரயத்தின் தற்போதைய பெறுமதியை உள்ளடக்குகிறது.

3.1.1 பெறுமானத்தேய்வு

பின்வருமாறு சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலத்திற்கு மேலாக நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகிறது.

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	
கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு	1.67% - 2%
சுத்திகரிப்பு பொறி மற்றும் உபகரணங்கள்	5 %
சேவைகள் மற்றும் மொத்த தண்ணீர் அளவைமானி	10%
பரிமாற்ற பொறி மற்றும் விநியோகக் குழாய்கள்	1.67%
உபகரணங்கள்	10%
தளபாம் மற்றும் பொருத்திகள்	10%
கணனிகள் உபபாகம் மற்றும் கையடக்க தொலைபேசிகள்	20%- 33.3%
மோட்டார் வாகனங்கள்	10%- 20%
குத்தகையுடமை வாகனங்கள்	14.3 %

3.1.2 முதலீட்டு ஆதனம்

உடமையாளருக்கு சொந்தமான வதிவிடத்தை இன்னொருவருக்கு மாற்றுகின்ற ஆதனத்தை பயன்படுத்தும் போது முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலீட்டு ஆதனமானது திரண்ட பெறுமானத்தேய்வு கழித்த கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

3.1.3 செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி

மூலதனமாக்கப்படாத மற்றும் ஆண்டினுள் செலவிடப்பட்ட மூலதனச் செலவு ஆகியவை செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி எனக் குறித்துக்காட்டப்படுவதுடன், ஆண்டினுள் மூலுதனமாக்கப்பட்ட மற்றும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் உடைமைகள் யாவும் சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களாக மாற்றியமைக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

3.1.4 குத்தகை

ஒழுங்கமைப்புள்ளதா அல்லது அதனைக் கொண்டுள்ளதா எனவும், பரிசோதனை திகதியில் பொருள்களை அடிப்படையாக ஒழுங்கமைப்புகள் கொண்டுள்ளதா எனவும், குறித்த சொத்தொன்றோ அல்லது சொத்துக்களோ பயன்படுத்துவதில் ஒழுங்கமைப்புக்களை நிறைவேற்றலில் தங்கியுள்ளதா அல்லது சொத்துப் பயன்பாட்டு உரிமை ஒழுங்கமைப்புக்களையோ ஒப்படைக்கின்றதா எனவும் நிர்ணயித்தல், அவ்வாறே, குறிப்பிடத்தக்க ஒழுங்கமைப்புக்களில் அவ்வுரிமை வெளிப்படையாக இருக்கவில்லை.

3.1.5 கற்பனைச் சொத்துக்கள்

கையேற்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பு கிரயத்தில் தனித்தனியாக அளவிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆரம்ப அங்கீகாரம் கற்பனைச் சொத்துக்கள் திரண்ட கிரக் கழிப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே, ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திக் கிரயங்கள் தவிர்ந்தவை மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் செலவினங்கள் ஆண்டில் ஏற்பட்டிருந்த செலவினத்தில் வருமானக் கூற்றில் தாக்கமேற்படுத்தியது.

3.1.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிரயங்கள்

ஆராய்ச்சிக் கிரயங்கள் ஏற்பட்டதாக செலவழிக்கப்பட்டன. தனிப்பட்ட செயற்திட்டங்கள் மீது அபிவிருத்திச் செலவினங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செய்முறைப் பயிற்சியளிக்க முடிந்த போது கற்பனைச் சொத்துக்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன.

- சொத்துக்கள் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கொ கிடைக்கும் என்று கற்பனைச் சொத்துக்களை முழுமையாக்குகின்ற தொழில்நுட்ப சாத்தியவள அறிக்கை.
- முழுமையாக்குவதற்கான அதன் செயல்திட்டமும் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அதன் இயலுமை.
- சொத்துக்கள் எதிர்காலத்தில் எப்படி பொருளாதார நலன்களை ஏற்படுத்தும்.
- சொத்துக்களை முழுமையாக்குவதற்கு வளங்களின் கிடைப்பனவு
- அபிவிருத்தியின் போது உண்மைத்தன்மையான செலவினத்தை அளவிடுவதற்கான இயலுமை.

சொத்தாக பின்வரும் ஆரம்ப பெறுதி குறைப்பு அபிவிருத்திச் செலவினம், சொத்துக்களை கிரயக் கழிவின் திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி முழுமையாக்கும் போது சொத்துக்களின் தீர்ப்பனவு ஆரம்பிக்கின்றதுடன் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக கிடைத்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நன்மைகளின் காலத்திற்கு மேலாக தீர்க்கப்பட்டிருந்தது. கடன் தீர்ப்பனவு விற்பனைக் கிரயத்தில் பதியப்பட்டுள்ளது. அபிவிருத்திக் காலத்தின் போது சொத்துக்கள் வருடாந்த பெறுமதிக் குறைப்பிற்காக பரீட்சிக்கப்பட்டது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

3.1.7 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில் சொத்துக்கள் கட்டாயமாக பெறுமதி குறைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படடுள்ளதா எனவும், குறிப்பாக அவ்வாறு இருக்கையில், அல்லது கையேற்கப்பட்ட சொத்துக்களிற்காக வருடாந்த பெறுமதிக் குறைப்பு பரீட்சிப்பின் போது, சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மதிப்பிடுகின்றது. சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை சொத்துடமையாளருடைய அல்லது விற்றுக் காசு உருவாக்குகின்ற பிரிவினுடைய (சிஜீயூ) சந்தைப் பெறுமதி கழித்த பயன்பாட்டுக் கிரயங்கள் மற்றும் அதன் பெறுமதி உயர்வாகவுள்ளமையால் தனிப்பட்ட சொத்தாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இல்லையேல், ஏனைய சொத்துக்களிலிருந்து தனித்துவப்படுபவையா அல்லது சொத்துக்களின் தொகுதி பெருமளவு தனித்துவமாக உள்ளதா என காசுப்பாய்ச்சல் கூற்றில் அச்சொத்துக்கள் உருவாக்கியிருக்கவில்லை. சொத்துக்கள் அல்லது சீஜீயூ இன் முற்கொண்டுவரும் தொகை அதன் அறவிட வேண்டிய தொகையை விஞ்சியிருந்தது. சொத்துக்கள் மெறுமதி குறைத்து மதிப்பிட கருத்திற்கொள்ளப்பட்டதுடன் அதன் அறவிட வேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு பெறுமதி மதிப்பிடுகையில், எதிர்காலத்தில் மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் பணப்பெறுமதி மதிப்பிடுகையில் தற்போதைய சந்தைப் பெறுமதி தாக்கம் மற்றும் சொத்துக்களிற்கான குறிப்பிடத்தக்க ஆபத்துக்களென வரிக்கு முன்னரான கழிப்பனவை பயன்படுத்துவதன் மூலம் அவர்களுடைய தற்போதைய பெறுமதிக்கு கழிவுவழங்கப்படுகின்றன. விற்பனை செய்வதற்கு றியாயபெறுமதி குறைவு கிரயங்களை நிர்ணயிக்கையில், அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிற்கு எடுக்கப்படுகின்றன. அதேவேளையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இனங்காண முடியாதுள்ளது. முறையான பெறுமதியிடல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

3.2.1 பொருளிருப்புக்கள்

பொருளிருப்புக்களின் மதிப்பு கிரயத்தில் பதியப்படுவதுடன் தேறிய உண்மையான பெறுமதி ஏதாயினும், பழுதடைந்தவற்றிற்கான நிலுவை படிகளை செய்த பின்னர் குறைவாக உள்ளவற்றுடன் மெதுவாக அசையும் விடயங்கள் முதல் வந்து முதல் செல்லல் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டிருந்தது. தேறிய உண்மையான பெறுமதி சாதாரண வியாபாரத்தின் போது, முழுமையாக்கலின் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கழிப்பனவு மற்றும் அவசியமான விற்பனைகளைச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயங்கள் என்பவற்றின் விற்பனை விலையை மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளிருப்பின் அளவீடு

3.2.2 பொருளிருப்பின் கிரயங்கள்

மூலப் பொருட்கள்

ஏதாவது இடைநேர் செலவினங்களுடன் சேர்த்து கொள்வனவுக் கிரயம்

ஏனைய இருப்புக்கள்

கிரயம் நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் அமைந்துள்ளது.

3.3 காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்

காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் கையிலுள்ள காசு, இடைப்போக்கிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் நிலுவையாகவிருக்கின்ற தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

4 பொறுப்புக்கள், ஏற்பாடுகள் மற்றும் உரிமை மூலதனம்

4.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்பு

4.1.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்புக்கள் (எஜ்கேஏஎஸ் 19)

(அ) பிற்போட்ட நலத் திட்டம்- பணிக்கொடை

இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 எல்கேஎஸ் 19) உடன் இணங்கி சகல ஊழியர்களும் சேவையாற்றிய முதலாவது ஆண்டிலிருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஓய்வூதிய நலக் கிரயம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டமொன்று செயற்படுகின்றதுவரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கிரயங்கள் செயற்படுத்தப்பட்ட கடன் முறை பிரிவு பயன்படுத்துவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்திற்கான உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில்

அவை ஏற்பட்டிருந்த காலத்தில் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது. அத்தகை உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் நிறுத்திவைத்த இலாபங்களிலும் உடனடியாக அனுமதிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டங்ளிற்கு மீள வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வரையறுக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் நன்மைகளாக வரையறுக்கப்பட்டிருந்த இதுவரையான சராசரி காலத்தினை விட நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. கடந்த சேவைக் கிரயங்கள் பின்வரும் உள்ளடக்கங்களின் அல்லது மாற்றங்களிற்கு அல்லது ஓய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே நன்மைகளை வைத்திருந்தால் உடனடியாக அனுமதிக்கப்பட்டிருந்தன.

வரையறுக்கப்பட்ட நலச் சொத்து அல்லது பொறுப்பு வரையறுக்கப்பட்ட நல கடமைப் பொறுப்புக்களின் (பெறுமதி உயர்ந்த தர ஒன்றிணைந்த பிணைகளின் அடிப்படையில் கழிவு வீதம் பயன்படுத்துகின்றது) தற்போதைய பெறுமதியைக் கொண்டுள்ளது. கடமைப்பொறுப்புக்களில் திட்டச் சொத்துக்களின் கழிவு அனுமதிக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் மற்றும் கடமைப்பொறுப்புக்களிலுள்ள சொத்துக்களின் நியாயப் பெறுமதி தீர்ப்பனவு செய்யவேண்டியுள்ளது. திட்டச் சொத்துக்கள் நீண்ட கால ஊழியர் நலன்புரி நிதியம் அல்லது தரமதிப்பீட்டு காப்புறுதி கொள்கைகள் என்பவற்றின் மூலம் இடம் பெற்றிருந்த சொத்துக்கள் உள்ளன. திட்டச் சொத்துக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கடன்கொடுத்தோருக்கு கிடைத்திருக்கவில்லை அல்லது அவை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நேரடியாக செலுத்த முடிந்திருக்கும். ஏதாவது அங்கீகரித்த நிர்ணயித்த நலன்புரிச் சொத்துக்கள் ஏதாவது அங்கீகரிக்கப்பட்டிருக்காத கடந்த சேவைக் கிரயங்களிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் திட்டத்திலிருந்தான மீளளிப்பிலிருந்து கிடைத்த ஏதாவது பொருளாதார நன்மைகளின் தற்போதைய தொகை அல்லது திட்டத்திற்கு எதிர்காலத்தில் பங்களிப்பை குறைத்தல் என்பன மூலம் மீளமைக்கப்பட்டிருந்தது.

நிர்ணயித்த பங்களிப்புத் திட்டங்கள்- ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர்கள் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் பிரமாணங்களிற்கு அமைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புகளிற்கு தகுதியுடையவர்கள். சபையானது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்புக்களாக முறையே 12 % மற்றும் 3 % ஐ பங்களிப்புச் செய்கின்றது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

4.2 ஏற்பாடுகள்

பொதுவானது

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது நடந்துமுடிந்த நிகழ்வின் விளைவாக சட்ட அல்லது நிர்ணயிப்புகளை மீறியிருந்த போது (சட்டம் அல்லது கட்டளைச்சட்டம்) ஏற்பாடுகளை அனுமதித்திருந்தது. ஐந்தொகையில் ஏற்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மற்றும் பொருளாதார நலன்களின் வெளியீடு அதன் இலாபத் தன்மை மீறல்களை சரிசெய்வதற்கு வேண்டுகை செய்ய வேண்டியதுடன் உண்மையான மதிப்பீடொன்றினை மீறிய தொயினையும் செய்ய முடியும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சில அல்லது சகல ஏற்பாடுகளையும் எதிபார்க்கப்படுகின்ற போது மீள்நிதியிடப்பட வேண்டியிருந்தது. உதாரணமாக, காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் மீள்நிதியிடல் சொத்துக்களை புறம்பாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால், குறித்த சில மீளளிப்புகள் நிலைக்குத்தாக மாத்திரமுள்ளது. நிதிறேபாடுகளுடன் தொடர்புபட்ட செலவினம் ஏதாவது தேறிய மீளளிப்பினை வருமானக்கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.3 அரசாங்க மானியங்கள்

மானியங்கள் பெறப்பட வேண்டியதுடன் சகல நிபந்தனைகளுடன் இணங்கியிருக்க வேண்டுமென பொருத்தமான காப்பீடு உள்ள அரசாங்க மானியங்கள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. மானியங்கள் செலவினங்களுடன் தொடர்புபடுகின்ற போது, இழப்பீடு வழங்குவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கிரயங்களே செலவழிக்கப்பட்டுள்ளதென குறித்த காலத்திற்கு மேலாக முறையான அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது. மானியங்கள் சொத்துக்களுடன் தொடர்புபடுகின்ற போது தொடர்புபட்ட சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்திற்கு மேலாக சமமான தொகைகளில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பணமல்லாத மானியங்கள் பெறப்படுகின்ற போது, சொத்துக்கள் மற்றும் மானியங்கள் நியமத்தொகையில் பதியப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைப் பணங்கள் மூலம் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் நலனின் இழப்பீட்டு மாதிரியில் எதரிபார்க்கப்பட்ட பயன்பாட்டு காலத்திற்கு மேலானவை இலாபம் அல்லது நட்டங்ளிற்கு விடுவிக்கப்பட்டது. கடன்கள் அல்லது சிற்சில உதவிகள் தற்போதைய பொருத்தமான சந்தை வீதத்திற்கு கீழான வட்டி வீதத்துடன் அரசாங்களால் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்டன. இச் சாதகமான வட்டியின் தாக்கம் அரசாங்க மானியமாக தொடர்புபடுத்தப்பட்டது.

5. வருமான கூற்று

வருமானக்கூற்று சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, செலவின முறையின் செயற்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயலாற்றலின் நிகழ்வுகள் நியாயமாக சமர்ப்பிக்கின்றது.

5.1.1 வருமான அங்கீகரிப்பு

சபைக்கு பொருளாதார நலன்கள் பாய வேண்டுமென அதன் இலாபத்தன்மையை விரிவாக்குவதற்கு வருமானம் அங்கீகரிக்கப்பட்டதுடன் கொடுப்பனவுகள் செய்கின்ற போது பொருத்படுத்தப்படும் வருமானம் நம்பகமாக அளவிடப்பட்டது. வருமானம் கணக்கிற்குள் எடுக்கப்படுகின்ற கொடுப்பனவுகளின் ஒப்பந்தரீதியாக வரையறுத்த நிபந்தனைகளிற்குள் பெறப்பட்டவை அல்லது பெறவேண்டியவையை கருத்திற்கொள்ள வேண்டிய நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

பொருள் விற்பனைகள்

பொருட்களின் உரித்து சார்ந்த தீமைகள் மற்றும் நன்மைகளில் குறிப்பிடத்தக்க அளவு கொள்வனவு செய்வபருக்கு குறித்தொதுக்கியுள்ள விடத்தும் மற்றும் பொதுவாக பொருட்கள் விநயோகிக்கப்பட்டுள்ள போதும் பொருள் விற்பனை வருமானம் அங்கீகரிக்கப்படும்.

தண்ணீர் விற்பனை வருமானங்கள்

குறிப்பிடத்தக்க ஆபத்துக்களின் போது பொருள் விற்பனைகளிலிருந்தான வருமானங்கள் அங்கீகரிக்கப்பட்டதுடன் பொருட்களின் உரிமையாண்மை வழங்கல் வழமையாக பொருட்களின் விநியோகத்தில் வாங்குவோருக்கு ஒப்படைக்கப்பட்டது.

ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது.

வட்டி வருமானங்கள்

திரட்டிய கிரயத்தில் அளவிடப்பட்ட சகல நிதிக் கருவிகள் மற்றும் விற்பனைக்காக கிடைக்கக்கூடியவாறு வட்டி வருமானம் அல்லது செலவினம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு கொடுப்பனவுகளை உண்மையான வட்டிக் கழிவிலுள்ள ஆக்கபூர்வமான வட்டியை (ஈஐஆர்) பயன்படுத்தி அல்லது நிதிக் கருவிகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலம் அல்லது குறுகிய காலம் ஊடாக பெறுவனவுகள் பதியப்பட்டது. உரியவாறு நிதிச் சொத்தின் தேறிய முற்கொண்டுவரப்படுவதற்கு, வட்டி வருமானம் வருமானக் கூற்றிலுள்ள நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மீளஅறவிடு செய்ய வேண்டிய வேலைகள்

நிலையான விலை நிர்மாண ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் பூர்த்தியாக்கல் முறையின் சதவீதம், ஒப்பந்தத்தின் செய்யப்பட்ட வேலை மூலமான அளவீடு மீது பதிவுசெய்யப்பட்டன.

5.1.2 செலவினங்கள்

வியாபார செயற்பாட்டில் ஏற்பட்ட சகல வருமானங்களும் ஆண்டிற்கான இலாபத்தில் எழுகின்ற வருமானத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. திருத்தங்கள் மற்றும் புதுப்பித்தல்கள் செலவினம் ஏற்பட்டுள்ள ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.

5.2 பிற்போட்ட வரி

பிற்பொட்ட வரியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அடிப்படையிலான வரிக்கும் அறிக்கையிடும் திகதியில் நிதி அறிக்கையிடல் நோக்கங்களிற்காக அவற்றினுடைய முற்கொண்டுவரும் தொகைக்கம் இடையான தற்காலிக வித்தியாசங்களில் பொறுப்பு முறையை பயனபடுத்தி வழங்கப்பட்டுள்ளது. பிற்போட்ட வரிப்பொறுப்புக்கள் சகல வரிவிதிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்களிற்காக அனுமதிக்கப்பட்டது, தவிர,

கொடுக்கல் வாங்கல்களில் நன்மதிப்பு அல்லது சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் காலத்தில், பாதிப்புக்களோ அல்லது கணக்கீடு இலாபத்திலோ வரிவிதிக்கக்கூடிய இலாபமோ அல்லது நட்டத்திற்கோ பிற்போட்ட வரிப்பொறுப்பு எழுகின்ற போது வியாபார இணைப்பு இருக்காது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

பிற்போட்ட வரிச் சொத்துக்கள் சகல ஊகிக்கக்தக்க தற்காலிக வித்தியாசங்களிற்காக அனுமதிக்கபபட்டது, பயன்படுத்தப்பட்ட பரப்பெல்லைக்குள் வரிக் கடன்களின் முற்கொண்டுவரப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படா வரி நட்டங்கள் இலாபத்தன்மையுள்ளது, ஊகிக்கக்தக்க தற்காலிக வித்தியாசங்களிற்கு எதிராக கிடைக்க வேண்டிய வரிவித்தக்கூடிய இலாபம் மற்றும் பயன்படுத்தப்பட்ட வரிக் கடன்களின் முற்கொண்டுவரப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படா வரி நட்டங்கள் பயன்படுத்த முடியும், தவிர:

கொடுக்கல் வாங்கலொன்றின் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து ஊகிக்கக்தக்க தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பாக பிற்போட்ட வரிச் சொத்துக்கள் எழுகின்ற போது வியாபார இணைப்பு இல்லாதிருந்த நேரத்தில் கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டு இலாபமோ அல்லது வரிவிதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டமோ பாதிக்கப்படுகின்றன.

துணைக்கம்பனிகள், இணைப்புக் கம்பனிகள் மற்றும் கூட்டிணைப்பில் அக்கறையுடையோர் என்பவற்றிலுள்ள முதலீடுகளுடன் ஒன்றிணைக்கப்பட்ட ஊகிக்கக்தக்க தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பில், பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அதன் இலாபத்தன்மையை விரிவாக்குவதற்கே அனுமதிக்கப்பட்டதுடன் தற்காலிக வித்தியாசங்கள் முன்னுணர்ந்து எதிர்கால ஒதுக்கப்படுவதுடன் தற்காலிக வித்தியாசங்களிற்கு எதிராக வரிவிதிக்கக் கூடிய இலாபம் பயன்படுத்த முடியும்.

பிற்பொட்ட வரிச் சொத்துக்களின் முற்கொண்டுவரப்படுகின்ற தொகை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றதுடன் நீடிப்பதற்கு அதன் நீண்டகால இலாபத்தன்மை இருக்கவில்லை அத்துடன் போதிய வரிவிவதிக்கக் கூடிய இலாபம் பயன்படுத்தக் கூடிய பிற்போட்ட வரிச் சொத்துக்களின் முழுவதையுமோ அல்லது ஒருபகுதியையோ அனுமதிப்பதற்கு கிடைக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட பிற்போட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வவொரு அறிக்கையிடல் திகதியிலும் திரும்பவும் வரிவிதிப்பக்குள்ளக்கப்பட்டதுடன் நீடிப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றது அதாவது அது இலபத்தன்மையில் இருந்தது அத்துடன் எதிர்கால வரிவிதிக்கக் கூடிய இலாபம் அறவிட வேண்டிய பிற்பொட்ட வரிச் சொத்துக்களை அனுமதிக்கும். பிற்பொட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சொத்துக்களை மாற்றும் போதோ அல்லது பொறுப்புக்களை தீர்க்கும் போதோ, வரி வீதங்களின் அடிப்படையில் (வரிச் சட்டங்கள்) அவ்வாண்டில் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வீதங்களில் அளவிடப்பட்டன அதாவது அறிக்கையிடல் திகதியில் ஈடுபடுத்தப்பட்டோ அல்லது தன்னிச்சையாக ஈடுபடுத்தப்பட்டோ இருந்தது.

இலாபம் அல்லது நட்டங்களிற்கு வெளியே அனுமதிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான பிற்பொட்ட வரி இலாபம் அல்லது நட்டங்களிற்கு வெளியே அனுமதிக்கப்பட்டது. பிற்போட்ட

வரி விடயங்கள் கொடுக்கல் வாங்கல்களிலோ அல்லது ஏனைய விரிவான வருமானத்திலோ அல்லது நேரடியான உரிமை மூலதனத்திலோ இனங்காணுவதற்கு தொடர்புபடுத்துவதில் அனுமதிக்கப்பட்டது.

பிற்போட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பிற்போட்ட வரிப் பொறுப்புக்கள் நடைமுறை வருமான வரிப் பொறுப்புக்களிற்க எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களை சரிசெய்வதற்கு சட்டரீதியாக வலியுறுத்திக் கூறக்கூடிய உரிமை இருக்கையில் எதிரீடு செய்யப்படுகின்றதுடன் ஒரே வரிவிதிக்ககூடிய பதிவுக்கும் அதே வரிவிதிப் அதிகாரத்திற்கும் பிற்போட்ட வரிகள் தொடர்புபடுகின்றன.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

6. நிதிக் கருவிகள்- ஆரம்ப அங்கீகாரம் மற்றும் பிற்போட்ட அளவீடு

6.1 நிதிச் சொத்துக்கள்

6.1.1 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

எல்கேஏஎஸ் 39 இன் நோக்கெல்லைக்குள் நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டங்கள், பெறவேண்டியவை, முதிர்ச்சியடைகக்கூடிய முதலீடுகள் மற்றும் விற்பனைக்காக கிடைத்த நிதிச் சொத்துக்கள் மற்றும் ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஒதுக்கிய மற்றும் நிர்ணயித்தவை என்பவற்றின் வாயிலான சந்தைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

சகல நிதிச் சொத்துக்களும் இலபங்கள் அல்லது நட்டங்கள், நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் என்பவற்றின் ஊடாக சந்தைப் பொறுமதியில் சொத்தல்லாதவையின் சந்தைப் பெறுமதியை கூட்டி அரம்பத்தில் அனுமதிக்கப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிச் சொத்துக்கள் காசு, மற்றும் குறுகியகால முதலீடுகள், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், பதவியணியினர் கடன்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளை உள்ளடக்குகின்றது.

6.1.2 தொடர்ந்துவருகின்ற அளவீடு

நிதிச் சொத்துக்களின் பின்தொடர்ந்துவருகின்ற அளவீடுகள் பினவருமாறு அவற்றினுடைய வகைப்படுத்லில் தங்கியுள்ளது.

6.1.2.1 நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டங்கள் ஊடாக நியாயப் பெறுமதியில்

நிலையான சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் வியபாரத்திற்காக இடம்பெற்ற நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குவதுடன் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தைப் பெறுமதியில் அரம்ப அங்கீகாரத்தின் மீது நிதிச் சொத்துக்கள் வடிவமைக்கப்பட்டது. நிதிச் சொத்துக்கள் குறுகிய காலத்தில் அவை விற்றல் அல்லது மீள்கொள்வனவு நோக்கத்திற்காக கையேற்கப்பட்டிருக்கையில் வியாபாரத்திற்காக இடம்பெற்றவையாக வகைப்படுத்தப்பட்டன. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2016 மற்றும் 2015 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது இலாபம் அல்லது நட்டங்களின் ஊடாக சந்தைப் பெறுமதியில் எந்தவொரு நிதிச் சொத்துக்களையும் வைத்திருக்கவில்லை.

6.1.2.2 கடன்கள் மற்றும் முற்பணங்கள்

கடன்கள் மற்றும் அறவிட வெண்டியவைகள் நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடியவை மரவுவழியல்லாத நிதிச் சொத்துக்களாக உள்ளன அதாவது திறனுடைய சந்தையொன்றில் கோரப்பட்டிருக்கவில்லை. ஆரம்ப அளவீட்டின் பின்னர், அத்தகைய நிதிச் சொத்துக்கள் செயற்பாட்டு வட்டி முறை (ஈஐஆர்), பழுதடைந்தவை கழித்தவை என்பவற்றை பயன்படுத்தி திரண்ட கிரயத்தில் பின்னர் அளவிடப்பட்டன. திரண்ட கிரயம் ஏதாவது கழிவுகள் அல்லது கையேற்பு தவணைப்பணம் மற்றும் கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றினை கணக்கிற்கு எடுப்பதன் மூலம் கணக்கிடப்பட்டுள்ளது அதாவது ஈஐஆர் இன் ஒன்றிணைந்த பகுதியாக உள்ளது. ஈஐஆர் திரட்டல்கள் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டது.

6.1.2.3 முதிர்வடைந்த முதலீடுகள்

நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்வுகளுடனான மரபுரீதியற்ற நிதிச் சொத்துக்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நேரான குறிக்கோள் மற்றும் அதன் முதிர்வுக்கு பிடிக்கப்பட்ட

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

ஆற்றலுடையவையாக இருந்த போது முதிர்ச்சியடைந்ததாக வகைப்படுத்தப்பட்டன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதர்ச்சியடையவுள்ள முதலீடுகள் வினைத்திறனான வட்டி முறை, பழுதடைந்தவை கழித்தவை என்பவற்றறைப் பயன்படுத்தி திரண்ட கிரயத்தில் அளவிடப்பட்டன. திரண்ட கிரயம் ஏதாவது கழிவுகள் அல்லது கையேற்பு தவணைப்பணம் மற்றும் கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றினை கணக்கிற்கு எடுப்பதன் மூலம் கணக்கிடப்பட்டுள்ளது

அதாவது ஈஐஆர் இன் ஒன்றிணைந்நத பகுதியாக உள்ளது. ஈஐஆர் திரட்டல்கள் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டது. பழுதடைந்தவைகளிலிருந்து எழுகின்ற நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதிச் கிரயத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

6.1.2.4 நிதி முதலீடுகள் விற்பனையால் கிடைத்தவை

விற்பனைக்காக கிடைத்த நிதி முதலீடுகளை உரிமை மூலதனம் மற்றும் கடன் பிணைவைப்புக்கள் உள்ளடக்குவதுடன் விற்பனைக்காக கிடைத்தவையாக வகைப்படுத்தப்பட்ட உரிமை மூலதன முதலீடுகள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சந்தை விலையில் வியாபாரத்திற்காக வடிவமைபபதற்காக இருந்ததென வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகுதியிலுள்ள கடன் பிணை வைப்பக்கள் அந்நேரத்தில் காலத்தை இனங்காண்பதற்கு இடம்பெறவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சந்தை நிலைமைகளிலுள்ள மாற்றங்களிற்கு திரவத்தன்மைக்காக அல்லது பொறுப்பிற்கான தேவைகளிற்கு பொறுப்புடையோர் கட்டாயம் விற்கவேண்டும்.

அளவீட்டின் பின்னர், விற்பனைக்காகவுள்ள நிதி விற்பனை ஒதுக்கத்திற்காகவுள்ள இதுவரை முதலீடுகளாக அனுமதிக்கப்படாதுள்ளவை ஏனைய விரிவான வருமானமாக அனுமதிக்கப்பட்ட உண்மைத்தன்மையற்ற இலாபங்கள் அல்லது நட்டங்கள் சந்தைப் பெறுமதியில் பின்னர் அளவிடப்பட்டது.

6.1.2.5 அங்கீகார மறுப்பு

ஒரு நிதிச் சொத்து (அல்லது ஒரு நிதிச் சொத்துக்களின் பொருத்தமான ஒரு பகுதி அல்லது அதே நிதிச் சொத்துக்களின் தொகுதியின் ஒரு பகுதி) அனுமதி மறுக்கப்பட்டுள்ளது போது,

i) சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகியிருந்தது.
ii) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல் பெறுவதற்கான உரிமைகள் மாற்றப்பட்டிருந்தது அல்லது ஒழுங்கமைப்புகளுடாக தேர்ச்சியின் கீழ் மூன்றாவது பகுதியல்லாத விடயங்களின்

தாமத்தில் காசுப் பாய்ச்சலை பெற்று செலுத்துவதற்கு கடப்பாடு போலியாகவிருந்தது. மற்றும்,

(அ) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சொத்துக்களின் சகல ஆபத்து மற்றும் விமோசனங்களின் பின்னர் மாற்றப்பட்டிருந்தது.
(ஆ) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சொத்துக்களின் சகல ஆபத்து மற்றும் விமோசனங்களின் பின்னர் மாற்றப்படடோ அல்லது நிறுத்தி வைக்கப்பட்டோ இருந்தது, ஆனால், சொத்துக்களின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்டிருந்தது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

6.1.2.6. நிதிச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு

நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி பெறுமதிக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதென்பதற்கு ஏதாவது நோக்கச் சான்றுகள் உள்ளதா என்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடுகிறது. நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி குறைத்து மதிப்பிடப்பட வேண்டுமென மதிப்பிட்டுள்ளது மற்றும் இவ்வாறிருக்கையில், ஒன்று அல்லது பல நிகழ்வுகளின் விளைவாக பெறுமதிக் குறைப்புக்கான நோக்கச் சான்றுகள் உள்ளது அது சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரத்திற்கு பின்னர் ஏற்பட்டிருந்ததுடன் நட்ட நிகழ்வுகள் உண்மையாக மதிப்பிட முடியுமன்று நிதிச் சொத்து அல்லது நிதிச் கொத்துக்கள் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்சல் மீது தாக்கமிருந்தது.

பெறுமதிக் குறைப்புச் சான்று குறிகாட்டிகளை கட்டயமாக உள்ளடக்க வேண்டும் அதாவது கடன்பட்டோர் அல்லது கடன்பட்டோரின் ஒரு தொகுதி போதிய நிதிக் கஸ்ரங்கள், புறைபாடு அல்லது வழுக்கள், இலாபத்தன்மை என்பவற்றை அனுபவித்துள்ளது, அதாவது கடனைத் தீர்க்க வகையற்ற நிலை அல்லது ஏனைய நிதி அங்கீகாரங்கள் மற்றும் குறைபாடுகளை ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிலுவைகள் அல்லது பொருளாதார நிலை மாற்றங்கள் போன்ற அத்தகைய, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலில் அளவிடக்கூடிய வீழ்ச்சியாகவுள்ள அவதானிக்கக் கூடிய தரவு குறிகாட்டிகள் நுழையும்.

6.1.2.7 திரட்டிய கிரயத்தில் முற்கொண்டுவரப்பட்ட நிதிச் சொத்துக்கள்

திரண்ட கிரயத்தில் முற்கொண்டுவரப்பட்ட நிதிச் சொத்துக்களிற்காக, மதிப்பீடு நிதிச் சொத்துக்களிற்காக பெறுமதிக் குறைப்பின் நோக்கச் சான்றுகள் இருக்கின்றதா என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை முதலாவது தடவை மதிப்பீடுசெய்தது. அதாவது நிதிச் சொத்துக்களிற்கான போதிய தனித்துவமான அல்லது சேகரிப்பு உள்ளதுடன் போதிய

தனித்துவமற்ற சொத்துக்களும் உள்ளன. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது போதியதா அல்லது இல்லாததா என்று நிதிச் செத்துக்களை தனிப்பட்ட ரீதியாக மதிப்பீடு செய்வதற்கு நோக்கச் சான்றுகளை நிர்ணயிக்கையில், அது அதே கடன் ஆபத்து இயல்புகள் மற்றும் பெறுமதி குறைப்பிற்காக அவற்றினுடைய திரண்ட மதிப்பீடு என்பவற்றுடன் நிதிச் சொத்துக்களின் தொகுதியொன்றில் அச்சொத்து உள்ளடக்குகிறது. பெறுமதி குறைப்பிற்காக தனிப்பட்டரீதியில் மதிப்பிட்டப்பட்ட சொத்துக்கள் மற்றும் பெறுமதிக் குறைப்பு நட்டங்களிற்குள்ளானவை அல்லது திரண்ட பெறுமதிக் குறைப்பில் உட்பட்டிருக்காதவை தொடர்ந்தும் அனுமதிக்கப்பட வேண்டியுள்ளது.

நோக்கச் சான்றுகள் இருக்கையில், பெறுமதிக் குறைப்பு நட்டங்கள் ஏற்பட்டிருந்தது. நட்டத் தொகையானது சொத்துக்கள் முற்கொண்டுவரப்பட்ட தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கு (இன்னமும் ஏற்பட்டிருக்காத நட்டங்களை எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நட்டங்களைத் தவிர்த்து) இடையில் வித்தியாசங்கள் அளவிடப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி நிதிச் சொத்தினுடைய மூலச் செயற்பாட்டு வட்டி வீதத்தில் கழிவிடப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்ப சபை 2016 ஆண்டின் போது ஒவ்வொரு கடன்பட்டோர் வகுதிகளிற்காகவும் குறித்த பெறுமதிக் குறைப்பை செயற்படுத்தியது.

6.2 நிதிப் பொறுப்புக்கள்

ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்

எல்கேஏஎஸ் 39 இன் நோக்கெல்லைக்குள் நிதிப் பொறுப்புக்கள் தாக்க எல்லையில் பதிவேடு வரையறுப்பவையாக இலாபம் அல்லது நட்டத்தில், நிலையான கிரயத்தில் அல்லது ஆரம்பத்திலிருந்து வடிவமைக்கப்பட்டவற்றின் ஊடாக சந்தைப் பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டன. உரியவாறு, தேசிய நீர் வழங்கல் மற்றும்

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

வடிகாலமைப்புச் சபை ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை நிர்ணயிக்கிறது.

சகல நிதிப் பொறுப்புக்களும் சந்தைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. கடன்கள் சூழுகின்ற போதும் கடன் பெறுகின்ற போது நிலையான கிரயத்தில் ஏற்பட்டன. இது உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை நேரடியாக உள்ளடக்குகிறது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிப் பொறுப்புக்கள் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளை உள்ளடக்கியது.

பிற்போட்ட அளவீடு

நிதிப் பொறுப்புக்களின் பிற்போட்ட அளவீடு நிலையான கிரத்தில் உள்ளன.

செயலற்ற அங்கீகாரம்

நிதிப் பொறுப்பொன்று சுமத்தப்பட்ட அல்லது இரத்து செய்யப்பட்ட அல்லது காலாவதியான பொறுப்புக்களின் கீழ் நழுவும் போது செயலற்ற அங்கீகாரத்தில் உள்ளன.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		2017	2016
		ரூபா	ரூபா
7 வருமானம்			
அளவீடு செய்யப்பட்ட விற்பனைகள்		21,348,160,939	20,991,185,049
மொத்த விற்பனைகள்		258,804,307	238,030,488
பவுசர் மூல விற்பனைகள்		85,469,891	88,515,542
பிரதான செயற்பாடுகளிலிருந்தான வருமானம்	7.1	2,167,324,981	2,266,996,408
		23,859,760,119	23,584,727,487
7.1 பிரதான செயற்பாடுகளிலிருந்தான வருமானம்			
புதிய இணைப்புகள் தொடர்புபட்ட வருமானம் மற்றும் பிரதான செயற்பாடுகளிலிருந்தான வருமானம்		2,477,538,710	2,628,868,117
மூலதன அறவீட்டுக் கட்டணம்		650,943,128	766,302,051
புதிய இணைப்புகள் தொடர்புபட்ட செலவினம்		(961,156,857)	(1,128,173,760)
		2,167,324,981	2,266,996,408
8 விற்பனைக் கிரயங்கள்			
ஆளணிக் கிரயம்		6,352,852,297	6,215,488,662
நீரிறைப்புக் கிரயம்		4,064,774,139	3,833,788,962
இரசாயங்கள்		818,014,323	692,354,529
திருத்தங்களும் பராமரிப்பும்		1,358,047,056	1,270,587,139
தாபனச் செலவினங்கள்		510,408,988	473,717,459
வாடகை, இறை, வரி, பிணை மற்றும் ஏனைய செலவினம்		991,127,078	908,910,549
தள்ளுபடிகள்		101,126,579	90,880,043
		14,196,350,460	13,485,727,343
9 ஏனைய செயற்பாட்டு வருமானம்			
ஏனைய வருமானம்	9.1	1,709,234,921	1,428,167,676
உத்தியோகத்தர் நலன்புரிக் கடன்		15,228,227	49,379,029
		1,724,463,148	1,477,546,705
9.1 ஏனைய வருமானம்			
கழிவுநீர் மற்றும் நிலத்தடி நீர் வருமானம்		272,787,008	280,748,461
கூடுதல் கட்டணம் அபராதம் கட்டணங்கள் போன்றவை		1,436,447,913	1,147,419,215
		1,709,234,921	1,428,167,676

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		2017	2016
		ரூபா	ரூபா
10 நிர்வாகச் செலவினம்			
திருத்தங்களும் பராமரிப்புகளும்		**221,799,539**	218,910,020
தாபனச் செலவினம்		**698,631,095**	635,852,111
வாடகை, இறை, வரி, பிணை மற்றும் ஏனைய செலவினம்		**449,593,829**	359,067,735
பதவியணியினர் கிரயம்	10.1	**5,222,246,171**	5,197,383,263
பெறுமானத் தேய்வு	10.2	**3,339,845,190**	2,722,585,774
தணிக்கை கட்டணம்		**3,200,000**	3,111,696
		9,935,315,824	9,136,910,599
10.1 பதவியணியினர் கிரயம்			
பதவியணியினர் கிரயம்		**15,228,227**	49,379,029
ஆளணிக் கிரயம்		**5,207,017,944**	5,148,004,234
		5,222,246,171	5,197,383,263
10.2 பெறுமானத்தேய்வு			
கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு		**1,079,834,033**	948,013,836
பொறி மற்றும் இயந்திரம்		**2,804,805,713**	1,193,277,323
உபகரணங்கள்		**322,100,055**	1,333,925,122
தளபாடம் மற்றும் பொருத்திகள்		**47,597,987**	39,508,591
கணனி மற்றும் உபபாகங்கள்		**62,692,861**	53,487,044
மோட்டார் வாகனம் மற்றும் கார்கள்		**209,956,160**	144,901,475
		4,526,986,809	3,713,113,391
கழி: நன்கொடையளிக்கப்பட்ட சொத்துக்களிற்கான பெறுமானத் தேய்வு		**(1,195,058,205)**	(999,478,284)
கழி: மீளஅறவிடு செய்ய வேண்டிய வேலைகளின் நிதி		**(8,326,397)**	(7,292,317)
கூட்டு: 13. குத்தகை சொத்துக்களின் கடன்தீர்ப்பு		**15,949,142**	15,949,142
கூட்டு: கற்பனைச் சொத்துக்களின் ஒண்றுபிரட்டல்		**293,841**	293,841
		3,339,845,191	2,722,585,774
11 ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள்			
நட்ட மற்றும் ஐயக்கடன்கள்		**28,571,639**	125,257,676
அறவிடவேண்டிய பதவியணியினர் கடன்களுக்கான ஏற்பாடு		**2,440,340**	2,472,380
பழுதடைந்த இருப்புக்களிற்கான மேலதிக ஏற்பாடு		**63,131,636**	22,459,422
ஒய்வூதிய பணிக்கொடை		**488,661,467**	394,618,174
வருமான மானியம்		**131,660,553**	135,856,389
		714,465,635	680,664,041
12 நிதி வருமானம்			
முதலீட்டு வருமானம்		**1,157,359,094**	1,236,278,724
		1,157,359,094	1,236,278,724
13 நிதிக் கிரயம்			
கடன்வட்டி		**6,291,304,344**	1,670,213,515
கழி: நிர்மாணச் செயற்திட்டங்கள் மீதான மூலதனமாக்கப்பட்ட வட்டி		**(6,278,309,723)**	(1,666,931,980)
		12,994,621	3,281,535
14 வரி			
பொருளாதார சேவைக் கட்டணம்		**65,683,426**	63,287,387
		65,683,426	63,287,387

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

15 ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

15.1 முற்கொண்டுவரும் மொத்தத் தொகைகள்	மீண்டும் கூறப்பட்ட 2017.01.01 இல் உள்ளவாறான மீதி	சீராக்கலின் பின்னரான சேர்க்கை	மாற்றங்கள்	நீக்கல்	2017.12.31 இல் உள்ளவாறான மீதி
கிரயம்	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**	**ரூபா**
இறையில் சொத்துக்கள்					
இறையில் காணி	8,358,310,005	39,209,590	(35,444,775)		**8,362,074,820**
குத்தகையுடமைக் காணி	589,540,351	37,526,206	(736,566)		**626,329,991**
உட்கட்டமைப்பு	5,713,979,507	163,218,526	(555,209)		**5,876,642,824**
கட்டிடம்- இறையில்	11,106,565,457	1,059,485,479	(47,971,473)		**12,118,079,463**
கட்டமைப்பு	43,206,451,374	1,677,371,129	(203,202,552)	(6,657,415)	**44,673,962,536**
பொறி மற்றும் உபகரணம்- சுத்திகரிப்பு	28,246,961,522	2,931,966,223	99,884,626		**31,278,812,371**
பராமரிப்பு மீற்றர்	19,439,577	-	-		**19,439,577**
மொத்த தண்ணீர் மீற்றர்	519,178,126	17,939,284	2,158,318		**539,275,728**
பரிமாற்றமும் விநியோகமும்	76,709,107,252	8,028,388,128	242,305,722		**84,979,801,103**
நடமாடும் உபகரணம்	450,670,409	110,849,200	10,510,861		**572,030,469**
அளவீட்டு உபகரணம்	32,735,831	8,967,750	130,000		**41,833,582**
ஆய்வுகூடம்	585,697,600	51,794,443	7,007,579		**644,499,621**
ஏனைய உபகரணங்கள்	2,060,775,152	122,090,504	(10,299,339)		**2,172,566,317**
தளபாடமும் பொருத்திகளும்- கணனிகள்	473,476,783	65,883,736	(6,380,747)		**532,979,772**
கணனிகள் மற்றும் உப பாகங்கள்	432,827,580	72,055,563	(11,307,114)		**493,576,029**
மோட்டார் வாகனங்கள் கார்கள்	156,485,434	6,153,750	1,469,942	(500,000)	**163,609,127**
வான், பஸ் மற்றும் ஜீப்	541,966,481	24,903,939	(23,075,723)	(600,000)	**543,194,697**
லொறிகள் மற்றும் டிரக்	2,008,337,825	176,077,837	(61,126,909)	-	**2,123,288,754**
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	89,076,211	1,679,000	(15,125,000)	-	**75,630,211**
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	1,111,523,133	381,564,571	(134,533,632)	(1,050,000)	**1,357,504,072**
மோட்டார் சைக்கிள்	23,992,152	1,256,980	(1,775,000)	-	**23,474,132**
முச்சக்கர வண்டிகள்	4,787,620	700,000	1,619,256		**7,106,876**
குத்தகையுடமை வாகனங்கள்	28,975,000	-	(5,795,000)		**23,180,000**
மொத்தம்	182,470,860,382	14,979,081,838	(192,242,736)	(8,807,415)	**197,248,892,069**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

15.2 பெறுமானத் தேய்வு	மீண்டும் கூறப்பட்ட 2017.01.01 இல் உள்ளவாறான மீதி	இக்காலப் பகுதிக்கான சாட்டுதல்	மாற்றங்கள்	நீக்கல்	2017.12.31 இல் உள்ளவாறான மீதி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
பெறுமானத்தேய்வு					
இறையில் சொத்துக்கள்					
இறையில் காணி	-	-	-		-
குத்தகையுடமைக் காணி	-	-	-		-
உட்கட்டமைப்பு	575,941,027	115,537,536	51,371		**691,529,934**
கட்டிடம்- இறையில்	1,155,403,606	232,391,381	(41,066)		**1,387,753,922**
கட்டமைப்பு	3,686,898,046	731,905,116	(42,732)	(1,028,404)	**4,417,732,025**
பொறி மற்றும் உபகரணம்-சுத்திகரிப்பு	5,670,610,943	1,393,011,703	-		**7,063,622,646**
பராமரிப்பு மீற்றர்	14,309,417	1,924,518	-		**16,233,935**
மொத்த தண்ணீர் மீற்றர்	143,038,676	52,105,545	-		**195,144,221**
பரிமாற்றமும் விநியோகமும்	6,053,191,059	1,357,763,947	(128,075)		**7,410,826,931**
நடமாடும் உபகரணம்	174,437,893	47,151,084	261,250		**221,850,227**
அளவீட்டு உபகரணம்	7,357,504	3,479,854	-		**10,837,358**
ஆய்வுகூடம்	265,594,813	60,425,520	(71,850)		**325,948,484**
ஏனைய உபகரணங்கள்	684,675,572	211,043,597	-		**895,719,169**
தளபாடமும் பொருத்திகளும்-கணனிகள்	221,613,246	47,597,987	132,939		**269,344,172**
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	334,753,554	62,692,861	-		**397,446,415**
மோட்டார் வாகனங்கள் கார்கள்	140,950,003	11,659,952	(9,700)	(475,000)	**152,125,255**
வான், பஸ் மற்றும் ஜீப்	342,013,023	30,851,817	570,000	(570,000)	**372,864,840**
லொறிகள் மற்றும் டிரக்	401,042,903	96,013,974	(148,042)	-	**496,908,836**
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	57,894,593	7,550,304	-	-	**65,444,897**
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	204,495,606	57,448,872	-	(236,906)	**261,707,572**
மோட்டார் சைக்கிள்	9,150,388	2,233,174	(5,858)	-	**11,377,704**
முச்சக்கர வண்டிகள்	784,833	589,834	-	-	**1,374,667**
குத்தகையுடமை வாகனங்கள்	5,051,526	3,608,233	-	-	**8,659,758**
					-
மொத்தம்	20,149,208,230	4,526,986,809	568,238	(2,310,310)	**24,674,452,967**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

15.3 தேறிய புத்தகப் பெறுமதிகள்	2017	2016
	ரூபா	ரூபா
கிரயத்தில்		
இறையில் காணி	**8,362,074,820**	8,358,310,005
குத்தகையுடமைக் காணி	**626,329,991**	589,540,351
உட்கட்டமைப்பு	**5,185,112,890**	5,138,038,479
கட்டிடம்- இறையில்	**10,730,325,542**	9,951,161,851
கட்டமைப்பு	**40,256,230,511**	39,519,553,329
பொறி மற்றும் உபகரணம்- சுத்திகரிப்பு	**24,215,189,724**	22,576,350,580
பராமரிப்பு மீற்றர்	**3,205,642**	5,130,160
மொத்த தண்ணீர் மீற்றர்	**344,131,507**	376,139,450
பரிமாற்றமும் விநியோகமும்	**77,568,974,172**	70,655,916,194
நடமாடும் உபகரணம்	**350,180,242**	276,232,515
அளவீட்டு உபகரணம்	**30,996,224**	25,378,327
ஆய்வுகூடம்	**318,551,138**	320,102,787
ஏனைய உபகரணங்கள்	**1,276,847,149**	1,376,099,581
தளபாடமும் பொருத்திகளும்- கணனிகள்	**263,635,600**	251,863,537
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	**96,129,613**	98,074,025
மோட்டார் வாகனங்கள் கார்கள்	**11,483,872**	15,535,432
வான், பஸ் மற்றும் ஜீப்	**170,329,857**	199,953,458
லொறிகள் மற்றும் டிரக்	**1,626,379,916**	1,607,294,922
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	**10,185,314**	31,181,618
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	**1,095,796,500**	907,027,526
மோட்டார் சைக்கிள்	**12,096,428**	14,841,764
முச்சக்கர வண்டிகள்	**5,732,209**	4,002,787
குத்தகையுடமை வாகனங்கள்	**14,520,242**	23,923,474
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த முற்கொண்டுவரும் தொகை	**172,574,439,103**	162,321,652,152

15 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி)

15.4 முதலீட்டு ஆதனம்

தற்போது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு வசித்துவரும் பத்தரமுல்லை, சுனில் மாவத்தைளிலுள்ள சபையால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் எல்கேஏஎஸ் 40 – முதலீட்டு ஆதனம் இன் பிரகாரம் முதலீட்டு ஆதனமாக கருதப்பட்டுள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் இந்த முதலீட்டு ஆதனம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கிரயம்	காணி	கட்டிடம்	மொத்தம
2017.12.31 இல் உள்ளவாறு மீதி	138,500,000	238,053,034	376,553,034
பெறுமானத்தேய்வு			
2017.01.01 இல் உள்ளவாறு மீதி	-	24,488,110	24,488,110
இக்காலப் பகுதிக்கான சாட்டுதல்	-	4,761,061	4,761,061
2017.12.31 இல் உள்ளவாறு மீதி	-	29,249,171	29,249,171
தேறிய புத்தகப் பெறுமதி	**138,500,000**	**208,803,863**	**347,303,863**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		2017	2016
		ரூபா	ரூபா
16 கற்பனைச் சொத்துக்கள்			
கணினி மென்பொருள்		**6,485,383**	7,310,270
		6,485,383	7,310,270
ஆண்டினுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மென்பொருளின் பொருட்டு 1,335,127 ரூபா கடன்தீர்ப்பு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.			
17 மூலதன நடைபெறும் வேலைகள்			
நிர்மாண வேலைகள்	35.2	**190,486,254,966**	155,053,048,707
புனரமைப்பு	35.2	**4,057,618,713**	3,458,987,188
		194,543,873,679	158,512,035,894
18 ஏனைய நிதிச் சொத்துக்கள்			
உத்தியோகத்தர் வீடமைப்புக் கடன்களிற்கான HDFC முதலீடு		**6,968,542**	9,810,535
இலங்கை வங்கி சேமிப்புகள் - II		**1,261,927**	1,212,528
		8,230,469	11,023,063
19 பொருளிருப்புகள்			
பீவீசீ இருப்பு குழாய்கள்		**3,596,506,695**	3,793,823,910
நீர் அளவைமானி, பொருத்திகள் மற்றும் கறையகற்றல் விடயங்கள்	35.2	**1,010,013,091**	535,700,413
இரசாயணப் பொருட்கள்		**132,869,718**	122,602,755
மின்னியல் பொருட்கள்	35.2	**562,303,793**	478,551,324
கட்டிடப் பொருட்கள்		**34,335,045**	31,037,997
நீரகற்றல் பம்பு மற்றும் உபபாகங்கள்		**1,145,954,807**	934,006,921
வாகன உதிரிப்பாகங்கள்		**139,120,998**	108,321,976
காகிதாதி மற்றம் அலுவலக உபகரணங்கள்		**49,246,438**	44,572,040
ஏனைய விடயங்கள்	35.2	**786,994,194**	496,747,679
இடைப்போக்கிலுள்ள பொருட்கள்		**352,151,303**	443,569,646
பொருட்கள் சரிசெய்தல்		**2,505,677**	2,555,749
		7,812,001,758	6,991,490,409
குறைக்கப்பட்டுள்ளது – முக்கிய உதிரிப் பாகங்கள			
களஞ்சியத்திலுள்ள ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்		**(319,639,473)**	(293,154,819)
பழுதடைந்த இருப்புக்கான ஏற்பாடு		**(117,994,671)**	(54,863,035)
		7,374,367,615	6,643,472,555
20 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்			
வியாபார கடன்பட்டோர்		**4,816,900,998**	4,607,789,723
ஏனைய கடன்பட்டோர்	35.2	**300,715,065**	314,319,532
கழி: கடன்பட்டோர் பெறுமதிக்குறைப்பு		**(1,197,444,350)**	(1,322,209,166)
கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாடு		**735,476,738**	591,158,421
பெறவேண்டிய பெறுமதி சேர் வரி		**1,239,703,052**	331,450,527
பெறவேண்டிய பிடித்துவைத்தல் வரி		**114,867,966**	46,931,199
பதவியணியினருக்கான முற்பணம்	35.2	**12,818,410**	14,391,333
ஊழியர்களிற்கான கடன்கள்	35.2	**2,468,034,087**	1,696,045,045
பெறவேண்டிய வட்டி மற்றும் ஏனையவைகள்	35.2	**97,110,133**	232,278,306
		8,588,182,099	6,512,154,920

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		2017	2016
		ரூபா	ரூபா
21 வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்			
மீள அறவிடவேண்டிய செயற்திட்ட வேலைகள்		-	114,010
முற்கொடுப்பனவுகள்		**585,500**	4,539,500
முற்பணம் (உள்ளீடுகள் உள்ளடங்கும் வகையில்)	35.2	**41,900,934,928**	26,604,485,106
வைப்புக்கள்	35.2	**223,131,222**	221,460,394
		42,124,651,650	26,830,599,011
22 முதலீடுகள்			
விற்பனை செய்வதற்குள்ள - திறைசேரி பிணை		-	6,808,685,161
முடிவுத் திகதி வரை வைத்துக் கொள்ளப்படும் நிதி நடைமுறைக்கேற்ற பத்திரம்		12,240,208,742	3,457,036,783
		12,240,208,742	10,265,721,944
23 காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்			
வங்கிலுள்ள காசு	35.2	**994,458,651**	1,864,867,005
ஒரு மூலதனத் திட்டத்திற்காக பணம் பெற்றது		-	6,529,848,750
தலைமை அலுவலக் காசு கட்டுநிதிகள்		**1,337,464**	2,363,785
பிராந்திய காசுக் கட்டுநிதிகள்		**8,955,594**	3,844,753
இடைப்போக்கிலுள்ள காசு		**316,176,266**	344,259,084
அழைப்பு வைப்புக்கள்		**2,379,251,307**	3,108,519,601
சேமிப்புக் கணக்கு		**77,269,025**	239,006,742
		3,777,448,306	12,092,709,720
24 அரசாங்கத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள்			
அரசாங்க திணைக்களத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள்		**185,480,387**	185,480,387
		185,480,387	185,480,387
25 அரச பங்கு			
கடன்இ மூலதனமாக மாற்றம்		63,612,515,640	55,570,985,685
அரசாங்க பங்களிப்பு (பிணை)		13,899,983,925	13,899,983,925
		77,512,499,566	69,470,969,610

இந்த ஆண்டிற்குரிய வெளிநாட்டு கடன் தொகையை அரச பங்காக மாற்றம் செய்வதற்காக கொள்கைரீதியான தீர்மானமொன்றினை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது.

26 உத்தியோகத்தர் நலன்புரி நிதியம்			
ஆரம்ப மீதி		**17,228,139**	16,506,484
ஆண்டின் போது பெறப்பட்டவை		**5,298,986**	721,655
		22,527,125	17,228,139
27 அரசாங்க மானியம்			
திறைசேரி மானியம்		**94,838,588,669**	92,742,583,734
		94,838,588,669	92,742,583,734

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

		2017	2016
		ரூபா	ரூபா
28 மூலதன மானியம்			
வெளிநாட்டு மானியம்	35.2	**189,307,749,625**	180,564,263,033
உள்நாட்டு மானியங்கள்	35.2	**1,066,069,820**	978,419,632
		190,373,819,444	181,542,682,665
29 செலுத்த வேண்டிய கடன்கள்			
திறைசேரி ஊடான வெளிநாட்டு கடன்கள்	35.2	**40,512,242,399**	14,674,458,231
உள்நாட்டு கடன்கள்		**23,815,513,351**	19,767,069,288
		64,327,755,750	**34,441,527,519**
நீண்டகாலக் கடன்களின் செலுத்தப்படத்தக்க குறுகிய கால பகுதி		**2,833,921,592**	**625,822,304**
நீண்டகாலக் கடன்களின் செலுத்தப்படத்தக்க நீண்ட கால பகுதி		**67,161,677,342**	**35,067,349,823**
30 ஏனைய பிற்போட்ட பொறுப்புக்கள்			
ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாடுகள்	29.1	**4,076,428,515**	4,076,428,515
வாடிக்கையாளர் மற்றும் ஊழியர் பிணை வைப்புக்கள்		**34,317,636**	48,594,971
		4,110,746,151	**4,125,023,486**
30.1. ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாட்டு அசைவு			
ஆண்டு தொடக்கத்திலுள்ள மீதி		**4,076,428,515**	4,076,428,515
கூட்டு: ஆண்டிற்கான ஏற்பாடு		**488,661,467**	394,618,174
கழி: ஆண்டின் போதான பணிக்கொடைக் கொடுப்பனவுகள்		**(488,661,467)**	(394,618,174)
		4,076,428,515	**4,076,428,515**
31 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்			
மீள்கட்டணமிட வேண்டிய வேலைகள் -வாடிக்கையாளர் முறபணங்கள்		**6,634,430,544**	4,039,297,939
ஒப்பந்தகாரர் பிடிகாசு	35.2	**5,042,274,861**	3,669,249,055
குத்தகை உடமை கடன்கொடுத்தோர்		**18,506,495**	26,164,355
கழி: தொங்கல் வட்டி		**(2,214,055)**	(4,382,302)
கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு	35.2	**833,652,597**	1,221,394,974
ஏனைய கடன்கொடுத்தோர்		**97,725,057**	101,480,705
அட்டுறு செலவினம்		**1,031,675,560**	504,823,198
வைப்புக்கள்		**74,663,873**	72,954,077
செலுத்த வேண்டியபெறுமதி சேர் வரி		**65,265**	-
பிடித்து வைத்தல் வரி		**54,667**	54,667
சம்பளங்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	35.2	**191,068,515**	182,844,259
தணிக்கை கட்டணம்		**3,200,000**	17,165,616
		13,925,103,379	9,831,046,543

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	ஐந்தாகை		வருமான கூற்று	
	2017	2016	2017	2016
பிற்போட்ட வரிப் பொறுப்பு	**ரூபா**	**ரூபா**	**ரூபா.**	**ரூபா.**
மூலதனப் படிகள்	**4,493,724,551**	10,232,612,468	**3,339,845,190**	2,103,018,287
கற்பனைச் சொத்துக்கள்	**293,841**	453,497	**(1,335,127)**	(14,376,428)
	4,494,018,392	**10,233,065,965**	**3,338,510,063**	**2,088,641,859**
பிற்போட்ட வரிச் சொத்துக்கள்				
கடன்பட்டோர் கழிவு	**(124,764,816)**	298,860,427	**(34,934,148)**	19,948,692
	(124,764,816)	298,860,427		
பிற்போட்ட வருமான வரிக் கட்டணம்/ (தள்ளுபடி)			**3,303,575,915**	2,108,590,551
பிற்போட்ட வரிப் பொறுப்பு/ (சொத்துக்கள்)	**4,618,783,208**	**9,934,205,538**		

குறிப்பு: எதிர்காலத்தில் வரி விதிக்க கூடிய இலாபம் இல்லாதிருதமையானது பயன்படுத்தாத வரி நட்டங்களின் உள்ளதன்மைக்கு வலுவான சான்றுகள் உள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது 2017.12.31 இல் உள்ளவாறு ரூபா 81,082,402,414 ஆன திரட்டிய நட்டங்களை அடைந்திருந்தது. ஆகவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செலுத்த வேண்டிய வருமான வரி, பிற்போட்ட வரிச் சொத்தினை அனுமதிக்காமையானது மிகவும் நடைமுறைச் சாத்தியமற்றதொன்றாகும்.

33 தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு வருகையாளருடனான கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புபட்ட தரப்பினருடான கொடுக்கல் வாங்கல்களிற்குள் சபை நுழைந்து அதன் செயற்பாடுகளின் சாதாரண பாடநெறிகளில், தொடர்புபட்ட தரப்பினர் இலங்கை அரசாங்கம், பல்வேறு அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டு வருகையாளர்கள் என்போரை உள்ளடக்குகிறது. (அரசு: சபையின் இறுதி பங்காளராக) கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் மற்றும் முக'கியமாக தனிப்பட்ட ரீதியில் அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு வருகையாளர்களுடன் சபையால் செய்யப்பட்ட ஒழுங்குகள் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களிற்காக சரியாக உள்ளன. ஆனால், தனிப்பட்ட ரீதியில் முக்கியமற்றவை பின்வருமாறுள்ளன.

34 ஐந்தொகை திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பிந்திய கசல நிகழ்வுகளும் கவனத்திற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவசியமான சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்களை நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருந்தது.

35 முன்னைய ஆண்டுச் சீராக்கல்

35.1 2007.12.31 ஆம் திகதிக்கு காணப்பட்ட சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் விலைமதிப்புத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. குறித்த மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் யாவும் 2010 ஆம் ஆண்டில் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டதுடன் இப்பெறுமதிகள் தற்போது வரை வைத்திருப்பு பெறுமதிகளாக புத்தகங்களில் பேணப்படுகின்றது.. சொத்துக்களின் பெறுமதி மிக அதிகமாக இருப்பதனால் 2010 ஆம் ஆண்டில் நேர்ந்த சில கைவிடல்கள் மற்றும் இரட்டித்தல் ஆகிய செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான சீராக்கலின் கீழ் முன்னைய ஆண்டுகளுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய வகையில் சீராக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்களின் வைத்திருப்பு பெறுமதிக்கு நிகர விளைவான 176.5 மில்லியன் ரூபா சீராக்கப்பட்டதுடன் 2015.12.31 ஆம் திகதிக்கு தேய்மானமாக 107.2 மில்லியன் ரூபாவும் சீராக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 37 மில்லியன் ரூபா தேய்மானத்தை 2015 ஆம் ஆண்டுக்குரிய தேய்மானமாக சீராக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

35.1.1 சராசரி வைத்திருப்புப் பெறுமதி

செலவு

இறையில் சொத்துக்கள்	2016.12.31 ஆம் திகதிக்கு உள்ளவாறான நிலுவை	முன்னைய ஆண்டுச் சீராக்கல்	2016.12.31 திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை
	ரூபா.	ரூபா.	ரூபா.
இறையில் காணி	8,358,310,005		8,358,310,005
குத்தகையுடமைக் காணி	589,540,351		589,540,351
உட்கட்டமைப்பு வசதிகள்	5,713,979,507		5,713,979,507
கட்டிடம்- இறையில்	11,106,565,457		11,106,565,457
கட்டமைப்பு	43,206,451,374		43,206,451,374
பொறி மற்றும் உபகரணம்-சுத்திகரிப்பு	28,246,961,522		28,246,961,522
பராமரிப்பு மீற்றர்	19,439,577		19,439,577
மொத்த தண்ணீர் மீற்றர்	519,178,126		519,178,126
பரிமாற்றமும் விநியோகமும்	76,709,107,252		76,709,107,252
நடமாடும் உபகரணம்	450,670,409		450,670,409
அளவீட்டு உபகரணம்	32,735,831		32,735,831
ஆய்வுகூடம்	585,697,600		585,697,600
ஏனைய உபகரணங்கள்	2,060,775,152		2,060,775,152
தளபாடமும் பொருத்திகளும்-கணனிகள்	473,602,383	(125,600)	473,476,783
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	432,920,480	(92,900)	432,827,580
மோட்டார் வாகனங்கள் கார்கள்	156,844,184	(358,750)	156,485,434
வான், பஸ் மற்றும் ஜீப்	534,156,481	7,810,000	541,966,481
லொறிகள் மற்றும் டிரக்	1,979,047,810	29,290,015	2,008,337,825
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	89,076,211	-	89,076,211
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	1,126,163,133	(14,640,000)	1,111,523,133
மோட்டார் சைக்கிள்	23,427,152	565,000	23,992,152
முச்சக்கர வண்டிகள்	4,787,620	-	4,787,620
குத்தகையுடமை வாகனங்கள்	28,975,000	-	28,975,000
மொத்த தேய்மானத்திற்கு உட்படுத்தக்கூடிய சொத்துக்களின் பெறுமதி	**182,448,412,617**	**22,447,765**	**182,470,860,383**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2017 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

35.1.2 பெறுமானத்தேய்வு

இறையில் சொத்துக்கள்	2016.12.31 ஆம் திகதிக்கு உள்ளவாறான மீதி	முன்னைய ஆண்டுச் சீராக்கல்	2016.12.31 திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட மீதி
	ரூபா.	ரூபா.	ரூபா.
இறையில் காணி	-	-	-
குத்தகையுடமைக் காணி	-	-	-
உட்கட்டமைப்பு வசதிகள்	575,941,027	-	575,941,027
கட்டிடம்- இறையில்	1,155,403,606	-	1,155,403,606
கட்டமைப்பு	3,686,898,046	-	3,686,898,046
பொறி மற்றும் உபகரணம்-சுத்திகரிப்பு	5,670,610,943	-	5,670,610,943
பராமரிப்பு மீற்றர்	14,309,417	-	14,309,417
மொத்த தண்ணீர் மீற்றர்	143,038,676	-	143,038,676
பரிமாற்றமும் விநியோகமும்	6,053,440,346	(249,287)	6,053,191,059
நடமாடும் உபகரணம்	174,437,893	-	174,437,893
அளவீட்டு உபகரணம்	7,357,504	-	7,357,504
ஆய்வுகூடம்	265,594,813	-	265,594,813
ஏனைய உபகரணங்கள்	684,675,572	-	684,675,572
தளபாடமும் பொருத்திகளும்-கணனிகள்	221,466,931	146,315	221,613,246
கணனிகள் மற்றும் உபபாகங்கள்	334,753,554	-	334,753,554
மோட்டார் வாகனங்கள் கார்கள்	141,037,303	(87,300)	140,950,003
வான், பஸ் மற்றும் ஜீப்	342,763,523	(750,500)	342,013,023
லொறிகள் மற்றும் டிரக்	402,690,607	(1,647,704)	401,042,903
உழவு இயந்திரம் மற்றும் பெட்டிகள்	57,851,386	43,207	57,894,593
தண்ணீர் பவுசர் மற்றும் பார ஊர்திகள்	221,781,839	(17,286,233)	204,495,606
மோட்டார் சைக்கிள்	9,251,206	(100,819)	9,150,388
முச்சக்கர வண்டிகள்	784,833	-	784,833
குத்தகையுடமை வாகனங்கள்	5,051,526	-	5,051,526
	20,169,140,551	**(19,932,321)**	**20,149,208,230**

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2017 டிசம்பர் மாதம் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு உரிய முன்னைய ஆண்டு சீராக்கல் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக கீழே காணப்படும் பொருட்களும் முன்னைய ஆண்டுகளுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய விதத்தில்

	2016.12.31 ஆம் திகதிக்கு உள்ளவாறான நிலுவை	முன்னைய ஆண்டுச் சீராக்கல்	2016 ஆம் ஆண்டுக்குரிய சீராக்கல்	TSAP வேலைத்திட்டத்தின் கீழ் மாற்றுதல்	2016.12.31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.
செயற்பாட்டிலுள்ள மூலதன பணிகள் (குறிப்பு 17)					
நிர்மாண வேலைகள்	155,229,972,659	(136,967,188)	-	(39,956,765)	155,053,048,707
புனரமைப்பு நடவடிக்கைகள்	3,666,192,550	(48,432,336)	-	(158,773,026)	3,458,987,188
இருப்புக்கள் (குறிப்பு 19)					
மின் உபகரணங்கள்	477,733,511	-	817,813	-	478,551,324
நீர் மானி மற்றும் பித்தளைப் பொருட்கள்	568,961,667	(27,921,254)	(5,340,000)	-	535,700,413
பிற பொருட்கள்	507,209,517	(10,461,839)	-	-	496,747,679
வியாபாரம் மற்றும் பிற பெறத்தக்கவை (குறிப்பு 20)					
தொழிலாளர் கடன் முற்பணம்	1,713,412,289	-	-	(17,367,244)	1,696,045,045
கிடைக்கப்பெற வேண்டிய வட்டி மற்றும் ஏனையவை	372,733,981	(137,739,576)	(2,716,099)	-	232,278,306
ஏனைய கடனாளிகள்	302,907,898	-	-	11,411,634	314,319,532
தொழிலாளருக்கான முற்பணம்	15,624,539	-	-	(1,233,206)	14,391,333
வைப்பு மற்றும் முற்பணம் (குறிப்பு 21)					
அசைவாக்கம் மற்றும் பிற முற்பணங்கள	26,659,765,475	(18,150,388)	-	(37,129,981)	26,604,485,106
வைப்புக்கள்	234,531,755	-	-	(13,071,361)	221,460,394
பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை (குறிப்பு 23)					
வங்கியிலுள்ள நிதி	1,869,822,259	(1,532,647)	-	(3,422,607)	1,864,867,005
பிராந்தியங்களின் நிதி முன்பணம்	3,850,690	-	-	(5,937)	3,844,753
மூலதன வழங்கீடு (குறிப்பு 27 δ 28)					
வெளிநாட்டு மானியங்கள்	180,809,157,920	-	-	(244,894,887)	180,564,263,033
உள்நாட்டு மானியங்கள்	983,667,752	-	-	(5,248,120)	978,419,632
திறைசேரி மானியங்கள்	92,750,876,538	-	-	(8,292,804	92,742,583,734
வியாபாரம் மற்றும் பிற செலுத்தப்பட வேண்டியவை (குறிப்பு 31)					
ஒப்பந்தக்காரர்களின் வைத்திருப்புக்கள்	3,666,057,746	-	-	3,191,309	3,669,249,055
கடன் வழங்குநர் கட்டுப்பாட்டுக் கணக்கு	1,247,126,354	(3,378,627)	(19,770,000)	(2,582,753)	1,221,394,974
சம்பளம் மற்றும் ஊதியம் செலுத்தப்பட வேண்டியவை	184,565,497	-	-	(1,721,237)	182,844,259
செலுத்தப்பட வேண்டிய வட்டி					-
ஏனையவை					
வெளிநாட்டுக் கடன் (குறிப்பு 29)	15,335,301,002	-	(660,842,771)	-	14,674,458,231
அரசாங்க மானியம் (குறிப்பு 25)	54,910,142,914	-	660,842,771	-	55,570,985,685

சீராக்கப்பட்டுள்ளது.

கணக்கியல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் (TSAP) நீண்டகாலம் நிலுவையிலுள்ள மீதி (LOBs)

நீண்டகாலம் நிலுவையிலுள்ள மீதி தொகையை சீராக்கும் வேலைத்திட்டம், TSAP எனும் தலைப்பின் கீழ் நீடிக்கப்பட்டுள்ளதுடன், கண்டறியப்பட்டுள்ள நீண்டகாலம் நிலுவையிலுள்ள மீதி தொகையை மேலதிக பரிசீலனை செய்வதற்காக தனியானதொரு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் நிகர விளைவுகள் கடனாளிகளுக்கு சீராக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு உரியவாறு முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்

2017 டிசம்பர் மாதம் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

36. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கடன் பொறுப்புக்கள்

	2017 ரூபா.	2016 ரூபா.
36.1 கீழ் கண்டவாறு கடன் செலுத்துவதற்கான கடப்பாடு சபைக்கு உண்டு.		
உள்நாட்டு வங்கியின் ஊடாக நிதியளிக்கப்பட்ட கடன்	54,434,291,379	50,436,605,168
வெளிநாட்டு வங்கியின் ஊடாக நிதியளிக்கப்பட்ட கடன்	123,202,731,614	52,304,746,571
மொத்தம்	177,637,022,993	102,741,351,739

36.2 **கிடைக்கப்பெற்ற மொத்தக் கடன்** கடன்	வெளிநாட்டுக் கடன்	உள்நாட்டுக்
2017.01.01 ஆம் திகதிக்கு நிலுவை	15,335,301,002	20,392,891,592
பெறுவனவுகள்	25,176,941,397	6,916,520,488
கொடுப்பனவுகள்	-	(659,977,137)
2017.12.31 ஆம் திகதிக்கு நிலுவை	40,512,242,399	26,649,434,943

36.3 **வட்டிச் செலவு**	2017 ரூபா.	2016 ரூபா.
வட்டிச் செலவு	6,291,304,344	1,670,213,515

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.

டபிள்யூஎஸ்எஸ்/ஏ/
என்டபிள்யூஎஸ்டிபீ/01/2017

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

2019 சனவரி 22

தலைவர்,
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ("சபை") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் (எல்கேஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்கேஏஎஸ் 01 – நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

நியமத்தின் 32 ஆம் பிரிவுக்கு முரணாக 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற ரூபா 5,347,682 கூட்டுத்தொகையான ஏனைய வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதிகள் எதிர்கால நிலுவைப் பொறுப்புக்களிற்கான சாத்தியத்தன்மையை இனங்காணாமல் மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஏறத்தாழ ரூபா 526,264,886 கிரயத்திலான சொத்துக்களின் ஆயுள்காலம் முடிவடைந்த ஏறத்தாழ முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட இன்னமும் பாவணையிலுள்ள அந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு இருந்ததுடன் நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இதன்படி அவற்றினைக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) எல்கேஏஎஸ் 19- ஊழியர் நலன்கள்

நியமத்தின் 58 மற்றும் 59 ஆம் பிரிவுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஓய்வூதிய நலன் உதவிக்கான (பணிக்கொடை ஏற்பாடு) ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **எல்கேஏஎஸ் 20 – அரசாங்க மானியங்களிற்கான கணக்கீடும் அரசாங்க உதவிகளின் வெளிப்படுத்துகையும் -**

7 முதல் 11 ஆண்டு காலத்திற்கு மேலாக மாற்றமடையாதிருந்த 33 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தொடர்பில் ரூபா 14,498 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டு மானியங்களின் மீதிகள் தீர்க்கப்படாமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான வேண்டப்பட்ட தகவல்கள் கிடைக்காமையால் நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது. திரட்டப்படாமை காரணமாக தீர்க்கப்படாத நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கத்தை அந்த வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான வேண்டப்பட்ட தகவல்கள் கிடைக்காமை காரணமாக கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(உ) எல்கேஏஎஸ் 23- கடன்படல் கிரயம்

ரூபா 3.5 பில்லியனான உள்ளூர் கடன்களின் கீழ் தொடங்கப்பட்ட செயற்திட்டங்கள் தொர்பில் ரூபா 3,922,080 தொகையான நான்கு (04) ஒப்பங்களின் கடன் கிரயம் நியமத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஊ) எல்கேஏஎஸ் 38- கற்பனைச் சொத்துக்கள்

சபையானது நியமத்தின் 104 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிலும் கற்பனைச் சொத்துக்களிற்கான திர்த்தல் காலப்பகுதி மற்றும் திர்த்தல முறை என்பவற்றினை மீளாய்வு செய்வதற்கு தவறியிருந்தது.

(எ) **எல்கேஏஎஸ் 40- முதலீட்டுச் சொத்துக்கள்**

(i) ரூபா 347.30 மில்லியன் தொகையான முதலீட்டு சொத்தின் பெறுமதி மதிப்பிடுகையில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றில் தனித்தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையானது பெறுமானத்தேய்வு முறை, ஆயுள் காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம், காலப்பகுதியின் ஆரம்ப மற்றும் இறுதில் மேற்கொள்ளப்படுகின்ற மொத்த பெறுமானதேய்வு தொகை மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதி குறைவுதொகை போன்றன தொடர்பில் முறையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 75(ஊ)(i) இன் பிரகாரம் முதலீட்டு சொத்திலிருந்தான வருமானம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 28 செயற்திட்டங்கள் தொடர்பில் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்ட ரூபா 167,679,950 கூட்டுத் தொகையான மீதிகள் புலனாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கல்களை செய்யப்படாமல் மூன்று முதல் ஒன்பது ஆண்டுகால வீச்சில் மாற்றமடையாதிருந்தது.

(ஆ) ரூபா 8,189,319,298 கிரயத்திலான 40 பூர்த்தியாக்கப்பட்ட மற்றும் கையளிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படாமல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலைகளில் விடப்பட்டிருந்தது.

(இ) கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்ட ரூபா 2,421,893 ஆன இருப்பு மீதி குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக களனி பிராந்தியத்தில் இருந்தது. மேலும், இந்த இருப்பு பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திருகோணமலை பிராந்தியத்தில் பிரதான உதிரிப்பாகங்களின் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதி ரூபா 11,821,641 ஆக இருந்தது போதிலும், ரூபா 472,760 பெறுமதியான இருப்புக்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) யாழ்ப்பாணம் பிராந்தி அலுவலகத்தின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், ரூபா 7,000,000 கிரயத்திலான ஒரு தண்ணீர் கோபுரமொன்று (உட்கட்டமைப்பு) குத்தகை ஆதனக் கட்டிடம் ரூபா 5,202,608 இல் முலதனமாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 11,853 பெறுமதியான ஆறு ஏனைய சொத்துக்கள் பௌதீக ரீதியாக இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 780,532 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், வழமையான நிபந்தனைகள் இல்லாமல் ரூபா 3,000,000 கிரயத்திலான இன்னொரு தண்ணீர் கோபுரம் கணக்குகளிற்கு கொண்டுவரக்முடிய நிலையில் இருக்காது. கைதவிர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் ரூபா 140,000 தொகையான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) சபையானது ஒவ்வொரு ஆண்டிலும் முன்னைய ஆண்டு சீராக்கல்களை செய்கையில் நிறுத்திவைத்த இலாபம் / (நட்டத்திற்கு) குறிப்பிடத்தக்களவு சீராக்கல்களை தொடர்ச்சியாக் செய்வது வழமையாக உள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவால், ஒவ்வொரு அண்டிற்கான இலாபம் கருத்திற்கொள்ளக்கூடியளவு தொகையால் வீழ்ச்சியடைந்திருந்தது. அத்தகைய முன்னைய சீராக்கல்களின் விளைவால் 2013 முதல் 2016 வரையான காலத்திற்காக நிறுத்திவைத்த இலாபம் / (நட்டத்திற்கு) தேறிய தாக்கம் ரூபா 631.70 மில்லியனாக இருந்தது. நான்காவது ஆண்டில் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கான சீராக்கல்கள் செய்வதற்கான சாத்தியத்தன்மை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபத்தின் பொருண்மை மற்றும் உண்மைத்தன்மை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளில் அத்தகைய சீராக்க்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு	வரவு வைக்கப்பட்ட தொகை	செலவு வைக்கப்பட்ட தொகை	திரண்ட இலாபத்திற்கான தேறிய தாக்கம்
2017	388,443,514	62,528,713	322,914,801
2016	454,847,390	336,150,543	118,696,847
2015	184,251,720	192,301,771	8,050,051
2014	88,633,609	269,544,864	180,911,255

(எ) பத்து வாகனங்கள் மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும் மூன்று வாகங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு மாத்திரம் அந்த கைதவிர்ப்புகளின் மீதான இலாபம் அல்லது நட்டத்தின் கணப்பீடு கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. ஏனைய சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானதேய்வு கருத்தில்கொள்ளாமை காரணமாக நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் அந்த சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ரூபா 77,011,565 கூட்டுத்தொகையான கடன்பட்டோருக்காக அழிவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 65,683,426 தொகையான சிக்கன சேவைக் கட்டணம் (ஈஎஸ்சீ) பெறவேண்டியவையாக இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் வருமானச் வரிச் செலவினமாக தவறாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம், இரண்டு நிலையான வைப்புக்கள் மீதான மொத்த முதலீட்டு வருமானம் ரூபா 5,328,915 ஆக இருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட நிலையான வைப்புக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு வருமானமாக ரூபா 4,774,759 ஆன தொகை மாத்திரம் பதியப்பட்டிருந்தது. எனவே, நிலையான சொத்துக்களில் செய்யப்பட்ட முதலீடுகள் மீதான வட்டி வருமானம் ரூபா 554,156 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

2.2.3 தொங்கல் கணக்கு

ரூபா 793,285,170 ஆன மொத்த தேறிய பெறுமதிக்கு சபையின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதன மீதிகள் போன்ற அத்தகைய மீதிகளை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தொங்கல் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 18,600,450 தொகையான ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள், ரூபா 37,129,982 தொகையான ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள், ரூபா 13,071,361 தொகையான வைப்புக்கள் மற்றும் ரூபா 3,428,544 தொகையான கணக்குப் புத்தகங்களிலுள்ள மிதிகள் என்பவற்றினை அந்த மீதிகள் உள்ளடக்கியிருந்தது. இதன்படி, 2017 இல் முடிவடைந்த ஆண்டில் உள்ளவாறு தொங்கல் கணக்கு மீதிகள் ரூபா 116,455 ஆக இருந்ததுடன் 2018 பெப்ரவரி இறுதி வரையும் அந்த கணக்கினை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிவ்லை.

2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்குப் புத்தகங்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்புக்களிலிருந்து ரூபா 9,161,858 ஆன தொகை பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 2,001,798 ஆன தொகை

மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. ரூபா 7,160,060 ஆன வித்தியாசத்தற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் சபையின் வர்த்தகப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட வியாபார கடன்பட்டோரின் காலப்பகுப்பாய்வு பட்டோலைக்கும் இடையில் ரூபா 20,470,232 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) பிராந்திய அலுவலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியில் காட்டப்பட்ட விற்பனை வருமானத்தின் பெறுமதிக்கும் சபையின் வர்த்தகப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட சீராக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 12,423,545 கூட்டுத்தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) உதவி அடிப்படையிலான வெளியீடு மீதான உலகலாவிய பங்குபற்றல் செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு மானியத்தின் பெறுமதி ரூபா 312,791,129 ஆகும். எவ்வாறாயினும், சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 289,218,261 ஆக காட்டப்பட்டது. எனவே, அந்த இரண்டு தொகைகளிற்கும் இடையில் ரூபா 23,572,868 ஆன விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) அம்பத்தளை, பாணந்துறை, களுத்துறை மற்றும் கம்பஹா போன்ற நான்கு பிராந்திய அலுவலகங்களிடமிருந்து பெறப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகளில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதிகளை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அத்தகைய சொத்துக்களின் நேரொத்த பெறுமதியுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நேரொத்த பட்டியல்களை ஒப்பீடு செய்யும் போது ரூபா 45,327,376 மற்றும் ரூபா 3,480,567 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நான்கு (04) போரேட்டுக் கணக்குகள் மற்றும் காண்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் மீள்பிரதியிடப்பட்ட ஆரம்ப மீதிகள் தொடர்பில் ரூபா 54.22 மில்லியன் கூட்டுமொத்த வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

விபரங்கள்	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பிரதியீடு செய்யப்பட்ட மீதிகள்	கணக்காய்வு கணிப்பீடுகளின் பிரகாரம் மீதி	வித்தியாசம்
	ரூபா	ரூபா	ரூபா
ஏனைய கடன்பட்டோர்	314,319,532	287,223,783	27,095,749
ஒப்பந்தகாரர் பிடிகாசு	3,669,249,055	3,662,866,437	6,382,618
கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு	1,221,394,974	1,221,425,775	30,801
உள்ளூர் கடன்கள்	19,767,069,288	19,746,356,156	20,713,132

(எ) வர்த்தகப் பிரிவின் அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அளவீட்டு விற்பனை பெறுமதிகளிற்கும் மொத்த விற்பனைக்களிற்கும் இடையில் ரூபா 76.8 மில்லியன் இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(ஏ) நிதிக்கூற்றுக்களிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடு என்பவற்றில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்களிற்கு இடையில் ரூபா 130,712,618 மொத்தமான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

விடயம்	கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணிப்பீடு	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்	வித்தியாசம்
	ரூபா	ரூபா	ரூபா
கடன்பட்டோர், பெறவேண்டியவைகள் மற்றும் வைப்புக்களிலுள்ள் வீழ்ச்சி	17,370,079,818	17,491,801,822	121,722,004
நிலையான சொத்துக்களின் கைதவிர்பு மீதான நட்டம்	2,664,753	4,495,307	1,830,554

கைதவிர்க்கப்பட்ட நிலையான சொத்தக்களிற்கான விற்பனை நடைமுறை	2,001,798	9,161,858	7,160,060

(ஐ) பேரேட்டில் காட்டப்பட்ட கொழும்பு பொரும்பாக நீர் மற்றும் கழவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 2 இன் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்ப்ட முற்பணத் தொகைக்கும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளிற்கும் இடையில் ரூபா 13,856,197 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

2.2.5 இனங்காணப்படாத மீதிகள்

ரூபா 655,561,757 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத நடைபெறும் வேலைகளின் மீதி இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்படாமல் 2004 இலிருந்து களுத்துறை பிராந்திய ஆதார நிலையத்தின் பேரேட்டில் இருந்தது.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிராக குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	விடயம்	பெறுமதி	கிடைக்கப்பெறாத சான்றுகள்
		ரூபா	
(i)	நடைபெறும் வெலைகள்	92,429,112	பிராந்திய ஆதார நிலையங்களின் விரிவான பட்டோலைகள்
(ii)	அசையாத மற்றும் அசையக்கூடிய சொத்துக்கள்	1,006,678,141	காலப்பகுப்பாய்வு
(iii)	ஏனைய கடன்பட்டோர்	294,984,707	விரிவான பட்டோலைகள்
(iv)	வியாபார கடன்கொடுத்தோர்	833,652,596	
(v)	ஏனைய கடன்கொடுத்தோர	97,725,057	
(vi)	காணிச் சுவீகரிப்பு முற்பணம்	161,712,636	
(vii)	ஊழியர்களிற்களிற்கான விசேட மிகையூதிய முற்பணம்	9,608,060	

2.2.7. கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார கடன்பட்டோர், கழிவகற்றல் கடன்பட்டோர் ஏனைய கடன்பட்டோர் ஆகியோரின் ரூபா 1,111 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் கணக்குகளில் இருந்தன.

(ஆ) ரூபா 268,846 தொகையான வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ஒரு ஆண்டு கடந்திருந்த போதிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2009 முதல் 2014 வரையான காலத்தின் போது ரூபா 77,889,359 தொகையான அத்தகைய காணிகளின் சுவீகரிப்பிற்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுகக்ப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடுகளிலுள்ள மொத்த கடன்கொடுத்தோர் மீதிகளில் ஒரு ஆண்டிற்கு மேலாக இருபத்து ஆறு சதவீதமான கடன்கொடுத்தோரை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(உ) ரூபா 39,877,391 தொகையான ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படாமல் 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. இதிலிருந்து சபையானது ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகள் தரவு நிரட்படுத்தலொன்று பேணப்பட்டிருக்காததிலிருந்து அவற்றின் மீதிகள் உறுதிப்படுத்தல்கள் ஊடாக கணக்காய்வில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காலிப் பகுதி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறியொன்று நிர்மாணிப்பதற்கு சபையால் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த காணி மதிப்பீட்டு திணைக்களத்தால் ரூபா 71.5 மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் காணியின் உரிமையாண்மையை பெற்றுக்கொள்ளாமல் முற்பணமாக காணி உரிமையாளருக்கு 2014 ஏப்ரல் மாதத்தில் ரூபா 21.25 மில்லியன் பெறுமதிக்கு சமமான 30 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. காணியில் ஏற்கனவே சில குடும்பங்கள் வசித்திருந்ததடன் பின்னர் உரிமையாளர் முற்பணத்தை பெற்ற பின்னர் உரிமையான காணி விற்பனையிலிருந்து மறுதித்திருந்தார். செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் அவற்றின் மீதான தண்டப்பணம் என்பன 2018 யூன் 30 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) கேகாலை பிராந்தியத்தில் ரூபா 6,020,554 தொகையான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 2017 திசெம்பர் 31 இ உள்ளவாறு இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாது இருந்தது.

2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 770	ரூபா 13,082,076 பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
(ஆ)	2006 செப்தெம்பர் 22 ஆந்திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை	சபையின் ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வுகளின் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.
(இ)	2017 இன் 07 ஆம் இலக்க சிக்கன சேவை கட்டண (ஈஎஸ்சீ) அதிகாரச்சட்டம்	மீளாய்ண்டின் போது செலுத்தப்பட்ட சிக்கன சேவை கட்டணம் முற்கொண்டுவரப்படாமல் மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,991,969,398 (மீளப்பதியப்பட்ட) வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 1,882,455,821 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 1,109,513,577 வீழ்ச்சியைக் காட்டுகின்றது. விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாக செலவினங்கள் மற்றும் நிதிக் கிரயங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு நிதி விளைவுகளின் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது சபையின் மேலதிக பெறுமதி ரூபா 17,972 மில்லியன் கூட்டுத்தொகையான அந்த ஆண்டிற்கான ஊழியர் வேதனம், வரிச் செலவினம் மற்றும் பெறுமாத்தேய்வு என்பவற்றினை கணக்கிற்குள் எடுத்தபின்னர் ரூபா 19,789 மில்லியனாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டில் ரூபா 18,808 மில்லியனாக இருந்தது. எனவே, சபையின் மேலதிக பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 981 மில்லியன் அல்லது 5.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

3.2.1 இலாபத்தன்மை

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த இலாபம் 4.3 சதவீதத்தால் அதகரித்திருந்த அதேநேரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாகச் செலவினம் 8.74 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனவே, மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 738,091,347 ஆன செயற்பாட்டு இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 58.04 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் பதிவுசெய்திருந்த ஒரு ஊழியருக்கான ரூபா 975,560 மற்றும் ரூபா 289,023 ஆன முறையே பங்களிப்பு மற்றும் தேறிய இலாபம் 2017 ஆம் ஆண்டில் முறையே ரூபா 936,538 மற்றும் 182,084 ஆல் அல்லது 4 சதவீதம் மற்றும் 37 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 43.93 ஆன வருமானம் 2017 ஆம் ஆண்டில் 3 சதவீதத்தால் குறைந்திருந்த அதேநேரம் 2016 ஆம் ஆண்டில் நுகரப்பட்ட தண்ணீரின் ஒரு அலகிற்கு ரூபா 46.53 ஆன உற்பத்திக் கிரயம் 2017 ஆம் ஆண்டில் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

3.2.2 குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டிற்கான சில குறிப்பிடத்தக்களவு கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு		2017	2016	2015	2014	2013
மொத்த எல்லை	இலாப	40.50	42.82	39.19	39.47	41.35
தேறிய எல்லை	இலாப	7.61	12.68	5.53	7.62	5.87

நடைமுறை விகிதம்	4.14	5.97	4.48	1.76	1.29
திரவ விகிதம்	3.72	5.33	3.80	1.35	0.98
மொத்த சொத்து சுழற்சி (தடவைகளின் எண்ணிக்கை)	0.05	0.06	0.06	0.07	0.07

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், சபையின் பிரதான நிதி விகிதங்கள் கடந்த நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது பாதகமான நிலையில் காணப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான தேறிய இலாப எல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.07 சதவீதத்தால் பாரதூரமாக குறைவடைந்திருந்ததுடன் நடைமுறை விகிதம் மற்றும் திரவ விகிதம் அடுத்துவரும் நிதியாண்டில் செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன்களின் அதிகரிப்பு காரணமாக முறையே 1.83 மற்றும் 1.61 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல் மற்றும் மீளாய்வு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வர்த்தகத்திலுள்ள நலிவுகள் மற்றும் வர்த்தகத்தின் வெளிச் சூழ்நிலைகளின் பாதிப்பு என்பன 2016– 2020 வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் முன்னர் முறைப்படி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள், வருடாந்த கொள்வனவுத் திட்டம், மனித வள அபிவிருத்தி திட்டம் கடன் திருப்பிச் செலுத்துதல் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு என்பன 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டில் ஏழு பெரிய மட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் மூன்று பெரிய மட்ட கழிவகற்றல் செயற்திட்டங்கள் 2018 யூலை 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள மொத்தச் சனத்தொகைகளில் மொத்த குழாய் நீர் வழங்கல் மேவுகை மற்றும் கழிவகற்றல் மேவுகை முறையே 52.3 சதவீதம் மற்றும் 2.4 சதவீதம் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு உள்ளபடியான மேவுகை முறையே 49.2 சதவீதம் மற்றும் 2.07 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

4.1.2 சுத்தமான தண்ணீரின் உற்பத்தியும் விநியோகமும்

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் உற்பத்தி மற்றும் அதன் கிரயம் மற்றும் கடந்த சில ஆண்டுகளாக வழங்கப்பட்ட புதிய இணைப்பக்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள்பின்வருமாறு உள்ளது.

ஆண்டு	2017	2016	2015	2014
உற்பத்தி (கமீ) மில்லியனில்,	678	649	600	575
அலகு கிரயம் (ரூபா)	35.49	34.61	34.41	31.79
புதிய இணைப்புக்களின் எண்ணிக்கை	2,219,172	2,092,471	1,947,473	1,825,837

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது 2016 ஆம் ஆண்டில் 649 மில்லியன் கனமீற்றர் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டின் போது 678 மில்லியன் கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் உற்பத்திசெய்திருந்தது, இது 4.5 சதவீத அதிகரிப்பைக் குறிக்கின்றது. அதேபோல, மீளாய்வாண்டில் உற்பத்தி அலகு கிரயம் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2012 முதல் 2017 வரையான காலத்தின் போது உத்தியோகத்தர் கிரயம், மின்சக்தி கிரயம், இரசாயணக் கிரயம் மற்றும் பராமரிப்புக் கிரயம் என்பவற்றின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்காக குறிப்பிடப்பட்ட இலக்கின் பிரகாரம், இது மீளாய்வாண்டின் போது (2014 முதல் 2017 வரையான திரண்ட பற்றாக்குறையான இணைப்புக்கள் உள்ளடங்கலாக) 231,198 புதிய இணைப்பக்கள் வழங்குவதன் மூலம் இறுதியில் உள்ளவாறு 2,323,669 ஆன புதிய இணைப்புக்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 126,701 புதிய இணைப்புக்கள்

மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 8.71 சதவீதமான வீழ்ச்சியை குறிக்கின்றது.

4.1.3 வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆறு ஆண்டுகளின் வருமானமற்ற நீரின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

விபரம்	2017	2016	2015	2014	2013	2012
தண்ணீர் உற்பத்தி (கன மீற்றர்)	678.9	649	600.14	575.00	547.0	525.6
தண்ணீர் நுகர்வு (கன மீற்றர்)	507.5	483	436.27	410.92	381.6	368.5
வருமானமற்ற நீர் (கன மீற்றர்)	171.3	166	163.87	137.07	165.4	157.1
தண்ணீர் உற்பத்தியின் சதவீதமாக வருமானமற்ற நீர்	**25.23**	**25.58**	**27.30**	**28.53**	**30.24**	**29.89**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி புறப்பாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக சாதாரண கிரயமொன்றாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், சராசரி வருமானமற்ற தண்ணீர் 2012 முதல் 2014 வரையான காலத்தின் போது மொத்த தண்ணீர் உற்பத்தியில் ஏறத்தாழ 1/3 பங்காக இருந்ததுடன் இது மீளாய்வாண்டின் போது ¼ இற்கு குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், வருமானமற்ற தண்ணீர் நீர்க் கசிவு, சட்டவிரோத இணைப்புக்கள், இலவச வழங்கல் மற்றும் நிர்வாகக் குறைபாடுகள் போன்றன காரணமாக சபைக்கு குறிப்பிடத்தக்களவு நட்டமொன்றைக் குறிக்கின்றது. 2017 இல் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரின் பகுதி 43.14 சதவீதமாக இருந்ததுடன் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்கு குறிப்பிடத்தக்களவு முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 75 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த கொழும்பு நகரத்தின் பிரதான நீர் விநியோக முறைமைகளைப் நவீனப்படுத்துவதற்கான தேவை ஏற்பட்டதால் அந்த நோக்கத்திற்கான திட்டங்களைத் தயாரித்து, அமுல்ப்படுத்துவதற்காக சபையின் கவனம் அவசரமாக கோரப்படுகின்றது. தற்போது இது தொடர்பாக ரூபா 30,124 மில்லியன் கிரயத்தில் இரண்டு பிரதான வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும், பிரதான நீர விநியோக

முறைமைகளின் போதிய மீள்நிர்மாணம் அதிலிருந்து அடையப்பட்டிருக்கவில்லை.

(iii) 49 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதில் பிரதான முன்னேற்பாடாக கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் (01) 2016 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது 2018 செப்தெம்பர் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 யூலை 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் 46.18 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

(iv) கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதில் பிரதான முன்னேற்பாடாக கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் (II) 2014 செப்தெம்பர் 03 இல் தொடங்கப்பட வேண்டுமெனவும் 2019 யூன் 30 பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனவும் பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதான ஒப்பந்த நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5.61 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது.

(v) விசேடமாக அத்திகதியில் இனங்காணப்பட்டிருக்காத தண்ணீர் கசிவுகளைக் குறைக்கும் நோக்கில் பிரதான தண்ணீர் விநியொகங்கள் மீளமைக்கப்பட வேண்டியிருந்தது. பல பிரதான செயற்திட்டங்களின் அமுலாக்கலிற்கான பிரேரணைகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றினுடைய அமுலாக்கல் மிகவும் மெதுவான இடத்தில் உள்ளது.

(vi) கிழக்கு கொழும்பில் நகர (ரீஈசீ) வடக்கில் விசேடமாக கொழும்பு நகரம், கம்பஹா, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை மற்றும் பண்டாரவளை தவிர்ந்த பகுதிகளில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்காக சபையின் கவனம் போதியதாக இருக்காததுடன் எனவே கூட்டிணைந்த திட்டத்திள் உள்ளடக்கப்பட்ட இலக்குகளும் ஒத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(vii) சபையானது 1 சதவீதத்தால் வருமானமற்ற தண்ணீரின் தொகையை குறைக்க முடியுமாயின் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 240.46 மில்லியனால் குறைக்க முடியும் என மேலும் அவதானிக்கப்பட்டது.

(viii) பிராந்தி ஆதார நிலையங்களில் (ஆர்எஸ்சீ) வருமானமற்ற தண்ணீரின் உள்ளபடியான மற்றும் இலக்கின் சதவீதத்திற்கும் இடையில் கவனத்திற்

கொள்ளக்கூடியளவு விலகல்கள் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

ஆர்எஸ்சி இன் பெயர்	வருமானமற்ற தண்ணீர் 2017 (சதவீதமாக)		
	இலக்கு	உள்ளபடியானது	முரண் (சாதகம்/ (பாதகம்)
மேற்கு மத்தி	34.5	33.8	0.7
மேல் தெற்கு	26.4	20.6	5.8
மேல் வடக்கு	23.0	19.3	3.7
தெற்கு	26.0	22.7	3.3
ஊவா	20.3	25.9	5.6
மத்திய	22.0	22.6	(0.6)
சப்ரகமுவ	23.8	30.3	(6.5)
வடக்கு மேல்	10.0	13.0	(3.0)
கிழக்கு	13.3	22.8	(9.5)
வடக்கு மத்தி	15.2	16.9	(1.7)
வடக்கு	21.0	26.6	(5.6)
நாடு பூராகவும்	27.3	25.2	(2.1)

4.1.4 கழிவுநீர் முறைமை

நகரங்களில் கழிவு நீரகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளிற்கான முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கான தேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சேர்ந்ததாக இடம்பெற்ற நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருந்தது. அத்தகைய வசதிகளை வழங்குதல் சபையின் பொறுப்பாக இருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிரிவில் போதிய முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை.

4.2. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளிற்காக (கழிவகற்றல்) பெரும் எண்ணிக்கையான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த செயற்திட்டங்களின் அமுலாக்கல் தொடர்பில் செய்யப்பட்ட அவதானிப்புகள் பின்வரும் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.2.1 அம்பத்தளை சக்தி சேமிப்பு செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த செயற்திட்டத்தின் மொத்த அமுலாக்கல் காலப்பகுதி 63 மாதங்களாக இருந்ததுடன் அதில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 39 மாதங்கள் காலாவதியாகியிருந்தது. எவ்வாறாயினும், அத்திகதியிலுள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக 7.7 சதவீதமாக இருந்தது.

(ஆ) புதிய குழாய்களின் 1200 மிமீ விட்டங்களின் இயலளவுடன் 9 கிலோமீற்றரிற்கான பழைய குழாயிடலினை மீளமைக்கின்ற பிரதான ஒப்பந்தம் 201 மே 04 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2018 மே 04 இல் உள்ளவாறு 500 மீற்றர்கள் மாத்திரம் குழாயிடப்பட்டிருந்தது.

4.2.2 கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னெற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 37.41 சதவீதம் மற்றும் 47.39 சதவீதமாக இருந்தது. கொழும்பு நகரத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்காக முறைமை புனரமைப்பின் பிரதான ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 45 சதவீதம் மற்றும் 27 சதவீதமான மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றுவதில் தாமதம், குழாயிடல் வேலைகளிற்காக திறந்த அகழி முறைக்கு அகழிகளற்ற முறை மாற்றுதல் மற்றும் ஒப்பந்தகாரர்களின் குறைவான செயலாற்றல் போன்றன பின்பற்றவதிலுள்ள தாமதங்கள் நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளழன் அமுலாக்கலில் மெதுவான முன்னேற்றத்திற்கு வித்திட்டிருந்தது.

(ii) கொழும்பு நகரத்தின் வடக்கு பகுதிகளில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்காக முறைமை புனரமைப்பற்கான கேள்வி ஆவணத்தின் பிரகாரம், குழாயிடலிற்காக திறந்த அகழி முறைக்கு பதிலாக முள்இணைப்ப மற்றும் குழாய் குழாய் வெடிக்க வைத்தல் (அகழிகளற்ற முறை) ஊடாக

அமுலாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் ஒப்பந்தகார் அகழி முறையை மாற்றுவதற்கு பிரேரணையை சமர்ப்பித்திருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் 3.1 மற்றும் 13.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக முரண் குழுவின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. உள்ளபடியான வேலைத்தள நிலைமைகள் மற்றும் நீர் வழங்கல் வலையமைப்பின் தற்பொதைய நிலைமைகள் என்பவற்றினைக் கவனத்திற் கொள்வதன் மூலம் முறையான வடிவமைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் பிரதான நோக்கெல்லையை மாற்றுதலில் விளைவால் அகழியற்ற தொழில்நுட்பத்தின் கீழ் கேள்விகோரல் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஒப்பந்தகாரர்களிற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டது.

4.2.3 கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த செயற்திட்டம் 13 கூறுகளைக் கொண்டுள்ளதுட் செயற்திட்டத்தின் முன்னெற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்திட்டத்தின் ஆக்கக்கூறுகளின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றமானது ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல், கொழும'மு மாநகர சபையிடமிருந்து அனுமதி பெறுவதிலுள்ள தாமதம் மற்றும் நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் போன்றன காரணமாக 5.61 சதவீதமாக இருந்தது. மேலும், பாணந்துறை அப்பகுதி பொறியியலாளர் அலுவலக கட்டிட நிர்மாணம், அரசாங்கம் உடமையாக்கப்பட்ட வீட்டுத்தொகுதி குழாயிடல் முறைமைகளின் புனரமைப்பு மற்றும் மேல் மத்திய– பிராந்திய ஆதார நிலையத்திற்கான 02 தொகுதி செயற்பாட்டு உபகரணங்களின் கொள்வனவு என்பவற்றிற்கான ஒப்பந்தங்கள் 2017 திசெம்பர் 31 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும், கொழும்பு நகரத்தின் மேற்கு மற்றும் தெற்கின் வருமானமற்ற தண்ணீரிற்கான முறைமை புனரமைப்பின் ஆக்கக்கூறின் கீழ் செயற்திட்டத்தால் வழங்கபபட்ட ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்கல் திகதி மற்றும் சமுதாய நடமாடும் விழ்ப்புணர்வு மற்றும் நடத்தை மாற்றங்களின் ஆலோசனை சேவைகள் என்பவற்றின் பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் 30 வரை பின்னால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(iii) முற்பணமளிக்கப்பட்ட கொள்வனவாக கடனளிக்கும் முகவரால் ஒப்பந்தம் அனுமதிக்கப்பட்டடிருந்த போதிலும் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான ஒப்பந்தத்தின் கொள்வனவு நடைமுறையை பூர்த்தியாக்குவதற்கு 504 நாட்கள் செலவழிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், முறையான தீர்க்கமான அளவீடுகளின் அடிப்படையில் ஆரம்ப கட்டத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் யதார்த்தமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால், இந்த ஆக்கக் கூறிக் கீழ் 90 கிலோமீற்றர் மதிப்பிடப்பட்ட குழாயிடல் வேலைகளின் நீளம் 194.5 கிலோமீற்றர் வரை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்தத்தின் கேள்வி ஆவணங்களின் பிரகாரம், மூலப்பொருட்களை பயன்படுத்துவதில் உற்பத்தி உறுதிப்படுத்தல் சான்றிதழ் மற்றும் மதிப்பாய்வு செய்யும் நோக்கத்திற்கான பிரதான நபர்களின் விபரங்கள் கேள்வி சமர்ப்பித்தலின் இறுதிதிகதியிலுள்ளவாறு தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், கொழும்பு நகரத்தின் மேற்கு பிராந்தியத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பின் ஆக்கக்கூறின் கீழான ஒப்பந்தம் 2016 திசெம்பர் 01 இல் கைசாத்திட்ட ஒப்பந்த உடன்படிக்கை திகதிவரையுத உரிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத கேளிவியாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 9.57 சதவீத மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. அதற்கு மேல், நீரியல் நவீனமயப்படுத்தலிற்கான சொல்லப்படட ஒப்பந்தத்தின் கீழான வெலைகள் மற்றும் 18 மாவட்டங்கள் மீற்றரிடல் பகுதிகள் மற்றும் 02 பிரதான ஊடுருவலின் விரிவான வடிவமைப்பு என்பன 2018 மார்ச் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2017 சனவரி 10 இல் வழங்கப்பட்ட வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் கீழ் பிரதான ஊடுருவல் முறைமைக்கான நீரியல் நவீனமயப்படுத்தலிற்கான வெலைகள் மற்றும் 18 மாவட்டங்கள் மீற்றரிடல் பகுதிகள் விரிவான வடிவமைப்பு என்பன 2018 மார்ச் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அளவீடு செய்யப்பட வேண்டுமென இலக்கிடப்பட்ட 35,000 வீடுகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்பந்தப்பட்ட 15,984 வீடுகள் அளவீடு செய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், 2019 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 155 கிலோமீற்றர் குழாயிடல் வெலைகளில் 02 கிலோமீற்றர் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(vi) தண்ணீர் பாவணையாளர்களிற்காக பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை மாத்திரம் கொண்டுள்ளது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு பொதிகளின் கீழ் நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் இனங்காணப்பட்ட விடயங்களிற்கான சிபார்சுகள் மற்றும் தீர்வுகள் போன்றன அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களிற்கு வருகைதந்த பின்னர் தண்ணீர் பாவனையின் முறையை மாற்றுவதை மதிப்பாய்வு செய்வதற்கு அங்கு முறையான பொறிமுறையொன்று இருக்கவில்லை.

(vii) பாணந்துறையில் அப்பகுதி பொறியிலாளர் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக குத்தகை அடிப்படையில் 2015 செப்தெம்பர் 02 இல் செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணி அதற்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 10 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது கொழும்பு மாநகர சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. அதற்கு மேல், அலுவலக கட்டிடத்தின் படம் வரைதல் வேலைகளில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 2.11 மில்லியன் இன்னொரு முற்பணம் உரிய காணி மாற்றப்பட்டமை காரணமாக பயனற்ற செயலவனமாக இருந்தது.

(viii) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவிலுள்ள வேண்டுகைக்கு முரணாக பதில் கடமை அடிப்படையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளரின் (கிழக்கு மாகாணம்) பதவிக்காக செயற்திட்டத்தின் பணிப்பாளரை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர் நியமித்திருந்தார்.

4.2.4 உதவி அடிப்படையிலான வெளியீடு மீதான உலகலாவிய பங்குபற்றல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 583.66 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5.08 மில்லியன் மொத்த உடன்பட்ட மானியத்தில், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 06 ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 340.76 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.31 மில்லியன் அல்லது 45.47 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக மீதமிருக்கின்ற செயற்திட்டக் காளப்பகுதிக்குள்

ஒதுக்கிய மிகுதி தொகையின் பயன்பாட்டின் சாத்தியத் தன்மை ஐயத்திற்கிடமாக உள்ளது.

(ii) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்டமானது 07 ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளதுடன் அதில் கள சுகாதார முன்னேற்றங்களிற்கான ஆக்கக்கூறு ஒப்பந்தங்ள் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரிக் குறைவான செயலாற்றல் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26.52 சதவீத மெதுவான முன்னெற்றத்தை காட்டியிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் செயற்திட்ட ஆக்கக்கூறுகளின் ஒட்டுமொத்த பௌதீக மன்னேற்றம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100 சதவீத பௌதீக முன்னேற்றம் அடையப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 91.6 சதவீதத்தில் இருந்தது.

(iii) களச் சுகாதார முன்னேற்றத்தின் ஆக்கக்கூறிற்கான ஒப்பந்தம் 2016 மே 16 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் தெகிவளை, மொரட்டுவை, கொலன்னாவ மற்றும் ஜா-எல பகுதிகளில் 3,785 சுதிகரிப்பு பொறிகளை வழங்கி பொருத்துவதற்கும் 1,135 மலசலகூடங்கள் நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயிறும், ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், குளியாப்பிடியில் அமைந்திருந்த உற்பத்திப் பரீல் போதி தொழிலாளர் படையணி இன்மை மற்றும் சுத்திகரிப்பு பொறிகளின் உருக்குதல் வேலைகளின் குறைவான செயலாற்றல் போன்றன காரணமாக 2017 திசெம்பர் 1 இல் உள்ளவாறு திட்டமிடப்பட்டவற்றில் முறையே 556 அல்லது 15 சதவீதம் சுத்திகரிப்பு பொறிகளின் பொருத்துதல் மற்றும் 205 மலசலகூடங்கள் அல்லது 18 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பின்னர், ஒப்பந்த வேலைகைளை துரித்படுத்தும் நோக்கில் 2018 மே 15 இல் நான்கு (04) வேறு ஒப்பந்தகாரர்களிற்கு அதே ஒப்பந்தத்தை மீள வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பிரதான ஒப்பந்தகாரர் பொருத்துதல் பகுதியை கையேற்ற போதிலும் 2018 யூலை 17 அளவில் புதிய ஒப்பந்தகாரர்களின் நாளாந்த தேவைகளின் சுத்திகரிப்பு பொறிகளை வழங்குவதற்கும் தவறியிருந்தார்.

(iv) செயற்திட்டமானது கொலன்னாவ பிரதேச செயலாளர் பகுதியில் 950 களச் சுகாதார வசதிகளை வழங்குவதற்கும் 285 மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கும் திட்டமிட்டிருந்தது. இதன்படி, செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிணைமுறி உத்தரவாதங்கள், காப்புறுதி மற்றும் தளபாடங்களின் பராமரிப்பு போன்றவற்றிற்காக ரூபா 2,135,939 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது நலனாளிகளிற்கு எவ்வித நன்மைகளையும் வழங்குவதற்கு தவறியிருந்தது என வெளிப்பட்டது.

(v) மேற்குறிப்பிட்ட பகுதி (III) இல் கையேற்றப்பட்ட பெருத்துதல் பகுதி ரூபா 153.30 மில்லியன் மொத்த ஒப்பந்த பெறுமதியில் நான்கு (04) ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட பொருத்துதல் ஒப்பந்தத்திற்கான பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 117.92 மில்லியனாக இருந்தது. இதன்விளைவால், புதிய ஒப்பந்தகாரர்கள் ஆரம்ப மதிப்பீட்னை விஞ்சி ரூபா 35.38 மில்லியன் ஏற்படுத்துவதன் மூலம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், மேலதிக செலவினம் அரசாங்கம் மற்றும் தேசிய நீர் வழங்கல் சபைக்கு ஏற்படுவதுடன் கொடையளிக்கு முகவர்களிடமிருந்து மீளளிப்பதற்கான சாத்தியம் இருக்கவில்லை.

4.2.5 கண்டி வடக்கு- பாததும்பற ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தம் 2015 யூன் 16 இல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2 ½ ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 22 இல் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) நோக்கெல்லையை குறைத்த பின்னர் (ஏற்பாடுகள் மற்றும் விலை வேறுபாடுகள் தவிர்த்து) இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதி ரூபா 24,790..24 எனவே, மில்லியனாக இருந்ததுடன் இது சபையின் ரூபா 16,169.35 மில்லியன் (நோக்கெல்லையை குறைத்த முன்னர்) பொறியியலாளர் மதிப்பீட்டின் 53 சதவீதத்தால் விஞ்சியிருந்தது.

(iii) சபையின் பொறியியலாளர் மிப்பீடுகளின் பிரகாரம், வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தில் ஏற்பட வேண்டியிருந்த மதிப்பிடப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 26,388,500 ஆக இருந்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டு ஒப்பந்தகாரரின் ஒப்பந்த பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் 192,336,418 ஆக இருந்தது. எனவே, வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தில் ஏற்பட வேண்டியிருந்த திட்டமிடப்பட்ட தொகை 629 சதவீதத்தல் விஞ்சியிருந்தது.

(iv) கொள்வனவு வழிகாட்டலின் 5.3.9 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், கேள்வியாளர்கள் வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவிற்காக பொருத்தமான நியாயப்படுத்தல்கள் சமர்ப்பிப்பதற்கு வேண்டப்பட்டன. எவ்வாறாயினும், பின்வரும் விடயங்கள் அத்தகைய நியாயப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளாமல் சபையால் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

விடயம்	மதிப்பீட்டில் வழங்கப்பட்ட தொகை	சுங்க வரியாக வழங்கப்பட்ட தொகை
	ஐ.அ.டொலர்	ஐ.அ.டொலர்
கல் உடைத்தல் மற்றும் அகற்றல்	1,470,033	12,905,856
27 மரங்கள் வெட்டுதல்	229,608	2,003,499
135 கூரை மரங்கள் வெட்டுதல்	73,080	637,425

(எ) மேலும், மீள் குடியேற்ற குடும்பங்களின் இரண்டு (02) வீடுகள் நிரமாணிப்பதற்கு மதிப்பீட்டில் ரூபா 31.92 மில்லியன் தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

4.2.6 கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்த்தின் குறிக்கோள்களிற்கு முரணாக, ஒப்பந்தகாரர் சபையின் தலைவரின் பயன்பாட்டிற்காக ஜீப்பொன்று கொள்வனவு செய்வதற்கு சபையால் செய்யப்பட்ட வேண்டுகைகளில் 2016 மார்ச் 18 இல் தலைமை அலுவலகத்திற்கு ரூபா 18,600,000 ஆன தொகை அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த நிதி வாகனக் கொள்வனவிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, ஒப்பந்தகாரர் வருகைக் கட்டணமாக ரூபா 980,000 ஆன தொகை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ii) வருமானமற்ற தண்ணீரை குறைக்கும் நோக்கில் தண்ணீர் பொருத்தி பரிசோதனை ஆய்வுகூடம், தண்ணீர் அளவைமாணி பரிசோதித்தல் ஆய்வுகூடம் மற்றும் ஈரப்பதன் கிணறு பரிசோதித்தல் பிரிவு என்பன 2016 பெப்ரவரி 29 இல் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த பிரிவுகள் 2018 யூலை 31 வரையும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2.7 யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம்

நாவற்குழி தண்ணீர் கோபுரம் மற்றும் அலுவலக கட்டிடம் என்பவற்றின் நிர்மாணத்திற்காக காணியை சுவீகரிப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2014 யூன் 11 இல் ரூபா 3.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சுவீகரிக்கப்பட்ட காணியின் உரிமையாண்மை

2017 திசெம்பர் 31 வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

4.2.8 உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டோலையின் 18 ஆம் பந்தியின் பிரகாரம், உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகள் வெளியேற்றப்பட்ட கழிவு மற்றும் உலர்த்தப்பட்ட கழிவு வெளியேற்றத்தின் நுண்ணியல் தரம் என்பவற்றுடன் சுத்திகரிக்கப்பட்ட கழிவு, தண்ணீரின் தரம் என்பவற்றின் தரம் மற்றும் அளவினை ஒழுங்கான கணக்காணிப்பு நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், வினைத்திறனான முகாமைத்துவத்தில் அமுலாக்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அப்பகுதி உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளால் கண்காணிப்பு பொறிமுறைகளை அமுலாக்குவதை நிரூபிப்பதற்கு சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

(ii) 2005 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை அமுலாக்குவதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இணைந்து நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையும் இரண்டு தரப்பினராலும் பொருத்தமான பொறிமுறை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளாமல் வவுனியாவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளருடன் நெற் பயிர்ச்செய்கைக்காக 03 நீர்ப்பாசனக் குளங்களை புதுப்பபித்தல் மற்றும் புளியங்குளம் மற்றும் கற்குளம் காணிகளை நிரப்பல் என்பவற்றிற்கு 2014 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று கைச்சாத்திட்டிருந்தது. எவ்வாறாயினும், உதவி ஆணையாளர் அதன்படி வேலைகளை செய்திருக்காததுடன் அகவே வேலைகள் தாமதப்பட்டிருந்தது. இதன்விளைவால், செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளில் முன்னைய ஆண்டுகளில் இழப்பீடாகவும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிக்ககவும் ரூபா 21.8 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்த வேண்டியிருந்தது.

(iv) செயற்திட்டமானது வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக கடனளிக்கும் முகவரின் அனுமதியின் கீழ்

ரூபா 16.95 மில்லியன் கிரயத்தில் 02 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு 2017 மே 19 இல் நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும், உரிய மோட்டார் வாகனங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதில் ஈடுபட்டிருக்காத தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தென் பிராந்திய அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

4.2.9 மொனறாகலை, புட்டளை நீர் வழங்கல் திட்டம்

2015 நவம்பர் 30 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் ஒப்பந்தகாரருக்கும் இடையில் புரிந்தணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. உப ஒபபந்தம் மேற்கொள்வதற்கு சபையால் யூரோ 500,000 பெறுமதியான வேலைகள் கையேற்றக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாட்டில் சபைக்கு யூரோ 400,000 மாத்திரம் (ரூபா 62.81 மில்லியன்) அனுப்பப்பட்டிருந்ததுடன் மிகுதி யூரோ 100,000 (ரூபா 15.70 மில்லியன்) நடவடிக்கைகளில் நடுநிலையாக செயற்படாமல் ஒப்பந்தகாரரால் இலாப எல்லை மற்றும் மேந்தலையாக கருதப்பட்டிருந்தது.

4.2.10 தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 மார்ச் 06 தொடங்கி வைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு 2014 செப்தெம்பர் 05 அளவில் பூர்த்தியாக்குவதற்கு ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்ட போதிலும், ஒப்பந்தகாரர் அத்திகதியில் பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்ததுடன் அத்தகையவாறு, 2014 செப்தெம்பர் 06 முதல் 2018 மார்ச் 31 வரை 05 தடவைகளில் மேலதிகமாக 43 மாதங்களால் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தமானது 2018 யூன் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ஐ.அ.டொலர் 199.36 மில்லியன் பெறுமதியில் பல்லேகல, பொதுகேர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த செயற்திட்டம் மற்றும் மற்றும் பன்னல, மஹந்டுர மற்றும் குழியாப்பிட்டிய நீர் வழங்கல் செயற்திட்டம் என்பவற்றின் இரண்டு வேறு ஒப்பந்தங்கள் முறையே 2015 நவம்பர் 26 மற்றும் 2016 திசெம்பர் 02 இல் அதே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) மேலும், இந்த செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தார் பெறப்பட்ட கடன் தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் தவணைப்பணங்கள் மற்றும் வட்டிகளாக முறையே ரூபா 1,964.32 மில்லியன் மற்றும் ரூபா 677 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்ததுடன் தாமதப்பட்ட காலப்பகுதியின் போது செயற்திட்ட அலுவலகத்தின் பராமரிப்பு தொடர்பில் உத்தியோகத்தர் மற்றும்

மேந்தலை கிரயமாக ரூபா 151 மில்லியன் செயவினமொன்று 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிகமாக ஏற்படவேண்டியிருந்தது.

4.3. தாமதமடைந்த செயற்திட்டங்கள்

காணி தெளிவுபடுத்தலிலுள்ள தாமதம், சுற்றுசூழல் மற்றும் மீள்குடியேற்ற விடயங்கள், ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட குறைந்த தர பீஈ குழாய்கள் போன்றன காரணமாக ஏழு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் கவனத்திற்கொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

செயற்திட்டம்	மதிப்பிடப்பட்ட தொகை	தொடங்கிய திகதி	பூர்த்தியாக்க வேண்டிய திகதி	நீடித்தல காலப்பகுதி	தாமதப்பட்ட நாட்களின் எண்ணிக்கை
	ரூபா மில்லியன்				
உதவி அடிப்படையிலான வெளியீடு மீதான உலகலாவிய பங்குபற்றல் செயற்திட்டம்	1,559	2011/12/27	2015/12/31	2017/12/31 – 2018/12/31	1095
தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் திட்டம் கட்டம் 01	9,593	2012/03/06	2014/09/05	2014/09/06 – 2018/03/31	1302
இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்	4,493.66	2013/07/23	2015/07/24	2015/07/24 – 2016/02/29	220
கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்	7,148	2007/03/30	2012/09/30	2014/12/31 – 2017/12/31	1753
கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம்	13,410	2009/12.18	2014/12/31	2014/12/31 – 2017/12/31	1095
உலர் வலய நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம்	19,165	2009/11/13	2013/06/30	2013/06/30 – 2018/12/31	2009

கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டம்	4,785	2007/11/27	2012/01/31	2012/01/31 – 2017/06/20	1965
கிழக்குப் மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டம்	7,702.25	2010/03/20	2013/12/20	2012/12/20 – 2015/12/31	741
கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம்	17,278	2010/02/03	2017/10/10	நீடிக்க வில்லை	385

4.4. உள்நாட்டு வங்கி கடன் நீர் வழங்கல் செயற்திட்டங்கள்

4.4.1 மாத்தறை மாவட்ட நீர் வழங்கல் இணைப்பு உறுதிப்படுத்தல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தறை மாவட்டத்தில் 1,300 நீர் வழங்கல் இணைப்புக்களை வழங்கும் நோக்கில் செயற்திட்டமானது தொடங்கப்பட்டது.

(ஆ) யூபீவீசீ குழாய்கள் வழங்குதல், பொருத்துதல் மற்றும் உபபாகங்கள் என்பவற்றிக்கான ஒப்பந்தம் 2015 மார்ச் 15 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 70,766,819 தொகையான யூபீவீசீ குழாய்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல் அவற்றில் அவங்க்பபட்டது. எவ்வாறாயினும், யூபீவீசீ குழாய்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதலிற்கான ஒப்பந்தம் 2014 திசெம்பர் 19 இலிருந்து 2015 யூலை 01 வரையான காலத்திற்காக வழங்கப்பட்டிருந்தது, 2018 ஆகஸ்ட் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

4.4.2. கண்டி வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் 01 இன் கீழான குழாயிடல்

குழாய்கள் குழாயிடலிற்காக ரூபா 77,705,705 மற்றும் ரூபா 94,032,235 ஆன இரண்டு ஒப்பந்தத்தின் பெறுமதி முறையே 2014 செப்தெம்பர் மற்றும் 2014 திசெம்பர் மாதங்களின் போது ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கப்பட வேண்டியப ட்டியலிப்பட்ட திகதி முறையே 2015 ஆகஸ்ட் மற்றும் 2015 யூலையாக இருந்தன. எவ்வாறாயினும், அந்த செயற்திட்டங்கள் 2015 செப்தெம்பர் 15 இல் ரூபா 33,677,822 கூட்டுத்தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 02 ஆண்டுகள் கடந்த பின்னரும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

4.5. முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தறை மற்றும் பண்டாரவளை மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர மட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டங்களிற்காக ரூபா 235 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில், ரூபா 15.8 மில்லியன் அல்லது மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அவசர சிறிய சமூதாய (சிறிய மற்றும் நடுத்தர) நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 271.40 மில்லியன் அல்லது 54.3 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மேலும், மீளாய்வாண்டில் திருகோணமலையின் விரிவாக்கத்திற்காக ரூபா 250 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் எவ்வித செலவினமும் ஏற்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவனல்லையில் காட்சியறையில் போதிய இடமின்மை காரணமாக, எவ்வதி பாதுகாப்பும் இல்லாமல் காட்சியறைக்கு வெளியே பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்து. மேலும், காட்சியறையிலுள்ள தண்ணீர் மீற்றர்கள் கறையானால் சேதமடைந்திருந்தது.

(உ) கேகாலை மற்றும் களுத்துறை பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பிரகாரம், நுகர்வோர் முறைப்பாடுகளைக் கையாள்வது தொடர்பில் மெதுவான முன்னெற்றம் அவதானிக்கப்பட்டது.

4.6. செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள்

சபையின் குறைவான கடன் சேவை இயலளவு காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கு பின்னர் தொடங்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக பெறப்பட்டிருந்த ரூபா 63,612,471,380 தொகையான கடன்களின் நிலுவையாகவிருக்கின்ற பெறுமதியை 2015 முதல் 2017 வரையான அரசாங்க உரிமை மூலதனக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

4.7. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 26 காட்சி அறைகள் தொடர்பில் ரூபா 304,192,322 மொத்தமான மெதுவாக அசைகின்ற இருப்பு மீதிகள் அந்த காட்சி அறைகளின் மொத்த இருப்பு மீதிகளின் 40 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்றவை நீண்ட காலமாக இருந்தது.

(ஆ) ரூபா 539,183,367 மொத்தமான அசையாத இருப்பு மீதிகள் மற்றும் ரூபா 467,494,774 பெறுமதியான மெதுவாக அசைகின்ற இருப்புக்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக்களில் இருந்ததுடன் சபையின் மொத்த இருப்புக்களில் முறையே 7 சதவீதம் மற்றும் 6 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்றது.

(இ) கண்டி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கான ஆய்வுகூடங்களின் நிர்மாணத்திற்காக ரூபா 166,993,899 செலவழித்த பின்னர் செயற்திட்டமானது ஆட்சேர்ப்புக்களில் தவறியமை காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) காலி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் 2012 இல் ஹப்புக்கல நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்காக ரூபா 16 மில்லியன் செலவழித்து காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் காணி சுவிகரித்த பின்னர் பாரிய வெடிப்பக்கள் காரணமாக அந்நாளில் குறித்த நோக்கததிற்காக காணி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.8. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 352,151,303 ஆன இடைப்போக்கிலுள்ள இருப்புக்களில், ரூபா 35,713,013 பெறுமதியான இருப்புக்கள் புலனாய்வு செய்யப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இடைப்போக்கிலுள்ள இருப்புக்களாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட இருப்புக்கள் இருப்பு மெய்மையாய்வுக்கு முன்னர் இருப்பு மீதிக்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 521,015,622 மொத்தமான தேறிய வரவு மீதிகள் மற்றும் ரூபா 284,249,255 மொத்தமான தேறிய செலவு மீதிகள் இருப்பு மெய்மையாய்வின் பின்னர் இருப்பு மீதிகளிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு 11 வாகனங்கள் விடுவித்திருந்தது. எவ்வாறாயினும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயலாளர் பிஏ- 8942, பிஈ-5461 மற்றும் பிசீ- 5865 ஆம் இலக்கங்கள் கொண்ட 03 வாகனங்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்தது என அறிவித்திருந்தார்.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் சேகரிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 1,244,968,958 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் அவதானிக்கப்பட்டது.

4.9. ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந்திகதிய பிஈடி.'.12 ஆம் இலக்க பொது முயற்சிகளிகன் 8.3.9 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, 2017 திசெம்பர் 31 அளவில் வரிசை அமைச்சிற்கு 71 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சபையானது 2015 திசெம்பர் மாதத்திலிருந்து 2017 திசெம்பர் மாதம் வரை அந்த ஊழியர்களிடமிருந்து சம்பளங்களாக ரூபா 87,840,261 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட 28 ஊழியர்கள் மாத்திரம் அமைச்சின் கடமைகளிற்கு தீவிரமாக பங்காற்றியிருந்தனர். மேலும், சபையால் செலுத்தப்பட்ட அந்த ஊழியர்களிற்கான சம்பளங்கள் அமைச்சால் மீளளிப்பச்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட ஊழியர்களில், 40 ஊழியர்கள் ஒருங்கிணைப்பாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், ஒருங்கிணைப்பாளர் பதவி சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் இருக்கவில்லை.

(இ) மேலும், 11 மோட்டார் வாகனங்களும் 2017 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்தின் போது வரிசை அமைச்சிறிகு விடுவக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களின் திருத்தங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றிற்காக ரூபா 1,093,567 ஆன தொகை ஏற்பட்டிருந்தது.

4.10. பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது மீளாய்வாண்டின் போது முகாமையாளர்கள் / பொறியியலாளர் (எந்திரவியல்), பொறியியலாளர் (மின்னியல்), பொறியியலாளர் (சிவில்), நடுத்தர மட்ட தொழில்நுட்ட (எம்எல்-ரீ) எழுதுனர் மற்றும் இணைந்த வகுதியினர், வேறு தொழில்திறன் தரம் மற்றும் அரைத் தொழில்திறன் போன்ற பிரதான செயற்பாட்டு மட்ட பதவிகளில் இருந்த 817 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ வேசவைகள் திணைக்கள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தை இறுதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சபையானது 2000 இலிருந்து 2016 வரையான ஆண்டுகளின் போது வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கு பல்வேறு வகுதிகளில் 140 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். சபையால் செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள் அந்த செயற்திட்டங்களால் சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. 02 பிரதி பொது முகாமையாளர்கள், 18 உதவிப் பொது முகாமையாளர்கள், 28 பிரதம பொறியியலாளர்கள், 41 பொறியியல், 40 பொறியியல் உதவியாளர்கள் மற்றும் 3 சமூகவியலாளர்கள் போன்றோர் அவர்களில் உள்ளனர்.

(ஈ) 223 ஊழியர்கள் மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் சிவில் பொறியியலாளர் மற்றும் படம் வரைஞர் உள்ளடக்கப்பட்டது.

(உ) 508 ஊழியர்கள் திறைசேரி செயலாளர் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் 2015 ஆம் ஆண்டில் பல் துறை தொழில்நுட்ப பயிற்சியாளர்களாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் 491 ஊழியர்கள் 2016 ஆம் ஆண்டின் போது அவர்களுடைய சேவைகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2016 முதல் 2018 வரையாக ஆண்டுகளிற்காக அவற்களிற்கான சம்பளங்களாக ரூபா 563.5 மில்லியன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மேற்குறிப்பிட்டவாறு சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையலிருந்து ஒருபகுதியான 1,628 ஊழியர்கள் சபையில் சேவை ஒப்பந்த உடன்படிக்கையில்

ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக அற்களிற்காக ரூபா 449 மில்லியன் தொக செலுத்தப்பட்டிருந்தது.

(எ) கட்ட ஐந்து ஆண்டுகளாக ஒரு ஊழியருக்கான மொத்தக் கிரயம் பின்வருமாறு உள்ளன.

4.11 வெளிப்படையான முறையீனங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 தொடக்கம் 2006 வரையான காலத்தின் போது திருகோணமலை, களனி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 246.66 மில்லியன் காசு மோசடிகளை 2016 திசெம்பர் 31 வரையிலும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது வாசிப்பு மானி மூலம் களுத்துறை பிராந்தியத்தில் பங்களிப்புச் செய்யப்பட்ட ரூபா 1,145,235 ஆன மோசடி 2018 ஆகஸ்ட் 31 வரையும் பொறுப்புடைய நபர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

5. பொருத்தமான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைதல்

ஐக்கிய நாடுகளின் பொருத்தமான அபிவிருத்தி குறிக்கொள்களில் 2030- கால அட்டவணை வழங்குகையில் 2030 இல் தன்னார்வ அந்த மகளீர் மற்றும் பெண்கள் தேவைகளிற்கு கவனம் செலுத்தி திறந்த துதிறந்த மலங்கழத்தல்களிற்கான போதிய மற்றும் சமத்தவமான சுகாதர மற்றும் சுத்தமான வழிகள், விசேட செலுத்தல்கள் கசலருக்காகவும் பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்க வாய்ப்பளிப்பதற்கு பொதுவான மற்றும் சமத்துவமான வழியில் அடைதலாக பொருத்தமான அபிவிருத்தி குறிக்கோள்களை இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும், சபையின் நோக்கெல்லையின் வருகின்ற ஏனைய குறிக்கொள்கள், இலக்குகள் மற்றும் எல்லைகளை இனங்காண்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொருத்தமான அபிவிருத்தி குறிக்கொள்களை அமுலாக்கும் நோக்கில் சபையால் உள்ளக சுற்றறிக்கைகள் அல்லது வழிகாட்டல்கள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

6. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

6.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உதவி பொது முகாமையாளர், 5 பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள், மூன்று உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் பொறியியலாளர் உள்ளடங்கலாக உள்ளக கணக்காய்வு பிரிவில் 16 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளின் பெரிய எண்ணிக்கை சபையால் மேற்கொள்ளப்படகின்ற பொதிலும் போதிய உத்தியோகத்தர் எண்ணிக்கை சபையின் தொழில்நுட்ப கணக்காய்வு பிரிவுக்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான பல செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பில் போதிய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லலை.

6.2. கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

6.2.1 கொள்வனவகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், சபையால் பிரதான கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 39 மில்லியன் பெறுமதியான 370 கணனிகள் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட விரிவான கொள்வனவுத் திட்டத்திற்காக சபை பணிப்பாளர்களின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொள்வனவு திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு காலரீதியாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட தெரிவுசெவ்வையின் பிரகாரம், கடிதங்கள் வழங்குதவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்குநர்களிடமிருந்து சில சந்தர்ப்பங்களில் தாமதக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

7 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் 11 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையிலான வீச்சிலான குறிப்படத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவிகளாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

8. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

கட்டுப்பாட்டு பரப்பு	அவதானிப்பு
(அ) கணக்கீடு	உள்ளக திணைக்களரீதியாக தரவகளுடன் கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் நடைபெறும் வேலை மீதிகள் மற்றும் கணக்கீட்டுத் தரவுகளை இணக்கம் செய்வதற்கு தவறியிருந்தது.
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்	(i) வேறுபட்ட பிராந்தியங்களிலுள்ள ஒரே வகை நிலையான சொத்துக்களின் இரட்டிப்பு
	(ii) நிலையான மற்றும் கற்பனைச் சொத்துக்களின் பெறுமதியை மீளாய்வு செய்து மீளவெளிப்படுத்தாமை
	(iii) செயற்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமை
	(iv) நீண்ட காலமாக மாற்றமடையாதிருந்த நடைபெறும் வேலை மீதிகள் பற்றி புலனாய்வு செய்வதற்கு தவறியமை

		(v) உரிய நேரத்தில் கணிப்பீட்டுச் சபையை பூர்த்தியாக்கவதற்கு தவறியமை
		(vi) ஏனைய நிறுவனங்களிற்கு உரிமையான வாகனங்களை விடுவித்தல்
		(vii) செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னர் காணிகளை சுவீகரிப்பதற்கு தவறியமை
(இ)	இருப்புக் கட்டுப்பாடு	(i) பேரேட்டு மீதிகளுடன் சேர்த்து பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதிகளை இணக்கம் செய்யாமை
		(ii) இடைப்போக்கிலுள்ள மீதிகளில் நீண்ட நிலுவையாகவிருக்கின்ற இருப்புக்கள் நிலவியமை மற்றும் களஞ்சியங்களில் நீண்டகாலம் நகர்வற்ற மற்றும் மெதுவாக நகரும் இருப்பு விடயங்கள் உள்ளன.
		(iii) ஒருங்கிணைந்த இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையை பேணுவதற்கு தவறியமை
		(iv) அதிகப்படியான பொருட்களை கொள்வனவு செய்தல்
		(v) பாதுகாப்பு மற்றும் போதிய இடம் இல்லாமல் காட்சியறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல்
(ஈ)	செயற்திட்ட நிர்வாகம் மற்றும் செயலாற்றல் மீளாய்வு	(i) எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் செயற்திட்டங்களை பூர்த்தியாக்க தவறியமை மற்றும் தகுந்த காரணங்கள் இல்லாமல் அதிகமான செயற்திட்டங்களின் காலப்பகுதி நீடிக்கப்படுதல்
		(ii) சாத்திய வள ஆய்வை சரியாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமை

		(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலுடன் இணங்காமை
		(iv) கால நீடிப்பு மற்றும் நிதிப் பயன்பாடுகளிலுள்ள நலிவுகள் காரணமாக கிரயம் உயர்வாக இருந்தமை.
		(v) பொறியியலாளர் மதிப்பீடுகளிலிருந்து அதகூடிய மாறுபட்ட தொகையுடன் ஒப்பந்தங்களை வழங்குதல்
(உ)	மீள்சுழற்சி திட்டங்களின் கணக்கீடு	மீள்சுழற்சி திட்டங்களிற்காக பெறப்பட்ட முற்பணம் ஏற்பட்ட சம்பந்தப்பட்ட செலவினங்களை தீர்ப்பனவு செய்யாமல் நீண்ட காலமாக பொறுப்பில் இருந்தது.
(ஊ)	ஆளணி முகாமைத்துவம்	(i) வேண்டப்பட்ட அதிகாரம் இல்லாமல் வேறு நிறுவனங்களிற்கு மனித வளங்களை விடுவித்தல்
		(ii) பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தமை
		(iii) போலிச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களை பதவியுயர்த்தல்
		(iv) ஊழியர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதில் தாமதம்.

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

சுருக்க வடிவங்கள்

AAT - கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் சங்கம்
AAS - அணு உள்ளீர்ப்பு நிறமானி
ADB - ஆசிய அபிவிருத்தி வங்கி
AE - பிரதேச பொறியியலாளர்
AFD - பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை
AGM - உதவிப் பொது முகாமையாளர்
AIT - ஆசிய தொழில்நுட்ப நிறுவனம்
AT - பொருத்தமான தொழில்நுட்பம்
BMICH - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
BOD - உயிரியல் ஒட்சிச கேள்வி
BOQ - அளவுப் பட்டியல்
BOI - முதலீட்டுச் சபை
CAS - சீன விஞ்ஞானக் கல்லூரி
CBO - சமூக அடிப்படையிலான அமைப்புகள்
CCN - கொழும்பு நகர வடக்கு
CCOEC - கடல் கடந்த பொருளாதார ஒத்துழைப்புக்கான சீன தேசிய கூட்டுத்தாபனம்
CCS - கொழும்பு நகரம் தெற்கு
CCTV - மூடிய சுற்றுத் தொலைக்காட்சி
CD - இறுவட்டு
CEA - மத்திய சுற்றாடல் அதிகார சபை
CEB - இலங்கை மின்சார சபை
CFL - உள்ளடக்க புளோரசன்ற் விளக்கு
CI - வார்க்கப்பட்ட இரும்பு
CKDu - நோய்க் காரணி கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்
CMC - கொழும்பு மாநகர சபை
COD - இரசாயன ஒட்சிசன் கேள்வி
CP - கூட்டிணைந்த திட்டம்
CSI - பாவனையாளர் திருப்திச் சுட்டெண்
cu.m. - கன மீற்றர்
CWSSIP - கொழும்பு நீர் வழங்கல் சேவை மேம்பாட்டுக் கருத்திட்டம்
DEWATS - பன்முகப்படுத்தப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை
DFCC - இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
DGM - பிரதி பொது முகாமையாளர்
DGM (P) – பிரதிப் பொது முகாமையாளர் (மாகாணம்)
DI - முலாம் பூசப்பட்ட இரும்பு
DIG - பிரதி பொலீஸ் மாஅதிபர்
DS - பிரதேச செயலகம்
DSD - பிரதேச செயலகப் பிரிவு
DWWF - வடிவமைந்த ஈரக் காலநிலைப் பாய்ச்சல்
EA - பொறியியல் உதவியாளர்
EBARA - Ebara Corparation
KEITI - கொரிய சுற்றாடல் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்
km - கிலோ மீற்றர்
KOICA - கொரிய சர்வதேச கூட்டுறவு முகவராண்மை
EDC - கனடா ஏற்றமதி அபிவிருத்தி
EDCF - கொரிய பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபன நிதியம்
EIA - சக்தித் தகவல் நிர்வாகம்
FIDIC - பொறியியல் மதியுரை பற்றிய சர்வதேச பேரவை
GCWWMIIP – கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
GCWRP – கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்பு கருத்திட்டம்
GI - கல்வனைஸ் இரும்பு
GIS - புவியியல் தகவல் முறைமை
GM - பொது முகாமையாளர்
GN - கிராம உத்தியோகத்தர்
GND - கிராம உத்தியோகத்தர் பிரிவு
GOSL - இலங்கை அரசாங்கம்
GPOBA - வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர்
GS - கிராம சேவை
GW - நில நீர்
HDPE - உயர் கன பொலி எதிலீன்
HNDE - உயர் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா
HRM - மனித வள முகாமைத்துவம்
ICP - Inductively Coupled Plasma
ICT - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ICTA - தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை
ICTAD - நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
ICWG - நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
IEE - மின் பொறியியலாளர் நிறுவனம்
IESL - இலங்கை பொறியியலாளர் நிறுவகம்
IMS - பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை
IoT - பொருட்களின் இணையம்
ISAN - சர்வதேச தரநியம ஒலிஒளி இலக்கம்
ISO - தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு
ISMM - பொருள் முகாமைத்துவ வழங்கல் நிறுவனம்
IT - தகவல் தொழில்நுட்பம்
ITEC - இந்திய தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு
JICA - யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர்
JPY - யப்பான் யென்
JKWSSP – யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல், துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம்

RSC - பிரதேச உதவி நிலையம்
RSC (WN) – பிரதேச உதவி நிலையம் - மேல் வடக்கு
RSC (WS) - பிரதேச உதவி நிலையம் - மேல் தெற்கு

KGC	- Kolon Global Corporation
KVA	- Kilo Volt Ampere
LA	- உள்ளூராட்சி சபை
LED	- Light Emitting Diode
LKR	- இலங்கை ரூபாய்
MASL	- இலங்கை மகாவலி அதிகாரசபை
M&E	- இயந்திரவியல் மற்றும் மின்னியல்
MC	- மாநகர சபை
MCB	- மகாவலி ஆலோசனைப் பணியகம்
MCM	- மில்லியன் கன மீற்றர்
MCPWS	- நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு
MD&T	- மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி
MIS	- முகாமைத்துவ தகவல் முறைமை
MOU	- புரிந்துணர்வு ஒப்பந்தம்
MOH	- மருத்துவ அலுவலர்
MSD	- முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
NAITA	- தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
NC	- வட மத்திய
NDB	- தேசிய அபிவிருத்தி வங்கி
NDT	- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NHDA	- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
NIBM	- தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்
NPD	- தேசிய திட்டமிடல் திணைக்களம்
NRW	- வருவாயற்ற நீர்
NWSDB	- தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
NTU	- Nephelometric Turbidity Unit
O&M	- தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு
OIC	- நிலையப் பொறுப்பதிகாரி
P&D	- திட்டமிடலும் வடிவமைப்பும்
PAC	- கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு
PD	- கருத்திட்ட பணிப்பாளர்
PDMRC	- திட்டமிடல், வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழு
PR	- பொதுசன தொடர்பு
PRDA	- மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
PWD	- அரச வேலைத் திணைக்களம்
PWTP	- கூட்டு நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி
R&D	- ஆராய்சியும் அபிவிருத்தியும்
RDA	- வீதி அபிவிருத்தி அதிகார சபை
RFP	- முன்மொழிவுக்கான வேண்டுகோள்
RM	- பிராந்திய முகாமையாளர்
RO	- ஊடுகலப்பு
RSC (NC)	- பிரதேச உதவி நிலையம் - வட மத்திய
RSC (S)	- பிரதேச உதவி நிலையம் - தெற்கு
RSC (E)	- பிரதேச உதவி நிலையம் - கிழக்கு
RSC (WC)	- பிரதேச உதவி நிலையம் - மத்திய மேல்
RSC (N)	- பிரதேச உதவி நிலையம் - வடக்கு
RWS	- கிராமிய நீர் வழங்கல்
SCADA	- மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு பெறுதல்
SACOSAN	- துப்புரவேற்பாடு தொடர்பிலான தென் ஆசிய மாநாடு
SCAPC	– நிலையான அமைச்சரவை அங்கீகார பெறுகைகள் குழு
SHIFT	- நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு
SIA	- சமூகத் தாக்க மதிப்பீடு
SIDA	- சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை
SLSI	- இலங்கை தரக் கட்டளை நிறுவனம்
SMS	- குறுகிய செய்திச் சேவை
SSR	- சமூக ஆய்வு அறிக்கை
TCE	- மொத்த மதிப்பீட்டுச் செலவினம்
TEC	- மொத்த மதிப்பீட்டுச் செலவு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு
TSS	- மொத்த நிறுத்தப்பட்ட திண்மங்கள்
TFWLP	- டெமாசெக் மன்ற நீர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்
UNICEF	- ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் கல்வி நிதியம்
UoP	- பேராதனை பல்கலைக்கழகம்
uPVC	- uPVC குழாய்கள்
USD	- ஐக்கிய அமெரிக்க டொலர்
VAT	- சேர் பெறுமதி வரி
VPN	- Vertual Private Network
VSD	- Variable Speed Drive
WASSIP	- நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம்
WHO	- உலக சுகாதார அமைப்பு
WS	- நீர் வழங்கல்
WSP	- நீர் வழங்கல் கருத்திட்டம்/ நீர் பாதுகாப்புத் திட்டம்
WSDP	- நீர் வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டம்
WTP	- நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி
WWDS	- கழிவுநீர் அகற்றல் முறைமை
WWTP	- கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

அடிப்படைத் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை (தே.நீ.வ.வ.ச.)

சட்ட வடிவம்
அரசாங்கத்திற்குச் சொந்தமானதொரு நியதிச்சட்ட சபையாகும்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி
1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. சட்டமான பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1974.03.01 ஆம் திகதி

1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. (திருத்தச்) சட்டத்தின் மூலம் 1992.03.11 ஆம் திகதி சட்டம் திருத்தப்பட்டது.

வரிப் பதிவு இலக்கம்
4090 31820

VAT பதிவு இலக்கம்
4090 31820 7000

தொடர்புகளுக்கு , தலைமை அலுவலகம்
காலி வீதி, இரத்மலானை, இலங்கை
தொலைபேசி: +94 11 2638999 (உடனடி)
+94 11 2637194, +94 11 2611589
தொலை நகல்: +94 11 2636449
மின் அஞ்சல்: gm@waterboard.lk
இணையத் தளம்: www.waterboard.lk

வழிகாட்டல் அமைச்சு
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்

அழைப்பு நிலையம்
1939 (24 மணி நேரமும்)

பாவனையாளர் சேவைப் பிரிவு, தலைமை அலுவலகம்
+94 11 2623623 (கடமை நேரத்தில்)

வங்கியாளர்
இலங்கை வங்கி

கணக்காய்வு
பிரதி பொதுமுகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)
அரச கணக்காய்வுப் பிரிவு

பணிப்பாளர் சபை
பொறியியலாளர் கே.ஏ. அன்சார் – தலைவர்
தே.நீ.வ.வ.ச. (2015.02.05 தொடக்கம்)
திரு. எம். ஷபீக் ரஜாப்தீன் - உப தலைவர் (2015.03.10 தொடக்கம்)
திரு. பீ.ஐ.ரீ. மஹீலால் சில்வா - செயற்பாட்டு பணிப்பாளர் தே.நீ.வ.வ.ச. (2015.02.05 தொடக்கம்)
டாக்டர் பீ..ஜீ. மஹீபால – சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - சுகாதார அமைச்சு, சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2017.01.02 வரை)
டாக்டர் ரீ.பீ. ஆனந்த ஜயலால் - பணிப்பாளர், இளைஞர், முதியோர் மற்றும் உடல் ஊனமுற்றோர், சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2017.01.20 தொடக்கம்)
திரு. ஜே.எம்.யு.பீ. ஜயமஹ - மேலதிக பணிப்பாளர்

சிரேஷ்ட முகாமைத்துவம்
பொறியியலாளர் டீ.யூ. சுமனசேகர - பொது முகாமையாளர்
பொறியியலாளர் டபிள்யு.பி.ஜீ. பர்னாந்து - மே.பொ.மு. (கூட்டிணைந்த சேவைகள்)
பொறியியலாளர் ஜே.ஆர்.பி. நெதுரன், மே.பொ.மு. (சாக்கடை)
பொறியியலாளர் ஆர்.எச். ருவினிஸ், மே.பொ.மு. (நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)
பொறியியலாளர் எஸ்.ஜே.ஆர். ராஜ்குமார் மே.பொ.மு. (வடக்கு / மத்திய)
பொறியியலாளர் பீ.எஸ். விஜேமான்ன மே.பொ.மு. (மேற்கு)
பொறியியலாளர் என்.எச்.ஆர். குலநாத மே.பொ.மு. (தெற்கு / கிழக்கு)
பொறியியலாளர் விஜேதுங்க மே.பொ.மு. (கொள்கை, திட்டமிடல்)
திரு. டீ. தொடவத்த மேல.பொ.மு. (நிதி)
திரு. ஜீ.கே. இத்தமல்கொட மேல.பொ.மு. (மனித வள முகாமைத்துவம்)

பிரிவுகளின் பிரதி பொதுமுகாமையாளர்கள்
பொறியியலாளர் யு. ரத்னபால (கருத்திட்ட இணைப்பு)
பொறியியலாளர் எஸ்.ஜீ. ஜயவர்தன (சாக்கடை)
பொறியியலாளர் கே.டபிள்யு. பிரேமசிறி - (திட்டமிடல், வடிவமைப்பு)
பொறியியலாளர் கே.பி.ஆர்.எஸ். சமரசிங்க (அபிவிருத்தி)
பொறியியலாளர் எஸ்.சுமனவீர (உற்பத்தி - மேற்கு)
பொறியியலாளர் கே.டீ.பி.எப். சிறிவர்தன (கூட்டிணைந்த திட்டமிடல்)
பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார் (வர்த்தகம்)
பொறியியலாளர் துலீப் குணவர்தன (கி.நீ.வ.)
பொறியியலாளர் ஜாலிய லலித் சீக்குகே (ADB கருத்திட்டம்)
பொறியியலாளர் பீ.எல். குணரத்ன (எந்.மின்)
பொறியியலாளர் ஜே. சந்திரதாச (தகவல் தொழில்நுட்பம்)
செல்வி எம்.எம்.எஸ். பீரிஸ் (நிதி)
செல்வி ஏ.பி. எஸ். டி சில்வா (கிரயம்)
திரு. ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன (உள்ளக கணக்காய்வு)
திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன (கைத்தொழில் உறவு)
திரு. ஆர்.எம்.ஏ. பண்டார (வழங்கல்)

மாகாணங்களின்/பிராந்திய உதவி நிலையங்களின் பிரதி பொது முகாமையாளர்கள்
பொறியியலாளர் ரீ.டபிள்யு.எஸ். பெரேரா- (மேல் - மத்திய)
பொறியியலாளர் சீ.சீ.எஸ்.எச். பர்னாந்து -(மேல்-தெற்கு)
பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட் (கிழக்கு)
பொறியியலாளர் ஆர்.ஏ.பீ.எஸ். மென்டிஸ் (மேல் - வடக்கு)
பொறியியலாளர் எம்.கே.டீ.ஜே.எச். மீகொட (மத்திய)
பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே (ஊவா)
பொறியியலாளர் ஜீ.வீ. விஜேரத்ன (வட மத்திய)
பொறியியலாளர் (திருமதி) ஐ.எம்.டபிள்யு.கே. இலங்கசிங்க (வட மேல்)
பொறியியலாளர் எம்.எம். உமா லெப்பே (வடக்கு
பொறியியலாளர் டபிள்யு.டபிள்யு. லியனகே (சபரகமுவ)
பொறியியலாளர் ஜே.கே.எஸ். பத்திரண (தெற்கு)

கருத்திட்ட பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற மே.பொ.மு./பிரதி பொது முகாமையாளர்கள்
பொறியியலாளர் ஆர். குலநாத-(இரத்மலான - மொரட்டுவ மற்றும் ஜா-எல – ஏக்கல பிரதேசங்களுக்கான கழிவுநீர் அகற்றல்)
பொறியியலாளர் பீ.எஸ். விஜேமான்ன (கொழும்பு பெரும்பாக புனரமைப்புக் கருத்திட்டம்)

நாயகம், பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2015.04.02 தொடக்கம்)
திரு. சாந்த ரத்நாயக்க - சபை அங்கத்தவர், தே.நீ.வ.வ.ச. (2015.02.12 தொடக்கம்)
திருமதி கே.ஏ. சுபத்ரா வல்பொல – சிரேஷ்ட உதவிச் செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, சபை அங்கத்தவர், தே.நீ.வ.வ.ச. (2015.02.13 தொடக்கம்)

சபைச் செயலாளர்

திருமதி. டபிள்யு.பீ. சந்தமாலி த சில்வா

பொறியியலாளர் கே.ஏஜ.வீ.ஏ. பெரேரா (கம்பஹ அத்தனகல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்)
பொறியியலாளர் ஆர்.ஏ.பி.எஸ். மென்டிஸ் - ஆ.அ.வ. 5வது கருத்திட்டம்
பொறியியலாளர் கே.பி.ஆர்.எஸ். சமரசிங்க - லபுகம கலட்டுவாவ நீ.வ.க. மற்றும் கொலன்ன பலாங்கொட நீ.வ.க.
பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட் - கொழும்பு நீர் வழங்கல் சேவைகள் மேம்பாட்டு கருத்திட்டம்
பொறியியலாளர் பீ.பீ. கஹதுவ - இரத்தினபுரி நீ.வ.க.
பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே - மஹியங்கன நீ.வ.க. மற்றும் பதுளை ஹாலிஎல நீ.வ.க.
பொறியியலாளர் ஆர்.ஏ.ஏ. ரணவக்க – Shift நீ.வ.க.
பொறியியலாளர் ஐ.வீ.டபி. எதிரிவீர – அம்பதலே / ஒருகொடவத்த குழாய் இடல் கருத்திட்டம்